No: 569

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை
# நடவடிக்கைகள் செயலக
# வெளியீடு

தொகுதி-17 எண்-1

புதன் மார்ச்-11, 1992

(C)

31 1992
2.17.1
62338

வெளியீடு 20-8-1992 Issued 20-8-1992

569 569

26

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

புதன்கிழமை மார்ச் 11, 1992 - தொகுதி 17 - எண் 1
Wednesday the 11th March, 1992 - Volume 17 No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat,
Madras-600 009

விலை ரூ. 3-00] [Price Rs. 3-00

569

## உள்ளடக்கம்

11-3-1992


| | பக்கங்கள். |
|---|---|
| 1. தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும் | iii—vi |
| Personnel of the Government of Tamil Nadu | vii—x |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள், | xi—xiv |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி). | xv—xxvi |
| 1. வினாக்கள்-விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1—42 |
| 2. விதி 110-இன்கீழ் முதலமைச்சரின் அறிக்கை. | |
| அரசு அலுவலகங்களின் வேலை நேரம் மாற்றம் குறித்து | 42—43 |
| 3. வரவு-செலவுத் திட்டம், 1992-93, பொது விவாதம்—தொடர்ச்சி. | 44—126 |
| 1. * திரு. ஆ. பாலையா .. .. | 44—56 |
| 2. * திரு. கு. தங்கமுத்து .. .. | 57—62 |
| 3. திரு. ஜி. பழனிசாமி .. .. | 62—79 |
| 4. * திருமதி ப. சரஸ்வதி .. .. | 80—83 |
| 5. திரு. டி. சுதர்சனம் .. .. | 83—80 |
| 6. * திரு. ஆ. அறிவழகன் .. .. | 90—93 |
| 7. திரு. எம்.கே. பாலன் .. .. | 93—96 |
| 8. திரு. இரா. பழனிசாமி .. .. | 96—103 |
| 9. * திரு. என்.ஆர். ராஜேந்திரன் .. | 101—103 |
| 10. * டாக்டர் பெ. வீரபாண்டியன் .. | 103—108 |
| 11. திரு. கு. சீனிவாசன் .. . | 108—111 |

பக்கங்கள்.

12. திரு. எம். சுந்தரசாமி .. .. 111—113

13. டாக்டர் வெ. புருஷோத்தமன் .. 113—116

14. * திரு. சி. சுவாமிநாதன் .. .. 117—126

4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 127—128

162338

D
Y211, 31 'N92
N92.171

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

ஆளுநர்—திரு. பீஷ்ம நாராயண் சிங்

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. முதலமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், இந்திய காவல் பணியாளர் மற்றும் அனைத்திந்தியப் பணியாளர்கள், மாவட்ட வருவாய் அதிகாரிகள், காவல், இலஞ்ச ஒழிப்பு, தொழில்கள் மதுவிலக்கு மற்றும் ஆயத் துறை, சர்க்கரைப் பாகு கழிவு, சிறு பான்மையினர் நலம். இந்து சமய அற நிலையத் துறை, செய்தி மற்றும் விளம்பரம், திரைப் படத் தொழில் நுட்பவியல், திரைப்படச் சட்டம், சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சுரங்கம் மற்றும் கனிம வளம், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, மின்னணுவியல் மற்றும் அச்சுக் காகிதக் கட்டுப்பாடு.

2. நிதி அமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நிதி, திட்டம், தேர்தல்கள், சட்ட மன்றம்.

3. சட்ட அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள் எடைகள்-அளவைகள் பற்றி சட்டம் இயற்றுதல், கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சீட்டு நிதி இவை பற்றிய சட்டம் இயற்றுதல் உட்பட), கம்பெனிகள் பதிவு.

| | |
|---|---|
| 4. வருவாய்த்துறை அமைச்சர் | மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளர்கள், மாவட்டத் துணை ஆட்சியாளர்கள், ஆவணப் பதிவுத் துறை, முத்திரைச் சட்டம், ஏழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம் மற்றும் கிராமதானம் பயண இசைவுச் சீட்டு, வணிக வரிகள். |
| 5. பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : பிற்பட்டோர் நலம், மிகப் பிற்பட்டோர் நலம், மற்றும் சீர்மரபினர் வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப் பட்டோர், முன்னாள் இராணுவத்தினர் நலம். |
| 6. கல்வி அமைச்சர் .. | மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : கல்வி, தொழில் நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் நலம், தொல் பொருளியல். |
| 7. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. கு. முத்துசாமி : மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி, குடும்ப நலம், சுற்றுச் சூழல் மாசு கட்டுப்படுத்தல். |
| 8. போக்குவரத்துத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள், வனங்கள் மற்றும் சின்கோனா. |



| | |
|---|---|
| 9. கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : கைத்தறி மற்றும் நெசவாலைகள். |
| 10. பொதுப்பணித் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பொதுப் பணிகள், பாசனம் (சிறு பாசனம் உட்பட) நெடுஞ் சாலைகள், மின்சாரம், மரபுசாரா எரிசக்தி வளர்ச்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு. |
| 11. உள்ளாட்சித் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், கிராமப் புறக் கடன் சம்பந்தப்பட்டவை, நகர்புற மற்றும் கிராமப்புறக் குடிநீர் வழங்கல். |
| 12. உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : உணவு, கூட்டுறவு, நுகர் பொருள் வழங்கல், விலைவாசிக் கட்டுப்பாடு, புள்ளி விவரங்கள். |
| 13. தொழிலாளர் நலத்துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. செ. ரகுபதி : தொழிலாளர், வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர்ப்புற மற்றும் கிராமப் புற வேலை வாய்ப்புத் திட்டங்கள், மக்கள் தொகைக் கணக்கு. |
| 14. வேளாண்மைத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, சர்க்கரை வரி மற்றும் சர்க்கரை வளர்ச்சி. |

| | |
|---|---|
| 15. வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : வீட்டு வசதி, குடிசை மாற்றுத் திட்டம், ஊரக வீட்டு வசதி வளர்ச்சி, இடவசதிக் கட்டுப்பாடு, நகர அமைப்பு, நகர்ப்புற வளர்ச்சி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம். |
| 16. சமூக நலத்துறை அமைச்சர். | மாண்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி : சமூக நலம் (மகளிர் மற்றும் குழந்தைகள் நலம் உட்பட), சத்துணவு, பிச்சைக்காரர் விடுதிகள், அனாதை விடுதிகள், சீர்திருத்த நிர்வாகம். |
| 17 ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : ஆதி திராவிடர் நலம், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர், கால்நடை பராமரிப்பு, பால், பால் பெருக்குத் திட்டம். |
| 18. மீன்வளத் துறை அமைச்சர் | மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மீன்வளம். |
| 19. ஊரகத் தொழில் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : சிறு தொழில்கள், ஊரகத் தொழில்கள் (குடிசைத் தொழில்கள் உட்பட), கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியம், வக்ஃப். |



# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR OF TAMIL NADU—Thiru BHISHMA NARAIN SINGH

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | |
|---|---|
| 1. Chief Minister .. | **The Hon. Dr. J. JAYALALITHA :** Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service and other All-India Services. District Revenue Officers, Police, Prevention of Corruption, Industries, Prohibition and Excise, Molasses, Minorities, Hindu Religiuos and Charitable Endowments, Information and Publicity, Film Technology Cinematograph Act. Tourism and Tourism Development Corporation, Mines and Minerals, Tamil Development and Tamil Culture, Electronics, and Newsprint Control. |
| 2. Minister for Finance .. | **The Hon. Dr. V.R. NEDUNCHEZHIAN:** Finance, Planning, Elections and Legislature. |
| 3. Minister for Law .. | **The Hon. Thiru K. A. KRISHNASAMY:** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Debt Relief including Legislation on Money-lending, Chits and Registration of Companies. |
| 4. Minister for Revenue .. | **The Hon. Thiru S. D. SOMASUNDARAM :** Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery and Printing, Government Press, Bhoodan and Gramdan, Passports and Commercial Taxes. |

5. Minister for Backward Classes. — **The Hon. Thiru ERAAMA VEERAPPAN :**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indian Overseas, Refugees and Evacuees and Welfare of Ex-Servicemen.

6. Minister for Education — **The Hon. Thiru C. ARANGANAYAGAM:**

Education, Technical Education, Science and Technology, Sports and Youth Welfare and Archaeology.

7. Minister for Health .. **The Hon. Thiru S. MUTHUSAMY :**

Health, Medical Education, Family Welfare and Environmental Pollution Control.

8. Minister for Transport — **The Hon. Thiru K. A. SENGOTTAYAN:**

Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports, Forest and Cinchona.

9. Minister for Handlooms and Textiles. — **The Hon. Thiru E. MADHUSUDHANAN :**

Handlooms and Textiles.

10. Minister for Public Works — **The Hon. Thiru S. KANNAPPAN :**

Public Works, Irrigation including Minor Irrigation, Highways, Electricity, Non-Conventional Energy Development and Iron and Steel Control.

11. Minister for Local Administration. — **The Hon. Thiru ALAGU THIRUNAVUKKARASU :**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness and Urban and Rural Water Supply.



12. Minister for Food and Co-operation. — **The Hon. Thiru G. VISWANATHAN:**

Food, Co-operation, Civil Supplies Price Control and Statistics.

13. Minister for Labour .. **The Hon. Thiru S. RAGUPATHY :**

Labour, Employment and Training, Urban and Rural Employment Programmes and Census.

14. Minister for Agriculture. — **The Hon. Thiru KU. PA. KRISHNAN :**

Agriculture, Agricultural Engineering. Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

15. Minister for Housing and Urban Development. — **The Hon. Thiru T. M. SELVAGANAPATHI :**

Housing, Slum Clearance, Rural Housing Development, Accommodation Control, Town Planning, Urban Development and Madras Metropoiltan Development Authority.

16. Minister for Social Welfare. — **The Hon. Thirumathi R. INDIRA KUMARI :**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon-Meals, Beggar Homes, Orphanages and Correctional Administration.

17. Minister for Adi-Dravidar Welfare. — **The Hon. Thiru M. ANANDAN:**

Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour, Animal Husbandry Milk and Dairy Development.

18. Minister for Fisheries . **The Hon. Thiru D. JAYAKUMAR :**

Fisheries.

19. Minister for Rural Industries.

**The Hon. Thiru S. NAGOOR-MEERAN :**

Small Scale Industries, Rural Industries including Cottage Industries. Khadi and Village Industries Board and Wakf.



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. இரா. முத்தையா

பேரவைத் துணைத் தலைவர்

பேராசிரியர் க. பொன்னுசாமி

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

1. திரு. ம. சின்னசாமி
2. திரு. வ. சத்தியமூர்த்தி
3. திரு. ஆர். சிங்காரம்
4. திரு. வே. தம்புசாமி
5. திரு. நா. சா. பழனிசாமி

### செயலாளர்

திரு. செ. சு. ஜானகிராமன்

## பேரவையின் முக்கிய அலுவலர்கள் (அகர வரிசைப்படி)

| | |
|---|---|
| ராமச்சந்திரன், திரு. ரெ. கு., பி.ஏ., பி.எல். | இணைச் செயலாளர் |
| சுந்தரராஜன், திரு. கா. செ., பி.ஏ., பி.ஜி.எல். | இணைச் செயலாளர் |
| இராசமாணிக்கம், திரு. பெ., பி.ஏ., பி.எல். | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| சண்முகநாதன், திரு. கோ., பி.காம். | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| சந்திரசேகர், திரு. ஆர்., பி.ஏ. | துணைச் செயலாளர் |
| சாலமென் ஜெயபால், திரு. டி., பி.எஸ்ஸி., பி.எல். | துணைச் செயலாளர் |
| ஜேக்கப் ஆர்தர், திரு. தா., பி.ஏ., பி.எல்., டி.பி. மற்றும் பி.ஏ. | துணைச் செயலாளர் |
| கிருஷ்ணமூர்த்தி, திரு. ச., பி.எஸ்ஸி. | குழு அலுவலர் |
| வெங்கட்டராமன், திரு. ப. சீ., பி.காம். | குழு அலுவலர் |
| அப்துல் சத்தார், திரு. ஜெ., பி.ஏ., பி.எல்., | சார்புச் செயலாளர் |
| இராசாராமன், திரு. வி., பி.எஸ்ஸி., பி.எல். | சார்புச் செயலாளர் |
| உமா, திருமதி வி. நா., பி.ஏ. | சார்புச் செயலாளர் |
| கண்ணன், திரு. கே., பி.எஸ்ஸி., பி.எல். | சார்புச் செயலாளர் |
| சாயிநாதன், திரு. கீ., பி.ஏ., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர் |
| பவானி சுப்பையா, திருமதி பி.ஏ., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர் |

## பேரவையின் முக்கிய அலுவலர்கள் (அகர வரிசைப்படி)

| | |
|---|---|
| ராமச்சந்திரன், திரு. ரெ. கு., பி.ஏ., பி.எல். | இணைச் செயலாளர் |
| சுந்தரராஜன், திரு. கா. செ., பி.ஏ., பி.ஜி.எல். | இணைச் செயலாளர் |
| இராசமாணிக்கம், திரு. பெ., பி.ஏ., பி.எல். | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| சண்முகநாதன், திரு. கோ., பி.காம். | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| சந்திரசேகர், திரு. ஆர்., பி.ஏ. | துணைச் செயலாளர் |
| சாலமென் ஜெயபால், திரு. டி., பி.எஸ்ஸி., பி.எல். | துணைச் செயலாளர் |
| ஜேக்கப் ஆர்தர், திரு. தா., பி.ஏ., பி.எல்., டி.பி. மற்றும் பி.ஏ. | துணைச் செயலாளர் |
| கிருஷ்ணமூர்த்தி, திரு. ச., பி.எஸ்ஸி. | குழு அலுவலர் |
| வெங்கட்டராமன், திரு. ப. சீ., பி.காம். | குழு அலுவலர் |
| அப்துல் சத்தார், திரு. ஜெ., பி.ஏ., பி.எல்., | சார்புச் செயலாளர் |
| இராசாராமன், திரு. வி., பி.எஸ்ஸி., பி.எல். | சார்புச் செயலாளர் |
| உமா, திருமதி வி. நா., பி.ஏ. | சார்புச் செயலாளர் |
| கண்ணன், திரு. கே., பி.எஸ்ஸி., பி.எல். | சார்புச் செயலாளர் |
| சாயிநாதன், திரு. கீ., பி.ஏ., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர் |
| பவானி சுப்பையா, திருமதி பி.ஏ., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர் |

| | |
|---|---|
| பானுமதி அனந்தராஜன், திருமதி பி.எஸ்ஸி., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர் |
| முடிகோபதி, திரு. நா., எம்.ஏ. | சார்புச் செயலாளர் |
| முனிர் உன்னிசா, திருமதி பி.எஸ்சி., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர் |
| ராஜன், திரு. கே. பி., டி.ஆர்.எஸ். | சார்புச் செயலாளர் |
| ராஜேந்திரன், திரு. பி. சி., பி.ஏ. | சார்புச் செயலாளர் |
| கணேசன், திரு. சா. பி.ஏ., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர் |
| வெங்கட்டராமன், திரு. கோ. | பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர் |
| சுந்தரராஜுலு, திரு. துரை எம்.ஏ., | தலைமை நிருபர் |
| துரைபாண்டியன், திரு. செ. ஏ., பி.ஏ. | தலைமை நிருபர் |
| ஜெயதேவ், திரு. பி. சி. | தலைமை நிருபர். |

---

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்.

| | (1) | (2) |
|---|---|---|
| 1. | அண்ணாமலை, திரு. எஸ். | ஆலந்தூர் |
| 2. | அபரஞ்சி, திரு. பெ. | அரூர் (செ.வ.) |
| 3. | அபுல்ஹசன், திரு. எம். எம். எஸ். | மயிலாடுதுறை |
| 4. | அமர்நாத், திரு. ஓ. எஸ். | மதுரை கிழக்கு |
| 5. | அம்மமுத்து பிள்ளை, டாக்டர் மு. | கன்னியாகுமரி |
| 6. | அரங்கநாதன், திரு. ஆர். டி. | விருத்தாசலம் |
| 7. | அரங்கநாயகம், டாக்டர் செ. | தொண்டாமுத்தூர் |
| 8. | அர்ச்சுனன், திரு. க. | வீரபாண்டி |
| 9. | அழகிரி, திரு. ச. | சிதம்பரம் |
| 10. | அழகு. திருநாவுக்கரசு, திரு. | ஒரத்தநாடு |
| 11. | அறிவழகன், திரு. ஆ. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 12. | அன்பழகன், திரு. எஸ். | நாமக்கல் (செ.வ.) |
| 13. | ஆசைமணி, திரு. எஸ். | குத்தாலம் |
| 14. | ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம் |
| 15. | ஆண்டித்தேவர், திரு. எஸ். | திருப்பரங்குன்றம் |
| 16. | ஆரோக்கியசாமி, டாக்டர் ச. | திருச்சிராப்பள்ளி-I |

| (1) | (2) |
|---|---|
| 17. ஆறுமுகம், திரு. செ. | வானூர் (செ.வ.) |
| 18. ஆனந்தன், திரு. எம். | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 19. இந்திர குமாரி, திருமதி இரா. | நாட்ராம்பள்ளி |
| 20. இராசமாணிக்கம், திரு. க.வெ. வீ. | மேலூர் |
| 21. இராசாராமன், திரு.சோ. | பாபநாசம் |
| 22. இராசாராம், திரு. க. | பனமரத்துப்பட்டி |
| 23. இராதாகிருஷ்ணன், திரு.த.க. | திருமங்கலம் |
| 24. இராமகிருஷ்ணன், டாக்டர் இ. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 25. இராமசாமி அம்பலம், திரு. கே. ஆர். | திருவாடனை |
| 26. இராமசுவாமி, திரு. சி. | சங்கராபுரம் |
| 27. இராமச்சந்திரன், திரு. மா.சா. மா. | இளையாங்குடி |
| 28. இராமச்சந்திரன், திரு. ஒ. ஆர். | கம்பம் |
| 29. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். | சாத்தூர் |
| 30. இராமச்சந்திரன், திரு. ச. | பண்ருட்டி |
| 31. இராமதாஸ், திரு. எஸ். எஸ். ஆர். | செஞ்சி |
| 32. இராமநாதன், திரு.இராம. | கும்பகோணம் |
| 33. இராஜமன்னார், திரு. சூ. சே. | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 34. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு, திரு. கி. | திருத்தணி |



| (1) | (2) |
|---|---|
| 35. இராஜேந்திரன், திரு.பி.வி. | வேதாரண்யம் |
| 36. இராம வீரப்பன், திரு. | காங்கேயம் |
| 37. இலதா பிரியகுமார், திருமதி | அரக்கோணம் (செ.வ.) |
| 38. இளம்வழுதி, திரு. | எழும்பூர் |
| 39. ஈஸ்வரமூர்த்தி, திரு. பி. | தாராபுரம்(செ.வ.) |
| 40. ஈஸ்வரன், திரு. ஆர். | வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| 41. ஏகாம்பர ரெட்டி, திரு.எ. | பள்ளிப்பட்டு |
| 42. கண்ணப்பன், திரு. எஸ். | திருப்பத்தூர் |
| 43. கண்ணன், திரு. வே. | திருவண்ணாமலை |
| 44. கந்தசாமி, திரு. கே. | தலைவாசல்(செ.வ.) |
| 45. கருப்புசாமி, டாக்டர் எம். | குன்னூர்(செ.வ.) |
| 46. கலியபெருமாள், திரு.ப. | திருவையாறு |
| 47. கலைச்செல்வி, திருமதி கே. எம். | காட்பாடி |
| 48. கவிநிலவு தர்மராஜ், திருமதி | மொடக்குறிச்சி |
| 49. கற்பகம் இளங்கோ, திருமதி | காரைக்குடி |
| 50. கனகவல்லி, திருமதி என்.சி. | விளாத்திகுளம் |
| 51. காஞ்சி பன்னீர் செல்வம், திரு. | உத்திரமேரூர் |
| 52. காந்திராஜன், திரு. ச. | வேடசந்தூர் |
| 53. காளன், திரு. கோ. | வில்லிவாக்கம் |
| 54. காளிராஜன், டாக்டர் மு. | சமயநல்லூர் (செ.வ.) |
| 55. கிருஷ்ணசாமி, திரு.கே.ஏ. | ஆயிரம்விளக்கு |

| | (1) | (2) |
|---|---|---|
| 56. | கிருஷ்ணன், திரு. எஸ். எம். | தாம்பரம் |
| 57. | கிருஷ்ணன், திரு. கு.ப. | ஸ்ரீரங்கம் |
| 58. | கிருஷ்ணன், திரு. சி. | ஓமலூர் |
| 59. | குப்பன், திரு. சு. | திருவொற்றியூர் |
| 60. | குமரி அனந்தன், திரு. | சாத்தான்குளம் |
| 61. | குமாரதாஸ், டாக்டர் தே. | கிள்ளியூர் |
| 62. | குழந்தைவேலு, திரு. சி. | குளத்தூர் (செ.வ.) |
| 63. | கோடிமாரி, திரு. ஆர். | நாகப்பட்டினம் |
| 64. | கோபாலகிருஷ்ணன், திரு. வே. | சங்கரநயினார் கோவில் (செ.வ.) |
| 65. | கோபால், திரு. க. | நன்னிலம் (செ.வ.) |
| 66. | கோவிந்தராசு, திரு. மா. | ரிஷிவந்தியம் |
| 67. | சக்குபாய், திருமதி ரா. | கும்மிடிபூண்டி |
| 68. | சக்குபாய் தேவராஜ், திருமதி டி. | திருவள்ளூர் |
| 69. | சஞ்சய் ராமசாமி, திரு. | விருதுநகர் |
| 70. | சண்முகநாதன், திரு. எஸ். | ஆலங்குடி |
| 71. | சண்முகம், திரு. எஸ். வி. | மதுரை மேற்கு |
| 72. | சத்தியமூர்த்தி, திரு. வ. | கடலாடி |
| 73. | சந்திரசேகர், திரு. வி. பி. | பொள்ளாச்சி |
| 74. | சம்பத், திரு. எ. | வாணியம்பாடி |
| 75. | சரஸ்வதி, திருமதி அ. தி. | சத்தியமங்கலம் |
| 76. | சரஸ்வதி, திருமதி ப. | கபிலர்மலை |
| 77. | சரோஜா, டாக்டர் (திருமதி) வெ. | சங்கரி (செ.வ.) |



| | (1) | (2) |
|---|---|---|
| 78. | சாத்தையா, திரு. | இராஜபாளையம் (செ.வ.) |
| 79. | சாவித்திரி அம்மாள், திருமதி ஆர். | முகையூர் |
| 80. | சிங்காரம், திரு. ஆர். | பேராவூரணி |
| 81. | சிங்காரம், திரு. கே. | மொரப்பூர் |
| 82. | சிங்கை கோவிந்தராசு, திரு. | சிங்காநல்லூர் |
| 83. | சியாமளா, திருமதி ரெ. | கோவில்பட்டி |
| 84. | சிவசுப்பிரமணியன், திரு. கு. | குறிஞ்சிப்பாடி |
| 85. | சிவபதி, திரு. என். ஆர். | தொட்டியம் |
| 86. | சின்னசாமி, திரு. ம. | கரூர் |
| 87. | சின்னசாமி, திரு. கா. | சேந்தமங்கலம் (ம.ப.) |
| 88. | சின்னசாமி, திரு. வி. கே. | பவானிசாகர் |
| 89. | சின்னப்பன், திரு. கே. கே. | ஜெயங்கொண்டம் |
| 90. | சீனியம்மாள், டாக்டர் (திருமதி) மு. | அவினாசி (செ.வ.) |
| 91. | சீனிவாசன், திரு. ஆ. கு. | பெரணமல்லூர் |
| 92. | சீனிவாசன், திரு. கு. | மன்னார்குடி |
| 93. | சுதர்சனம், திரு. டி. | பூந்தமல்லி |
| 94. | சுந்தரசாமி, திரு. எம். | கலசப்பாக்கம் |
| 95. | சுந்தரதாஸ், திரு. மா. | விளவன்கோடு |
| 96. | சுந்தரம், திரு. எம். கே. | தண்டராம்பட்டு |
| 97. | சுந்தரராஜ், டாக்டர் எஸ். | பரமக்குடி (செ.வ.) |
| 98. | சுந்தரவேல், திரு. ஏ. கே. சி. | திருப்பத்தூர் |
| 99. | சுந்தராம்பாள், திருமதி செ. | மேட்டூர் |

| | (1) | (2) |
|---|---|---|
| 100. | சுப்பிரமணியம், திரு. வ. மு. | மானாமதுரை (செ.வ.) |
| 101. | சுப்பிரமணியன், திரு. வி. என். | பெருந்துறை |
| 102. | சுப்பிரமணியன், திரு. வீ. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 103. | சுப்புரத்தினம், திரு. ஆ. | பழனி (செ.வ.) |
| 104. | சுலோசனா, செல்வி எல். | மேட்டுப்பாளையம் |
| 105. | சுவாமிநாதன், திரு. சி. | புதுக்கோட்டை |
| 106. | செங்கோட்டையன் திரு. கே.ஏ. | கோபிசெட்டிபாளையம் |
| 107. | செல்லக்குமார், டாக்டர் அ. | அண்ணாநகர் |
| 108. | செல்லசாமி, திரு. ஏ. டி. | ஒட்டன்சத்திரம் |
| 109. | செல்லதுரை, திரு. ஆ. | திருச்செந்தூர் |
| 110. | செல்வகணபதி, திரு. டி. எம். | திருச்செங்கோடு |
| 111. | செல்வராசன், திரு. அ. | துறைமுகம் |
| 112. | செல்வராஜ், திரு. கே. | கோயம்புத்தூர் மேற்கு |
| 113. | செழியன், திரு. தா. | பெரம்பலூர் (செ.வ.) |
| 114. | சேகர், டாக்டர் எம். பி. | பெரம்பூர்(செ.வ.) |
| 115. | சேகர், திரு. எம். ஜி. | பாலக்கோடு |
| 116. | சொக்கலிங்கம், திரு. பி. | மதுராந்தகம் |
| 117. | சோமசுந்தரம், திரு. எஸ். டி. | தஞ்சாவூர் |
| 118. | ஞானசேகரன், திரு. சி. | வேலூர் |
| 119. | டேனியல்ராஜ், திரு. எஸ். | ஸ்ரீவைகுண்டம் |
| 210. | தங்கமுத்து, திரு. கு. | திருவோணம் |



| | (1) | (2) |
|---|---|---|
| 121. | தங்கராஜ், திரு. ஆர். | ஆண்டிமடம் |
| 122. | தங்கவேல், திரு. எம். | முசிறி |
| 123. | தண்டாயுதபாணி, திரு. மி. | குடியாத்தம் |
| 124. | தமிழரசன், திரு. செகு. | வந்தவாசி(செ.வ.) |
| 125. | தமிழரசு, திரு. வே. | ஆத்தூர் |
| 126. | தம்புசாமி, திரு. வே. | திருவாரூர்(செ.வ.) |
| 127. | தர்மலிங்கம், திரு. கி. | அணைக்கட்டு |
| 128. | தர்மலிங்கம், திரு. பே. | பாளையங்கோட்டை |
| 129. | தவசி, திரு. கே. | ஆண்டிப்பட்டி |
| 130. | தனபால், திரு. ம. | திருப்போரூர் (செ.வ.) |
| 131. | தாமரைக்கனி, திரு. இரா. | ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 132. | தாமோதரன், திரு. சி. | நெல்லிக்குப்பம் |
| 133. | திருநாவுக்கரசு, திரு. எஸ். | அறந்தாங்கி |
| 134. | துரை, திரு. எஸ். எம். | ஆத்தூர் |
| 135. | துரைமுருகன், திரு. கு. சு. | பல்லடம் |
| 136. | துரை ராமசாமி, திரு. | வெள்ளக்கோவில் |
| 137. | தெய்வநாயகம், திரு. எ. | மதுரை மத்தி |
| 138. | தென்னவன், திரு. மு. | இராமநாதபுரம் |
| 139. | தேவராஜ், திரு. அ. | செய்யாறு |
| 140. | தேனி பன்னீர்செல்வம், திரு. | போடிநாயக்கனூர் |
| 141. | நடேசன், திரு. இரா. | திருவட்டாறு |
| 142. | நடேசன், திரு. மு. | சேலம்-2 |

| (1) | (2) |
|---|---|
| 143. நடேசன் பால்ராஜ், திரு. வெ. | நாங்குநேரி |
| 144. நாகூர் மீரான், திரு.எஸ். | கடையநல்லூர் |
| 145. நிர்மலா, செல்வி.பி. | திண்டுக்கல் |
| 146. நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | தேனி |
| 147. பஞ்சவர்ணம், திருமதி கே. | வலங்கைமான் (செ.வ.) |
| 148. பட்டாபிராமன், திரு. கா. ப. | காஞ்சிபுரம் |
| 149. பரந்தாமன், டாக்டர் ஜெ. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 150. பரமசிவம், திரு.ஆர்.பி. | சின்னசேலம் |
| 151. பரமசிவன், திரு. ஏ.எம். | சோழவந்தான் |
| 152. பலராமன், திரு. உ. | பூங்கா நகர் |
| 153. பழனிசாமி, திரு. இரா. | தாரமங்கலம் |
| 154. பழனிசாமி, திரு. க. | எடப்பாடி |
| 155. பழனிச்சாமி, திரு.நா.சா. | கிணத்துக்கடவு |
| 156. பழனிசாமி, திரு. வெ. | திருப்பூர் |
| 157. பழனிசாமி, திரு. ஜி. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 158. பழனியம்மாள், திருமதி.க. | ராசிபுரம் |
| 159. பன்னீர்செல்வம், திரு.என். | திருவிடைமருதூர் |
| 160. பன்னீர்செல்வம், திரு.சா. | திண்டிவனம் |
| 161. பன்னீர்செல்வம், திரு.ஜெ. | திருநாவலூர் |
| 162. பாண்டியம்மாள், திருமதி.இரா. | உசிலம்பட்டி |



| (1) | (2) |
|---|---|
| 163. பாப்பா சுந்தரம், திரு.அ. | குளித்தலை |
| 164. பாலகங்காதரன், திரு. ஜெ. | சிவகாசி |
| 165. பாலகிருஷ்ணன், திரு.சோ. | முதுகுளத்தூர் |
| 166. பாலசுப்பிரமணியன், திரு. எஸ். ஆர். | பொங்கலூர் |
| 167. பாலசுப்பிரமணியன், திரு. கி. | பட்டுக்கோட்டை |
| 168. பாலன், திரு. எம். கே. | சைதாப்பேட்டை |
| 169. பாலையா, திரு. ஆ. | குளச்சல் |
| 170. பியாட்ரிக்ஸ் டி. சோசா, டாக்டர் (திருமதி) | தியமனம் |
| 171. பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். | தென்காசி |
| 172. புதுநயினார் ஆதித்தன், திரு. இரா. | சேரன்மகாதேவி |
| 173. புரட்சிமணி, திரு. ச. | மங்களூர்(செ.வ.) |
| 174. புருஷோத்தமன், டாக்டர் வெ. | பெண்ணாகரம் |
| 175. பூராசாமி, திரு. எம். | பூம்புகார் |
| 176. பெரியசாமி, திரு. வே. | அந்தியூர்(செ.வ.) |
| 177. பெரியவீரன், திரு. எம். | பெரியகுளம் |
| 178. பெருமாள், திரு. செ. | ஏற்காடு (ம.ப.) |
| 179. பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். | நிலக்கோட்டை (செ.வ.) |
| 180. பொன்னுசாமி, பேராசிரியர் க. | மருங்காபுரி |
| 181. பொன்னுசாமி, திரு.பெ. | தருமபுரி |
| 182. பொன்னுவேலு, திரு. ஏ. தா. | வரகூர் (செ.வ.) |

| (1) | (2) |
|---|---|
| 183. போளூர் வரதன், திரு. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 184. மணிமேகலை, டாக்டர் (திருமதி) சு. | அரியலூர் |
| 185. மணிமேகலை, திருமதி வி. ஜி. | அருப்புக்கோட்டை |
| 186. மணிவாசகம், திரு.கே.பி. | உடுமலைப்பேட்டை |
| 187. மதுசூதனன், திரு. இ. | டாக்டர் இராதா கிருஷ்ணன் நகர். |
| 188. மரியமுல் ஆசியா, திருமதி | அரவக்குறிச்சி |
| 189. மல்லிகா, செல்வி.கோ. | புவனகிரி |
| 190. மனோகரன், திரு.கே.ஏ. | ஓசூர் |
| 191. மாணிக்கம், திரு. சி. | ஈரோடு |
| 192. மாலா, டாக்டர்(செல்வி) ஜி. ஆர். | திருச்சிராப்பள்ளி-2 |
| 193. முஹமது ஆசிப், திரு. | திருவல்லிக்கேணி |
| 194. முத்துசாமி, திரு. சு. | பவானி |
| 195. முத்தையா, திரு. இரா. | சேடப்பட்டி |
| 196. முருகானந்தம், திரு. கே. ஆர். | சிவகங்கை |
| 197. முருகையா பாண்டியன், திரு. ஆர். | அம்பாசமுத்திரம் |
| 198. முனிரத்தினம், திரு. ஏ.எம். | சோளிங்கர் |
| 199. முனிவெங்கடப்பன், திரு. கே. | கிருஷ்ணகிரி |
| 200. முனுசாமி, திரு. கா. பூ. | காவேரிப்பட்டிணம் |
| 201. மூர்த்தி, திரு. து. | சீர்காழி (செ.வ.) |



| (1) | (2) |
|---|---|
| 202. மோசஸ், டாக்டர் எம். | நாகர்கோவில் |
| 203. ரகுபதி, திரு. செ. | திருமயம் |
| 204. ரங்கநாதன், திரு. ப. | புரசைவாக்கம் |
| 205. ரங்கராஜன், திரு. டி.எம். | மயிலாப்பூர் |
| 206. ரத்தினவேல், திரு.. த. | திருவெறும்பூர் |
| 207. ரமணி நல்லதம்பி, திருமதி | ராதாபுரம் |
| 208. ரமேஷ், திரு. வி.பி.ஆர். | தூத்துக்குடி |
| 209. ரவிக்குமார், திரு. ஏ. | பொன்னேரி (செ.வ.) |
| 210. ரவிச்சந்திரன், திரு. வி. | உப்பிலியாபுரம் (ம.ப.) |
| 211. ராமசுப்பு, திரு. எஸ். எஸ். | ஆலங்குளம் |
| 212. ராஜு, திரு. எச். எம். | உதகமண்டலம் |
| 213. ராஜு, திரு. கே. ஆர். | கூடலூர் |
| 214. ராஜு, திரு. கே. பி. | பேரூர் |
| 215. ராஜேந்திரன், திரு. என்.ஆர் | காட்டுமன்னார் கோவில் (செ.வ.) |
| 216. லட்சுமணன், திரு.வி.கே. | கோயம்புத்தூர் கிழக்கு. |
| 217. லாரன்ஸ், திரு. கு. | பத்மநாபபுரம் |
| 218. லோகாம்பாள், திருமதி ஜெ. | லால்குடி |
| 219. வரதராஜன், திரு.செ.து. | செங்கல்பட்டு |
| 220. விசுவநாதன், திரு. ஜி. | ஆற்காடு |
| 221. வீரபாண்டியன், டாக்டர் பெ. | செங்கம் (செ.வ.) |

| (1) | (2) |
|---|---|
| 222. வெங்கடராம ரெட்டி, திரு. மு. | துளி |
| 223. வெங்கடேசன், திரு. பி. ஆர். எஸ். | கடலூர் |
| 224. வேடியப்பன், திரு. தா. | போளூர் |
| 225. வேணுகோபால், திரு. என். ஜி. | ராணிப்பேட்டை |
| 226. வேலையா, திரு. டி. | திருநெல்வேலி |
| 227. ஜனார்தனன், திரு. தே. | விழுப்புரம் |
| 228. ஜானகிராமன், திரு. கோ. | மேல்மலையனூர் |
| 229. ஜீனத் சர்புதீன், திருமதி | சேப்பாக்கம் |
| 230. ஜெயக்குமார், திரு. எஸ். | தியாகராய நகர் |
| 231. ஜெயகுமார், திரு. டி. | ராயபுரம் |
| 232. ஜெயராமன், திரு. எஸ். ஆர். | சேலம்-1 |
| 233. ஜெயலலிதா, டாக்டர் ஜெ. | பர்கூர் |
| 234. ஜெய்சன் ஜேக்கப், டாக்டர். | ஆரணி |
| 235. ஸ்ரீதரன், டாக்டர் அ. | வால்பாறை (செ.வ) |

பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்:

சுப்பிரமணியன், திரு. கே. .. தலைமை வழக்கறிஞர்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

**மாசி 28, பிரஜோற்பத்தி—திருவள்ளுவர் ஆண்டு—2023**

**1992 மார்ச் 11, புதன்கிழமை.**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில், முற்பகல் 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''எற்றென்று இரங்குவ செய்யற்க செய்வானேல்
மற்றன்ன செய்யாமை நன்று''.

பிறகு நினைந்து வருந்துவதற்குக் காரணமான செயல்களைச் செய்யாதிருத்தலும், ஒருகால் தவறிச் செய்தாலும், மீண்டும் அத்தன்மையானவற்றைச் செய்யாதிருத்தலும் நன்று.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள். வினா எண். 159. திரு. கே.ஆர். முருகானந்தம். திருமதி வி.ஜி. மணிமேகலை. மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

159—

### நில ஆக்கிரமிப்பு.

*3820—திரு. கே.ஆர். முருகானந்தம் :

திருமதி வி.ஜி.மணிமேகலை :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இரயில்வே துறைக்கு மாநில அரசினால் கொடுக்கப்பட்ட நிலங்களை ஆக்கிரமிப்பு செய்தவர்கள் பற்றி அரசின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளதா?

(ஆ) ஒப்படைக்கப்பட்ட நிலம் எவ்வளவு ஆண்டுகளுக்குள் பயன்படுத்தப்படவேண்டும் என விதிமுறைகள் அரசிடம் உள்ளதா?

(இ) இரயில்வே துறை பயன்படுத்தாத நிலத்தை மற்ற பணிகளுக்கு பயன்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

<u>மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இரயில்வே துறைக்கு மாநில அரசு கொடுக்கும் நிலங்களிலுள்ள ஆக்கிரமிப்புகள் குறித்து மாவட்ட வருவாய் அலுவலர்களின் கவனத்திற்கு வரும்போது அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

(ஆ) இரயில்வே துறைக்கு ஒப்படைக்கப்படும் நிலம் ஆண்டுதோறும் பயன்படுத்தப்படுகிறதா என்று அறிந்து, விதிமுறைப்படி நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

(இ) பயன்படுத்தாத நிலங்களை இரயில்வே துறையிடமிருந்து திரும்பப்பெற அரசு அவ்வப்போது அவர்களுக்குக் கடிதம் எழுதி நினைவூட்டுகிறது.

<u>திரு. கே. ஆர். முருகானந்தம்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசிடமிருந்து, இரயில்வே இலாக்காகளுக்காக ஒதுக்கப்பட்ட நிலங்களுக்காக, தமிழக அரசு எவ்வளவு பணம் பெற்றிருக்கிறது என்பதையும், அப்படி, இரயில்வே துறை, கொடுக்கப்பட்ட நிலங்களைப் பயன்படுத்தாவிட்டால், மீண்டும் தமிழக அரசு எடுத்துக்கொண்டு, அவற்றை வேறு பணிக்குப் பயன்படுத்துமா என்பதையும் அமைச்சர் அவர்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இருக்கிற விதிமுறைப்படி இரயில்வே துறைக்கு நிலம் அளிக்கிறபோது, நிலத்தினுடைய மதிப்பு, கல் கிரயம், உட்பிரிவுக் கட்டணம், முதலீட்டு வரி, மரங்கள் இருந்தால் மரக் கிரயம் ஆகிய இவற்றையெல்லாம் பெற்றுத்தான், அந்த நிலங்களைக் கொடுக்க வேண்டுமென்றிருக்கிறது. ஆக, அந்த விதிமுறைப்படி இவற்றையெல்லாம் செய்கிறபோது, மத்திய அரசுக்கு சில சங்கடங்கள் வருகின்றன. உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால், மத்திய சென்ட்ரல் ஸ்டேஷனில் இரயில்வே அலுவலகத்தை விரிவாக்கம் செய்ய வேண்டுமென்று மத்திய இரயில்வே துறைக்காக ஒதுக்கப்பட்ட பணம் போதவில்லை என்பதால், அது தாமதப்படுத்தப்பட்டது. அதற்கு நிலக் கிரயம் கொடுக்க வேண்டுமென்றால், சுமாராக 5 கோடி ரூபாய் கொடுக்க வேண்டும். அந்த 5 கோடி ரூபாயை நமது மாநில அரசு வசூல் செய்திருந்தால், இன்றைக்கு அந்தக் கட்டிடம் வராது. அந்தக் கட்டிடம் விரைவில் வரவேண்டும் என்பதற்காகவும், பிரயாணிகளுக்கு நன்மை செய்ய வேண்டும் என்பதற்காகவும் அதற்கான நிலக் கிரயம் பெறாமல், அவர்களுக்கு நிலம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதேபோலத்தான் இன்றைக்கு சென்னை கடற்கரை இரயில்வே நிலையத்திலிருந்து மைலாப்பூர் வரை போகிற நிலத்திற்கும். ஆக, இப்படிப்பட்ட நிலங்களை, சென்னை மாநகரில் பல கோடிக்



கணக்கான ரூபாய் மதிப்பு நிலங்களை, மக்களுடைய நலன் கருதி, மத்தியப் பேரரசுக்கு தமிழக அரசு இனாமாகக் கொடுத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : திரு. என். பன்னீர் செல்வம்.

<u>திரு. என். பன்னீர்செல்வம்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான இடத்தை, சுமார் 20 ஆண்டுகளுக்கு, முன்பு, இரயில்வேக்குப் பக்கத்தில் இல்லாமல், வெகு தூரத்திலேயுள்ள ஒரு இடமானது செங்கல் அறுப்பதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்போது, அதன் பக்கத்திலே மக்கள் குடியேறியிருக்கிறார்கள். அந்தப் பகுதிக்குச் செல்ல வேண்டுமென்றால், அந்த இடத்தைத் தாண்டித்தான் நடைபாதையாகச் செல்ல வேண்டியிருக்கிறது. மத்திய இரயில்வேயைச் சேர்ந்தவர்கள், அப்பொழுது மக்களை அந்த இடத்தில் குறுக்கே நடக்கக் கூடாது என்று சொல்கிறார்கள். அதன்மீது உடனடி நடவடிக்கை எடுத்து, உபயோகம் இல்லாத அந்த இடத்தை இரயில்வேயிடமிருந்து அரசு மீண்டும் பெறுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-35

<u>மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பல இடங்களில் ரெயில்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. பல இடங்களில் ஆக்கிரமிப்புகள் இருக்கின்றன. பொதுவாக ஒரு கேள்வியைக் கேட்டு இதை அரசு செய்யுமா என்று கேட்டால், அரசு செய்யும் என்று பொதுவாக ஒரு பதில் சொல்ல வேண்டியிருக்கும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : திரு. வெ. பழனிசாமி.

<u>திரு. வெ. பழனிசாமி</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரயில்வே துறையிடமிருந்து எடுக்கப்பட்ட நிலம் சுமார் 10, 12 ஆண்டுகளாகியும் கூட அந்தப் பகுதி மக்களுக்குப் பட்டா போட்டுக் கொடுக்கப்படாமல் உள்ளது. மேலும், இந்த மாதிரி திருப்பூர் நகரத்திலும் இருக்கிறது. இவற்றுக்கெல்லாம் உடனடியாக பட்டா போட்டுக் கொடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த ஊரில் அப்படி இருக்கிறது? மாண்புமிகு உறுப்பினர் பன்னீர்செல்வம் கேட்டதுபோல் கேட்காமல், நீங்கள் குறிப்பாக எந்த ஊரில் எடுக்கப்பட்ட நிலம் 12 ஆண்டு காலமாக அரசு தரப்பிலே சும்மா இருக்கிறது. எதற்கு பட்டா கொடுத்தால் நல்லது என்று சொன்னால், விரைவிலே அதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு ஏதுவாக

இருக்கும் என்பதைச் சொல்லி, அப்படி இருக்கின்ற நிலத்தை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னமும், உங்களுக்குச் சொல்ல வேண்டுமென்றால், உதாரணமாக தஞ்சை மாவட்டம் நீடாமங்கலம்—மன்னார்குடியில் ரயில்வே பாதை அகற்றப்பட்டு விட்டது. இன்றைக்கு அந்த நிலத்திலே யாரும் ஆக்கிரமிப்புச் செய்து விடுவார்கள் என்பதற்காக இரயில்வே துறையின் தென்னக ரயில்வே பொது மேலாளருக்கு கடிதம் எழுதப்பட்டிருக்கிறது. இன்னும் அவர்களிடமிருந்து பதில் வரவில்லை. மீண்டும், மீண்டும் நினைவூட்டுக் கடிதம் எழுதப்பட்டு வருகிறது. அப்படி எங்கெங்கே அரசு நிலங்கள் ரயில்வே துறையினரால் பயன்படுத்தப்படாமல் இருக்கின்றன என்று எடுத்துச் சொன்னால், அந்தத் துறைக்குக் கடிதம் எழுதி, அதைத் திரும்பப் பெற்று, மற்ற துறைகளுக்காகவும், அரசின் பணிகளுக்காகவும் பயன்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ச. ஆரோக்கியசாமி.

டாக்டர் ச. ஆரோக்கியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி பகுதியில் 25 ஆண்டுக் காலமாக இரயில்வே துறைக்கு ஒதுக்கப்பட்ட நிலமானது பயன்படுத்தப்படாமல் அதிலே ஏழை எளிய மக்கள் குடிசை போட்டு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அடிக்கடி தொந்தரவு செய்து ரெயில்வே துறையினர் அவர்களைக் காலி பண்ணச் சொல்லி பயமுறுத்தி வருகிறார்கள். அந்தத் துறையினர் என்னிடம் வந்து அந்தப் புகாரைக் கொடுத்து நீங்களே சென்று அவர்களைக் காலி செய்ய ஏற்பாடு செய்யுங்கள் என்று சொல்லுகிறார்கள். தமிழக அரசால் வழங்கப்பட்ட ரயில்வே துறைக்குத் தேவையற்ற நிலங்களில் ஏழை எளிய மக்கள் குடிசை போட்டு வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான சலுகைகளும் அளிக்க முடியாத நிலை இருக்கிறது. அதுவும் குறிப்பாக அவர்களுக்கு ரேஷன் கார்டு போன்றவை வழங்கப்பட முடியாமல் இருக்கிறது. அவர்களுக்கு அந்த நிலத்தைப் பட்டா போட்டுக் கொடுப்பதற்கும், வேண்டிய உதவிகளைச் செய்வதற்கான ஏற்பாடுகளை தமிழக அரசு செய்யுமா என்பதை உங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி.. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரயில்வே துறையானாலும் சரி, மற்ற துறைகளானாலும் சரி, அவர்களிடம் நிலங்களை கேட்கிற போது குறிப்பிட்ட இந்தப் பணிக்காக என்று அவர்கள் கடிதம் எழுதுவார்கள். குறிப்பிட்ட பணிக்காக அந்த இடம் பயன்படுத்தப்பட வேண்டும். அப்படிப் பயன்படுத்தப்படாவிட்டால் அதைத் திருப்பித் தரவேண்டுமென்றுதான் விதிமுறை இருக்கிறது. அப்படி மாண்புமிகு உறுப்பினர் சொன்ன மாதிரி அங்கே நீண்ட காலமாகப் பயன்படுத்தப்படாத நிலம் இருந்தால் அதை மீண்டும் பெறுவதற்கு அரசு முயற்சி எடுத்துக் கொள்ளும்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இரயில்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. அதுவும் மக்களோடு ஓடிக்கொண்டிருக்கின்றன. அதுமட்டுமல்ல, அதுவும் ஓயிலாக ஓடிக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட ஒரு இடத்தைச் சொல்லி சொல்லச் சொன்னார்கள். பேராவூரணி ரயில்வே கேட்டின் அருகே சுமார் 60 செண்ட் இடம்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட ஒரு இடத்தை சொல்லச் சொல்லவில்லை. இந்தக் கேள்வியில் குறிப்பிட்டுச் சொல்லுங்கள் என்று அவர்கள் சொன்னார்கள். உறுப்பினர்கள் குறிப்பிட்டு அமைச்சரிடத்தில் சொல்லவேண்டுமென்று சொன்னார்கள்.

திரு. ஆர். சிங்காரம் : பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகச் சொல்ல வேண்டாம்; குறிப்பிட்டுச் சொல்லுங்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்வியில் அது சரி வராது. குறிப்பிட்டு அமைச்சரிடத்தில் பிறிதொரு சந்தர்ப்பத்தில் சொல்ல வேண்டுமென்று சொன்னார்கள்.

திரு. ஆர். சிங்காரம் : கிடைக்கிற சான்ஸைப் பயன்படுத்திக் கொண்டு சொல்லுகிறேன். பேராவூரணி நகரம் ''டென்ஷனான'' நகரம். அது அமைச்சர் அவர்களுக்கும் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேராவூரணிக்கும், பட்டுக்கோட்டைக்கும் இருக்கும் நெருக்கத்தை வைத்துக் கொண்டு பேசக்கூடாது.

திரு. ஆர். சிங்காரம் : அந்த இரயில்வே கேட்டின் அருகே சுமார் 1 ஏக்கர் நிலம் வேஸ்டாக இருக்கிறது. அது இரயில்வே துறைக்குப் பயன்படாத இடம். அந்த இடத்தை நாம் வாங்கி அந்த இரயில்வே கேட்டை எக்ஸ்டென்ஷன் செய்வதற்கு தமிழ்நாடு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணியில் டென்ஷன் ஏற்படுவதற்கு மாண்புமிகு உறுப்பினர் சிங்காரம் அவர்கள தான் காரணம். (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் ; 160— டாக்டர் மு. அம்மமுத்துப் பிள்ளை. மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

160—

மறவர் சமுதாய மக்களை மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்தல்.

*4678—டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை :

மாண்புமிகு பிற்பட்டோர்நலத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பிற மாவட்டங்களில் வாழ்ந்து வரும் மறவர் சமுதாய மக்களை மிகவும் பிற்பட்டோர் என அறிவித்தது போல், கன்னியாகுமரி மாவட்டத்தில் வாழ்ந்து வரும் மறவர் சமுதாய மக்களையும் மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. இரா.ம. வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

முற்பகல் 9-40

டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் தேவர் சமுதாயத்தினர் சுமார் 7,000 பேர்தான் இருக்கிறார்கள். அவர்கள் பொருளாதார ரீதியில் மிகவும் பின்தங்கி இருக்கிறார்கள். அவர்கள் நலன் கருதி மறுபரிசீலனை செய்து அவர்களை மிகவும் பிற்படுத்தப்பட்டவர் பட்டியலில் சேர்க்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாவது பிற்படுத்தப்பட்டவர் நலக்குழு பரிந்துரைத்ததன் பேரில் அரசு திட்டமிட்டு முறைப்படி இந்த பிற்படுத்தப்பட்டவர், மிகவும் பிற்படுத்தப்பட்டவர், சீர்மரபினர் என்று வகைப்படுத்தி ஆணை வெளியிடப்பட்டிருக்கிறது. சீர்மரபினர் பட்டியலில் மறவர் பிரிவைச் சேர்ந்த சுமார் 5,09,639 பேர் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இதிலே சேர்க்கப்படாமல் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் மாத்திரம் இருப்பவர்கள் 5,29,168 பேர். அதற்கான காரணங்களை எல்லாம் அந்தக் குழுவினர் மிக விரிவாக ஆராய்ந்து அதிலே தெரிவித்திருக்கிறார்கள். மிகவும் பிற்படுத்தப்பட்டவர் அல்லது சீர் மரபினர் என்று அவர்களைப் பிரிப்பதற்கு அடிப்படைக் காரணங்கள் உள்ளன. நீண்டகாலமாக அவர்களுடைய வாழ்க்கை முறை, அவர்கள் பெற்றிருக்கிற கல்வி, அவர்களுக்கு சமுதாயத்தில் இருக்கிற அந்தஸ்து, நீண்டகாலமாக இவர்கள் எல்லாம் குற்றம் செய்கிறவர்கள் என்று அறிவிக்கப்பட்டிருந்த முறை இவைகளை எல்லாம் ஒட்டித்தான் இந்த பிற்படுத்தப்பட்டவர், மிகவும் பிற்படுத்தப்பட்டவர், சீர்மரபினர் என்ற பிரிவுகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளையொட்டி ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கிற இந்த கன்னியாகுமரி மாவட்டத்தில் வாழ்கிற மறவர்களைப் பற்றியும் அந்தக் குழுவினர் விரிவாக ஆராய்ந்து, இந்தப் பிரிவினரோடு அவர்களைச் சேர்ப்பதற்கு அவசியம் இல்லை என்கிற காரணத்தால்தான் அவர்களை பிற்படுத்தப்பட்டவர் பட்டியலில் மாத்திரம் சேர்த்து அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். அதை அரசும் ஏற்றுக் கொண்டிருக்கிறது.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். முருகையா பாண்டியன்.

திரு. ஆர். முருகையா பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர் மரபினர் பட்டியலில் திருநெல்வேலி ஜில்லாவிலும், கன்னியாகுமரி ஜில்லாவிலும், இருக்கக்கூடிய சில மறவர்கள் சேர்க்கப்படாமல் இருக்கிறார்கள். அதே நேரத்தில் சீர்மரபினர் இனத்தைச் சேர்ந்தவர்கள் சிலர் கிறிஸ்தவர்களாக மதம் மாறி இருக்கிறார்கள். அவர்களும் சீர்மரபினர் பட்டியலில் சேர்க்கப்படுவார்களா?

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிற சில குறிப்பிட்ட மறவர் வகுப்பைப் பற்றித்தான் கேள்வி இருக்கிறது. அதற்கு பதிலளித்து இருக்கிறேன். ஆகவே கிறிஸ்தவர்களாக மதம் மாறிய மற்றவர்களைப் பற்றிய விவரங்கள் வேண்டுமானால் தனிக் கேள்வி போட வேண்டும். அதிலே இரண்டு மூன்று விதமான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. அதைப்பற்றி தெளிவாகவும், விரிவாகவும் சொல்வதற்கு தனிக் கேள்வி போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கு. லாரன்ஸ.

திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் திருவிதாங்கூர் சமஸ்தானத்தோடு இணைக்கப்பட்டிருந்தது. 1956-ல் தமிழகத்தோடு இணைக்கப்பட்டது. அன்றைய திருவிதாங்கோடு சமஸ்தானத்தில் வாழ்ந்த மறவர்களும், தமிழகத்தில் இருந்த மறவர்களும் வேறுபட்டவர்கள் அல்ல. ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள். ஒரே ஜாதியைச் சேர்ந்தவர்கள். ஒரே சமுதாய கலாச்சார மரபுகளைக் கொண்டவர்கள். ஆனால் திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் இருந்த காலகட்டத்தில் அந்தச் சமுதாய அந்தஸ்தைஅவர்கள் வித்தியாசமாக வைத்திருந்தார்கள். இன்றைக்கும் குமரி மாவட்டத்தில் வாழ்கின்ற அந்த மறவர்களுடைய சமூகப் பொருளாதார வசதி உயர்ந்து விட்டது என்று

இன்னும் சொல்ல முடியாது. அது போன்று காட்டுநாயக்கன் என்று சொல்கிற சமுதாயத்தினர், இந்து குலாளர் போன்ற பல்வேறு சமுதாயத்தினர், தமிழகத்தில் வாழ்கிறார்கள். குமரி மாவட்டத்தில் இருப்பவர்களை வித்தியாசமாக ஒரு சமூக அமைப்பில் பார்க்கிறார்கள். எனவே தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் எங்கிருந்தாலும் ஒரே ஜாதியைச் சேர்ந்தவர்கள்: ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள், எனவே மீண்டும் அதை அரசு மறுபரிசீலனை செய்து அவர்களுக்கு நல்ல வழி காட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குத்தான் முன்னாலே நான் பதிலளித்து இருக்கிறேன். 1982 ஆம் ஆண்டிலே அமைக்கப்பட்ட அந்த இரண்டாவது பிற்பட்டவர் நலக்குழுவினுடைய ஆணையை ஒட்டி அது விரிவாக ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது. சில மாவட்டங்களில் இருக்கின்ற இந்த மறவர்கள் குற்றங்களைச் செய்துகொண்டு இருந்தவர்களாகவும், சமுதாயத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்ட சூழ்நிலையில் வாழ்கின்றவர்களாகவும், கல்வி அறிவு பெறாதவர்களாகவும், இப்படிப்பட்ட பல காரணங்களையொட்டி வெள்ளைக்காரர்கள காலத்திலே அவர்களை கிரிமினல் டிரைப்ஸ் என்றும், அதற்குப் பிறகு 'டி நோட்டிபைட்' என்றும் அதற்குப் பிறகு நாம் தமிழகத்திலே சீர்மரபினர் என்றும் பிரித்து வைத்து இருக்கின்ற காரணத்தினால் பிற்பட்டோர் நலக்குழு ஆராய்ந்த போது இதை மிக விரிவாக ஆராய்ந்துதான் நான் முன்னாலே குறிப்பிட்டதைப் போல சுமார் 5,09,639 இந்த பிரிவைச் சார்ந்த மறவர், அப்பநாடு கொண்டையாங்கோட்டை மறவர், சாம்பா நாடு மறவர் என்று பல்வேறு மாவட்டங்களிலே வாழ்கின்றவர்களைப் பற்றி ஆராய்ந்து அதிலே சேர்த்திருக்கிறார்கள். அப்போது இந்த கன்னியாகுமரி மாவட்டத்திலே வாழ்கின்றவர்களைப் பற்றியும் விரிவாக ஆராய்ச்சி நடத்தப்பட்டு இருக்கிறது. அந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அவர்களுடைய வாழ்க்கை சூழ்நிலையும் இங்கே குறிப்பிட்டிருக்கின்ற மற்ற மாவட்டங்களிலே இருக்கின்ற மறவர்களின் வாழ்க்கைச் சூழ்நிலையும் ஒன்றாக இல்லை. என்கிற காரணத்தாலேதான் அவர்களை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிறது. மிகுந்த பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் அல்லது சீர் மரபினர் பட்டியலில். சேர்க்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 9-45

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. த. க. இராதாகிருஷ்ணன்.

திரு. த. க. இராதாகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. கள்ளர், மறவர், அகமுடையார் அனைவரும் தேவர் இனமே. இவர்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலே சேர்க்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு தனிக் கேள்வி போடப்பட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 161. திரு. அ. தேவராஜ். மாண்புமிகு கல்வி அமைச்சர்.

161—

இலவச பாடநூல் வழங்கும் திட்டம்.

*457. திரு. அ. தேவராஜ் :

மாண்புமிகு கல்வி அமைச்சர்கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு அரசின் இலவச பாடநூல் வழங்கும் திட்டத்தில் மாற்றம் செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, வினா எண். 162. திரு. க. அர்ச்சுனன். மாண்புமிகு கல்வி அமைச்சர்.

162—

விளையாட்டிற்கு தனித்துறை ஏற்படுத்துதல்.

*2435—திரு. க. அர்ச்சுனன் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

விளையாட்டு மற்றும் 'ஜிம்நாஸ்டிக்ஸ்' (Gymnastics) துறைகளில் நாட்டம் உள்ளவர்களின் திறமையை வெளிப்படுத்தவும் உலகளவில் தமிழகத்தின் பெருமையை நிலைநாட்டவும் தனித்துறை அமைக்க அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டில் விளையாட்டு மற்றும் இளைஞர் நலனுக்காக இளைஞர் விளையாட்டுப் பயிற்சித்துறை என்ற தனித்துறை ஏற்கனவே 1979 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு தற்பொழுது செயல்பட்டு வருகிறது.

திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, விளையாட்டு அரங்குகள், 'ஸ்டேடியம்' கட்டு
வதற்கு மத்திய அரசு மானியம், நிதி உதவி அளிக்கிறதா ?
அது முழுமையாகப் பயன்படுத்தப்படுகிறதா ? மாநில அரசு,
விளையாட்டை ஊக்குவிப்பதற்காக இந்த ஆண்டு எவ்வளவு
நிதியை ஒதுக்கியிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய நிதி
உதவியைப் பற்றி தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்
கிறேன். மாணவர்களுக்கு விளையாட்டில் ஊக்கம் ஏற்படுத்த,
போட்டிகளை ஊக்குவிக்கும் பொருட்டு ஊக்கத் தெகை வழங்கப்
படுகிறது. குடியரசு நாள் விளையாட்டுப் போட்டி, பாரதியார்
நாள் விளையாட்டுப் போட்டி, பொங்கல் நாள் விளையாட்டுப்
போட்டி ஆகியவற்றில் வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக
ரூ. 600 வீதமும், 2-வது நிலையில் வருபவருக்கு ரூ. 400 வீதமும்,
வழங்கப்படுகிறது. அது தவிர மாநில அளவிலான பொங்கல்
விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுகின்றன. ஊரக விளை
யாட்டு மையங்களை ஏற்பாடு செய்திருக்கிறோம்.
அகில இந்திய அளவில் அரசு விளையாட்டுப் போட்டிகளில் பங்
கெடுப்பதற்கு நாம் இளைஞர்களை ஊக்கப்படுத்தி பயிற்சி தந்து
வருகிறோம்.

திரு. க. அர்ச்சுனன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, ஸ்டேடியம் கட்டுவதற்கு மத்திய அரசு நிதி உதவி
அளிக்கிறது. மத்திய அரசு நிதி உதவி அளிக்கிறபோது மாநில
அரசும் 50 பர்செண்ட் எக்ஸ்பென்ஸ்-ஐ ஏற்றுக் கொண்டால்
தான் அந்த மானியத்தால் நாம் முழுமையான பயனைப் பெற
முடியும். அந்த வகையிலே மாநில அரசு இந்த ஆண்டு
அதற்காக எவ்வளவு நிதி ஒதுக்கியிருக்கிறது என்பதை அறிய
விரும்புகிறேன். மேலும், பெண்களை விளையாட்டுத் துறை
யில் ஊக்குவிக்கிற வகையில் ஆங்காங்கு பயிற்சி பெறுவதற்காக
தனியாக விளையாட்டு மைதானங்கள் அதிகரிக்கப்படுமா ?
விளையாட்டுத் துறையில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பிடிப்
பவர்களுக்கு, அவர்களைத் தேடிப்பிடித்து வேலைவாய்ப்பு
அளித்து ஊக்குவிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்டேடியம் கட்டுவதற்கு மட்டு
மல்லாது வேறு எந்த வகையிலே மத்திய அரசு மானியம்
தருவதாக இருந்தாலும் அந்த மானியத்தைப் பயன்படுத்துகின்ற
முயற்சியிலே மாநில அரசு நல்ல முயற்சி எடுத்துக் கொள்ளும்
என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.
பெண்கள் விளையாட்டுத் துறையிலே முன்னேறுவதற்கு அவர்
களுக்கு தனியாக போட்டிகளை நடத்தி, பெண்கள் பள்ளியிலேயே
அவர்களுக்கு நல்ல பயிற்சி தருகின்ற முயற்சிகளை ஊக்குவித்து
பெண்கள் விளையாட்டுத் துறையிலே முன்னேற்றம் அடையும்
படியான முயற்சியிலே அரசு ஈடுபடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் தே. குமார
தாஸ்.





டாக்டர் தே.குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, விளையாட்டுத் துறையைப் பொறுத்தவரைக்கும்,
இன்றைக்கு தமிழகத்தில் அதிகம் உற்சாகம் கொடுக்கிற சூழ்
நிலை இருந்து வருகிற பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பயிலு
கின்ற மாணவர்களுக்கு விளையாட்டை கட்டாய பாடமாக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, அதிலே அதிகமாக உற்
சாகம் பெற்று வருகின்ற, பயிற்சி செய்கின்றபோதே, பெற்
றோர்கள் '' படிக்காமல் ஏனடா விளையாடிக் கொண்டு
திரிகிறாய் '' என்று அவர்களைக் கண்டிக்கிறார்கள். எனவே,
மெடிக்கல் காலேஜ், என்ஜினீரிங் காலேஜ், இப்படிப்பட்ட புரபச
னல் கோர்சஸ் கல்லூரிகளுக்கு போகின்றபோது இதிலே அவர்
களுக்குக் கிடைக்கின்ற உற்சாகத்தில், ஆர்வத்தின் அடிப்படை
யில் அவர்களுக்குக் கிடைக்கின்ற வெற்றிகளை வெற்றிப் படி
யாக மாற்றி இதிலே ஒரு 20 மார்க் அல்லது 25 மார்க், கிரேஸ்
மார்க்காகக் கொடுத்து, இளைஞர்களை ஊக்குவிக்கின்ற வித
தில் இந்த அரசு ஆவன செய்ய முன்வருமா என அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக உலகத்தில் இருக்
கிற பல்வேறு நாடுகளில் இளைஞர்களுக்கு விளையாட்டில் இயற்
கையாகவே ஆர்வம் இருக்கிறது. ஆனால், துரதிருஷ்டவசமாக
நம்முடைய நாட்டில் நாம் தூண்டினாலும் ஆர்வம் ஏற்படுவ
தில்லை. இது ஒரு முக்கியமான பிரச்சினை ஆகும். அதற்
காக பல்வேறு முயற்சிகளை முன்னர் நான் கல்வி அமைச்சராக
இருந்தபோதும் எடுத்திருக்கிறேன். குறிப்பாக, நம்முடைய
நாட்டில் விளையாட்டு வீரர்கள் நிறையபேர் நமக்குக் கிடைக்க
வேண்டும். விளையாட்டு வீரர்களைத் தேர்ந்தெடுப்பவர்க
ளுடைய கவனத்திற்கு வராமல் இருக்கிற கோடிக்கணக்கான
கிராமங்களிலே வாழ்கிற இளைஞர்களைக் கண்டுபிடிக்க வேண்
டும். அவர்களுக்குத் தகுந்த பயிற்சி தர வேண்டும். அதாவது
விஞ்ஞான ரீதியான பயிற்சி தர வேண்டும். அப்படி தந்தால்
இந்தியா, உலக அளவில் முன்னணியில் விளையாட்டிலே நிற்கும்,
எந்தப் போட்டியிலேயும் நிற்கும் என்ற நம்பிக்கையோடு ஊரக
விளையாட்டு மையங்களை ஆரம்பிக்க அப்போது ஒரு திட்டத்
தைக் கொண்டு வந்தேன். அந்தத் திட்டத்தைத் தோல்வி
யடைய செய்கிற முயற்சியிலே தான் சம்பந்தப்பட்டவர்கள் ஈடு
பட்டார்களே தவிர, வெற்றி பெறச் செய்ய யாரும் முன்வர
வில்லை. இன்றைய நிலையில், சட்டமன்ற உறுப்பினர்கள்கூட
அதற்குப் போதிய ஒத்துழைப்புத் தரவில்லை. இன்றைக்கு நான்
இந்தக் கேள்வி தொடர்பாக சொல்லிக்கொள்ள விரும்புவது,
சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதிகளில் இத்
தகைய விளையாட்டு மையங்களை ஏற்படுத்த விரும்பி முயற்சி
எடுப்பார்களேயானால் அரசு தக்க ஒத்துழைப்பு தரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் சொன்னதோடு இன்னொரு செய்தி. சட்டமன்ற உறுப்

பினர்களுக்காக சட்டமன்ற உறுப்பினர் விடுதியில்-Tennis Court)ம் Volley Ball Court-ம் தயாராக இருக்கிறது. ஒருவரும் விளையாட வருவதில்லை என்கிறார்கள். (சிரிப்பு). திரு. கே.பி. ராஜு.

திரு. கே. பி. ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளையாட்டுத் துறையில் வர வர இந்திய நாடு பின் நோக்கி சென்றுகொண்டு இருக்கிறது. இப்போதுகூட—சென்ற ஆண்டு, முந்தைய ஆண்டுகளில் எல்லாம் ஹாக்கி, கிரிக்கெட் போட்டிகளில் எல்லாம் இந்தியா முன்னணி வகித்தது — நேற்று கூட தோற்றுவிட்டது. இதை ஏன் சொல்கிறேன் என்றால், மற்ற மாநிலங்களைப் போல் விளையாட்டுப் போட்டிகளை ஊக்குவிப்பதற்காக தனி வாரியம் அமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிற பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது தனிப்பட்ட முறையில் ஸ்போர்ட்ஸ் கவுன்சில் மட்டும் வைத்துதான் முயற் செய்து வருகிறோம். நாம் கிரிக்கெட் போட்டியில் தோற்றதற்குப் பல காரணங்கள் உண்டு. இதிலே முக்கியமான ஒ காரணம் வீரர்களைத் தேர்ந்தெடுப்பதிலே இருக்கின்ற தவறு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். எஸ். ராமசுப்பு.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளையாட்டு விரர்களை அகில இந்திய ரீதியிலும், உலக அளவிலும் இங்கே தகுதியின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கும்போது சில தகுதியுள்ளவர்கள் இதிலே புறக்கணிக்கப் படுகிறார்கள் என்ற நிலை உண்மை. இந்தமாதிரி புறக்கணிக்கப்படாமல், வருங்காலத்தில் நல்ல வீரர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இது சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பார்களா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகுதியுள்ளவர்களை விட்டுவிட்டு தகுதியில்லாதவர்களைத் தேர்ந்தெடுப்பது ஒருவகை குற்றமாகும். அப்படி ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் நடந்திருக்கிறது என்று என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார்களேயானால் உரியவர்கள் மீது நடவடிக்கை எடுத்து அந்தக் குற்றத்தைக் களைந்து அதற்குப் பின்னர் அப்படி ஏற்படாமல் நாம் பார்த்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். அன்பழகன்

திரு. எஸ். அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் பட்ஜெட் கூட்டத் தொடர் முடியும் தருவாயில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு விளையாட்டு



விழா நடத்துவது உண்டு. அதுபோல இந்த ஆண்டும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு விளையாட்டு விழா நடத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன். (சிரிப்பு).

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினராக இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பழகன் அவர்களுக்கு இப்படி ஒரு ஆர்வம் இருப்பது குறித்து நாம் எல்லோரும் அவருக்குப் பாராட்டு தெரிவிக்கலாம். (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜெ. பாலகங்காதரன்.

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிகளில் விளையாடும் வீரர்களுக்கு என்று தனிப்பட்ட ஊக்கம் எதுவும் அளிக்கப்படுவதில்லை. பள்ளியில் கல்வி கற்கும் விளையாட்டு வீரர்கள் கல்வியில்தான் அதிகமாக தங்களை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும், இல்லையென்றால் அவர்களை பெயில் ஆக்கிவிடுகிறார்கள். இதனால் விளையாட்டில் ஆர்வம் இருக்கும் விளையாட்டு வீரர்கள்கூட கல்விக்காக அதிகநேரம் எடுக்க வேண்டியிருக்கிறது. இதனால், விளையாட்டில் ஆர்வம் இல்லாமல், நாம் பெயில் ஆகி விடுவோமோ என்று அவர்கள் எண்ணுகின்ற இந்த நிலைமையை மாற்றி விளையாட்டு வீரர்களுக்கு சிறு வயதிலிருந்தே தனியாக பள்ளிகள் ஆரம்பிக்கப் படுமா? விளையாட்டையே ''மெயின்'' ஆக வைத்து பள்ளிகள் ஆரம்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-55

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய கேள்வியின் அடிப்படை அம்சம் விளையாட்டு வீரர்களுக்கு அதிகமான மார்க் போட முடியுமா என்பது போல் இருக்கிறது. அப்படிப்பட்ட நிலையை நாங்கள் ஆதரிக்க முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தா. வேடியப்பன்.

திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் போளூர் பகுதியில் குன்றத்தூர் என்ற கிராமத்தில் ஒரு விளையாட்டு ஸ்டேடியம் ஏற்கெனவே கட்டப்பட்டு, அரைகுறையாக உள்ளது. அதனை அரசு பரிசீலித்து மீண்டும் அந்தத் திடலைக் கட்ட முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்வியிலே வராது. தனிக் கேள்வி போடவும். திரு. ம. சின்னசாமி.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளையாட்டுக்கு ஊக்கம் கொடுக்கிற வகையில்

பழந்தமிழர் விளையாட்டான சடுகுடு, சிலம்பம், இப்போது நவீன விளையாட்டாக இருக்கிற கராத்தே போன்ற விளையாட்டுகளை எல்லாப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் கட்டாயமாகச் சொல்லிக் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளையாட்டு என்பது ஒரு கட்டாயப் பாடமாகத்தான் இருக்கிறது. எந்த அளவுக்குக் கட்டாயம் இல்லை என்றால், அதை ஒரு பரீட்சையாக வைத்து, மார்க் போட்டு, ஒரு வகுப்பிலிருந்து இன்னொரு வகுப்பிற்குத் தேர்ச்சி பெற்றுச் செல்லும்போது அதை கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை. மற்றபடி உடற்பயிற்சி என்பது ஒரு கட்டாயப் பாடம்தான். ஆனால், அப்படி கட்டாயப் பாடமாக இருந்தாலும், அதிலே மாணவர்கள போதிய ஆர்வம் எடுத்துக் கொள்வதில்லை. இன்னும் ஒன்று, விளையாட்டிலே அதிகக் கவனம் செலுத்துவதால் படிப்பு கெடும் என்று நினைப்பது தவறு. ஒரு மாணவனுக்கு விளையாட வேண்டுமென்ற உணர்வு இருக்கும்போது, அதைத் தடுத்தால்தான் படிப்பிலே அவனுடைய ஆர்வம் குறையுமே தவிர, அவனுக்கு இயற்கையாக இருக்கிற விளையாட்டு ஆர்வத்திற்கு இடம் தருவோமானால் படிப்பிலேயும் நல்லமுறையிலே இருப்பான். அதையெல்லாம் உணர்ந்துதான் இன்றைய தினம் விளையாட்டு கட்டாயப் பாடமாக இருக்கிறதென்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் பியாட்ரிக்ஸ் டி. சோசா.

Dr. (Tmt.) BEATRIX D' SOUZA: Honourable Speaker, Sir, will the Government consider encouraging 'women Cricket teams', who will probably do better than men.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி அவர்கள் முன்வருவார்களானால் அதற்குத் தேவையான ஆதரவை அரசு தரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 163 டாக்டர் (திருமதி) மு. சீனியம்மாள், மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர்.

163—

மருத்துவச் சான்றிதழ்களை ஆய்வு செய்ய மாவட்ட ஆட்சியாளருக்கு அதிகாரம்.

*1243— டாக்டர் (திருமதி) மு. சீனியம்மாள்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.





போலி மருத்துவர்கள் பெருகி வருவதைத் தடுக்க அவர்களின் சான்றிதழ்களை ஆய்வு செய்ய மாவட்ட ஆட்சியாளருக்கு அதிகாரம் வழங்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது உள்ள நடைமுறை தொடரலாம்.

டாக்டர் (திருமதி) மு. சீனியம்மாள் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் கூறியதற்கு மிக்க நன்றி, இருந்தபோதிலும் பள்ளிகளில் 8-வது நிலை, 10-வது நிலை கூடத் தாண்டாமல் மருத்துவர்களிடம் உதவியாளராக இருந்தவர்கள் மற்றும் கண்ட கண்ட போலி நிறுவனங்களில் போலி மருத்துவச் சான்றுகளைப் பெற்றுக் கொண்டு, ஊசி மருந்து கொடுக்கிறேன் என்று பேர் பண்ணி போதை மருந்துகளைக் கொடுத்தும், தலைவலி, அல்சர் போன்ற வியாதிகளுக்கு வீரியமுள்ள மருந்துகளையும், இருதய நோய், பால்வினை, கர்ப்பிணிப் பெண்கள் போன்றோருக்கு இன்ன வியாதி என்று தெரியாமல் மருத்துவம் செய்வதால் பலர் உயிர் இழக்கக்கூடிய நிலை ஏற்படுகிறது. முறையற்ற கருக்கலைப்பு செய்வதால் நிறைய பெண்கள் பல மோசமான விளைவுகளை அடைகிறார்கள். சில நேரங்களில் கருப்பையை எடுக்க வேண்டிய சூழ்நிலை கூட இருக்கிறது. எனவே இந்தப் போலி மருத்துவர்களை இனங்கண்டு சமுதாயத்திற்கு நல்ல சேவை செய்ய மாவட்ட ஆட்சித் தலைவருடன் டி.டி., ஜே.டி., மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களை ஈடுபடுத்தி, இந்தப் போலி மருத்துவர்களை ஒழிக்க அரசு நடவடிக்கை எடுக்க விழையுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே உரிய வகையிலே சரியான சான்றிதழ்கள் இல்லாமல் யார் இப்படி மருத்துவ சிகிச்சைகளைச் செய்ய முயற்சி எடுக்கிறார்களோ அவர்கள் மீது உரிய நடவடிக்கைகளை நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம். காவல் துறை மூலமாக நடவடிக்கை இப்போது எடுக்கப்படுகிறது. எனவே இதை ஓரளவுக்கு நம்மாலே கட்டுப்படுத்த முடிகிறது என்பதில் எந்தவித ஐயமும் தேவையில்லை. எனவே இதற்காக புதிதாக ஒரு அமைப்பு தேவையா என்பதை நாம் தனியாக ஆய்வு செய்யலாம். ஆனால் இப்படித் தவறாகப் பயன்படுத்தக் கூடியவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதிலே இந்த அரசு தனியாக அக்கறை வைத்திருக்கிறது. காரணம், ஒரு துறையிலே பயிற்சி பெற்றவர்கள் அந்தத் துறையிலேயே பணியாற்ற வேண்டும். உதாரணமாக ஹோமியோபதி பயிற்சி பெற்றவர்கள் அதை விட்டு, அல்லோபதி முறைக்குப் போகிற போது, ஹோமியோபதி காணாமல் போய்விடுகிறது. அதற்கு இருக்கின்ற முக்கியத்துவம் போய்விடுகிறது என்கிற காரணத்தால்தான் அவர்கள் மாறக் கூடாது, அந்தந்தத் துறையிலேயே அவர்கள் பணியாற்ற வேண்டுமென்று அரசு வலியுறுத்திக் கொண்டிருக்கிறது.

முற்பகல் 10-00.

டாக்டர் (திருமதி) மு. சீனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது ஓமியோபதி மருத்துவப் பட்டம் பெற்றவர்களையும், யுனானி மருத்துவப் பட்டம் பெற்றவர்களையும் பற்றிக் கூறவில்லை. இப்போது அரசு நடவடிக்கை எடுத்திருந்தாலும், மாண்புமிகு தங்கத்தலைவி, தமிழகத்தின் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி மருத்துவ நலத்திட்டம் நடக்கிற இந்த நேரத்தில், இந்தப் பட்டத்தை எடுத்துவிட வேண்டும். மீண்டும் போலி மருத்துவர்கள ஆங்காங்கே மருத்துவம் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள என்பதை தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். எனவேதான் லோக்கலில் உள்ள அதிகாரிகளைக் கொண்டு இந்த மருத்துவர்கள்மீண்டும் மருத்துவம் பார்ப்பதைத் தடுத்து, நமது மாநிலத்திற்கு நல்ல சேவையை இந்த அரசு தர முன்வர வேண்டுமென்று கேட்டு, அவ்வாறு நடைபெறச் செய்வார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அவர்கள் மருத்துவம் செய்யலாம். அவர்கள் ஓமியோபதி மருத்துவம் செய்யலாம். அலோபதி மருத்துவம் செய்யக் கூடாது. அப்படி மாறி செய்பவர்கள்மீது நாம் உரிய நடவடிக்கை எடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மெ. ஆண்டி அம்பலம்.

திரு. எம். ஆண்டி அம்பலம் ; பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவமனையில் நான் போய் செக்கப் பண்ண வேண்டுமென்ற ஒரு நிலை இருந்த காரணத்தால், அரசு மருத்துவ அதிகாரிகள், தாம் எதை சாப்பிட வேண்டுமோ அதை எல்லாம் சாப்பிடக் கூடாது என்றே சொல்லிவிடுகிறார்கள். (சிரிப்பு). 10— 20 நாட்களாக அவர்கள சொல்வதைக் கடைப்பிடித்து....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது, போலி மருத்துவர்களைப் பற்றிய கேள்வி. நீங்கள் நல்ல மருத்துவர்களைப் பற்றிச் சொல்கிறீர்கள். (சிரிப்பு)

திரு. எம். ஆண்டி அம்பலம் : அவர் போலி மருத்துவர என்று தெரியவில்லை. ஆனால் அவர், சாப்பிடக்கூடாது என்று சொன்னவுடன், எனக்கு கை, கால் எல்லாம் நடுங்கிப்போய் விட்டது. 10 நாட்கள் கழித்து எதை வேண்டுமானாலும் சாப்பிடலாம் என்ற முடிவுக்கு வந்ததும்தான் திடமாக இருந்தது. அந்த மாதிரி சில மருத்துவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். நேற்றைய தினம் கூட நமது பேரவைத் தலைவர் கூட சொன்னார்கள். ஆஸ்பத்திரிக்கு அனுப்பலாம் என்று. ஆனால் எனக்கு 64 வயதாகிறது. இன்னும் ஒரு ஊசி கூட போடவில்லை. நான் இன்னும் மெடிக்கல் பில் கூட வாங்கவில்லை என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.....



மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் கேள்வி என்ன ? மெடிக்கல் பில் வாங்கவில்லை என்பதுதான் உங்களுடைய கோரிக்கையா ? (சிரிப்பு) அதனால்தான் உங்களை செக்கப் பண்ணவேண்டியிருக்கிறது என்று சொன்னார்களா ? (சிரிப்பு)

திரு. எம். ஆண்டி அம்பலம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாதிரி போலி மருத்துவர்களிடம் அரசாங்கம் கொஞ்சம் கவனிப்பாக நடக்கவேண்டும். காரணம் ஊசி போடுவதில் சில சிக்கல் இருக்கிறது.

* * *

அவர்களிடம் நீங்கள் கண்காணிப்பாக இருக்க முடியுமா என்று அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த மருத்துவமனைக்குப் போனார், எந்த மருத்துவரிடம் போனார் என்று தெரியவில்லை. ஒருவேளை அந்த மருத்துவருக்கும் அவருக்கும் வேறு பிரச்சினை இருக்கிறதா என்று தெரியவில்லை. (சிரிப்பு) எனவே அப்படியிருந்தால், அதற்கு தனியான நடவடிக்கை எடுக்கவேண்டுமே தவிர, அது போலி டாக்டர்கள் என்ற முறையில் வராது. இருந்தாலும்கூட, உணவு வகையில் உங்களுடைய வயதிற்கு அவர் சொன்னது நியாயமாகக்கூட இருக்கலாம். எனவே உணவைப் பொறுத்தவரையில், நமக்குக்கூட சொல்கிறார்கள். வாரத்தில் ஒருநாள் பட்டினியாக இருந்தால் நல்லது என்று சொல்கிறார்கள். இப்படி எவ்வளவோ கண்டுபிடித்துச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நல்ல மருத்துவர்கள் உங்களைப் பார்த்துச் சொல்லும் போது, அதை எடுத்துக்கொள்வது பொருத்தமாக, நல்லதாகக் கூட இருக்கும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆண்டி அம்பலம் அவர்கள் குறிப்பிட்ட, * * * என்ற சொற்றொடர் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திருமதி ரமணி நல்லதம்பி.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவக் கல்வியைப் பொறுத்தவரையில், பல் டாக்டர்களுக்கானாலும் சரி, பொது மருத்துவர்களுக்கானாலும் சரி, மாவட்ட மருத்துவமனையைச் சார்ந்த அந்த இணைப்பில் சேர்ந்த ஒரு கல்லூரியை வைத்துத்தான் அரசு கல்வி கற்பித்து

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

வருகிறது. ஆனால் தனியார்கள் எந்த மருத்துவமனை தொடர்பும் இல்லாமல் வகுப்புகளை நடத்தி, பட்டங்களை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் எப்படி சிறந்த டாக்டர்களாகப் பணியாற்ற முடியும்? ஆகவே இந்த மருத்துவமனையோடு தொடர்பில்லாத முறையில் இந்த தனியார்கள் நடத்துகின்ற எம்.பி.பி.எஸ். மற்றும் பல் மருத்துவம் ஆகிய இந்த இரண்டையும் அரசு கவனத்தில் எடுத்து, அவற்றைத் தடை செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போலி மருத்துவர்கள் என்றால், எதற்காக அவர்கள் பட்டம் பெற்றிருக்கிறார்களோ அதை விட்டு விட்டு, வேறு துறைகளில் பிராக்டீஸ் செய்தால், அதைத் தடுப்பதற்கான கேள்விதான் இப்போது கேட்கப்பட்டு இருக்கிறது. தரமான மருத்துவர்களை உருவாக்கவேண்டுமென்று இப்போது சொல்லியிருக்கிறீர்கள். ஏற்கெனவே அரசாங்கம் அதில் முடிவெடுத்து, மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டு புதிதாக தனியார் துறையில் மருத்துவக் கல்லூரிகள் ஆரம்பிப்பதற்கு இப்படிப்பட்ட வசதிகள் இல்லாமல் இருக்கிற காரணத்தால் அதில் உரிய கட்டுப்பாட்டைக் கொண்டுவர வேண்டுமென்று இப்போது நாங்கள் ஏற்பாடுகள் செய்திருக்கிறோம். ஏற்கெனவே இருக்கிற தனியார் கல்லூரிகளில் தேவையான வசதிகள் இல்லையென்று சொன்னால், உரிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று சொல்லி மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். எனவே தரமான மருத்துவர்களை உருவாக்க வேண்டும் என்பதில், இந்த அரசு தனி கவனத்தைச் செலுத்திக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ஜெ. பரந்தாமன்.

டாக்டர் ஜெ. பரந்தாமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த இடத்தில் மருத்துவமனை துவக்க அனுமதி பெறவேண்டுமென்று விதிமுறைகளை அறிமுகப்படுத்தினால் இதுபோன்ற குறைகள் இருக்காது. எல்லாவிதமான முறைகளும், ஆயுர்வேதம், சித்தாயுனானி, மற்றும் நவீன முறையில் மாடர்ன் மெடிசின் போன்றவைகளுக்கு தொழில் பாதுகாப்பும் கிடைக்கும். எனவே, மருத்துவத் துறை இணை இயக்குனரிடம் கல்விச் சான்றிதழ் ஆதாரத்துடன் காட்டி, இனி முன் அனுமதி பெற வேண்டுமென்று அரசு வலியுறுத்துமா ?

முற்பகல் 10-05

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சான்றிதழ் பெற வேண்டும் என்பதைப் பற்றி அவர்கள் சொல்லுகிறார்கள் என்று கருதுகிறேன். ஏற்கெனவே அவர்கள் இது போன்ற பட்டம் பெற்றவர்கள் இந்தியன் மெடிக்கல் கவுன்சில் மற்றும் தமிழ்நாடு மெடிக்கல் கவுன்சில் ஆகிய இரண்டிலும் பதிவு செய்ய வேண்டுமென்று இருக்கிறது.





அதேபோல ஹோமியோபதி மருத்துவர்களைப் பொறுத்த வரையில் ஹோமியோபதி கவுன்சிலில் பதிவு செய்ய வேண்டும் என்று இருக்கிறது. இன்னுமொன்று, இந்திய மருத்துவ மத்திய கவுன்சில் என்று ஒன்று இருக்கிறது. அதிலேயும் பதிவு செய்ய வேண்டுமென்று இருக்கிறது. இப்படி பதிவு செய்கிற முறை ஏற்கெனவே இருக்கிறது. மீண்டும் ஒரு முறை இங்கே அரசுத் துறையிலே பதிவு செய்ய வேண்டுமென்று சொன்னால், பதிவு செய்வதற்கே ஓராண்டுக்காலம் அவர்களுக்கு ஓடிவிடும் என்கிற காரணத்தால் இது தேவையில்லை என்று கருதுகிறேன். எனவே ஏற்கெனவே இருக்கிற முறைகளை வைத்தே நம்மால் கட்டுப் படுத்திவிட முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 164,— திரு. மா. சுந்தரதாஸ். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

164—

## உரிமம் பெறாமல் ஓடும் ஆம்னி பேருந்துகள்.

* 1776—திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை நகரிலிருந்து பல்வேறு வழித் தடங்களில் உரிமம் பெறாமல் ஆம்னி பேருந்துகள் அதிக எண்ணிக்கையில் ஓடுவது அண்மைக் காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டனவா?

(ஆ) அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சென்னையில்,

| | |
|---|---|
| (1) சோதனையிடப்பட்ட ஆம்னி பேருந்துகள் .. .. | 5,871 |
| (2) அனுமதி சீட்டின்றி பயன்படுத்தப் பட்டவை .. .. .. | 86 |
| (3) சிறை பிடிக்கப்பட்டவை .. | 21 |
| (4) வசூலிக்கப்பட்ட தொகை .. ரூ. | 81,525 |

திரு. மா. சுந்தரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதும் பர்மிட் இல்லாமல் இத்தகைய பஸ்கள் ஓட்டப்படுகிறதா? பள்ளிகளுக்காக ஓடுகிற பஸ்களைக் கூட சம்மர் வெகேஷனிலும், சனி, ஞாயிறு ஆகிய விடுமுறை நாட்களிலும்

கூட அவர்கள் ஆம்னி பஸ்களாக ஓட்டுகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? ஆம் எனில் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இது போன்று பேருந்துகள் இயக்கப்படுவதில்லை. பள்ளிகளில் இயக்கப்படுகிற மினி பஸ்களை விடுமுறை நாட்களில் சுற்றுப் பயணத்திற்காக விடுகிறார்களே தவிர தனியாக ஆம்னி பஸ்ஸாக அவர்கள் இயக்குவதில்லை. அப்படி யாராவது ஆம்னி பஸ்ஸாக இயக்குகிறார்கள் என்றால், அதை எங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் கடுமையான நடவடிக்கை அவர்கள் மீது மேற்கொள்ளப்படும்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் ஆம்னி பஸ்கள் எல்லா மாவட்டத் தலைநகரங்களிலேயிருந்தும் சென்னை வந்து கொண்டிருக்கின்றன. இது ரீஜினல் ட்ரான்ஸ்போர்ட் ஆபீசர்களுக்கும், போலீசுக்கும் தெரியாதது அல்ல. ஆம்னி பஸ் என்று சொன்னால், ரெகுலர் பஸ் போல, நம்முடைய திருவள்ளுவர் பஸ் போல அவர்கள் அங்கே புக்கிங் ஆபீஸ் வைத்து ஓட்டி கொண்டு இருக்கிறார்கள். இது அரசுக்குத் தெரியுமா? அப்படியானால் அவர்களுக்கே ரெகுலரைஸ் செய்து ரூட் பெர்மிட்டைக் கொடுத்து விடலாமே. ஒரு சீட்டுக்கு இவ்வளவு ரூபாய் என்று சொல்லி தனியாருக்கே பெர்மிட் கொடுத்து விடலாமே ஏனென்றால் ஆம்னி பஸ் என்று அவர்கள் 5 பஸ்களை வைத்திருந்தால், அதிலே இரண்டு பஸ்களுக்கு பர்மிட் இருக்கும். இரண்டு பஸ்களை பர்மிட் இல்லாமல் ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதிலே ஒரு பஸ்ஸைக் கூட நம்முடைய ஆர். டி. ஓ. மற்றும் போலீஸ் செக்கிங் செய்து பிடித்ததாகத் தெரியவில்லை. அப்படி பர்மனென்ட் பர்மிட் கொடுக்கப் போவதில்லை என்று சொன்னால், இப்படி ஓடுகிற ஆம்னி பஸ்களை அரசு தடை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்னி பஸ்கள் அதிகமாக ஓடுவதற்கு அரசு தடை செய்திருக்கிறது. இருந்தாலும் கூட சில பேர் மனுக்கள் செய்து வழக்கு மன்றத்திலே தடையாணையைப் பெற்று, கோர்ட் டைரக்ஷன் வாங்கி, சில பேர் ஆம்னி பஸ்களை இயக்கிக் கொண்டிருக்கிறார்கள். இதையும் அரசு கவனத்திலே கொண்டிருக்கிறது. இப்போது இதைக் கவனிக்க வாகன ஆய்வாளர்கள், கிரேட்-2 என்கிற 38 பதவியிடங்களை நாம் பூர்த்தி செய்ய வேண்டியிருக்கிறது. அவர்கள் வழக்கு மன்றத்திற்குச் சென்று தடையாணை பெற்றிருக்கிற காரணத்



தாலே, இரண்டாண்டுக் காலமாக அந்த வழக்கு நிலுவையில் இருந்து கொண்டிருக்கிற காரணத்தாலே சர்வீஸ் கமிஷனிலிருந்து தேர்வு செய்ய முடியாத சூழ்நிலை இருக்கிற காரணத்தாலே இது போன்ற ஆய்வுகளை தீவிரப்படுத்துவதற்கு எங்களால் முடியாத சூழ்நிலை இருக்கிறது. எதிர்காலத்திலே இது போன்ற ஆம்னி பஸ்கள் தவறான முறையில் இயங்குவது எந்த இடத்திலே யாவது இருந்தால், உங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் எங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மு. நடேசன்.

திரு. மு. நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்னி பஸ்களுக்கு அரசு உரிமம் வழங்கியிருக்கிற அதே நேரத்தில், ஒவ்வொரு மாவட்டத்திலேயும், இரவு நேரங்களில் இது போன்ற பல ஆயிரக்கணக்கான பஸ்கள் ஓடுகின்றன. இப்படி விதிமுறையை மீறி ஓட்டுகிற நிலைமையை அரசு உன்னிப்பாகக் கவனித்து இது வரை எந்த அளவிற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதற்கு, முதல் கேள்விக்கான பதிலிலேயே சொல்லியிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 165. திரு. ஆர். முருகையா பாண்டியன். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

165—

## கோவிலுக்குச் செல்லும் வாகனங்களுக்குப் பணம் வசூலித்தல்.

*2443 திரு. ஆர். முருகையா பாண்டியன் :

மாண்புமிகுபோக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், பாபநாசம் அடிவாரத்தில் உள்ள சோதனைச் சாவடியில் கோவிலுக்கு வாகனங்களில் செல்லும் பக்தர்களிடம் பணம் வசூல் செய்யப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

[1992 மார்ச் 11

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) அகஸ்தியர் கோயிலுக்கு வாகனங்களில் செல்லும் பக்தர்கள் சரணாலயப் பகுதியிலுள்ள சோதனைச் சாவடியை கடந்துசெல்வதால் அவர்களிடமிருந்து அரசு நிர்ணயம் செய்தபடி நுழைவுக் கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. இப்போது இதைத் தவிர்க்கிற வகையில் அந்த சோதனைச் சாவடிகளை மாற்றியமைக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது.

முற்பகல் 10–10.

திரு. ஆர். முருகையா பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அம்பாசமுத்திரம் தொகுதியில் பாபநாசம் அடிவாரத்தில் இருக்கிற சோதனைச்சாவடியில், அப்பகுதியில் இருக்கிற அகஸ்தியர் அருவி போன்ற அருவியில் ஏழை எளிய மக்கள் எல்லாம் குளிக்கச் செல்லும்போது கட்டணங்கள் வசூல் செய்யப்படுகிறது. அதேபோன்று கோவிலுக்கு சாமி கும்பிடப் போனாலும் கட்டணம் வசூல் செய்யப்படுகிறது. இதை பல ஆண்டுக் காலமாக அங்குள்ளவர்கள் எதிர்த்துப் போராட்டம் செய்து வருகிறார்கள். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த கட்டணம் வசூலிப்பதை ரத்துச் செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த சோதனைச்சாவடியை பம்ப் அவுஸ் முண்டந்துறை என்ற இடத்திலே மாற்றி அமைப்பதற்காக அரசு நடவடிக்கை மேற்கொண்டு இருக்கிறது. எதிர்காலத்தில் அக்ஸ்தியர் கோவிலுக்குச் செல்கின்றவர்களுக்கு அவர்களிடமிருந்து அந்த வரிகள் வசூலிக்கப்படமாட்டாது. அதற்காக நடவடிக்கை மேற்கொண்டு, சோதனைச்சாவடியை கட்டுவதற்காக தொடராச் செலவாக 22.300 ரூபாயும், வனக்காவலர்களுக்கு 3 பணியிடங்கள் கட்டுவதற்காக 53 ஆயிரம் ரூபாயும் ஏறத்தாழ 75 ஆயிரம் ரூபாய் செலவில் அது கட்டி முடிக்கப்பட்டவுடன் விரைவில் அந்த இடத்திலே மாற்றி அமைக்கப்படும். எதிர்காலத்தில் அந்தக் கட்டணம் வசூலிக்கப்படாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 166. திரு. கி. பாலசுப்பிரமணியன். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

166—

கிராம மாணவர்கள் நகரத்திற்குச் செல்ல பேருந்து வசதி



1992 மார்ச் 11]

*4839 திரு. கி. பாலசுப்பிரமணியன் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) கிராமத்திலுள்ள மாணவர்கள் நகரத்திற்கு வந்து பயன்பெறும் வகையில் அதிக எண்ணிக்கையில் பேருந்து வசதி செய்து தரப்படுமா ?

(ஆ) பெரும்பாலும் நடுத்தர மக்கள் குறிப்பாக பெண்கள் உபயோகிக்கும் 50 சி. சிக்குட்பட்ட வாகனங்களுக்கு வருடாந்திர வரி நீக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அரசு போக்குவரத்துக் கழகத்தில் கிராமப்புற மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு அவர்கள் நகரத்திற்கு வந்து பயன்பெறும் வகையில் தேவைக்கு ஏற்றாற்போல் பேருந்து வசதிகள் அளிக்கப்பட்டு வருகிறது.

(ஆ) தமிழ்நாடு இதயக்கூர்திகள் வரி விதிப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டம் 1991–ன்படி (சட்ட எண் 31/91) 50 சி.சி. மற்றும் அதற்கு கீழ் உள்ள இரு சக்கரவாகனங்களுக்கு வருடாந்திர வரியை 1–10–1991 முதல் செலுத்த வேண்டியதில்லை.

திரு. கி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலுக்கு மிக்க நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. நா. சா. பழனிசாமி.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறத்திலே இன்று கல்வியின் தரம் மிகக் குறைவாக இருக்கின்ற காரணத்தினாலே, கிராமத்திலே இருக்கின்ற மாணவர்களும் உயர்கல்வி கற்பதற்காக நகரத்தைத்தான் நாடி வந்து கொண்டு இருக்கின்றார்கள். அப்படி நகரத்திற்கு வருகின்ற அவர்களுக்கு பஸ் கட்டணம் என்பது ஒரு தனியான செலவாக இருக்கின்றது. நகரத்திலே இருப்பவர்கள் சொந்த வீட்டிலே இருந்து உணவு கொண்டு வருகிறார்கள்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. நா. சா. பழனிசாமி. நீங்கள் கேள்வியாகக் கேட்கவேண்டும், எப்போதும் விளக்கத்திலேயே இருக்கின்றீர்கள்.

திரு. நா. சா. பழனிசாமி : கிராமத்திலே இருந்து நகரத்திற்கு வரும் மாணவர்களுக்கு இலவசமாக பஸ் பாஸ் வழங்கி அவர்களும் நல்ல கல்வி கற்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கின்றார்கள். கிராமத்திலே இருந்து, நகரத்திற்கு பேருந்திலே பயணம் செய்வதற்கு மாணவர்களுக்கு இலவச பாஸ் வழங்கிக்கொண்டு தான் இருக்கிறோம். அதிலே ஏறத்தாழ இந்தஅரசுக்கு 24 கோடி ரூபாய் செலவாகிக்கொண்டு இருக்கிறது. கிராமத்திலே இருக்கின்ற மாணவர்கள் நகரத்திற்கு வர வேண்டும் என்பதற்காக அக்கறை எடுத்து, கிராமந்தோறும் பேருந்துகள் வசதி செய்ய வேண்டும் என்பதற்காக இந்த அரசு பொறுப்பு ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு 393 பேருந்துகள் இயக்கத்தில் இருக்கிறது. தி.மு.க. ஆட்சியிலே நிறுத்தப்பட்ட 1,205 பேருந்துகளில் இப்போது 974 பேருந்துகளை இயக்கிக்கொண்டு இருக்கிறோம் என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக் கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 167. டாக்டர் வெ. புருஷோத்தமன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர்.

167—

பென்னாகரத்தில் கூட்டுறவு நூற்பாலை.

*1058 டாக்டர் வெ. புருஷோத்தமன் :

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பென்னாகரம் தொகுதியில் அரசு கூட்டுறவு நூற்பாலை நிறுவும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கே இடமில்லை,



டாக்டர் வெ. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் ஆட்சியில் தான் தர்மபுரி மாவட்டத்திலே பென்னாகரம் தொகுதியை தொழில் துறையில் மிகவும் பின்தங்கிய வட்டமாக அறிவித்து இருக்கிறார்கள். அதற்கு எங்களது இதயபூர்வமான நன்றி. இன்று வரை எந்தத் தொழிற்சாலையும் இல்லாத ஒரு தொகுதி, மக்களுக்கு வேலை வாய்ப்புக் கூட இல்லாத மிகவும் புறக்கணிக்கப்பட்ட அந்த தொகுதியில் 1981—82-ல் தர்மபுரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை ஏற்படுத்த மண் வளம், நீர் வளம் ஆகியவை ஆய்வு செய்யப்பட்டு, இடமும் தேர்வு செய்யப்பட்டு, ஆனால் 1983-லே ஊத்தங்கரைக்கு எந்தவிதக் காரணமும் இன்றி அந்த நூற்பாலையைக் கொண்டு சென்றுவிட்டார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 'இல்லை' என்று பதில் சொல்லிவிட்டார்கள். இருந்தாலும், திருப்பூர் பனியன் ஓசியரி நூலுக்கு அதிக தேவை இருக்கிறது. வெளி நாடுகளுக்கு அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. அன்னியச் செலாவணியும் கிடைக்கக்கூடிய நிலை இருக்கிறது. வெளி மாநிலங்களுக்கும் அனுப்பப்படுகிறது. ஆகவே இப்படிப் பட்ட ஓசியரி நூல்கள், 25 ஆயிரம் கதிர்கள் கொண்ட கூட்டுறவு நூற்பாலையை தமிழ்நாட்டிலே முதலாவதாக எனது தொகுதியில் ஆரம்பிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம் ஊத்தங்கரையில் தர்மபுரி கூட்டுறவு நூற்பாலை 25 ஆயிரம் கதிர்களோடு செயல் பட்டு வருகிறது. தவிர மிகவிரைவில் 22 கோடி ரூபாய் செலவில் நம்முடைய தமிழகத்தின் ஒப்பற்ற தலைவி, தாயுள்ளம் கொண்ட தலைவி, டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய தாயாரான அன்னை சந்தியா அவர்கள் பெயரால் பர்கூரில் முழுமையாக பெண்களையே கொண்ட ஒரு நூற்பாலையை உருவாக்க இருக்கிறோம். அது உங்களுடைய மாவட்டத்தில் வருகிறது. அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

168— முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 168. திரு. ம. தனபால். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்,

கோவளம் மேம்பாலம் சீர்செய்தல்.

*230 திரு. ம. தனபால் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவான்மியூர் முட்டுக்காடு சாலையையும், பழைய மகாபலிபுரம் சாலையையும் இணைக்கும் கோவளம் மேம்பாலம் பல ஆண்டுகளாக பழுதடைந்து சீர் செய்யப்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை உடனடியாக சீர்செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இப்பாலத்தை புதுப்பித்துக் கட்டும் பணி அரசு பரிந்துரை செய்யப்பட்டு 1991–92 ஆம் ஆண்டிற்கான பகுதி-2 திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டது. அதற்கு பின்னால் இந்தப் பாலத்தைத் திரும்பக் கட்டுவதற்கு ஏறத்தாழ ரூபாய் 90 இலட்சம் செலவு இருக்கிற காரணத்தால் நிதிநிலை நெருக்கடி காரணமாக இந்தத் திட்டம் தற்சமயம் கைவிடப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ம. தனபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவளத்தையும் கேளம்பாக்கத்தையும் இணைக்கிற அந்தப் பாலம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பாலம். கடற்கரை ஓரத்தில் புதிய மகாபலிபுரம் சாலையில் இருக்கிற கிட்டத்தட்ட 25 கிராமங்களையும், அதிலேயிருந்து அந்தப் பாலத்திற்கு மேற்கே வருகிறபோது பல நகரங்களையும் இணைக்கிற மிக முக்கியமான பாலம். ஏற்கெனவே தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் மூலம் 68 என்ற எண்ணுள்ள பேருந்து சென்னையிலிருந்து மகாபலிபுரத்திற்கு இயங்கிக் கொண்டிருந்தது. அதைப்போல தாம்பரத்திலிருந்து கோவளத்திற்கு பல நகரப் பேருந்துகள் இயங்கிக் கொண்டிருந்தன. அப்படிப்பட்ட ஒரு முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பாலம் அது. ஒரு நாளைக்கு கிட்டத்தட்ட ஆயிரம் வாகனங்கள் அந்தப் பாலத்தின் வழியாகச் செல்கின்றன. அது சுற்றுலாப் பயணிகளுக்கு உகந்த ஒரு பாலம். அப்படிப்பட்ட ஒரு முக்கியத்துவம் வாய்ந்த பாலம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் போது பழுதடைந்த நிலையில் சரிசெய்யமுடியாமல் மூடப்பட்டது. அங்கே மூடப்பட்டது என்று அறிவிப்பு வெளியிட்ட போதிலும் இன்றைக்கு பல வாகனங்கள் அந்தப் பாலம் வழியாக கடந்து செல்கின்றன. அந்தப் பாலம் ஒரு வளைவாக காட்சியளித்துக் கொண்டிருக்கிறது



மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தனபால் கேள்வியாகக் கேட்க வேண்டும்.

திரு. ம. தனபால் : தலைவர் அவர்களே, பாலத்தின், முக்கியத்துவத்தை குறித்து சொல்கிறேன். அது விழக்கூடிய நிலையில் இருக்கிறது. என்னுடைய தொகுதியில் இருக்கிற ஒரு பெரிய பிரச்சினையென்றால் அந்தப் பிரச்சினையாகத் தான் இருக்க முடியும். எனவே, எங்களையெல்லாம் வாழ வைத்துக் கொண்டிருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி, தமிழகத்தின் முதல்வர் ஆட்சியில் தான் இது சரிசெய்யப்பட வேண்டுமென்ற நிலையிருக்கிறதோ என்னவோ தெரியவில்லை. எனவே, எங்களுடைய புரட்சித் தலைவி அவர்களின் புனித ஆட்சியில் இந்த ஆண்டில் அல்லது அடுத்த ஆண்டிலாவது அந்தப் பாலம் சரி செய்யப்படுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பாலத்தை நானும் நேரில் பார்வையிட்டேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் என்னோடு வந்தார்கள். ஏற்கெனவே சொன்னதைப் போல் இந்த அரசுக்கு நிறைய மனம் இருக்கிறது. பல்வேறு திட்டங்கள், பல்வேறு சாலைகள், பல்வேறு பாலங்களை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று எண்ணம் இருக்கிறது. ஆனால், இருக்கிற நிதிநிலை நெருக்கடி காரணமாக மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்களை முன்னுரிமை கொடுத்து எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, இந்தப் பாலத்தினுடைய முக்கியத்துவத்தைக் கருதி, வருகிற நிதியாண்டில் இருக்கிற நிலைமைகளை பரிசீலித்து, அதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 169, திரு. வே. பெரியசாமி மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

169—

அத்தாணி—அந்தியூர் சாலை அகலப்படுத்துதல்.

*841 திரு. வே. பெரியசாமி :

மாண்புமிகு பொதுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

[1992 மார்ச் 11

(அ) பெரியார் மாவட்டம், அத்தாணி முதல் அந்தியூர் வழியாக பவானி வரையிலும் உள்ள நெடுஞ்சாலை ரோட்டினை அகலப்படுத்தி தார் சாலையாக மாற்றிட அரசு விரைந்து நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) இதற்கு ஆகும் செலவு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது திட்டம் எதுவும் இல்லை.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டம், அத்தாணி முதல் அந்தியூர் வழியாக பவானி வரையுள்ள நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்த சாலைகள் மிகவும் பழுதடைந்து, கடந்த இரண்டாண்டு காலமாக ஆட்சி செய்தவர்களிடத்தில் நான் பல முறை கேள்விகள் மூலமாகவும், சட்டமன்றத்தில் உரையாற்றிய போதும் எடுத்துச் சொல்லியும், நான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த எதிர்க்கட்சி உறுப்பினர் என்ற காரணத்தால் என்னை புறக்கணித்து விட்டார்கள். என் பகுதியைப் புறக்கணித்துவிட்டார்கள். ஆகவே, கருணை உள்ளம் கொண்ட எங்கள் தாய், நான் வணங்கும் கடவுள் ஆட்சி செய்கின்ற இந்த நேரத்தில், சிறப்பாகப் பணியாற்றுகின்ற பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டாவது இதைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட சாலை ஏற்கெனவே ஒரு கிலோ மீட்டர் வரை இருவழிப்பாதை கொண்ட தார் சாலையாகும். மற்ற எட்டு கிலோ மீட்டர் ஒருவழிப் பாதை கொண்ட தார் சாலை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய அரசைப் பொறுத்தமட்டிலே கடந்த 9 மாத காலமாக சாலைப் பணிகளை திறமையாகச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடு இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதிகமாக நிதி ஒதுக்கீடு தந்து, ஏறத்தாழ பல்வேறு தொகுதிகளுக்கும் நூற்றுக்கும் மேற்பட்ட கோடி ரூபாய்களைத் தந்து, வேலைகள் நடந்து வருவதை நல்ல உள்ளம் படைத்த மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றாக அறிவார்கள். அதைப்போல, அந்தியூர் தொகுதியிலும், பல் வேறு சாலைகள் இந்த ஆண்டு எடுக்கப்பட்டு இருக்கின்றன.



1992 மார்ச் 11]

என்பதை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். ஆகவே, படிப்படியாக இந்த ஐந்து ஆண்டுக் காலத்திற்குள், அனைத்துச் சாலைகளையும் உடனடியாகச் செப்பனிட வேண்டும் என்ற எண்ணத்தோடு இந்த அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட சாலையையும், படிப்படியாக நிதி ஆதாரத்திற்கு ஏற்ப எடுத்துக் கொண்டு செயல்படுத்தப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 170. செல்வி பி. நிர்மலா, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்

170—

## மாங்கரைப்பாலம் விரிவுபடுத்துதல்

*2049 செல்வி பி. நிர்மலா :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர், கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா;

திண்டுக்கல் பழனி சாலையில், மாங்கரைப்பாலம் குறுகியதாக உள்ளதால் சாலை விபத்து ஏற்படுவதைத் தடுக்க விரைவாகப் பாலத்தை விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

செல்வி பி. நிர்மலா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த முதலமைச்சராலும் சரி செய்யப்படாததை மக்களின் நல்வாழ்வுக்காக, சர்வசாதாரணமாக சாதித்துக் கொண்டு வரும், எங்கள் அன்புத் தாய், புரட்சித் தலைவி அவர்களின் நல்லாட்சியில், பழனிக்கு, பாத யாத்திரையாகச் செல்லும் பல பக்தர்கள், அந்த ஆக்சிடெண்டில் சாவதாலும், பேருந்துகளில் சில ஆக்சிடெண்டுகள் ஏற்பட்டு, மக்கள் உயிருக்கு சேதம் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காகவும், அன்புத் தாயின் நல்லாட்சியில் கருணையோடு, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அனுமதி பெற்று, அமைச்சர் அவர்கள் 'ஆம்' என்ற பதிலைத்தருவாரா, விரை டைபெறுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1992 மார்ச் 11

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினாவில் குறிப்பிட்டுள்ள பாலமானது, கோயம்புத்தூர்-திண்டுக்கல் எம்.இ.எச். சாலை, கிலோ மீட்டர் 181/8-ல் அமைந்துள்ளது. இப்பாலத்தைத் திரும்பக் கட்டும் பணி அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு பணித் தொகுப்புப் பட்டியலில் மாநில நெடுஞ்சாலை என்ற தலைப்பின் கீழே, ஏறத்தாழ 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திட்டம் தயாரிக்கப்பட்டது. நான் ஏற்கனவே சொன்னதைப் போல, எல்லா இடங்களிலுமுள்ள பாலங்களைச் சரி செய்வதற்கும், சாலைகளை மேம்படுத்துவதற்கும், ஒரு முனைப்பான திட்டத்தை, நம்முடைய முதல்வர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னாலே இந்த 9 மாத காலத்திலே நாங்கள் எடுத்துக் கொண்டு இருக்கிறோம். அனைத்தையும் ஒரே நேரத்திலே நிறைவேற்றுவதற்கு பல நூறு கோடி ரூபாய் வேண்டியிருக்கின்ற காரணத்தால், மிக மோசமான பகுதிகளை சீர்படுத்துவதற்கு முன்னுரிமை கொடுத்து, படிப்படியாக திட்டங்களை எடுத்துக் கொண்டு வருகிறோம். இந்தத் திட்டமும், நம்முடைய மதிப்பீட்டுப் பட்டியலிலே சேர்க்கப்பட்டு இருக்கிறது. நிதி ஒதுக்கீடு செய்வதிலே கொஞ்சம் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று, நிச்சயமாக வரும் ஆண்டில், இந்தப் பாலத்தை கட்டுவதற்கான முயற்சியை இந்த அரசு எடுக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 171. திரு. ச. புரட்சிமணி. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

17—

## மங்களூர் தொகுதியில் கூட்டுக்குடிநீர்த் திட்டம்

*1261 திரு. ச. புரட்சிமணி :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தென்னாற்காடு மாவட்டம், மங்களூர் தொகுதியில் எஸ். நரையூர் வடபாதி போன்ற கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தென்னாற்காடு மாவட்டம் மங்களூர் தொகுதியில், எஸ். நரையூர் கிராமம், மங்களூர் மற்றும் 24 கிராமங்கள்



1992 மார்ச் 11]

அடங்கிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டு ஆய்வில் உள்ளது. வடபாதி கிராமத்தில் குடிநீர் வசதி போதுமானதாக உள்ளதால் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 24 கிராமங்கள் அடங்கிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில், எஸ். நரையூர் என்ற கிராமம் சேர்க்கப்பட்டதற்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வடபாதி கிராமத்தில் குடிநீர்ப் பற்றாக்குறை மிகவும் மோசமாக காணப்படுகிறது. எனவே, அந்தக் கிராமத்தையும், இந்தத் திட்டத்தில் சேர்க்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மங்களூர் தொகுதியில் உள்ள வடபாதி கிராமம் இத்திட்டத்தில் சேர்க்கப்படவில்லை. ஏனெனில், இந்தக் கிராமத்தில் 1980-ல் கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் முழுமையான அளவு குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது. இது தவிர, இரண்டு கையிறைப்பான்களும் இயங்கிக் கொண்டு வருகின்ற காரணத்தாலே, இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில், இந்த கிராமத்தை இப்போது சேர்ப்பதற்கு இயலாத நிலையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ச. புரட்சிமணி : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கான ஆய்வுகள் விரைவில் முடிக்கப்பட்டு, இந்த ஆண்டிலே, இதனை நிறைவேற்ற அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவாக இந்தத் திட்டத்தை முடிப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 172. திரு எஸ். ஆசைமணி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

172—

## நரிமணம் பகுதியை நகரியமாக்குதல்.

*1545—திரு. எஸ். ஆசைமணி :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், நரிமணம் பகுதியை நகரியமாக அறிவிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

முற்பகல் 10-25

திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையும், பனங்குடி தொழிற் பேட்டையும், அமைய இருக்கின்ற அந்த நரிமணம பகுதியை நடப்பாண்டிலே நகரியமாக அறிவிக்கின்ற செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவில் இதனை நகரியமாக ஆக்குவதற்குத் தமிழகத்தின் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆலோசனையின் பேரில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 173. திரு. ஆர். ஈஸ்வரன், திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம், திரு. ஜி. பழனிசாமி, திரு. பி. சொக்கலிங்கம், திரு. ப. கலியபெருமாள், திரு. மா.சா.மா. இராமச்சந்திரன், திரு. ஏ.எம். முனிரத்தினம். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

173—

மானிய விலையில் பூச்சிமருந்து மற்றும் விதைகள்.

*1029—திரு. ஆர். ஈஸ்வரன்,

திரு. கே.ஆர். இராமசாமி அம்பலம்,

திரு. ஜி. பழனிசாமி,

திரு. பி. சொக்கலிங்கம்,

திரு. ப. கலியபெருமாள்,

திரு. மா.சா.மா. இராமச்சந்திரன்,

திரு. ஏ.எம். முனிரத்தினம்:

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;



வேளாண்மைக் குடிமக்களுக்கு பூச்சிமருந்து, விதைகள், உரம், உழவுக்கருவிகள், விசைத் தெளிப்பான் ஆகியவற்றை மானிய விலையில் வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்பு உணவுதானிய உற்பத்தித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வரும் மாவட்டங்களில் உழவர் பெருமக்களுக்கு, விதைகள், உழவுக்கருவிகள், மருந்துகள், விசை மறறும கைத்தெளிப்பான்கள் ஆகியவை மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது, உரம் மட்டும் அனைத்து மாவட்டங்களிலும மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது,

திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அரசு மானிய விலையில் வழங்கப்படுகின்ற உரம், பூச்சி மருந்து மற்றும் விவசாயிகளுக்குத் தேவைப்படுகின்ற பொருட்கள், அந்தந்த வேளாண்மைத் துறை அலுவலகத்தில் விவசாயிகளுக்குச் சரிவர கிடைப்பதில்லை, பினாமிகள், தனிப்பட்ட வசதி படைத்தவர்கள். பினாமியின் பெயரால் அனைத்தையும் பெற்றுக் கொள்கிறார்கள். ஆகவே அந்தந்த வேளாண்மைத் துறை அலுவலகத்தில், ஸ்டாக் எவ்வளவு இருக்கிறது என்கின்ற புள்ளி விவரத்தைத் தெரிவிக்கும் பொருட்டு. ஒரு 'ஸ்லைடு' அதாவது 'போர்டு' வைப்பதற்கு அமைச்சரவர்கள் முன்வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ஒவ்வொரு வேளாண்மைக் கிடங்கிலும் தன்னிடம் கையிருப்புள்ள விதைகள், பூச்சி மருந்துகள் மற்றும் இதரப் பொருட்கள் பற்றிய பட்டியல் அங்கே வைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்ல, இந்திய திருநாட்டிலே எந்த ஒரு மாநிலமும் செய்ய முடியாத ஒரு சாதனையை நம்முடைய மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் செய்திருக்கிறார்கள், தமிழகத்திலுள்ள விவசாயப் பெருங்குடி மக்களுக்கு, சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு. அடையாள அட்டைகளை இந்த அரசு வழங்கிக்கொண்டிருக்கிறது, இந்த அட்டைகள் மார்ச் மாதம் 31-ஆம் தேதிக்குள் வழங்கப்பட்டுவிடும் என்பதையும். அந்த அட்டைகளைப் பெற்றவர்கள் நான் இந்த மானிய விலையில் வழங்கப்படக் கூடிய அத்தனை சலுகைகளையும் பெறக் கூடியவர்களாக, தகுதி படைத்தவர்களாக இருக்கிறார்கள் என்பதையும் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைப் பொருட்கள் வழங்கும் ஒரு சங்கத்திலே மானிய விலையில் வழங்குகின்ற வேளாண்மைப் பொருட்கள் அனைத்தும் அங்கே மானிய விலைக்கு வாங்குகின்றவர்களுக்

குக் கிடைக்காமல் வசதி படைத்தவர்கள் அவற்றைப் பெற்று விடுகிறார்கள். அங்கே பணியாற்றுகிறவர்கள் மூலமாக. அதைத் தடுத்து மானிய விலையில் கிடைக்கக் கூடியவர்களுக்கு வழங்கு வதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'விழலுக்கு நீர் பாய்ச்சி மாய மாட்டோம் வெறும் வீணருக்கே உடல் உழைத்து ஓய மாட்டோம்' என்ற பாட்டுத்திறனுக்கேற்ப பாட்டுடைத் தலைவியாக இருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் காலத்திலே எந்தத் தவறு களும் நிச்சயமாக நடைபெறாது. உறுப்பினர் அவர்கள் தவறு கள் நடைபெறுவதாகச் சுட்டிக்காட்டுவார்களேயானால் நட வடிக்கை எடுப்பதற்குப் புரட்சித் தலைவி அவர்களின் அரசு தயங் காது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. ஆர். ஈஸ்வரன் : தலைவரவர்களே........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 5, 6 உறுப்பினர்கள் கேட்க இருக்கிறார்கள், (குறுக்கீடு) அதை எழுத்து மூலமாகக் கொடுத்துவிடுங்கள். எழுதிக் கொடுத்தால் நடவடிக்கை எடுக் கிறேன் என்று சொல்லியிருக்கிறார், எழுதிக் கொடுங்கள். இப் போது உட்காருங்கள்.

திரு. மா. சா. மா. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் லைவர் அவர்களே. அரசால் வழங்கப்படுகின்ற மானியங்கள் எல்லாம் மிகச் சிறிய விவசாயி, சிறிய விவசாயி என அழைக்கப் படும் இரு பிரிவினருக்கும் ஒரே மாதிரியான மானியத் தொகைக் குத்தான் வழங்கப்படுகிறது. உதாரணமாக விதை நெல்லுக்கு கிலோ ஒன்றுக்கு ஒரு ரூபாய் மானியமாகவும், உரத்திற்கு 30 சத வீதம் மானியமாகவும் வழங்கப்படுகிறது, இதனை மிகச் சிறிய விவசாயிகளுக்கு விதை நெல்லிற்கு கிலோ ஒன்றுக்கு ரூ.2 எனவும், உரத்திற்கு 50 சதவீதம் எனவும் மானியமாக அதிகரித்துக்கொடுக் கப்படுமா என அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பே வைத் தலைவர் அவர்களே, சிறு. குறு, விவசாயி என்கின்ற தரத் தினை மத்திய அரசு பிரித்து, மாநில அரசிற்குப் பரிந்துரை செய்திருக்கிறது. அதன் அடிப்படையில்தான் வேளாண் பொருட் களின் மானியங்கள் வரையறை செய்யப்பட்டு, சிறு, மற்றும் குறு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வந்து கொண்டிருக்கிறது என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்திலே மாண்பு மிகு உறுப்பினர் ஈஸ்வரன் அவர்கள் என்னிடத்திலே எழுதிக்



கொடுத்த புகாருக்கு ரகசிய முறையில் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதனையும் இங்கே தெரிவித்துக் கொள் கிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் நேரம் அவையின் முன் அனுமதியுடன் நீட்டிக்கப்படுகிறது.

வினா எண், 174, டாக்டர் (திருமதி) பியாட்ரிச்ஸ் டி. சோசா. மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

174 நடைபாதை வாசிகளுக்கு வீட்டுவசதி

*4351—டாக்டர் (திருமதி) பியாட்ரிக்ஸ் டி. சோசா. மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச் சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நடைபாதை வாசிகளுக்கு வீடுகட்டித்தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) அரசிடம் நடைபாதை வாசிகள் எண்ணிக்கை குறித்து புள்ளி விவரம் உள்ளதா?

மாண்புமிகு திரு டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம். சென்னை மாநகரில் வசிக்கும் நடைபாதை வாசிகளுக்கு வீடுகட்டித்தரும் திட்டம் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திடம் உள்ளது,

(ஆ) நடைபாதைவாசிகள் எண்ணிக்கை குறித்து புள்ளி விவரத்தினை சென்னைப் பெருநகரவளர்ச்சிக் குழுமம் தனியார் நிறுவனங்கள் மூலமாக சேகரித்து வருகிறது,

Dr. (Thirumathi) BEATRIX D'SOUZA: Hon. Speaker, Sir, under the 'Pavements dwellers, we should include all those who live without shelter on river embankments, near canals and under bridges, which includes street children. They live in sub-human conditions and their life style is one of total depravation. will the Government register these families as a first step towards relocating them in proper houses?

The Hon. Thiru T. M. SELVAGANAPATHY: Hon. Speaker, Sir the Government will examine the issue raised by the Hon. Member.

[1992 மார்ச் 11

Dr. Thirumathi BEATRIX D'SOUZA: Hon Speaker, Sir,I thank the Hon. Minister.

Hon. SPEAKER: Hon. Chief Minister.

The HON. Dr. J. JAYALALITHA; Hon. Speaker, Sir, as regards registration of those families on the pavements without proper dwellings, that is a question, that should be addressed to the Social Welfare department.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 175· டாக்டர் வெ. சரோஜா. மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

175—

சத்துணவுத் திட்டம் குறித்து வளர்ச்சி மதிப்பீட்டு அட்டவணை.

*4398 டாக்டர் வெ. சரோஜா :

மாண்புமிகு சமூக நலத்துறைஅமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சத்துணவுத் திட்டம் திறம்பட செயல்படுகிறதா என்பதை அறிய சத்துணவுத் திட்டத்தின் அளவுகோலாக வளர்ச்சி மதிப்பீட்டு அட்டவணை (Growth assessment chart) தயாரிக்கும் முறை நடைமுறைப்படுத்தப்படுகிறதா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தில் குழந்தைகளுக்கு எடை எடுக்கப்பட்டு குழந்தைகளின் வளர்ச்சி கண்காணிக்கப்படுகிறது.

டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சின்னஞ்சிறு குழந்தைகளின் பிஞ்சு உடலை, உயிரை அறிவை வளர்த்துஅதன்மூலம் ஒரு ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்க அமைக்கப்பட்ட இந்தத் திட்டமானது, இன்றைய அரசால், நம்முடைய அரசால், சுகாதாரப் பணிகளுடன் இணைக்கப்பட்டமைக்கு அரசுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த சத்துணவுத்திட்டமானது குழந்தைகளின் உடல் வளர்ச்சி, உள்ள வளர்ச்சி மற்றும் அறிவுத் திறன் ஆகியவற்றை ஒன்று சேர எடுக்கும் கருவியாகுமே அல்லாமல், எடையை மட்டும் வைத்துக் கொண்டு ஒரு குழந்தையின் வளர்ச்சியை நாம் கண்டு விட முடியாது. ஆகவே இனி வரும் நாட்களில் இந்தத் திட்டம் திறம்பட செயல்பட, "வெல்பேபி கிளினிக்கல்இல் உள்ள சார்ட் படி, குறிப்பாக தலை பாகத்தின் சுற்றளவு, மேல் கையின் சதைப் பிடிப்பு, வயிற்றின் சுற்றளவு, குழந்தையின் உயரம் ஆகிய பேராமீட்டர்கள் கொண்டு குழந்தையின் வளர்ச்சியை நாம் அறிகிறோம். இவை அனைத்திற்கும் மேலாக I. Q. Assessment. It is veryy Importent. ஆதலால்......



1992 மார்ச் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் சரோஜா, நீங்கள் இதிலேயெல்லாம் எக்ஸ்பெர்ட் என்பது எல்லோருக்கும் தெரியும். கேள்வியாகக் கேளுங்கள்.

டாக்டர் வெ. சரோஜா : இவை அனைத்தையும் ஒரு சேர அசெஸ்மென்ட் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? எடை குறைவாக உள்ள குழந்தைகளைப் பராமரிக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன? இவைகளை மாவட்ட அளவிலே அசெஸ்மென்ட் செய்வதற்கு ஒரு குழு ஏற்படுத்தப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் 69 ஊராட்சி ஒன்றியங்களிலேயும், 42 நகர்ப்புறப்பகுதிகளிலேயும், ஐ.சி.டி.எப். திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தமிழ்நாட்டில் 11 மாவட்டங்களில் 'கிளினிக்ஸ் திட்டம்' செயல்படுத்தப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல குழந்தைகளுடைய சதை அளவு, எடை அளவு என்று இதில் எடுக்க முடியாது. அதற்குக்காரணம் 6 மாதம் முதல் 24 மாதம் வரை உள்ள குழந்தைகளுக்குத்தான் இந்த எடை எடுத்து அது கண்காணிக்கப்படுகிறது. எடைக்கு ஏற்ப குழந்தைகளை 4 வகையாகப் பிரித்து—முதல் இரண்டாம் வகையாளர்கள் போதிய எடை உள்ளவர்களாகவும், மூன்றாம் நான்காம் பிரிவினர் போதிய எடை இல்லாதவர் களாகவும் கருதப்படுகின்றனர், எடை குறைவாக உள்ள 3, 4 குழந்தைகளுக்கு ஐ.சி.டி.எஸ். TINP திட்டங்களில் காலையில் ஊட்டச் சத்துமாவு உருண்டை வழங்கப்படுகிறது. சுமார் 70 கிராம் எடையுள்ள இந்த உருண்டை. சோதுமை. சோயாமாவு, ராகி, பருப்பு, வெல்லம் ஆகியவற்றைக் கொண்டு செய்யப்பட்டது ஆகும். இதில் பால் வைட்டமின் சத்தும் சேர்க்கப்பட்டு இருக்கிறது. இந்த சத்துமாவின் மூலம் ஒரு குழந்தைக்கு சராசரி 340 கலோரியும் 10.9 கிராம் புரதச் சத்தும் கிடைக்கிறது, இப்போது இரண்டு வயதுக்கு மேற் பட்ட குழந்தைகளுக்கும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தில் மதிய உணவு வழங்கப்படுகிறது. தமிழகத்துக் குழந்தைகளின் வளர்ச்சியில் அதிக அக்கறை எடுத்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் அரசு பொறுப்பு ஏற்றுக் கொண்டதற்குப் பின்னால் இந்த க்ரோத் அசெஸ்மெண்ட் சார்ட் மிகச் சரியான முறையில் நடைபெறுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1992 மார்ச் 11

முற்பகல் 10—35

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> டாக்டர் அ. ஸ்ரீதரன்,

<u>டாக்டர் அ. ஸ்ரீதரன்:</u> பேரவைத் தலைவர் அவர்களே, புகழ் மிக்க சத்துணவுத் திட்டத்தின் மூலம் எத்தனை குழந்தைகள் நியூட்ரிஷனல் டெஃபிஸியன்ஸி டிஸீஸ்— அதாவது உணவுப் பற்றாக்குறையால் ஏற்படும் நோயிலிருந்து காப்பாற்றப்பட்டு இருக்கிறார்கள் என்ற புள்ளி விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி:</u> பேரவைத் தலைவர் அவர்களே. அதாவது இந்தத் திட்டத்தில் 9.06 மையங்களில் சுமார் 13 இலட்சம் குழந்தைகளின் எடை ஒவ்வொரு மாதமும் எடுக்கப்படுகிறது. ஊட்டச் சத்து திட்டத்தில் 7.5 இலட்சம் குழந்தைகள் 7,500 மையங்களில் பயன் பெறுகிறார்கள். மொத்தத்தில் 82 சதவீதம் குழந்தைகள் நல்ல உடல் நிலையைப் பெற்று இருக்கிறார்கள். பொதுவாக 2, 3 சதவீதம் குழந்தைகள்தான் மிகவும் இப்படிப்பட்ட எடை குறைவாகவும், நோய்வாய்ப்பட்டிருக்கின்ற குழந்தைகளாகவும் இருக்கிறார்கள் என்ற தகவல் கிடைத்திருக்கிறது. இவர்களுக்கு ஊட்டச் சத்துடன், மருத்துவமனை சிகிச்சை வழியும் தரப்படுகின்றது,

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> வினா எண். 176, திரு. ஆர். சிங்காரம். மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

176—

<u>கால்நடை உதவி மருத்துவர்களுக்கு பதவி உயர்வு</u>

<u>*1583—திரு. ஆர். சிங்காரம்—</u>

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கால்நடை உதவி மருத்துவர்களுக்கு உதவி இயக்குநர் பதவி உயர்வு 22 ஆண்டுகள் கழித்துத்தான் கிடைக்கும் என்பதை மாற்றி 10 ஆண்டுகளாக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) 10 ஆண்டுகள் பணி முடித்த தேர்வுநிலை கால்நடை உதவி மருத்துவர்களுக்கு அடிப்படை ஊதியம் ரூ. 2,500-ம் 20 ஆண்டு காலம் பணி முடித்தவர்களுக்கு சிறப்பு நிலை அடிப்படை ஊதியம் ரூ. 3,000-ம் வழங்கிட அரசாணை இருப்



1992 மார்ச் 11]

பதால் உதவி இயக்நகுராக பதவி உயர்த்தப்படாவிட்டாலும் இவ்வூதியத்தை உதவி மருத்துவர்கள் பெற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

<u>மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே:—

(அ) இல்லை.

(ஆ) தமிழ்நாடு ஐந்தாவது ஊதியக் குழுவின்படி கால்நடை உதவி மருத்துவர்களின் ஊதிய விகிதம் கீழ்க்கண்டவாறு உள்ளது:—

கால்நடை உதவி மருத்துவர்—ரூ. 2,000—3,500.

10 ஆண்டுகள் பணிமுடித்த தேர்வுநிலை கால்நடை உதவி மருத்துவர்—ரூ. 2,200—4,000.

20 ஆண்டுகள் பணிமுடித்த சிறப்பு நிலை கால்நடை உதவி மருத்துவர்—ரூ. 2,500—4,200.

10 ஆண்டுகள் பணி முடித்த தேர்வுநிலை கால் நடை உதவி மருத்துவர்களுக்கு அடிப்படை ஊதியம் ரூ. 2.500-ம். 20 ஆண்டுகள் காலம் பணி முடித்தவர்களுக்கு சிறப்பு நிலை அடிப்படை ஊதியம் ரூ. 3,000-ம் வழங்கிட அரசு ஆணை ஏதுமில்லை,

<u>திரு. ஆர். சிங்காரம் :</u> பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கின்றபோது (அ) என்பதற்கு இல்லை என்று பதில். அளித்தார்கள். இந்த உதவி கால்நடை மருத்துவர்களுக்கு, உதவி இயக்குநர் பதவி உயர்வு 22 ஆண்டுகள் கழித்துத்தான் கிடைக்கிறது. ரிடையர்மெண்ட் ஸ்டேஜில் மேக்ஸிமம் அவர்கள் அடைந்து விடுகிறார்கள். கடைசியில் 10 ஆண்டு அல்லது 8 ஆண்டு தான் மிச்சம் இருக்கிறது ஆகவே 22 ஆண்டுகள் மேக்ஸிமம் சர்வீஸ் செய்கின்றவர்களுக்கு அந்த நிலையைக் குறைத்து 10 ஆண்டுகள் என்ற அந்த நிலையைஅடைந்தாலே புரோமோசன்செய்து மீண்டும்அவர்களுக்கு உத்திரவு அளிக்க ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் :</u> பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை வினாவில் குறிப்பிட்டுள்ளது போல 10 ஆண்டுகள் பணி முடித்த தேர்வு நிலை கால்நடை உதவி மருத்துவர்களுக்கு அடிப்படை ஊதியம் 2,50C-ம், 20 ஆண்டுக் காலம் பணி முடிந்த சிறப்புநிலை கால்நடை உதவி

மருத்துவர்களுக்கு அடிப்படை ஊதியம் 3,000-ம் வழங்கிட அரசிடம் செயற்குறிப்பு இல்லை. இந்த 22 ஆண்டுகள் பற்றி சட்டமன்ற உறுப்பினர் கேட்ட கோரிக்கைக்கு, தற்போது நம்மிடம் செயற் குறிப்பு எதுவும் இல்லை.

திரு. ஆர். சிங்காரம் : பேரவைத் தலைவர் அவர்களே, 2-வது (ஆ) என்ற கேள்விக்குச் சிறப்பான பதில் அளித்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் சொல்வது 22 ஆண்டுகள் முடிந்து தான் அவர்களுக்கு புரோமோஷன் கிடைக்கிறது. 22 ஆண்டுகள் மேக் மம் அவர்கள் அடைந்து விடுகிறார்கள். அதன் பிறகு புரோமோஷன் கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறதோ இல்லையோ தெரியவில்லை. ஆனால் 22 ஆண்டுகள் கழித்துத்தான் புரோமோஷன் என்ற சூழ்நிலையை மாற்றி 10 ஆண்டுகள் கழித்து புரோமோஷன் கிடைப்பதற்கு மீண்டும் பரிசீலிக்க முடியுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–40

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்தில் இது பற்றிப் பரிசீலிக்கப் படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 177, திரு. கா. சின்னசாமி. மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

177—

மலைவாழ் மக்களுக்கு வேலை வாய்ப்பில் ஒதுக்கீடு உயர்த்துதல்.

*4184—திரு. கா. சின்னசாமி:—

மாண்புமிகு ஆதி திராவிட விடர் நலத்துறை அமைச்சர்— கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மலைவாழ் மக்கள் பழங்குடியினர்க்கு வேலை வாய்ப்பில் ஒரு சதவீதம் ஒதுக்கப்பட்டதை ஐந்து சதவீதமாக உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



மலைவாழ் மக்கள், பழங்குடியினர்க்கு வேலை வாய்ப்பில் ஒரு சதவீதம் ஒதுக்கப்பட்டதை ஐந்து சதவீதமாக உயர்த்த அரசிடம் செயற் குறிப்பு ஏதும் இல்லை.

திரு. கா. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைவாழ் மக்கள் பழங்குடியினர்க்கு வேலை வாய்ப்பில் மாநில அரசு ஒரு சதவீதம் அளித்து வருகிறது. இதனால் மலைவாழ் மக்கள் பழங்குடியினர் படித்து இருந்தும் கூட, வேலை வாய்ப்பிற்கான அடிப்படைத் தகுதி இருந்தும் கூட அவர்கள் நிராகரிக்கப்படுகிறார்கள். மலைவாழ் மக்கள் பழங்குடியினர்க்கு மத்திய அரசு 7½ சதவீதம் அளித்து வருகிறது. ஆகவே, மலைவாழ் மக்கள், பழங்குடியினர்க்கு வேலை வாய்ப்பில் ஒரு சதவீதம் ஒதுக்கப்பட்டதை ஐந்து சதவீதமாக உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்தில் 19—9—1991 அன்று சட்டப் பேரவையில் ஆதி திராவிடர் மற்றும் பழங் குடியினர் நல மானியக் கோரிக்கையின் மீது விவாதம் நடந்தபோது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பல்வேறு கோரிக்கைகளை எழுப்பினார்கள். ஆதி திராவிடர் மற்றும் மலைவாழ் பழங்குடியின மக்களுக்கு அரசுப் பணிகளில் ஒதுக்கப்பட்டுள்ள இட ஒதுக்கீட்டை 1991-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்புக்கு ஏற்ப உயர்த்துவதற்காக பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 178, திரு. எம். பூராசாமி, மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர்.

178—

தரங்கம்பாடியில் மீன்பிடி துறைமுகம்.

*3300—திரு. எம். பூராசாமி:

மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) பூம்புகார் மற்றும் தரங்கம்பாடியில் மீன்பிடி துறைமுகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உளளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பு ஆண்டில் பணி துவங்கப்படுமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். பூராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை என்ற சொல்லுக்கே இடம் இல்லாமல் வாழ்ந்து வரும் நமது இதய தெய்வம் ஆட்சியில் பூம்புகார் மற்றும் தரங்கம்பாடியில் கடல் மீனவர்கள் 30 ஆயிரம் பேர் இருக்கிறார்கள். தமிழ்நாட்டிலேயே அதிகமாக மீன் உற்பத்தியாகிற இடங்கள் இந்த இரண்டு இடங்கள் தான். ஆகவே, கருணை கூர்ந்து இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் இதை மறுபரிசீலனை செய்து பூம்புகாரிலும், தரங்கம்பாடியிலும் கப்பல் தளம் அமைக்க ஆவன செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மீன்பிடித் துறைமுகம் தான் மாண்புமிகு அமைச்சருடைய பொறுப்பில் இருக்கிறது. நீங்கள் கப்பல் தளம் கேட்கிறீர்கள். ஆகவே, இதற்குத் தனிக்கேள்வி போடவும்.

வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. விதி 110-இன்கீழ் முதலமைச்சரின் அறிக்கை—அரசு அலுவலகங்களின் வேலை நேரம் மாற்றம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவை விதி 110-ன் கீழ் அவைக்கு ரு முக்கிய அறிவிப்பை இப்போது வெளியிடுவார்கள்.

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு அரசு அலுவலர்களின் சங்கங்கள் என்னைச் சந்தித்து தங்களது கோரிக்கைகளை அளித்து அவற்றின் மீது என்னுடன் பேசவேண்டுமென்று கேட்டு இருந்தார்கள். அக்கோரிக்கைகளை ஏற்று நான் அரசுப் பணியாளர்களின் சங்கப் பிரதிநிதிகளை 2—3—1992 அன்று சந்தித்துப் பேசினேன். அப்போது, தற்போது காலை 9-45 மணிக்குத் தொடங்கி மாலை 5-45 மணி வரை பணியாற்றும் அலுவலக நேரத்தை காலை 10-00 மணி முதல் மாலை 5-30 மணி வரை ான்று மாற்றி அமைக்குமாறு சங்கப் பிரதிநிதிகள் கோரினார்கள். காலை வேளையில் பேருந்துகளில் கூட்டம் அதிகமாக உள்ளதால் அலுவலகத்திற்கு 9-45 மணிக்கு வருவது என்பது சிரமமாக உள்ளது என்பதையும் குறிப்பாக அலுவலகத்தில்



வேலைகளை முடித்து பணியாற்றும் பெண்கள வீட்டு காலத்தே அலு குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பி விட்டு என் வலகத்திற்கு வர சிரமமாக உள்ளது என்பதையும் இக்கோரிக்கை கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். நான் காலை யினைப் பரிசீலித்து அரசு அலுவலக நேரத்தை ஆணை 10-00 மணி முதல் மாலை 5-45 மணி வரை மாற்ற நேர பிறப்பித்துள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மகிழ்ச்சி மாற்றம் உடனடியாக அமலுக்கு வரும் என்பதையும் தட்டும் யுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் ஒலி)

முற்பகல் 10—45

இப்பொழுது நான் வெளியிட்ட அறிவிப்பைப் பற்றி ஒரு விளக்கத்தைத் தர விரும்புகிறேன். உடனடியாக அமுலுக்கு வரும் என்றால், நாளை முதல் அமுலுக்கு வரும் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

*திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கிளாரிபிகேஷன். இது தமிழ்நாடு பூராவுக்குமா............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : under rule 110, there is no clarification.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : will this apply to the city of Madras only or to the whole of Tamil Nadu ?

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, this will apply throughout Tamil Nadu. (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றம் நடைபெறும் நேரம் குறித்து.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டமன்றம் நாம் முடிவு செய்கிற நேரத்தின்படி நடக்கவேண்டிய ஒன்று.

3. வரவு-செலவுத் திட்டம், 1992-93, பொது விவாதம்— தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992—93 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் மீது விவாதம், திரு. ஆ. பாலையா.

*திரு. ஆ. பாலையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு தமிழக நிதி அமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்திலே சமர்ப்பித்துள்ள நிதிநிலை றிக்கையின்மீது ஒரு சில கருத்துக்களை நான் சொல்ல ரும்புகிறேன். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள இந்த நிதிநிலை அறிக்கை மிகப்பெரிய பற்றாக்குறை நிதிநிலை அறிக்கையாக இருந்தாலும், ஏழையெளிய மக்கள், சாதாரண மக்கள் பாதிக்கப்படாத அளவிலே இந்த நிதிநிலை அறிக்கை தயார் செய்யப்பட்டிருக்கிறது. இந்த நிதிநிலை அறிக்கையிலே ஏற்பட்டுள்ள பற்றாக்குறைகளைச் சரிக்கட்டுவதற்காக மத்திய அரசிடமிருந்து நிதி உதவிகளை இந்த அரசு எதிர்பார்க்கின்றது. அந்த நிதி உதவியை மத்திய அரசு அளித்தால் மட்டுமே இந்தப் பற்றாக்குறையைச் சரிக்கட்ட முடியும் என்கிற யதார்த்த உண்மை நிலையை தமிழக அரசு உணர்ந்து கொண்டதிலே நான் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில், படித்தவர்கள், பாமரர்கள் இவர்களுக்கு புதிய தொழில் வாய்ப்புகளையும் வேலைவாய்ப்புகளையும் ஏற்படுத்துவதற்கான எந்தவிதமான திட்டமும் இல்லை என்பதை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மக்கள் அன்றாடம் உபயோகிக்கின்ற அத்தியாவசியமான பண்டங்களின் விலைவாசிகள் விஷம்போல் ஏறிக்கொண்டிருக் ருக்கின்றன. அந்த விலையேற்றத்தைத் தடுப்பதற்கு எந்த வகையிலும் இந்த நிதிநிலை அறிக்கையிலே வழிவகைகள் காணப் படவில்லை என்பதை இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். பொதுவாக விலைவாசி ஏறுவதற்குக் காரணமாக இருப்பவர்கள் பதுக்கல்காரர்கள், கள்ளக்கடத்தல்காரர்கள்தான் என்பதை இந்த நாடு நன்றாக அறியும். ஆகவே, இந்த விலையேற்றத்தைத் தடுப்பதற்காக அரசு அவர்கள்மீது கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். தமிழ்நாடு காவல்துறைக்கு, அதனுடைய சீரமைப்பிற்காக அதிகப்படியான நிதியினை இந்த நிதிநிலை அறிக்கையிலே ஒதுக்கி இருக்கிறார்கள். அதே நேரத்திலே காவல் துறையினுடைய இன்றைய நிலைமையை நாம் பார்க்கின்றபோது தமிழகத்திலே சட்டம் ஒழுங்கைச் சரிவர நிறைவேற்ற முடியாத அளவிலே காவல் துறை இருந்து கொண்டிருக்கிறது. எங்குபார்த்தாலும் வழிப்பறிக் கொள்ளைகள், கொலைகள், சமூகவிரோதச் செயல்கள் இவைகள்தான் அதிகப்படியாக நடந்து கொண்டிருக்கின்றன. காவல் துறையினர் சட்டம் ஒழுங்கைக் காக்கத் தவறிவிட்டார்கள். காவல் துறையினுடைய எழுச்சிமிக்க நடவடிக்





கைகள் இப்போது இல்லையென்பதை அன்றாடம் நடக்கின்ற நிகழ்ச்சிகளை வைத்துப் பார்க்கின்றபோது நம்மாலே புரிந்து கொள்ள முடிகின்றது.

முற்பகல் 10-50

அதோடு மட்டும் அல்ல; காவல் துறையிலே இருக்கின்ற காவல் நிலையங்களுக்குப் போதிய காவலர்கள் நியமனம் செய்யப்படாத காரணத்தினாலே, அவர்களுடைய பணியைச் சிறப்பாக, செம்மையாகச் செய்வதற்கு முடியாத நிலைமை இன்று ஏற்பட்டு இருக்கிறது என்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மேல்நிலைப் பள்ளிகளிலே ப்ரீ-ஸ்கூல் டீச்சர் என்ற பாடத்தினைப் படித்து, ப்ளஸ் 2 தேறிய மாணவர்கள், மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்யச் செல்கின்றபொழுது, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், ஆசிரியர் வேலைக்குப் பதிவு செய்ய முடியாது, இயலாது என மறுத்து உள்ளார்கள். அதோடு, ஆசிரியர் விதிகளிலே இடம் இல்லை என்றும் சொல்கிறார்கள். ஆசிரியர் பயிற்சி மாணவர்கள் போன்று, ப்ரீ-ஸ்கூல் டீச்சர் வகுப்புக்கும் தியரி, பிராக்டிகல் போன்ற வகுப்புகள் உண்டு. இருந்தும் ஆசிரியர்கள் நியமனத்திற்குப் பதிவு செய்ய இந்தக் கல்வித்தகுதி போதாது என்கிறார்கள். ஆசிரியர் வேலைக்குத் தகுதி இல்லாத ஒரு கல்வித் திட்டத்தை ப்ரீ-ஸ்கூல் டீச்சர் என்ற பெயரில் ப்ளஸ் 2-வில் ஏன் வைக்க வேண்டும்? அதைப் படித்து முடித்த பின் ஆசிரியர் வேலைக்குத் தகுதி இல்லை என ஏன்கூற வேண்டும்? ஒன்றை நான் அறிய ஆசைப்படுகிறேன். ஆசிரியர் பயிற்சிக்கும், ப்ரீ-ஸ்கூல் டீச்சருக்கும்............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர்.

*மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ப்ரீ-பிரைமரி ஸ்கூல் டிரெயினிங் என்பது, நர்சரி வகுப்புகளுக்குப் போதிக்கிற ஆசிரியர்களுக்குத் தரப்படுகிற பயிற்சி ஆகும். அப்படிப்பட்ட வகுப்புகளை அரசாங்கம் இன்னும் அங்கீகரிக்காத காரணத்தால், அப்படிப் பயிற்சி பெற்றவர்களுக்கு வேலைவாய்ப்பு இன்றைய தினம் இல்லாமல் இருக்கிறது. எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்சிலே அவர்களைப் பதிவு பண்ணினாலும் அந்த வகுப்புகளுக்குத்தான் அவர்களை அனுப்ப வேண்டுமே தவிர, 1-வது, 2-வது வகுப்புகளுக்கு அவர்களை அனுப்ப முடியாது. 1-வது, 2-வது வகுப்புகளுக்கு செகண்டரி கிரேடு டிரெயினிங் படித்தவர்களைத்தான் அனுப்ப முடியும். ஆகவே, இப்பொழுது அரசு நர்சரி பள்ளிகளை அங்கீகரிக்கலாம்

என்கிற ஒரு முடிவிலே இருக்கிற காரணத்தால், அங்கீகரிக்கப்பட்ட
தற்குப் பிறகு, ப்ரீ பிரைமரி படித்த அந்த டிரெயினிங்
எடுத்துக் கொண்ட ஆசிரியர்களுக்கு அந்த நர்சரி பள்ளிகளிலே
வேலையில் சேர வாய்ப்புகள் ஏற்படும்.

திரு. ஆ. பாலையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்
களே, நான் கேட்டுக் கொள்வதெல்லாம், மாவட்ட வேலை
வாய்ப்பு அலுவலகந்திலே பதிவு செய்ய மறுக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வேலைக்குப் பயிற்சி பெற்ற
வர்களை இன்னொரு வேலைக்குப் பதிவு செய்து அனுப்ப முடி
யாது என்பதைத்தான் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஆ. பாலையா : பேரவைத் தலைவர் அவர்களே, இவர்
களுக்கு வேலை வாய்ப்பிலே முன்னுரிமை கொடுப்பதற்கும்,
வேலை வாய்ப்பு கிடைப்பதற்கும் அரசு உத்தரவாதம் வழங்க
வேண்டுமென்று நான் அரசை வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்
கிறேன்.

எங்களுடைய கன்னியாகுமரி மாவட்டத்தில் இராமச் சாலை
கோட்டப் பொறியாளர் அலுவலகம் 1971-இலிருந்து செயல்
பட்டு வந்துகொண்டிருக்கிறது. அந்தக் கிராமச் சாலைக்
கோட்டப் பொறியாளர் அலுவலகத்தை வேறு இடத்திற்கு
மாற்றுவதற்காக அரசு முடிவு செய்து இருப்பதாக அறிகிறேன்.

நான் அரசைக் கேட்டுக் கொள்வதெல்லாம், கன்னியாகுமரி
மாவட்டத்திற்கு எந்தவிதமான முக்கியமான காரியங்களைச்
செய்யாவிட்டாலும், இருக்கின்ற அலுவலகங்களையாவது அங்
கிருந்து மாற்றாதீர்கள் என இந்த அரசை நான் கேட்டுக்கொள்
கிறேன். பொதுவாக எல்லா மாவட்டங்களிலும்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பொதுப்
பணித்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆரம்பிக்
கின்ற நேரத்திலேயிருந்து நாங்கள் பார்த்துக்கொண்டிருக்கிறோம்.
எடுத்தவுடனேயே, காவல்துறையிலே பல்வேறு குற்றச்சாட்டு
களைக் கூறினார்கள். காவல் துறையிலே சென்ற ஆண்டுகளை
விடக் குற்றங்கள் கூடி இருக்கிறதா, அதற்கு முந்தைய ஆண்டு
களைவிடக் கூடி இருக்கிறதா, குறைந்து இருக்கிறதா என்பதை



அவர்கள் கணக்கில் எடுத்துச் சொல்ல வேண்டும். மொத்தமா
கவே காவல் துறை சரி இல்லை என்று சொல்வது அவ்வளவு நியா
யம் இல்லை, எந்த இடங்களிலே பிரச்சினை இருக்கிறது என்
பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர வேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டத்திற்கு எதுவும் செய்யவில்லை
என்று சொல்கிறார். பல்வேறு துறைகளிலே—மின்சாரத்துறை
யிலும் சரி, நெடுஞ்சாலைத் துறையிலும் சரி, பொதுப் பணி
துறையிலும் சரி, மற்ற எல்லாத் துறைகளிலும் என்னென்ன
காரியங்களை இந்த ஒன்பது மாத காலமாக இந்த அரசு கொண்டு
வந்து நிறைவேற்றி இருக்கிறது என்பதை நாங்கள் பல்வேறு மானி
யக் கோரிக்கைகளின்பொழுது—திட்டங்கள் வருகின்ற நேரத்தில்
சொல்ல இருக்கிறோம். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்
கள் பேசுகிறபோது பொதுவான குற்றச்சாட்டுக்களை அடுக்கிக்
கொண்டு போவது தவறான நடைமுறை என்பதை இந்த நேரத்
திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். என்
னென்ன காரியங்களை ஆற்றவில்லை என்பதை அவர் குறிப்பிட்
டுச் சொல்ல வேண்டும். காவல் துறையிலே என்னென்ன தவறு
கள் நடந்தன, எந்தெந்தப் பகுதியிலே குற்றங்கள் நடந்தன என்
பதை அவர் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். மொத்தமாக,
பொதுவாகக் குறிப்பிட்டுச் சொல்லக்கூடாது. சென்ற ஆண்டு,
அதற்கு முந்தைய ஆண்டு கணக்குகளை இந்த ஆண்டோடு ஒப்
பிட்டுப் பார்க்க வேண்டும் என்பதையும் கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 10—55

திரு. ஆ. பாலையா : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, நான் ஆதாரம் இல்லாது, எந்தக் குற்றச்சாட்டையும்
இங்கே சொல்லவில்லை. காவல் துறையைப் பற்றி நான் கூறிய
குற்றச்சாட்டுகளுக்கு, ஆதாரங்களைத் தருவதற்கு நான் தயாராக
இருக்கிறேன். என்னுடைய சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட
இரணியல் காவல் நிலையம்; இதைப்பற்றி வேண்டுமானால் அரசு
விசாரிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆனால் அமைச்சர் அவர்
கள் சொன்னது, சென்ற ஆண்டு, அதற்கு முந்தைய ஆண்டு இவ்
வளவு குற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன, இந்த ஆண்டு இவ்வளவு
குற்றங்கள் நடந்து விட்டன என்று நீங்கள் சொல்லலாம் என்று
சொல்கிறாரே தவிர, வேறல்ல. ஏதாவது ஒரு இடத்தில் குற்றம்
நடக்காமல் இருக்காது. குற்றமே நடக்காமல் இருந்தால், காவல்
துறையே தேவையில்லையே.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்
களே, 'ஸ்டாடிஸ்டிக்ஸ்' எல்லாம் எங்களுக்குக் கிடைக்காது. எங்
களால் இதைத்தான் சொல்ல முடியும். அமைச்சர்தான் 'ஆன்ஸ்
வர்' செய்யும்போது, இப்படி இல்லை என்று சொல்ல வேண்டுமே.

தவிர, 'ஸ்டாடிஸ்டிக்ஸ்' எங்கே கிடைக்கும்? எங்களுக்கு, எங்களுடைய தொகுதியிலே இன்னின்ன ஜில்லாவிலே குற்றங்கள் கூடியிருக்கின்றன என்று சொல்ல முடியுமே தவிர, எங்களுக்கு அந்த 'ஸ்டாடிஸ்டிக்ஸ்' வராது அல்லவா? நாங்கள் கேட்டாலும், அவர்கள் எங்களிடம் அதைத்தரமாட்டார்கள் அல்லவா? ஆகவே, அதற்குரிய பதிலை அமைச்சர் கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றச்சாட்டைக் கூறுகிறபோது, குறிப்பிட்டுச் சொல்கிற நேரத்திலே, அது சம்பந்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா, எடுக்கப்படவில்லையா என்பதைச் சொல்ல வேண்டும். குற்றங்கள் நடப்பது இயல்பு. ஆனால், அதற்காக காவல் துறை நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா, இல்லையா என்பதை சம்பந்தப்பட்ட துறையினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிற நேரத்திலே, அந்தத் துறை நடவடிக்கை எடுக்கக் காத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு)

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்காகத்தான் நான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் சொல்லட்டும் திரு. ஆ. பாலையா.

திரு. ஆ. பாலையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் காவல் துறையின் மீது சொன்ன குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரங்கள் இருக்கின்றன என்பதைத் தெளிவாகச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், —என்னுடைய தொகுதிக்குட்பட்ட இரணியல் காவல் நிலையத்தில், 10 மாதங்களுக்குள் 12 கொலைகள் நடந்திருக்கின்றன. அந்தக் கொலைகளிலே. குறுக்கீடு),

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கல்வியமைச்சர்

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பேச்சு, காவல் துறையே 10 கொலைகளைச் செய்தது என்பதுபோல இருக்கிறது. காவல்துறை எந்தக் குற்றத்தையும் செய்யவில்லை, காவல்துறையினர் குற்றங்களைச் செய்தவர்களைக் கண்டுபிடிக்கிறார்கள். 10 கொலைகள் நடந்தன என்றால், அந்த ஊரிலே ஏதாவது தவறுகள் இருக்கலாம், ஏன் 10 கொலைகள் நடந்தன என்பதை ஆராய்ந்து பார்த்து, அங்கிருக்கிற சமூக நிலைகளை, பொருளாதார நிலைகளை, அரசியல்



நிலைகளையெல்லாம் ஆராய்ந்து பார்த்து. அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர, கொலை நடந்தால் கொலைகாரனைக் குற்றவாளிக் கூண்டிலே நிறுத்துகிற வேலை தான் காவல் துறைக்கு இருக்கிறது ; ஆகவே, அந்தக் கடமையைக் காவல் துறை செய்கிறதா இல்லையா என்பதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் சொல்ல வேண்டும். அவ்வாறு அத் துறை செய்யவில்லை என்று சொன்னால், அதைத் 'திருத்திக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கலாம். இன்னொன்றையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன், சமீப காலத்தில். சில குற்றங்கள்—கடுமையான குற்றங்கள், விரும்பத்தகாத குற்றங்கள் நடைபெற்றன என்றால் அதற்குக் காரணம், கடந்த இரண்டாண்டுக் காலத்திலே நடைபெற்ற ஆட்சியில், இந்தக் குற்றங்களுக்கு உதவி செய்வதே தங்களுடைய கடமை என்று நினைத்து அவ்வாறு செய்த காரணத்தினாலே தான். நாம் மிகப் பெரிய ஒரு பயங்கரமான பாதிப்புக்கு தேர்தல் நேரத்திலே ஆளாக வேண்டியிருந்தது. மதிப்பிற்குரிய முன்னாள் பாரதப் பிரதமர் இராஜீவ் காந்தி அவர்கள் இறந்தார் என்றால், எவ்வளவு பெரிய சதிக்கூட்டம், எவ்வளவு பெரிய குற்றத்தைச் செய்கிற அளவுக்குச் செயல்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். ஆச்சதிக்கூட்டத்தினரைக் பார்த்து பயிற்சி பெற்றவர்கள், அவர்களைப் பார்த்துப் பழகியவர்கள் இன்னும்கூட இருக்கலாம்; அவர்கள் இப்படிப்பட்ட குற்றங்களில் ஈடுபட்டிருக்கலாம். 10 இளைஞர்கள் சேர்ந்தால், துப்பாக்கிச் சுடதெரிந்தால், எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்ற ஒரு பழக்கம் இங்கு வந்திருக்கின்றது. காஷ்மீர், பஞ்சாப் போன்ற பகுதிகளிலெல்லாம், தனிநாடு பிரச்சினையல்ல; அரசியல் பிரச்சினையல்ல ; திட்டமிட்டு கொலை செய்வது, கொள்ளையடிப்பது என்கிற நிலையில் 70 குற்றங்கள், 100 குற்றங்கள் என்று அங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன். அந்த நிலையை இங்கு வராமல் தடுக்கிற முயற்சியிலேதான் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். விரைவில் பலன் தெரியும் இத்தகைய குற்றங்கள் தொடர்ந்து செய்கிற அளவுக்கு தமிழ்நாடு இருக்காது; நல்லபடியாக சட்டம் ஒழுங்கு பாதுகாக்கப்படும். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆ. பாலையா, பேசட்டும் (குறுக்கீடு). . நீங்கள் (குறுக்கீடு). . . திரு. ஆ. பாலையா எழுந்து நின்றால், விவாதம் நடக்காது. திரு. ஆ. பாலையா அவர்கள் பேசும்போது, காவல் துறையினால் சட்டம் ஒழுங்கு கெட்டுப்போய்விட்டது; தன்னுடைய தொகுதியில் 10 கொலைகள் நடந்தன என்பதை மட்டும் சொல்லுவது, சட்டம், ஒழுங்கு கெட்டுவிட்டது என்பதற்குரிய ஆதாரம் ஆகாது. எனவே, அதற்குரிய ஆதாரங்களோடு, புள்ளி விவரங்கள் இருந்தால் பேசலாம்,

[1992 மார்ச் 11

திரு. ஆ. பாலையா : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே. காவல்துறை, சட்டம், ஒழுங்கைக் காப்பாற்ற வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகியிருக்கிறது. சட்டம் ஒழுங்கு கெடுகிறபோது, காவல்துறை சரியான நடவடிக்கை எடுத்து குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க வேண்டும், ஆனால், அவர்கள் குற்றவாளியைக் கண்டுபிடிப்பதற்குத் தயாராக இல்லாத நிலையில் இருக்கிறார்கள் என்பதைத்தான் நான்சொல்ல ஆசைப்படுகிறேன்.

மேலும், நான் கிராம சாலைகள் கோட்டப் பொறியாளர் அலுவலகத்தைப்பற்றிச் சொன்னேன். அந்தக் கோட்டப் பொறியாளர் அலுவலகத்தை கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து மாற்றக்கூடாது என்று சொல்லிக் கொள்வதோடு, அந்தக் கோட்டப் பொறியாளர் அலுவலகம் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்ற காரணத்தால், அது மேலும் சிறப்பாகச் செயல்படுவதற்கு அதிக நிதியை ஒதுக்கி அதனை அந்த மாவட்டத்திலேயே தொடர்ந்து செயல்பட நீங்கள் உதவ வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11.00

குளச்சலிலே தமிழ்நாடு அரசால் "போட் ஜெட்டி" ஒன்று சுமார் 54 இலட்சம் செலவிலே கட்டுமான வேலைகள் நடந்து கொண்டிருந்தன. திடீரென்று அந்த போட் ஜெட்டி விழுந்து விட்டது. அதற்குப் பின்னாலே அந்த வேலைகள் இதுவரையிலும் நடைபெறவில்லை. அந்த போட் ஜெட்டி வேலை தொடர்ந்து செய்யப்படுமா? அதை முடித்துத் தருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

அதைப்போலத்தான் திங்கள் நகர் பேரூராட்சியிலே 25 இலட்சம் ரூபாய்க்கு பஸ் நிலைய விரிவாக்கப் பணி நடந்து கொண்டிருந்தது. அதிலே, அங்கே கட்டியிருந்த வெயிட்டிங் ஷெட் சில மாதங்களுக்கு முன்னாலே இடிந்து விழுந்து விட்டது. இதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது. ஏனென்று சொன்னால் அந்த வேலையின் தரத்தைப் பற்றி மக்கள் மிகவும் மோசமாகப் பேசுகின்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளது, அரசைப்பற்றியும், அதிகாரிகளைப் பற்றியும் தவறாக அவர்கள் கணக்கிடுகிறார்கள். ஆகவேதான் இந்த மன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து அப்படிப்பட்ட தவறு யாரால் நடைபெற்றது, அதிகாரிகளால் ஏற்பட்டதா அல்லது ஒப்பந்தக்காரரால் ஏற்பட்டதா என்பதைக் கண்டுபிடிக்குமாறு நான் உங்களை வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.



1992 மார்ச் 11] [திரு. ஆ. பாலையா]

குளச்சலிலே நேசமணி போக்குவரத்துக் கழகத்திற்கென ஒரு பணி மனையைக் கட்டுவதற்காக நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு பல ஆண்டுகள் ஆகியும், அந்தப் பணி இன்னமும் தொடங்கப்படவில்லை என்பதை இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அந்தப் பணி ஏன் இன்னமும் தொடங்கப்படவில்லை என்பதையும், நான் அறிய ஆசைப்படுகிறேன். இந்த அரசை நான் கேட்டுக்கொள்வதெல்லாம், நேசமணி போக்குவரத்துக் கழகத்திற்கான பணி மனையைக் குளச்சலிலே உடனடியாகத் தொடங்குவதற்கு நீங்கள் உரிய நடவடிக்கை எடுப்பதோடு, அதற்குரிய நிதி ஆதாரத்தை நேசமணி போக்குவரத்துக் கழகத்திற்காக ஒதுக்குவதற்கு ஆணை பிறப்பிக்க வேண்டுமென்பதுதான்.

இராஜாக்கமங்கலத்திலே உள்ள அரசு உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்ற வேண்டுமென்று நான் பல சந்தர்ப்பங்களிலே இந்த சட்டமன்றத்திலே பேசியிருக்கிறேன். ஆனால் கழிந்த வருடத்திலே அனுமதி தருவதாகச் சொல்லி அதை மேல்நிலைப்பள்ளியாக மாற்றித் தருவதாகச் சொல்லியிருந்தும், கடந்த வருடத்திலே அனுமதி வழங்கப்படவில்லை. இந்த வருடத்தில் நிதிநிலை அறிக்கையிலே 20 மேல்நிலைப் பள்ளிகளுக்கு அனுமதி வழங்கப்படும் என்கின்ற ஒரு அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. அந்த 20 மேல்நிலைப் பள்ளிகளுக்கான அனுமதியிலே இராஜாக்கமங்கலம் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றுவதற்கு அனுமதி வழங்க வேண்டுமென்று நான் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

முந்தைய அரசினால் சுமார் 300 கோடி ரூபாய் செலவில் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு இரப்பர் தொழிற் சாலை ஆரம்பிப்பதற்காக அடிக்கல் நாட்டுவிழா நடைபெற்றது. அந்த இரப்பர் தொழிற்சாலைக்கான திட்டம் இன்று எந்த நிலையில் இருக்கிறது. இந்த நிதி நிலை அறிக்கையிலே அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. ஆகவே. அரசு அந்த இரப்பர் தொழிற்சாலையைக் கன்னியாகுமரி மாவட்டத்தில் அமைப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு இந்த நிதி ஆண்டிலேயே நிதி ஒதுக்கீடு செய்து அந்தத் தொழிற்சாலை, ஆரம்பிப்பதற்கான ஆக்கபூர்வமான பணிக்கு அரசு உதவ வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்,

மகளிர் மேம்பாட்டுத் திட்டங்களுக்காக இந்த நிதி நிலை அறிக்கையிலே ஏராளமான திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. அதையெல்லாம் நான் வரவேற்கிறேன். அதே நேரத்தில் ஒன்றை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர நான் ஆசைப்படுகிறேன்.

[திரு. ஆ. பாலையா] [1992 மார்ச் 11

முற்பகல் 11-05

முன்பு 8ஆவது வகுப்பு வரை படித்த வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கின்ற திருமணம் ஆகாத பெண்களுக்கு திருமணத் திற்கு என்று இலவசமாக 5,000 ரூபாய் கொடுக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது, அந்த நிதி ஒதுக்கீடு பற்றி இந்த நிதி நிலை அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை, அந்தத் திட்டம் தொடர்ந்து நடைமுறையில் இருக்கிறதா அல்லது அந்தத் திட்டம் ரத்து செய்யப்பட்டிருக்கிறதா என்கிற விவரம் இந்த நிதிநிலை அறிக்கையில் இல்லை,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர்,

*மாண்புமிகு திருமதி இரா, இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் திட்டம் தொடர்ந்து செயல்பட்டுக்கொண்டிருக்கிறது, ஆண்டாண்டுக் காலமாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கின்ற திட்டம் அது, தொடர்ந்து செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதைப்பேரவை உறுப்பினர் அவர்களுக்குத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்,

திரு, ஆ, பாலையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்கு நன்றி.

அடுத்து குளச்சலில் ஒரு தீயணைப்பு நிலையம் ஏற்படுத்த வேண்டும் என்கிற கோரிக்கை நீண்டகாலமாக அரசிடம் வைக்கப் பட்டிருக்கிறது, அந்தக் கோரிக்கையை இந்த அரசு உடனடி யாக நிறைவேற்றித் தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்,

மேலும் எங்கள் பகுதியில் இராஜாக்கமங்கலத்தில் பண் ணையூர் பாலம் என்ற இரும்புப் பாலம் இருக்கிறது, ஏராள மான போக்குவரத்து நடைபெறுகின்ற பாலம் அது, இன்று அந்தப் பாலம் இடிந்து விழக்கூடிய நிலைமையில் அபாயகரமான நிலைமையில் போக்குவரத்து செய்ய முடியாத நிலைமையில் இருக்கிறது. அந்தப் பாலத்தைக் கட்டி முடிக்கவேண்டும் என் கிற ஒரு திட்டத்தை அதிகாரிகள் அரசுக்கு அனுப்பியிருக்கிறார் கள். எனவே. அரசு இந்த நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்து அந்தப் பாலத்தைக் கட்டித் தந்து போக்குவரத்துக்கு வசதி ஏற்படுத்துவது மாத்திரமல்ல, அந்தப் பாலம் இடிந்து விழுவ தால் உயிர்கள் சேதமடைய வாய்ப்பிருக்கிறது, அவ்வாறு உயிர்ச்சேதம் ஏற்படுவதற்கு இடம் இல்லாமல் அதை உடனடி யாகக் கட்டி முடித்துத் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள் கிறேன்



1992 மார்ச் 11] [திரு. ஆ. பாலையா]

குளச்சல் நகரத்தில் களிமாரிலே ஒரு பாலம் இருக்கிறது. அந்தப் பாலம் மிக மோசமான நிலைமையில் இருக்கிறது, ஏராள மான பஸ்கள் போய்வந்துக்கொண்டிருக்கிற பாலம் அது. டோக்குவரத்து நெருக்கடி மிக்க பாலம் அது. அந்தப் பாலத்தை உடனடியாகக் கட்டித் தருவதற்கு அனுமதி வழங்க வேண்டும் என்று நான் இந்த அரசை வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அடுத்து ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டிடம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதியில் இருக்கிற குறுந்தக்கோடு ஆரம்ப சுகாதார நிலை யம் ஆரம்பித்து பல ஆண்டுகள் ஆகியும் கட்டிடம் இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறது. ஏதோ ஒரு பஞ்சாயத்து அலுவல கத்தில் அந்த ஆரம்ப சுகாதார நிலையம் செயல் பட்டுக்கொண் டிருக்கிறது, ஆகவே, அந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்குத் தனிக் கட்டிடம் அமைத்து அதிலே செயல்படுவதற்குரிய வகை யில் அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போல் வெள்ளிச்சந்தையிலும் ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. அதற்கும் கட்டிடம் இல்லை எனவே, அதற்கும் புதிதாகக் கட்டிடம் கட்டிக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ரீத்தாபுரம் பேரூராட்சியில் புதிய ஆரம்ப சுகா தார நிலையம் அமைக்க அதிகாரிகளால் கருத்துரு அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. ஆரம்ப சுகாதார நிலையத் திற்காகப் பலமுறை முயற்சி செய்தும் நடைபெற வில்லை. எனவே, இந்த அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத்தர முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மீனவர்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டிக் கொடுப்பதற் கான புதிய திட்டம் இந்த நிதிநிலை அறிக்கையில் சொல்லப் பட்டிருக்கிறது. அவ்வாறு மீனவர்களுக்கு இலவசக் குடியிருப்பு கட்டிக் கொடுக்கக்கூடிய திட்டத்தில் குளச்சல் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட சைமன் காலனியில் 100 வீடுகளுக்கும், முட்டம் மீனவர் குடியிருப்பில் 100 வீடுகளுக்கும் அனுமதி வழங்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். சைமன் காலனியில் கழிந்தவருடம் நூற்றுக்கு அதிகமான குடிசைகள் எரிந்துபோய்விட்டன, அவ்வாறு எரிந்துபோய்விட்ட காரணத்தால் அங்கே மக்கள் தங்குவதற்கு வசதியற்ற நிலைமை யில் சிக்கிக் கொண்டிருக்கிறார்கள். என்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அந்த ஆதரவற்ற

[திரு. ஆ. பாலையா] [1992 மார்ச் 11

மீனவர்களுக்கு அதிகப்படியான வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கு அரசு அனுமதி அளிக்கவேண்டும் என்று நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களுடைய நிதிநிலையை அதிகரிக்க வேண்டும் என்கின்ற வகையிலே கூடுதல் வரி விதிக்க வேண்டுமென நிதிநிலை அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள், தற்போது ஒரு ரூபாய்க்கு நிலவரியின் மேல் வரியாக ரூ. 2.50 விதிக்கப்படுகின்றது. அதனை உயர்த்தி ஊராட்சி ஒன்றியங்களுடைய நிதி ஆதாரங்களைப் பெருக்குவதற்காக ஒரு ரூபாய்க்கு மேல் வரியாக ரூ. 5 முதல் ரூ. 10 வரை வசூல் செய்யப்படலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வரி உயர்வு சாதாரண மக்களை விவசாய பெருங்குடி மக்களைத் தான் பாதிக்கிறது. ஊராட்சி ஒன்றியங்களுக்கு நிதி ஆதாரங்களைப் பெருக்கவேண்டுமென்று சொன்னால் வேறு பலவிதமான திட்டங்களை நாம் வகுத்துச் செயல்படுத்தவேண்டும். ஆனால் ஒரே அடியாக ரூ. 2,50 என்ற வரியை ரூ. 5 முதல் ரூ. 10 வரையிலே உயர்த்தலாம் என்று இங்கே நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருப்பது உள்ளபடியே விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் சாதாரண மக்களுக்கும் பெரிய பாதகமான நிலையை உருவாக்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே அரசின் கவனத்துக்குக்கொண்டு வருகிறேன்.

முற்பகல் 11-10

அதே போல, ஒரு கோடி திட்டம். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடந்த சட்டசபைக் கூட்டத்திலே அறிவித்தார்கள். இந்த வருடம் 193 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுவதெல்லாம் முன்பெல்லாம் குடிநீர் வடிகால் வாரியத்திலே செய்யக்கூடிய வேலைகளுக்கு குடிநீர் வடிகால் வாரியமே பணத்தைக் கொடுத்தது. நெடுஞ்சாலைத் துறை செய்யக்கூடிய வேலைகளுக்கு நெடுஞ்சாலைத் துறையே பணம் கொடுத்தார்கள். அதேபோல் மின்சார இலாகா செய்யக்கூடிய வேலைகளுக்கு மின்சார இலாகாவிலே பணம் கொடுத்தார்கள். கிராமச்சாலை திட்டத்திலே செய்யக்கூடிய வேலைகளுக்கு கிராமச்சாலைத் திட்டத்தின் மூலம் பணத்தைக் கொடுத்தார்கள், ஆனால் இந்த ஒரு கோடி ரூபாய் திட்டத்தை பஞ்சாயத்து யூனியனுக்கு வழங்குகிறோம் என்று சொன்னவர்கள், அந்த விதமான பணிகளைச் செய்ய பஞ்சாயத்து யூனியனுக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்பட்ட நிதியிலிருந்து அந்தந்த இலாக்காக்களுக்கு கொடுக்கவேண்டிய உத்தரவு இருக்கிறது. அதிலிருந்து நாம் புரிந்துகொள்வது எல்லாம், இந்த ஒரு கோடி ரூபாய் திட்டம், முன்பு மற்ற இலாக்காக்களின் மூலம் செய்யப்படும் பணிகளைச் செய்து முடிப்பதற்காக ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு கோடி ரூபாய்



1992 மார்ச் 11] [திரு. ஆ. பாலையா]

ஒதுக்கியிருக்கிறார்கள், இதிலே இருந்து நாம் என்ன தெரிந்து கொள்கிறோம் ? இந்த ஒரு கோடி ரூபாய்க்கான செக்குகளை பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்கள் அந்தந்த இலாக்காக்களுக்குக் கொடுக்கத்தான் முடியுமே தவிர ஊராட்சி ஒன்றியங்களுக்கு அந்த ஒரு கோடி ரூபாய் திட்டத்தினால் எந்தப் பயனும் இல்லை. கூடுதலாக என்ன பணிகள் செய்யமுடியும் ? அப்படிப்பட்ட ஒரு நிலைமையில் அந்தத் திட்டம் இருந்துகொண்டிருக்கிறது.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. எஸ், கண்ணப்பன்:</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்கு நான் ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். யதார்த்தமாக அவர்கள் இன்றைக்குப் பேசுகின்ற நேரத்திலே, மின்சாரத் துறையைப் பற்றிச் சொன்னார்கள். உதாரணமாக, 40 ஆயிரம் விளக்குகள் ஒரு வருடத்திற்குப் போடுகிறோம் என்று சொன்னால் இன்றைக்கு இந்த சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழே ஏறத்தாழ 2 லட்சம் விளக்குகளை நாம் போடுகிறோம். ஆகவே இது அதிகம் இல்லையா என்பதை அவர்கள் தெரிந்துகொள்ளவேண்டும். வருடத்திற்கு 40 ஆயிரம் விளக்குகள்தான் என்று இலக்கு வைத்துக்கொண்டால், சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் 2 லட்சம் விளக்குகள் போடுகிறோம் என்று சொன்னால் அது சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் இல்லையா என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும்.

இரண்டாவதாக சாலைப் பணிகளைப் பற்றி சொன்னார்கள். இன்றைக்கு கிராமச்சாலைகள் போடுவதற்காக தனியாக நிதி ஒதுக்கி இருக்கிறோம். அதேபோல நெடுஞ்சாலை பராமரிப்பதற்காக தனியாக நிதி ஒதுக்கியிருக்கிறோம். ஊராட்சி ஒன்றியத்திலிருந்து கொடுக்கின்ற பணத்தை நெடுஞ்சாலைத் துறை மூலம் போடுவதற்குக் காரணம் அந்த பணிகள் மேம்பட்டதாக இருக்கவேண்டும் என்ற காரணத்தாலே, அதற்காக இன்ஸ்ட்ருமெண்ட் என்று சொல்லக்கூடிய ரோலர்கள் அதற்குரிய மற்ற வசதிகள் எல்லாம் இன்றைக்கு நெடுஞ்சாலைத் துறையிலே இருக்கின்ற காரணத்தினாலே, தரத்தை மேம்படுத்துவதற்காகத் தான் ஊராட்சி ஒன்றியங்களிலேயிருந்து அந்த பணம் நெடுஞ்சாலைத் துறைக்கு ஒப்படைக்கப்பட்டு அந்த வேலைகள் செய்யப்படுகின்றன. இதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

<u>திரு. ஆ. பாலையா :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்படி மற்ற இலாகாக்களுக்கு இந்த ஒரு கோடி ரூபாயிலிருந்து நிதியை ஊராட்சி ஒன்றிய ஆணை

யாளர்கள் கொடுப்பதால் அந்த நிதி உதவியின் மூலம் மற்ற இலாக்காக்கள். வேலை செய்வது தரமாக இருக்கும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் நான் கேட்பதெல்லாம், ஊராட்சி ஒன்றியங்களில் செய்யப்படுகிற பல்வேறு வேலைகள் எல்லாம் தரமில்லையா? தரமான வேலைகள் தான், ஊராட்சி ஒன்றியங்களில் செய்யப்படுகின்றன. ஆனால் ஊராட்சி ஒன்றியங்களுடைய அதிகாரத்தைப் பறிக்க வேண்டும், அதிகாரம் இல்லாத நிலைமையிலே ஊராட்சிகள் இயங்க வேண்டுமென்ற ஒரு திட்டத்தின் அடிப்படையிலேதான் ஊராட்சி ஒன்றியங்கள் செய்யவேண்டிய பணிகளை மற்ற இலாக்காக்களுக்குப் பகிர்ந்தளித்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த நிலைமை மாற்றப்படவேண்டும். ஊராட்சி ஒன்றியங்கள் தனித்து இயங்குவதற்கு, வலு உள்ளதாக, சக்தியுள்ளதாக இயங்குவதற்கு ஏற்ற வகையில் மாற்றுவதற்கு அரசு முன்வர வேண்டும். நாம் அதிகாரத்தைப் பரவலாக்க வேண்டுமென்று சொல்கிறோம். ஊராட்சி ஒன்றியங்களுடைய அதிகாரத்தைப் பறித்துவிட்டால் அதிகாரங்கள் எங்கே பரவலாக்கப்படும், ஆகவே தான் அரசை நான் கேட்டுக்கொள்வதெல்லாம் ஊராட்சி ஒன்றியங்களினுடைய அதிகாரத்தைப் பறிக்க வேண்டாம். இதற்கு முன்பு போலவே இந்த வேலைத் திட்டங்களை, பணிகளைச் செய்வதற்குரிய வசதி வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுங்கள் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு சிறு விளக்கம். ஏற்கெனவே ஊராட்சி ஒன்றியங்களுக்குக் குறைந்த அளவிலே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட நேரங்களில் அங்கே இருக்கின்ற ஊராட்சி ஒன்றியப் பொறியாளர்கள், மேற்பார்வையாளர்கள் ஒரு குறிப்பிட்ட அளவிற்குத் தான் பணிகளைச் செய்ய முடியும். ஆனால் இப்போது அதிகமான நிதி ஒதுக்கப்படுகிற காரணத்தினால்—அதிகாரத்தைப் பறிக்க வேண்டுமென்ற எண்ணம் அல்ல-அதைச் செய்வதற்கு அங்கே அதிக வசதிகள் இல்லாத காரணத்தினால்—ஒரு குறிப்பிட்ட அளவு வேலைகளைத் தான் அவர்கள் மேற்பார்வை செய்ய முடியும் என்கிற காரணத்தினால்தான்—மேலே இருக்கின்ற மற்ற இலாக்காக்களுக்குக் கொடுத்து வேலைகளைச் செய்கிறார்களே தவிர, ஊராட்சி ஒன்றியங்களுடைய அதிகாரத்தைப் பறிப்பது இந்த அரசினுடைய நோக்கம் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கு. தங்கமுத்து.

*திரு. கு. தங்கமுத்து: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்குப் பின்னால் இந்த நிதிநிலை அறிக்கை ஓராண்டு முடிவதற்குள்ளாக இங்கே அறிவிக்கப்பட்டிருக்கிறது. சட்டம் ஒழுங்கை நிலைநாட்டி, விரைந்த பொருளாதார வளர்ச்சிக்கு வித்திட்ட தோடு, இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில் இந்தியப் பொருளாதாரத்தை உலகப் பொருளாதாரத்தோடு ஒருங்கிணைக்கின்ற முயற்சியில் மத்திய அரசு எடுத்திருக்கும் முயற்சியைப் பாராட்டியும், அதேநேரத்தில் வீக்கத்தைக் கட்டுப் படுத்தாத சூழ்நிலையைச் சுட்டிக் காட்டுகின்ற தன்மையிலே அதை எல்லாம் தெளிவுபடுத்தி இந்த நிதிநிலை அறிக்கை இங்கே அறிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே, இத்தகைய தன்மை யில், ஏழையெளிய மக்களுடைய உணவு, உடை, உறைவிடம் இந்த மூன்றிற்கும் உத்தரவாதம் கொடுக்கும் வகையிலே, அதேபோல சமுதாயத்திலே பின்தங்கிய, பலவீனமான பகுதி யினராக இருக்கின்ற தாய்மார்கள், கைக் குழந்தைகள், முதி யோர்கள் போன்றவர்களுக்கு எல்லாம் சிறப்புப் பாதுகாப்பு அளித்தும் இந்த நிதிநிலை அறிக்கையில் வழிவகை செய்யப் பட்டிருப்பதால் இதனை மனமாரப்பாராட்டி வரவேற்கக்கடமைப் பட்டிருக்கிறேன்.

அதேபோல் இந்த நிதிநிலை அறிக்கையில் வேளாண்மை யைச் சார்ந்த பணிகளுக்காகவும் முன்னுரிமை கொடுக்கின்ற வகையில் நூற்றுக்கணக்கான கோடி ரூபாய்களை அதிகமாக ஒதுக்கீடு செய்து வேளாண்மைத் துறை முன்னேறுகின்ற வகை யிலே, மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை அதன்மூலம் உயர்த்து கின்ற வகையில், தன்மையில் இந்த நிதிநிலை அறிக்கையை உருவாக்கியிருக்கிறார்கள். அந்தவகையிலே, இந்த வேளாண் மைத் துறையைப் பொறுத்தவரையில், என்னைப் பொறுத்த வரையில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்று சொன்னால் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், முழுக்க முழுக்க வேளாண்மையைச் சார்ந்திருக்கின்ற மாவட்டமாகும். அந்த மாவட்டத்திலே வேளாண்மையை ஆய்வு செய்கின்ற நிறுவனமோ, அதனைச் சார்ந்துள்ள நிறுவனமோ மிகவும் குறைவாக இருக்கும் நிலையில் நான் கேட்டுக்கொள்வதெல்லாம் தஞ்சை மாவட்டத் தில், இந்த நிதி ஆண்டிலேயே ஒரு வேளாண்மைக் கல்லூரியை அமைத்து உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல பாசனத்தைப் பொறுத்தவரையில், காவிரி ஆறு பாய்கின்ற பகுதியைப் பொறுத்தவரையில், காவிரி நீர் பங்கீட்டு தகராறு பற்றிய பிரச்சினையைப் பொறுத்தவரையில்

[திரு. கு. தங்கமுத்து]

நம்முடைய மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி
அவர்கள் பாரதப்பிரதமர் அவர்களால் அழைக்கப்பட்டு, அதற்குப்
பின்னால் தன்னுடைய சரியான நிலைமையை வெளிப்படுத்தி
நடுவர் மன்றத்தினுடைய ஆணையை அமுல்படுத்த வேண்டு
மென்று தெளிவாக்கி அதனுடைய தன்மையை தெளிவாக
எடுத்துரைத்திருக்கிறார்கள். எனவே, அத்தகைய நிலையில்
இன்றையதினம் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில்
மீண்டும் நெல் களஞ்சியம் ஆக உயர வேண்டுமென்று சொன்
னால், அரசு எடுத்திருக்கும் ஆயத்த நடவடிக்கைகளை வெகு
வேகமாக நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

காவிரிப்பாசன பகுதியுள்ள வாய்க்கால்களாக இருந்தாலும்,
கல்லணைக் கால்வாய் பகுதிகளிலே இருக்கின்ற வாய்க்கால்களாக
இருந்தாலும் இரண்டு ஆண்டுக் காலமாக அவைகள் தூர் எடுக்
கப்படவில்லை. அந்தக் கால்வாய் பகுதிகளைப் பொறுத்தவரை
யில் தூர் எடுக்கப்பட்டு, வரும் ஆண்டின் தொடக்கத்திலேயே
தண்ணீர் பாய்கின்ற தன்மையை வெகு எளிதாக ஆக்க வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல பல மாவட்டங்களில் ஐரோப்பிய பொருளா
தார சமுதாயத்திட்டத்தின்கீழ் ஏரி குளங்கள் எல்லாம் எடுத்துக்
கொள்ளப்பட்டிருக்கின்றன. அப்படி ஏரி குளங்கள் எடுத்துக்
கொள்ளப்படும்போது, செவ்வனே நடைமுறைப்படுத்தும்போதும்
ஆழப்படுத்த திட்டமிடும்போதும் அதிகமான நிதியை ஒதுக்கி
திட்டமிட்டு நிறைவேற்றுகிறார்கள். அந்த ஐரோப்பிய
சமுதாயப் பொருளாதாரத் திட்டத்தின் பங்கீடு தஞ்சை
மாவட்டத்திற்கும் கிடைக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய
தாழ்மையான வேண்டுகோளாகும். அப்படி அதிகமாக நிதி
ஒதுக்கீடு செய்து ஏரிகளையும், குளங்களையும் பராமரிக்கின்ற
செயலும், பழுது பார்க்கும் நிலையும் ஏற்படுமானால் நீர்
நிலைகள் ஆண்டு முழுவதும் நீர்ப் பிடிப்பு தருகின்ற தன்மையைப்
பெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்
கிறேன். மேலும் என்னுடைய தொகுதியிலே பல ஏரிகள் இருந்
தாலும், குறிப்பாக திருவோணம் ஒன்றியத்திலே நெய்வேலி
பெரிய ஏரியும், பணிகொண்டான்விடுதி பணிகொண்டான் ஏரியும்
பல நூற்றுக்கணக்கான ஏக்கர்கள் பரப்பளவு கொண்டவை
களாகும். அந்த ஏரிகளையும், தஞ்சாவூர் ஒன்றியத்தில்
மாமுண்டி ஏரியையும் விரிவுபடுத்துவதற்கு இந்தத் திட்டத்தின்கீழ்
எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11.20

தேசிய நீர் மேலாண்மைத் திட்டம் என்ற திட்டத்தில் பல
திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்று நிதிநிலை



[திரு. கு. தங்கமுத்து]

அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. தஞ்சை மாவட்
டத்தைப் பொறுத்தவரையில் காட்டாறுகள் அதிகமாக உள்ள
மாவட்டமாகும். இந்தத் காட்டாறுகளில் நீர் வரத்து அதிகமாக
வரும்போது, அதைத் தடுத்து நிறுத்திட நீர்த் தேக்க அணை
களைக் கட்டினால் மானாவாரிப் பகுதிகளில் புது பாசனம்
பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படும் அதேவேளையில் இந்தக்
காட்டாறுகளைப் பொறுத்தவரையில் முதலமுத்துவாரி காட்
டாறு, மகாசமுத்திர காட்டாறு, அக்கினி ஆறு காட்டாறு ஆகிய
3 காட்டாறுகள்தான் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரை
யில் வெள்ளத்தால் பாழாகும் காட்டாறுகளாகும். எனவே
இந்தக் காட்டாறுகளினுடைய தலைப் பகுதியில் அணை கட்டி,
தடுத்து விட்டோமானால் ஒரு பகுதி வெள்ளத்தால் பாழா
கின்ற நிலையிலிருந்து பாதுகாக்கப்பட்டுவிடும். எனவே பல
ஆண்டுக் காலமாக கிடப்பிலே இருக்கும் முதலமுத்துவாரி
அணைத்திட்டத்தையும் இதைபோல மகாராஜ சமுத்திரம் அணைத்
திட்டத்தையும் நிறைவேற்றுகிற சூழ்நிலையை இந்த ஆண்டு
உருவாக்கிக் கொடுக்க வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்து வேளாண்மைத் தொழிலைச் சார்ந்திருக்கிறவர்களுக்கு
உப தொழிலாக இருப்பது கால்நடைகள்தான். இந்தக் கால்
நடைச் செல்வங்களைப் பொறுத்தவரையில் இவை தஞ்சை
மாவட்ட மக்களுக்கு அதிகமாக உறுதுணையாக இருக்கின்றன.
எனவே, என்னுடைய தொகுதியிலே உள்ள ஈச்சங்கோட்டை
கால்நடைப் பண்ணையைப் பொறுத்தவரையில் கடந்த சட்ட
மன்றக் கூட்டத் தொடரிலே நம்முடைய மாண்புமிகு தமிழக
முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்
அறிவித்துள்ளதுபோல், சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்து, அதை
உயர்த்தி இருக்கிறார்கள் என்பதற்காக நான் என்னுடைய சார்
பிலேயும், என்னுடைய தொகுதி மக்கள் சார்பிலும் நன்றி
சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் இந்தக் கால்
நடைப் பண்ணையைச் சுற்றி இருக்கின்ற பகுதிகளில் உள்ள
கால்நடைகளுக்கு அதிகமான நோய் வருகின்ற காரணத்தால்
மருங்குளத்திலே ஒரு கால்நடை மருத்துவ மனையை அமைத்துக்
கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்
போல ஒரத்தநாடு ஒன்றியத்திலே உள்ள கோவிலூரில் ஒரு
கால்நடை மருத்துவமனையையும், திருமலை சமுத்திரம் என்ற
ஊரில் ஒரு கிளை கால்நடை மருத்துவ மனையையும் ஏற்
படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுகொள்கிறேன்.

கல்வியைப் பொறுத்தவரையில் அதிகமான நிதியை ஒதுக்கி
சமுதாய உயர்வுக்கு இந்த நிதிநிலை அறிக்கையில் வித்திடப்பட்
டிருக்கிறது. ஓராசிரியர் பள்ளிகளாக இருந்த 459 பள்ளிகளி
லும் இரண்டாவது ஆசிரியரை நியமித்திருக்கிறார்கள். எனவே
இதன்மூலம் சொல்லிக் கொடுக்கின்ற திறனை அதிகப்படுத்து

[1992 மார்ச் 11

[திரு. கு. தங்கமுத்து]

இருக்கும் தன்மையை வரவேற்றுப் பாராட்டக் கடமைப்பட்டிருக்
கிறேன். தஞ்சை ஒன்றியத்தினைச் சேர்ந்த மாரியம்மன்
கோவிலில் உள்ள மேல்நிலைப் பள்ளியை இரண்டாகப் பிரித்து
மகளிருக்கு என்று தனியாக ஒரு உயர்நிலைப் பள்ளியை உரு
வாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரத்தநாடு
ஒன்றியத்தைச் சேர்ந்த பொய்யாண்டார்கோட்டையில் ஓர்
உயர்நிலைப் பள்ளியை உருவாக்கிக் கொடுக்கும் தன்மை கடந்த
ஆண்டே இருந்தாலும் அது விடுபட்டுப் போயிருக்கிறது. இந்த
ஆண்டு அதை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்து தொழில் வளர்ச்சியைப் பொறுத்தவரையில் உழவுத்
தொழிலை நம்பியிருக்கும் மாவட்டமாக தஞ்சை மாவட்டம்
இருந்தாலும், பணப் பயிர்கள் பயிரிடுவதை ஊக்குவிக்கின்ற
தன்மையில் மேலும் ஒரு சர்க்கரை ஆலையை உருவாக்க வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன். அறிஞர் அண்ணா சர்க்கரை
ஆலை ஒன்றுதான் அங்கே தொழிற்சாலையாக இருக்கிறது.
தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அதிகமாகக் கரும்பு
பயிரிட்டாலும், அதை அரைக்கின்ற திறன் கொண்ட ஆலைகள்
குறைவாக இருப்பதால் இன்னும் ஒரு சர்க்கரை ஆலையை,
ஒரத்தநாடு வட்டத்திலோ அல்லது வேறு ஏதாவது ஒரு வட்டத்
திலோ உருவாக்கிக் கொடுத்தால் கரும்பு சாகுபடி மேலும் அதிக
மாகும் வாய்ப்பு இருக்கிறது.

மேலும் கரும்பாலையிலிருந்து கிடைக்கும் சக்கைகளையும்
தஞ்சை மாவட்டத்தில் அதிகமாக 3 மாதங்களில் வீணாகும்
வைக்கோலையும் மூலப் பொருளாகக் கொண்டு காகிதம்
தயாரிக்கும் தொழிற்சாலையையும் அங்கே உருவாக்கிக் கொடுக்க
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி முயற்சி
எடுக்கப்பட்டால், சூரியம்பட்டி என்ற ஊருக்கு—ஏற்கெனவே
அடிக்கல் நாட்டி அப்படியே அது கிடக்கும் நிலையில்—அதை
மீண்டும் கொண்டு வந்தால், வீணாகப் போகிற மூலப் பொருட்கள்
சரியாகப் பயன்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதை
நினைவூட்டுகிறேன்.

முற்பகல் 11-25

சுகாதாரத் துறையைப் பொறுத்தவரையில் இப்போது
இருக்கிற ஆரம்ப சுகாதார நிலையங்கள் அதிகமாக ஆரம்பிக்
கின்ற தன்மையைக் கோடிட்டுக் காட்டியிருக்கின்றார்கள்.
திருவோணம் ஊராட்சி ஒன்றியத்தைப் பொறுத்தவரையில், நிதி
நிலை குறைவாக இருக்கிற காரணத்தால் அங்கே இருக்கிற
பஞ்சாயத்து யூனியன் நவீன மருந்தகங்களை இந்த ஆண்டு,
நெய்வேலி, திருநல்லூர், திண்ணையூர் போன்ற மூன்று ஊராட்சி
களிலும் உள்ள நவீன மருந்தகங்களை, ஆரம்ப சுகாதார
நிலையங்களாக மாற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.



1992 மார்ச் 11]

[திரு. கு. தங்கமுத்து]

சாலைகளைப் பொறுத்தவரையில், பராமரிப்பதற்கும்,
புதிய சாலைகளை உருவாக்குவதற்கும் அதிக நிதி ஒதுக்கீடு செய்
வதை வரவேற்கக் கடமைப் பட்டிருக்கிறேன். என்னுடைய
தொகுதியைப் பொறுத்தவரையிலும், தஞ்சை மாவட்டம்
பகுதியைப் பொறுத்த வரையிலும், இணைப்புச் சாலைகளைப்
பொறுத்தவரை, 1981—வது ஆண்டு 1,000 மக்கள் தொகை
கொண்ட எ... ...ராக இருந்தாலும், இணைப்புச் சாலை
இருக்கவேண்டுமென்ற நியதி இருக்கிறது. ஆனால் அந்த
இணைப்புச் சாலைகளைப் பொறுத்தவரையில், அது விடுபட்டுப்
போன பல இ...கள் இருக்கின்றன. உதாரணமாக, அருமலையி
லிருந்து பா...கூர் வரை செல்கிற சாலை. 1981வது ஆண்டு
மக்கள் தொகை கணக்கெடுப்புப்படி 1000 ஜனத்தொகை
இருந்தது. அது விடுபட்டுப் போயிருக்கிறது. அதைப் போல,
1986—87 ஆம் ஆண்டு பேருந்துகள் இயக்கப்பட்டிருந்தால் அந்தச்
சாலைகள் அனைத்தும் பஸ் ரூட் கணக்கில் எடுத்துக்கொள்ளப்
படும் என்று நியதி இருக்கிறது.

அவற்றைப் பொறுத்தவரையிலும் பல சாலைகள் விடுபட்டுப்
போயிருக்கின்றன. உதாரணமாக திருவோணம் ஒன்றியத்தில்,
கோட்டைக் காட்டிலிருந்து சென்னிய விடுதி செல்கிற சாலையும்
தணிகை விடுதியிலிருந்து சில்லத்தூர் செல்கிற சாலையும் விடு
பட்டுப் போய் இருக்கிறது. தாழம்பட்டியிலிருந்து ராவுகாப்பட்டி
வரை செல்கிற சாலையும் விடுபட்டுப் போய் இருக்கிறது. அதைப்
போல மருத்துவக்கல்லூரியிலிருந்து மாணோஜிப்பட்டி செல்கிற
சாலை விடுபட்டுப் போய் இருக்கிறது. இதற்குரிய சான்றிதழ்
கள் அனைத்தும் வாங்கி இணைக்கப்பட்டதற்குப்பின்னர், இந்த
ஆண்டு எடுத்துக் கொள்ளப்படும் என்று உத்தரவாதம் அளிக்கப்
பட்டிருக்கிறது. எனவே, இப்படிப்பட்ட சாலைகளுக்கு முன்
னுரிமை கொடுத்து இந்த ஆண்டு அந்தச் சாலைகளை உருவாக்கித்
தரவேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். (மணி
யடிக்கப்பெற்றது).

கடைசியாக பட்டுக்கோட்டையில் கூட்டுறவு நிலவள
வங்கி ஒன்று இருக்கிறது. அது மதுக்கூர் ஒன்றியம், பட்டுக்
கோட்டை ஒன்றியம், திருவோணம் ஒன்றியம் ஆக மூன்றும்
உள்ளடக்கியிருக்கிற நிலவளவங்கியாகும். இந்த திருவோணம் ஒன்
றியம் இதற்கு முன்னால் இருந்த நிலவளவங்கி, தஞ்சை மாவட்டத்
திலிருந்து புதுக்கோட்டை மாவட்டத்தின் பகுதிகள பிரிந்து போகி
றபோது, கந்தர்வகோட்டையில் நிலவள வங்கி இருந்த காரணத்
தினால் அது அந்த மாவட்டத்திற்குச் சென்று விட்டதற்குப்
பின்னால், இந்த ஒன்றியத்தையும் சேர்த்து பட்டுக்கோட்டையில்
இணைத்தார்கள். எனவே அந்த நிலைமை அப்படியே தொடரு
கிற நிலையில், இப்போது விவசாயிகள் பயன் பெறுவதில்
நெருக்கடியாக இருக்கிற காரணத்தால், அந்தப் பட்டுக்

[திரு. கு. தங்கமுத்து]

கோட்டையிலிருந்து பிரித்து, திருவோணம் நிலவள வங்கியை தனியாக உருவாக்கிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, பல ஊராட்சி மன்றங்கள் பெரிய பெரிய ஊராட்சி மன்றங்களாக இருக்கின்றன. தேர்தல் நடத்துவதற்கு முன்னால் அவைகளைப் பிரித்துக் கொடுத்தும், வருமானத்தைப் பொறுத்தவரையில் பிரித்துக் கொடுக்க இயலாத நிலையில் இருந்தால், பெரியதாக இருக்கிற ஊராட்சி மன்றங்களைப் பேரூராட்சியாக உயர்த்திக் கொடுத்தும் செயல்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த நிதி நிலை அறிக்கையை நான் வரவேற்று, பாராட்டி, நன்றி சொல்லி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1992–93 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்தைச் சொல்ல நான் முன்வருகிறேன்.

நிதிநிலை அறிக்கையை நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் நல்ல அனுபவத்தோடு, இந்தச் சபையில் பல்வேறு நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்தவர் என்ற வகையில் இந்த நிதிநிலை அறிக்கையையும் தாக்கல் செய்திருக்கிறார்கள். அனேகமாக நிறைய புள்ளிவிவரங்களோடு இந்த அறிக்கையை நிதி அமைச்சர் அவர்கள் தாக்கல் செய்திருக்கிறார்கள. குறிப்பாக, ஒட்டு மொத்தமாக, இந்த நிதிநிலை அறிக்கையைத் திரும்பத் திரும்ப படிக்கிறபோது, ஆராய்கிறபோது, அனேகமாக உலக வங்கியை நாடியே இருக்கிற நிலை இதிலே முழுமையாக அடங்கியிருக்கிறது. அதோடு மட்டுமல்ல, மத்திய அரசை எதிர்பார்த்தும், மத்திய அரசை நம்பியும் கூட இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப் பட்டிருக்கிறது.

முற்பகல் 11-30

ஆனால் மத்திய அரசைப் பொறுத்தமட்டில் பல்வேறு விலைவாசி நிலைகளைப் பற்றி அவர்களுடைய நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட பின்னாலே இன்றைக்கு, ''மத்திய அரசை எதிர்பார்க்கிறோம், தருவார்கள என்கிற நிலையிலே நம்முடைய மாநில அரசு வலியுறுத்துகிறது'' என்று சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக தமிழ் நாடு அரசு மத்தியிலே இருக்கிற காங்கிரஸ் அரசை இதுவரையில் எதிர்பார்த்தது முழுமையாக நடைபெய வில்லை. மாற்றாந்தாய் போக்கு இன்னும் மத்திய அரசிற நீட்டித்துக்கொண்டிருக்கிறது. ஆகவே, மாநில அரசு மத்தில்



[திரு. ஜி. பழனிசாமி]

அரசை எதிர்பார்க்கிறது என்று சொல்லுவதை விட நிதியைப் பெற முயற்சி எடுக்க வேண்டும். திட்டக் குழுவிடமிருந்து எதிர்பார்த்தது கூட இன்றைக்குக் கிடைக்காத சூழ்நிலையில் தமிழ்நாடு அரசு இருக்கிறது. ஆகவே நிதியை பெறுவதற்கான முழு முயற்சியையும் தமிழ்நாடு அரசு எடுக்க வேண்டும். புதிய பொருளாதார கொள்கையிலே கூட மாநில அரசு உங்களுக்கு உடன்பாடான ஒன்றைச் சொல்லியிருக்கிறது. நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் இதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் தமிழகத்தினுடைய வளர்ச்சித் திட்டங்களுக்கான நிதியைப்பெறுவதிலே மட்டும் தயக்கங்களும், தேக்கங்களும் தென்படுகின்றன.

நிதியமைச்சர் அவர்கள் தாக்கல் செய்திருக்கக்கூடிய நிதிநிலை அறிக்கையில் சுமார் ரூ, 6,646.54 கோடிக்கு வருவாயும், ரூ, 7,255.25 கோடிக்குச் செலவும், ஆக பற்றாக்குறை ரூ. 808.73 கோடியாகவும், நிகர பற்றாக்குறையாக ரூ. 619.9 கோடியாகவும் இருக்கும் என்ற நிலை தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதிலே, குறிப்பாக ரூ. 4 கோடி வரிச் சலுகை, ரூ. 70 கோடிக்கு மக்கள் மீது வரி. தமிழ் நாட்டு மக்கள் மீது சட்டமன்றமும், நாடாளுமன்றமும் ஏற்கெனவே இடைக்கால வரியை விதித்தது போதாது என்று சொல்லி மீண்டும் 70 கோடி ரூபாய்க்கு தமிழக அரசு வரியை உயர்த்தியிருக்கிறது. அப்படி வரியை உயர்த்துகிற போது, ஏழையெளிய மக்கள், விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், நடுத்தர மக்கள் ஆகியவர்களுக்கு ஏதாவது நன்மை செய்திருக்கிறதா என்று பார்த்தால், அதற்கான இடம் இல்லாத வகையில்தான் இந்த பட்ஜெட் அமைந்திருக்கிறது.

குறிப்பாக காவல்துறையை நவீனப்படுத்த வேண்டும். காவல் துறை ஊழியர்கள் ஆண்டாண்டு காலமாக, வெள்ளையர்கள் ஆட்சிக் காலத்திலேயிருந்து குடியிருந்து வரும் வீடுகள் அநேகமாக குடிசை வீடுகள் போன்றே இன்றைக்கு உள்ளன. அதையெல்லாம் மாற்றியமைக்க வேண்டும். அதற்கெல்லாம் நிதி ஒதுக்கித் தர வேண்டும். அவர்களுக்கு நவீன வசதிகளோடு வீடுகளைக் கட்டித் தரவேண்டும். காவல் துறை என்று சொன்னால், எந்த நேரத்திலேயும் அரசு எதிர்பார்க்கும் நேரத்தில், சாதிக் கலவரம், மதக் கலவரம், இனக் கலவரம், பொதுச் சொத்துக்களுக்கு பங்கம் விளைவிக்கும் சம்பவங்கள் ஆகிய பல்வேறு நேரங்களில் காவல் துறையைப் பயன்படுத்த வேண்டியது மிகவும் முக்கியம். அதிலும் தமிழ்நாட்டு காவல் துறையைப் பற்றி அநேகமாகச் சொல்லுவார்கள், புகை நுழையாத இடங்களில்கூட தமிழ்நாடு போலீஸ் புகுந்துவிடும் என்று. அப்படிப்பட்ட திறமையான காவல்துறைக்கு தமிழக அரசு ஒதுக்கியுள்ள நிதி ரூ. 276.31 கோடி. அந்தக் காவல்துறையை நவீனப்படுத்துவது மட்டுமல்லாமல் அதில் அரசின் தலையீடு இல்லாமல் பாதுகாப்பதற்கு இந்த அரசு தவறி விடக் கூடாது. இன்றையதினம்கூட நம்முடைய அமைச்சர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். காவல் துறையிலேகூட இன்றைக்கு என்னென்ன குற்றங்கள் புரிந்திருக்கிறார்கள், எந்

கெங்கே உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதைப் பட்டியல் போட்டுக் காட்ட முடியுமா என்றெல்லாம் கேட்டார்கள். பட்டியல் போட்டுக் காட்டுவதற்கு நான் பின்னால் வருகிறேன். அதற்கு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லட்டும். ஆனால், இன்றைக்கு காவல் துறைக்கு ஒதுக்கியுள்ள நிதியை நான் வரவேற்றாலும், அதைவிட விவசாயிகளுக்காக ஒதுக்கியுள்ள நிதியைப் பற்றியும் குறிப்பிட விரும்புகிறேன்.

விவசாயிகளுக்கு ஒதுக்கியுள்ள நிதி ரூ. 215.5 கோடி. தமிழகத்திலே உணவுப்பற்றாக்குறை இல்லாமல் இருப்பதற்கு. தமிழ் நாடு மத்திய அரசைக்கையேந்தாமல் இருப்பதற்கு, கர்நாடக அரசையும், கேரள அரசையும் கையேந்தாமல் இருப்பதற்கு, தமிழகத்திலே உணவு, தானியம் தன்னிறைவு பெறுவதற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி கிட்டத்தட்ட ரூ. 215 கோடி. சென்ற ஆண்டை விட ரூ. 30 கோடி அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் அறிக்கையிலே விவசாயிகள் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதைத் திரும்பத் திரும்ப படித்துப் பார்த்தேன். விவசாயிகள் கடனிலே பிறந்து கடனிலே வளர்ந்து, கடனிலேயே இறக்கிற நிலையைச் சுட்டிக் காட்டி, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தால் விவசாயிகள் கடன்களைத் தள்ளுபடி செய்வோம், விவசாயிகளுடைய வாழ்வில் மறுமலர்ச்சியை உண்டாக்குவோம் என்று தேர்தல் அறிக்கையிலேயே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அந்த விவசாயிகளுடைய நிலை இன்றைக்கு பரிசீலிக்கப்பட்டு இருக்கிறதா என்று பார்த்தோமானால், அநேகமாக நில வரி 45 பைசாவாக இருந்தது ஒரு ரூபாயாக உயர்த்தப்பட்டது; அதேபோல் ஒரு ரூபாயாக இருந்தது ரூ. 2.50 ஆக உயர்த்தப்பட்டது; இன்றைக்கு ரூ. 5, ரூ. 10 ஆக உயர்த்தப்பட்டு இருக்கிறது. அது விவசாயிகளின் வாழ்வில் அவர்களுக்கு வாழ்வு அளிக்கிற திட்டமாக இல்லை. விவசாயிகளினுடைய குரல்வளையை நெறிக்கக்கூடிய அளவிற்கு அவர்களுடைய நிலைமை இன்றையதினம் இருக்கிறது.

முற்பகல் 11-35

இதை விட ஒரு மோசமான நிலைமை இருக்கிறது. சாதாரணமாக மூன்று பாசனத் திட்டங்கள் இருக்கின்றன. ஒன்று ஏரிப் பாசனம்; மற்றொன்று இறவைப் பாசனம் ; இன்னுமொன்று காவேரி பாசனம் என்று இருக்கின்றது. ஆனால், இந்தப் பாசனத்தில், மின்சாரப் பாசனத் திட்டத்திற்குசாதாரண விவசாயிகள் பம்பு செட்டுக்கு இன்றைக்கு மின் இணைப்புக்கு பெர்மிஷன் வாங்க வேண்டுமென்றால் ரூ. 25 ஆயிரம் செலுத்த வேண்டியிருக்கிறது. விவசாயிகளினுடைய கஷ்டமான வாழ்க்கையில் எப்படி அவர்கள் அதைக் கட்ட முடியும் ? விவசாயத்திலே நலிந்து இருக்கிற விவசாயிகள், லாபம் இல்லாத தொழிலைச் செய்யக்கூடிய விவசாயிகள் இன்றையதினம் 25 ஆயிரம் ரூபாயைக் கட்டி மின் இணைப்பு பெற வேண்டுமென்று சொன்னால் அவர்களால் அதை எப்படிக் கொடுக்க முடியும்? இது என்ன கொடுமையான



நிலைமை ? இதுகுறித்து அரசு மறு பரிசீலனை செய்ய வேண்டும். 25 ஆயிரம் ரூபாய் என்று அறிவித்து இருப்பதை நீங்கள் மாற்றம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

*மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, விவசாயத்திற்கு மின்சாரம் பெறுவதற்காக விவசாயிகள் விண்ணப்பித்து இருந்து பல ஆண்டுக் காலமாகக் காத்து இருக்கிறார்கள். ஒரு ஆண்டிற்கு 40 ஆயிரம் பேர்கள் வீதம் மின்சாரம், காத்திருப்போர் பட்டியலிலிருந்து வழங்கப் படுகிறது. இதிலே நீண்ட நெடுங்காலமாக காத்திருக்கிறோம் என்ற கருத்திலே ஒரு விவசாயி உடனடியாக மின்சாரம் வேண்டுமென்று விண்ணப்பம் செய்தால்தான், அவர் 25 ஆயிரம் ரூபாயைக் கட்டி மின்சாரத்தைப் பெறக்கூடிய சலுகையைப் பெறுவார் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 40 ஆயிரம் பேர் அல்லவா ? மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : ஆம், 40 ஆயிரம். ஏற்கெனவே பெறக்கூடியவர்களுக்கு மேலே இது. எனவே, அதிலே இருப்பவர்களை நிறுத்திவிட்டு அல்ல. ஏற்கெனவே வரிசைப்படி பெற்றுக் கொண்டு இருப்பவர்களுக்கு மேலே, யாராவது கேட்டால், அந்த க்யூவை ஜம்ப் பண்ணி மின் இணைப்பு கொடுப்பதற்கு 25 ஆயிரம் ரூபாய் கட்ட வேண்டும். எனவே எல்லோரும் 25 ஆயிரம் ரூபாய் கட்ட வேண்டும் என்பது நோக்கம் அல்ல.

திரு, ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு கிணற்றில் 'ஊற்று' பற்றி உங்களுக்குத் தெரியும், ஓர் இடத்திலே கிணறு தோண்டினால், அந்த இடத்திலே மின்சாரம் நிறுத்தப்பட்டு இறவைப்பாசனம் செய்தால் ஒரு குறிப்பிட்ட நாட்களுக்குப் பிறகு நீர் வற்றி விடுகிறது. ஆனால், அதற்குப் பிறகு புதிய கிணறு தோண்டி புதியதாக ஒரு மின் இணைப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டால் அதற்கு 25 ஆயிரம் ரூபாய் கட்டியாக வேண்டும். இது பழையது அல்ல, புதியது என்று சொல்லக் கூடிய நிலைமை இருக்கிறது....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, விவசாயிகள் ஏற்கெனவே பதிவு செய்து வைத்து இருந்தால், ஓராண்டிற்கு 40 ஆயிரம் பேருக்கு மின் இணைப்புக் கொடுக்கிறார்கள். அந்த 40 ஆயிரம் பேருக்குள்ளே அந்த விவசாயினுடைய விண்ணப்பம் வந்து இருந்தால் இந்த 25 ஆயிரம் ரூபாய் கட்ட வேண்டிய அவசியம் இல்லை. அவருக்கு ஏற்கெனவே இருக்கிற முறைப்படி மின்சாரம் வந்துவிடும். 40 ஆயிரம் பேருக்கு மேலே, பல பேருக்கு மின்சாரம் கொடுப்பதற்கு அரசாங்கம் இப்போது வேறு முயற்சி எடுத்துக் கொண்டு இருக்கிறது. எனவே, நிதிப் பிரச்சினையின் காரணமாக, யாராவது அந்தச் செலவை ஏற்றுக்கொண்டாலோ அல்லது 25 ஆயிரம் ரூபாய் கட்டினாலோ மின்சாரம் கொடுப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது. எனவே இது கூடுதல் செலவு 25 ஆயிரம் ரூபாய் செலவு செய்யக் கூடியவர்களுக்கு இது கூடுதலாகக் கொடுக்கக் கூடிய சலுகை, ஏற்கெனவே. 40 ஆயிரம் பேர் பெற்றுக் கொண்டு இருக்கிறார்களே, அவர்களுக்கு அது அப்படியே தொடர்ந்து இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிணற்றிலே நீர் இல்லை என்பதற்காக அந்த விவசாயி ட்ரில்லிங் போட்டு தண்ணீர் எடுக்க வேண்டுமென்று சொன்னால் அதற்கு வேளாண்மை மானியச் சலுகையிலே அவர்களுக்கு கிணற்றை துளையிடுவதற்கு அரசு ஆவன செய்து இருக்கிறது. அவர்கள் அதற்குப்புதிதாக மின்சாரம் பெற விண்ணப்பம் செய்யத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்வதை நான் ஏற்றுக் கொள்கிறேன். 40 ஆயிரம் பேர்களுக்கு மேற்பட்டவர்களுக்கு மின்சாரம் என்று சொன்னால், அரசாங்கம் எதிர்பார்க்கக்கூடிய வேளாண்மையில், உணவு உற்பத்தியில் எப்படி முன்னேற முடியும்? எனவே, இந்த 25 ஆயிரம் ரூபாய் கொடுப்பது என்பது நிச்சயமாக விவசாயிகளால் முடியாது. அதைக் குறைக்க வேண்டுமென்றுதான் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, காவிரிப் பாசனங்களை நவீனப்படுத்த வேண்டுமென்று சொல்லி இங்கே திட்டங்களைக் கொண்டுவந்து இருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். உண்மையிலேயே திருச்சி மாவட்டத்திலிருந்தும் மேல தஞ்சையிலிருந்தும் பெய்யக்கூடிய பெரு மழை காரணமாக இன்றைக்குப் புதியதாகத் துவக்கப்பட்டு இருக்கிற நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தில் கடலோரப் பகுதியில் இருக்கிற கால்வாய்கள் பல ஆண்டுக் காலமாக தூர் எடுக்கப்படாமல் உள்ளது. கடந்த ஆட்சியில் புல்டோசர் வைத்து சில ஆறுகள் ஒழுங்குபடுத்தப்பட்டன.



[திரு. ஜி. பழனிசாமி]

இப்போதுகூட சமீபத்தில் பெய்த பெருமழை காரணமாக
அங்குள்ள கால்வாய்கள் பெரிய பாதிப்புக்கு ஆளாகி இருக்
கின்றன. அங்கே மிகவும் கரைகள் இல்லாத ஒரு சூழ்நிலை
இருக்கிறது. அவற்றைத் தூய்மைப்படுத்த உடனடியாக நட
வடிக்கை எடுத்தால் அந்தக் கடலோரப் பகுதியில் இருக்கிற கால்
வாய்களைத் தூய்மைப்படுத்தினால் வெள்ள அபாயத்தைத்
தவிர்ப்பதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படும் என்பதை நான் இந்தச்
சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்
கிறேன்.

அடுத்து, இன்றைக்கு விவசாயிகள் மீது போடப்பட்டு இருக்
கிற வரிகள் என்பது, அநேகமாக அது ஒரு கொடுமையான வரி
போடப்பட்டு இருக்கிறது. 100 சதவீதத்திற்கு மேலே விவ
சாயிகள் வரி கட்டக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. கோவை,
மதுரை போன்ற இடங்களில் இதைவிட அதிகமான வரி
இருக்கும்.

அடுத்து, மிழகத்திலே மின்சாரத்திற்கு எவ்வளவு பெரிய
பற்றாக்குறை இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்களும்
இந்த அவையிலே சொல்லி இருக்கிறார்கள். குறிப்பாக, மின்
சாரம் என்பது இன்றைக்கு அவசியமாகத் தேவைப்படுகிறது.
சமீபத்தில் நான் ஒன்றைக் கேள்விப்பட்டேன். நம்முடைய
மின்சாரத் துறை என்பது ஒரு இயந்திரமான தொழில். பல
இலட்சக்கணக்கான ஊழியர்கள் வேலை செய்யக்கூடிய துறை.
அங்கே ஆறு மாத காலத்தில் ஐந்து தடவைகள் சேர்மனை மாற்
றப்பட்டிருக்கிறார். அந்த நிர்வாகம் எப்படி ஒழுங்காகச்
செயல்படும் ? என்ன காரணம் ? அதிலே நடந்திருக்கிற தவறு
என்ன ? ஒரு மாதத்திற்கு ஒரு சேர்மனை மாற்றக்கூடிய அள
வுக்கு நிர்வாகத்தில் ஏற்பட்டிருக்கிற கோளாறு என்ன ? இப்
படிப்பட்ட நிலையிருந்தால் அந்த மின்சாரத் துறை நீங்கள்
எதிர்பார்க்கக்கூடிய அளவுக்கு இயங்காது. நீங்கள் தொடர்ந்து
பற்றாக்குறைதான் காட்ட முடியுமே தவிர ஒழுங்குபடுத்த
முடியாது. பல்வேறு தவறுகளைச் செய்வதற்கு வாய்ப்பு இருக்
கிறது. தேதிவாரியாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.
ஆறு மாதத்தில் ஐந்து தடவைகள் சேர்மன் மாற்றப்பட்டிருக்
கிறார்கள். ஆகவே, இந்த நிலையில், அதிகாரிகளை அடிக்கடி
மாற்றுவதன் மூலமாக நிர்வாகச் சீர்கேடுகள்தான் வரும்
என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்,

முற்பகல் 11-40

அதேபோல சத்துணவு அமைப்பாளர்கள். முன்னாள் முத
லமைச்சர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். காலத்தில் அவர்
களுக்கெல்லாம் வாழ்வு அளிக்கப்பட்டது. 150 ரூபாய் சம்பளத்
தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களின் தவறுகளை
மட்டும் நாம் பார்க்கக்கூடாது. அவர்கள் பெறுகிற ஊதியத்

[திரு. ஜி. பழனிசாமி]

தையும் நாம் பார்க்க வேண்டும். அந்த அடிப்படையில் சத்துணவு ஊழியர்களுக்கு 150 ரூபாய் பெறுபவர்களுக்கு 20 ரூபாயும், 105 ரூபாய்க்குக் குறைவாக வாங்கக்கூடிய ஊழியர்களுக்கு 10 ரூபாயும் என்று இருக்கிறது. இதில் அநேகமாக, 2.45, 2.15, 2.72 இலட்சம் ஊழியர்கள் இருப்பதாக சொல்லப்படுகிறது. இவர்களால் அரசுக்கு வரக்கூடிய அதிகச் செலவு ரூபாய் 4.00 கோடி என்று 66ஆம் பாராவில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதேபோல 168ஆம் பாராவில் 2.72 இலட்சம் ஊழியர்களுக்கு ரூ. 1.35 கோடி கூடுதல் செலவு ஆகும் என்று சொல்கிறார்கள். இதில் எது சரியென்று தெரியவில்லை. மொத்தத்தில் ஊழியர்களுக்கு கொடுக்கிற உயர்வு ரூ. 20, ரூ. 10 என்பது போதாது. ஆகவே. 300 ரூபாய் சம்பளம், மதிப்பூதியம் குறைந்தபட்சம் வழங்குவதற்கு அரசு முயற்சியெடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல வனத்துறையைப் பொறுத்தவரையில் நம்முடைய அரசு வனவளத்தைப் பாதுகாக்க வேண்டும். வனவளங்களைப் பாதுகாத்தால் தான் நீர்வளங்களைப் பாதுகாக்க முடியும். நீர்வளங்களைப் பாதுகாத்தால்தான் நிலவளங்களைப் பாதுகாக்க முடியும். இதை ஆண்டாண்டு காலமாக சொல்லிக்கொண்டு வந்திருக்கிறோம். அதே நேரத்தில் காடுகளில் வசிக்கக்கூடிய மக்களை இன்றைக்கு வன இலாகா அதிகாரிகள் அப்புறப்படுத்துகிற முயற்சிகள் இருக்கின்றன. அவர்களை அப்புறப்படுத்தக் கூடாது. நானும் நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும் நீலகிரி மாவட்டத்தில் கூடலூருக்குச் சென்றிருந்தோம். அந்தப் பகுதியில் இருக்கிற விவசாயிகளை வன இலாகா அதிகாரிகள் வனவளங்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக ஆண்டாண்டு காலமாக விவசாயம் செய்துகொண்டிருந்த பழம் தரும் மரங்களை வளர்த்துக்கொண்டிருந்த விவசாயிகளை அப்புறப்படுத்துகிறார்கள். தேயிலை தொழிற்சாலைகளை புதியதாக கட்ட வேண்டாம் என்று சொல்கிறார்கள். வீட்டை விற்கவேண்டுமென்று சொன்னால் அரசாங்கத்திலே அனுமதி வாங்கவேண்டுமென்று சொல்கிறார்கள். அனுமதி வாங்க வேண்டுமென்று சொன்னால் அதிகாரிகளிடத்தில் செல்ல வேண்டியிருக்கிறது. அதில் பல்வேறு தவறுகள், ஊழல்கள் நடைபெறுகின்றன. இதனால் இந்த விவசாயிகள் மிகப் பெரிய கிளர்ச்சிக்கு இன்றைய தினம் ஆட்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். வனப்பகுதிகளில் இன்றைக்கு ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் இருக்கிறது. அங்கே வனவளங்களை, காடுகளைப் பாதுகாக்க நல்ல இடங்கள் இருக்கின்றன. ஆகவே. அரசு விவசாயிகளை அப்புறப்படுத்தும் முயற்சியைக் கைவிட வேண்டும். அந்த மக்கள் அச்சம் இல்லாமல் வாழ்வதற்கு இந்த அரசு முயலவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பட்டது)



[திரு. ஜி. பழனிசாமி]

இன்னும் முடிக்கவில்லை, எல்லோரும் என் நேரத்தை எடுத்துக் கொண்டார்கள்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 15 நிமிடங்கள் முடிந்து விட்டன,

திரு, ஜி, பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு ஓட்டல்களை எடுத்துக் கொண்டால் ரூ, 18,35 இலட்சம் ஒரு ஆண்டிற்கு வருமானம் வருகிறதென்று சொன்னால் அவர்களுக்கு வரி போடப்பட்டது. இன்று ரூ. 3 இலட்சம் வியாபாரம் நடக்கிறதென்றால் அவர்களுக்கு வரி என்று சொல்லப்படுகிறது. அநேகமாகப் பார்த்தால் கையேந்துகிற பவனில் கூட 500 இட்லிகள் விற்கிறார்கள், அவர்களைக்கூட இந்த வரி பாதிக்கும், இதை என்றைக்கு அறிவித்தீர்களோ. பத்திரிகைகளில் வந்ததோ அன்றைக்கே ஒரு ரூபாய் விற்ற டீ இரண்டு ரூபாயாக உயர்ந்து விட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர், ......

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : துணைத் தலைவர் அவர்களே. எந்த கையேந்தி பவனிலும் பில் போடுவதில்லை,

முற்பகல் 11-45

திரு, ஜி, பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இட்டிலி விலை 1.50 ரூபாய். அநேகமாக சட்டமன்ற உறுப்பினர் எல்லாம் ஹோட்டலிலேதான் சாப்பிடுவார்கள் என்று கருதுகிறேன். அவர்களுக்குத் தெரியும். காப்பி 3 ரூபாய்க்கு வந்துவிட்டது, இது கொடுமையான விலை. இதை நீங்கள் எப்படி கட்டுப்படுத்தப்போகிறீர்கள்? வரி உள்ள ஹோட்டல், வரி இல்லாத ஹோட்டல் எல்லாம் விலையை உயர்த்தியிருக்கிறார்கள். ஏழை எளியவர்கள். அவசரத்தில் வெளியூர் போனால் இன்றைக்கு கட்டுச் சோறுடன் தான் போகக்கூடிய நிலைமைகள் நம்முடைய தமிழக அரசினுடைய ஆட்சியில் இருக்கக்கூடாது, எனவே, அந்த வரிகளை எல்லாம் குறைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்,

அதேபோல் ஏழை எளியவர்களுக்கு என்று புதிய திட்டம் என்ற பெயரால், 14 ரூபாய் சம்பளத்தில், தென் ஆற்காடு, தர்மபுரி, சேலம் போன்ற இந்த இடங்களில், விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை அளிப்பதாகச் சொல்லப்பட்டு இருக்கிறது.

[திரு. ஜி. பழனிசாமி]

அதிலே, விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை இல்லை என்று சொன்னால் ஊராட்சி ஒன்றியங்களிலே கையெழுத்துப் போட்டால், 7 நாட்களுக்குப் பிறகு அவர்களுக்கு நிவாரணம் அளிக்கப்படும் என்றும் சொல்லப்பட்டு இருக்கிறது. அவர்கள் 10 மைல் 5 மைல்களுக்கு அப்பால் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை என்று சொன்னால் யார் பார்ப்பது? யார் கணக்கு எடுப்பது வி.ஏ.ஓ. வீடு வீடாகப் போவார்களா? இல்லை அவர்கள் அங்கே இருந்து 2 ரூபாய், 2.25 ரூபாய் செலவு செய்து ஊராட்சி ஒன்றியத்திலே வந்து கையெழுத்துப் போடுவதா? இவைகளுக்கு எல்லாம் பதில் உரையிலே விவரமாக மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொல்வார்கள் என்று நினைக்கிறேன். எனவே, இந்த நிலையை எங்களுக்குத்தெளிவுபடுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சாலை. இப்போது தஞ்சாவூரிலே ஒரு மாதிரித் திட்டமாக சாலைப் போக்குவரத்துகளை தனியாருக்கு விடுவதாகவும், சுங்க வரி வசூல் பண்ணுவதாகவும் இதிலே சொல்லப்பட்டு இருக்கிறது. நம்முடைய பொதுப்பணித் துறை மீது நம் அரசுக்கு நம்பிக்கையில்லை என்றே நான் கருதுகிறேன். பொதுப்பணித் துறைக்கு ஒரு நீண்ட வரலாறு இருக்கிறது. இதுவரையிலும் பல ஆண்டுக்காலமாக, சாலைகளை சீரமைப்பது அதை ஒழுங்காகக் கண்காணிப்பது போன்ற வேலைகளுக்கு துறையில் அதிகாரிகள் இருக்கிறார்கள், முறையாகச் செயல்படுத்த முடியும். ஆனால், இந்தத் துறை மீதே, இந்த அரசுக்கு நம்பிக்கையில்லை என்றேதான் நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கம்யூனிஸ்ட் கட்சி நண்பர் அவர்கள் இங்கே பேசினார்கள். அவர்களுக்கு எப்போதுமே, யார் மீதும் நம்பிக்கை இருக்காது. இந்தத் துறை மீது என்ன நம்பிக்கை இல்லை, என்ன குறைபாடு, இந்த அரசு வந்ததற்குப் பின்னாலே இருக்கிறது என்பதை அவர்கள் சுட்டிக்காட்ட வேண்டும், பொதுப் பணித் துறை இன்றைக்கு உண்மையிலேயே பொதுப்பணித் துறையாக கடந்த 9 மாத காலமாகச் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது. நல்ல மனம் படைத்தவர்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள், (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த 2 ஆண்டுக் காலமாக, நம்முடைய அருமை நண்பர் பழனிசாமி அவர்களுடைய கூட்டணிக் கட்சி இருந்த நேரத்திலே, எத்தனை சாலைகள் போடப்பட்டன? 2 ஆண்டுக் கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது அவர் சட்டமன்ற



[மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்]

உறுப்பினராக இருந்து இருக்கிறார். எத்தனை சாலைகள் அவருடைய பகுதியிலே போடப்பட்டன? இந்த 9 மாத காலத்திலே, எத்தனை கோடி ரூபாயை நாங்கள் ஒதுக்கியிருக்கிறோம் என்பதைக் கொஞ்சம் நல்ல மனத்தோடு அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் நிதி நிலை அறிக்கையைச் சரியாகப் படிக்கவில்லை என்றே கருதுகிறேன். ஏன் என்று சொன்னால், அவர்கள் பேசிய பேச்சின் மையக் கருத்தாக இந்த அரசினுடைய நிதி நிலை அறிக்கையில் வேளாண்மைத்துறை மூலம் மக்களுக்குச் சரியான பயன் கிடைக்கவில்லை என்று குறிப்பிட்டார்கள். ஒன்றை மட்டும் அவர்கள் கருத்தில் கொள்ள வேண்டும். (குறுக்கீடு) முதலிலே சொல்லிவிட்டார்கள். இந்த ஆண்டு, இந்தியாவைப் பொறுத்த மட்டிலும் உணவு உற்பத்தியில் பின்னடைந்து இருக்கிறோம். ஆனால், தமிழகத்தைப் பொறுத்த வரையில், கடந்த ஆண்டைவிட, எந்த ஆண்டும் இல்லாத அளவிற்கு. நிதிநிலை அறிக்கையில்—இதிலே பக்கம் எண். 11, பத்தி 18இல் "நடப்பாண்டில், அரிசி உற்பத்தியும், ஒட்டுமொத்த உணவு தானிய உற்பத்தியும், இதற்குமுன் இருந்திராத வகையில், உயர் அளவில் இருக்குமென்பதை உறுப்பினர்கள் உணர்வார்கள்" என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. தமிழகம் உணவு உற்பத்தியில் முன்னேறி இருக்கிறது. தயவு செய்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய உரையின் வாயிலாக வேளாண் பெருங்குடி மக்களுடைய ஊக்கத்தைக் குறைக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்,

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல விரும்புவது, நம்முடைய பொதுப்பணித்துறை மூலமாக இந்தச் சாலைகளைப் போட வேண்டும் என்பதுதான். இதைத்தான் கூறினேனே தவிர, ஹைவேஸ் துறை மூலமாக சாலைகளைப் போட வேண்டும் என்று தான் சொன்னேனே தவிர, வேறல்ல. தனியாருக்குக் கொடுக்கக்கூடாது. அப்படிக் கொடுப்பது நல்லதில்லை என்பது தான் நான் சொல்ல விரும்புவது எல்லாம். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் அது ஒரு மாதிரியாக எடுக்கப்பட்டு இருக்கிறது. நம்முடைய பொதுப்பணித்துறை எந்த ஒரு ரோடிலும் இருக்கிற பள்ளத்திலும் மண்ணை வெட்டிப் போடவில்லை. தனியார் எடுத்துவிடுவார்கள், செய்துவிடுவார்கள் என்ற நம்பிக்கையோடு இருக்கிறார்கள். ஆனால், என்னைப் பொறுத்த

[திரு. ஜி. பழனிசாமி]

வரையில்—நான் ஏற்கெனவே சட்டமன்ற உறுப்பினராக இருந்து இருக்கிறேன். நம்முடைய துணைத் தலைவர் அவர்களும், சட்ட மன்ற உறுப்பினராக இருந்திருக்கிறார்கள்—எங்கே குற்றம் இருந்தாலும், நாங்கள் திறந்த மனத்தோடு சொல்லியிருக்கிறோம். அதைப்போல, நல்லது செய்கிறபோது, இந்த அரசுக்கு நாங்கள் ஆதரவு கொடுத்து வந்திருக்கிறோம். உங்களுக்குத் தெரியுமோ, தொரியாதோ அது எனக்குத் தெரியாது. முன்னாள் முதல்வர், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இருந்தபோது, கம்யூனிஸ்ட் கட்சி எந்த அளவிற்கு ஒத்துழைப்பு கொடுத்திருக்கிறது, இந்த அரசுக்கு எப்படி ஆலோசனை வழங்கியிருக்கிறது என்பது எல்லாம் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியுமோ, தெரியாதோ, அது எனக்குத் தெரியாது, ஆனால் எனக்கு நன்றாகத் தெரியும், நான் சட்ட மன்ற உறுப்பினராக இருந்தபோது, 2 கோடி ரூபாய்க்கு, முன்னாள் அரசு இருந்தபோது,—கிராமப்புறச் சாலைகளைப் போட நடவடிக்கை எடுத்திருக்கிறேன். வேலை செய்து கொடுத்து இருக்கிறோம். 3 1/4 கோடி ரூபாய்க்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஒன்று பல்வேறு கிராமங்களுக்கு எடுக்கப்பட்டு, குடிநீருக்காக வேலைகளைச் செய்வதற்கு நான் அரசிடத்திலே நடவடிக்கை எடுத்திருக்கிறேன், உங்களுடைய 9 மாத ஆட்சிக் காலத்தில் உங்களிடமிருந்து எந்தஒரு வேலையையும் பெறவில்லை "எந்த ஒரு அமைச்சராவது, பழனிசாமி சொல்லியிருக்கிற வேலையை நான் செய்திருக்கிறேன்" என்று சொன்னால், அதை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன், இதை நான் காழ்ப்புணர்ச்சியோடு பேசவில்லை, செய்ய வேண்டுமென்று தான் உங்களை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே போன்று மீனவர்கள் பிரச்சினை, (குறுக்கீடு). கான்ட்ராக்ட் எல்லாம் நான் எடுக்கவும் மாட்டேன், அது மாதிரி ஆட்களுக்கு சிபாரிசு பண்ணவும் மாட்டேன்,

முற்பகல் 11-50

மீனவர்களைப் பொறுத்தமட்டில் ஏற்கெனவே அநேகமாக நாகப்பட்டினத்திலேயிருந்து தொடர்ந்து முத்துப்பேட்டையில் அந்தக் கடலோரப் பகுதியில் இருக்கின்ற மீனவர்கள் மீன் வளர்ப்பதற்கு நல்ல வாய்ப்புகள் இருக்கின்றன. ஆகவே. தொண்டியக்காட்டை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அரசு அனுமதித்திருக்கிறது, அதேபோன்று இன்றைக்கு நம்முடைய மீனவர்கள் கச்சத்தீவிற்குச் சென்று வலைகளை உலர்த்தி, ஓய்வு எடுப்பதற்கு பல்வேறு தகராறுகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, அதற்கு அரசு இலங்கை அரசோடு மத்திய அரசை அணுகி பேசுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்,



[திரு. ஜி. பழனிசாமி]

அடுத்து, இன்றைக்கு வரி போடுவதற்கான நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன. நவீன சினிமா தியேட்டர்கள் நிறைய இருக்கின்றன. இப்போது டூரிங் டாக்கீஸ்களுக்கு எல்லாம் வரியைக் குறைத்து விடலாம். ஏ.சி. தியேட்டர்களுக்கு வரியைப் போடலாம். வரிகளை உயர்த்தலாம். அதில் எல்லாம் நீங்கள் கையை வைக்கவேயில்லை. இன்றைக்கு எந்த தியேட்டரைப் பார்த்தாலும் மக்கள் க்யூ வரிசையில் நின்றுகொண்டிருக்கிறார்கள். அந்த மாதிரி இடங்களுக்கெல்லாம் நீங்கள் வரிகளைப் போடலாம். உண்மையிலேயே, இது நன்றாக இருக்கும். அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று தனியார் லாட்டரிச் சீட்டுக்கள். இன்றைக்கு தனியார் லாட்டரிச்சீட்டுகள் வெளி மாநிலங்களிலிருந்து யார் யாரோ கொண்டு வந்து தமிழகத்திலே விற்பனையாகிக்கொண்டிருக்கிறது. அதை யாரும் கட்டுப்படுத்துவதேயில்லை. சிவகாசியிலே அச்சடிக்கிற பேப்பரை இன்றைக்கு நாடு பூராவும் விற்பனை செய்து கொண்டிருக்கிறார்கள். தமிழக அரசு லாட்டரிச் சீட்டிற்குக்கூட கிடையாது, தமிழ் நாடு பூராவும் பல கோடிக்கணக்கான ரூபாய் சம்பாதிக்கக்கூடிய வாய்ப்புக்கள் அவர்களுக்கு இருக்கின்றன. ஆதாரம் வேண்டு மானால் அமைச்சருக்குத் தருகிறேன். ஆகவே, வெளி மாநில லாட்டரிச் சீட்டுக்களைத் தமிழ்நாட்டில் தடை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து, நம்முடைய முதல்வர் அவர்களுடைய மருத்துவத் திட்டம்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்</u> : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, லாட்டரிச் சீட்டைப் பற்றி தமிழக அரசு எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுத்துக்கொண்டிருக்கிறது. ஆனால், லாட்டரிச் சீட்டை இங்கே விற்க வேண்டாம் என்று சொல்ல முடியாது. மத்திய அரசுதான் இதற்குச் சட்டம் கொண்டுவரவேண்டும். அதன் மீது வரிகள் போடப்பட்டிருக்கின்றன. பல கோடி ரூபாய் அவர்கள் தர வேண்டியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் சொன்ன மாதிரி, அவர்கள் பல கோடி ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கிறது. உச்ச நீதிமன்றத்திற்கு அவர்கள் போயிருக்கிறார்கள். தடை உத்தரவைப் பெற்றிருக்கிறார்கள். விரைந்து தடை உத்தரவை நீக்குவதற்காக நாங்கள் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம். அதற்காக சட்டமன்றத்திலே புதியதாக சட்டம் வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத்துணைத்தலைவர் அவர்களே, அதேபோன்று முதல்வர் அவர்களுடைய மருத்துவத் திட்டம். இன்றைக்கு தமிழகத்திலே 14 இலட்சத்து 500 பேருக்கு மேலே மருத்துவப்பரிசோதனை செய்யப்பட்டிருக்கிறது. நான்கூட பல்வேறு இடங்களுக்கு மருத்துவ முகாம்களுக்குச் சென்றிருக்கிறேன். துவக்கி வைத்திருக்கிறேன். நீண்ட வரிசையிலே ஏழை எளிய மக்கள் எல்லாம் நின்று, அதனால் பயன் பெற்றிருக்கிறார்கள். டாக்டர்கள் பரிசோதித்த பின்னால், யார் யாருக்கு என்ன நோய் இருக்கிறது என்று கண்டறிந்து அவர்களுக்குக் கடுதாசி கொடுத்து, அட்டைகள் கொடுத்து அனுப்பியிருக்கிறார்கள். அது உண்மையிலேயே வரவேற்க வேண்டியது தான். ஆனால், அதே நேரத்திலே தாலுக்கா மருத்துவமனைக்கும், மாவட்ட மருத்துவ மனைக்கும் போனால், கையிலே கடுதாசி கொடுத்து, தனியார் மருத்துவ மனைக்கு அனுப்பக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன. ஏனென்றால், அங்கு பரிசோதிக்கப்பட்ட பிறகு, பரிந்துரைக்கப்பட்டிருக்கிற மருந்துகள் தாலுக்கா மருத்துவமனையிலும், மாவட்ட மருத்துவமனையிலும் இல்லை. ஆகவே, தனியாரிடம் போக வேண்டியிருக்கிறது. எனவே, அது எப்படிச் செம்மையாக நடக்குமென்று நீங்கள் எதிர்பார்க்க முடியும் ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஏற்கெனவே இரண்டு நாட்களுக்கு முன்பு இதே போன்று ஒரு கேள்வி கேட்கப்பட்டு, பதில் சொல்லப்பட்டிருக்கிறது. சில மாதங்களுக்கு முன்னால், இந்த நிலைமை இருந்தது உண்மை. காரணம், கடந்த காலத்திலே ஏற்பட்டுவிட்ட சில பிரச்சினைகளின் காரணமாக, வாங்குகின்ற முறையிலே ஏற்படுத்தப்பட்ட சில மாற்றத்தின் காரணமாக, சரியான மருந்துகள் வராமல் போய்விட்டன. அடுத்து, இடைக்காலத்திலே ரூபாயினுடைய மதிப்பு குறைக்கப்பட்டதன் காரணத்தால், விலையேற்றத்தின் காரணத்தால், அந்த டெண்டர்களை ஒப்புக்கொண்டவர்கள் சரியாக சப்ளை செய்ய முடியாமல், ஒரு அசாதாரண பிரச்சினை ஏற்பட்ட காரணத்தால் இடையிலே அந்த பிரச்சினைகளை நாங்கள் சமாளிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இடையிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் ரூ. 6 கோடியை இதற்காகக் கூடுதலாக ஒதுக்கி, இப்போது அந்த மருந்துகள் வாங்கப்பட்டு எல்லா இடங்களுக்கும் போய்க்கொண்டிருக்கின்றன. நீங்கள் இரண்டு மாதங்களுக்கு முன்னால் இருந்த நிலைமையைச் சொல்லிக்கொண்டு இருக்கிறீர்கள் என்று கருதுகிறேன். இப்போது அந்த மருந்துகள் அனைத்தும் அந்தந்த இடங்களுக்குப் போய்ச் சேர்ந்துகொண்டிருக்கின்றன.



[திரு. சு. முத்துசாமி]

அதேபோன்று நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். இன்னும் 2, 3 மாதங் விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன். லோக்கல் பர்சேஸ் என்ற முறையில் களுக்குத்தான் இப்படி, சமாளிக்க வேண்டியிருக்கும். அதற்கு மேலே இந்த ஆண்டுக்கு வாங்கக் கூடிய முறையை நாங்கள் மிகப் பெரிய அளவிலே சீர்திருத்தி இருக்கிறோம். அந்த முறைப்படி மருந்துகளைக் குறிப்பிட்ட காலத்திற்குள் அவர்கள் சப்ளை செய்யவில்லை என்று சொன்னால், குறைந்தபட்சம் அவர்கள் 3 ஆண்டுக்காலத் திற்கு மீண்டும் அந்த டெண்டரில் கலந்து கொள்ள முடியாது என்று கடுமையான நிலைகளை எல்லாம் உண்டாக்கி அதை ஒழுங்குபடுத்திக் கொண்டிருக்கிறோம். எனவே, அடுத்த ஆண்டிலே இதுபோன்ற கேள்விகளே வருவதற்கு இடமே இருக்காது. ஏற்கெனவே இருந்து வந்த பிரச்சினைகளைத்தீர்ப்பதற்கு இப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு, தற்போதைக்கு நிலைமைகள் சமாளிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எனவே, இந்த முகாம்கள் மூலமாக யார் யார் அட்டைகள் பெறுகிறார்களோ, அவர்களுக்கு தனிப் பட்ட வகைகளிலே இப்போது 22,000 பேரைக்கண்டு பிடித்திருக் கிறோம். அவர்களுக்குத் தனிப்பட்ட முறையிலே மருத்துவச் சிகிச்சை செய்வதற்கான ஏற்பாடுகளை நாங்களே நேரடியாகப் பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

முற்பகல் 11-55

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஜி. பழனி சாமி அவர்கள் விரைவில் முடிக்க வேண்டும். குறுக்கீடுகளும் சேர்த்துதான் உங்களுடைய நேரம் கணக்கிடப்படுகிறது.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1 கோடியே 20 இலட்சம் பேர்களுககு வேட்டி சேலை வழங்குகிற ஒரு திட்டம் குறித்து ஏற்கனவே பேசியிருக்கிறோம். ஆனால் நம்முடைய தமிழக அரசு ஒரு கோடியே 20 இலட்சம் பேர்களுக்கு வேட்டி சேலைகள் வழங்குகிற ஒரு திட்டத்தில் கைத்தறியிலிருந்து எவ்வளவு வேட்டி சேலைகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன, எவ்வளவு ஸ்டாக் இருக் கிறது, அதை எவ்வளவு கொள்முதல் செய்தால் மாவட்ட வாரி யாக ஏழை எளிய மக்களுக்கு எப்படி வழங்க வேண்டும் என்ற ஒரு திட்டத்தை அரசு முதலிலேயே கணக்கு எடுத்து நடத்தி இருக்க வேண்டும் அதற்கு மாறாக குறைவாக இருந்த அந்த வேட்டி சேலைகளை வாங்கி, பர்சேஸ் செய்து பல்வேறு ஊர் களிலே வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றைக்கு என்ன நிலை தனியார்களிடத்திலே அது விடப்பட்டு இருக்கிறது. தனியார்களிடத்திலே டெண்டர் எடுத்து வேட்டிகளையும், சேலை களையும் விநியோகித்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழகத் திலே மட்டும் அல்லாமல் கர்நாடகத்திலேயும் போய்க்கொள்

முதல் செய்திருக்கிறார்கள. அநேகமாக கர்நாடகத்திலேயிருந்து கொண்டு வந்திருக்கிற அந்த வேட்டி சேலைகளைப் பார்த்தோம் என்று சொன்னால் போதுமான வேட்டி சேலைகளாக அது இல்லை. ஒரு நல்ல சாயம் கூட தோயாத நிலையில் அவை இருக்கின்றன. 8 முழம் வேட்டி என்று சொன்னால் 6 முழம் தான் இருக்கிறது. அதன் தரமும் மிகவும் குறைந்திருக்கிறது. நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு உதாரணத்திற்கு வேண்டுமென்று சொன்னால், அது போன்ற வேட்டி சேலை ஒன்றை நான் கொண்டு வந்து தருகிறேன். அவர்கள் பார்க்கட்டும். அநேகமாக 35 ரூபாய் கூட பெறுமானம் இல்லாதது. இன்றைக்கு அதிலே கான்டிராக்ட்டுகள் மூலமாகப் பலபேர் சம்பாதிப்பதற்கு ஒரு வாய்ப்பை அரசு உண்டு பண்ணியிருக்கிறது. இதுபோன்ற நிலைமைகள் இருக்கக்கூடாது என்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எவ்வளவு வேட்டி சேலைகள் நம்மிடத்திலே இருக்கிறதோ அந்த அளவுக்கு மட்டும் நபர்களைத் தேர்ந்து எடுக்க முடியாது. உதாரணத்திற்கு சொல்ல வேண்டும் என்று சொன்னால் எவ்வளவு விருந்தினர்கள வந்திருக்கிறார்களோ அந்த விருந்தினர்களுக்கு ஏற்றவாறு சமையல் செய்ய வேண்டும். அதேபோல இவ்வளவு பேர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று இருக்கிறபோது, அதாவது 1 கோடியே 20 லட்சம் பேர்களுக்குக்கொடுக்க வேண்டும் என்று இருக்கிறபோது நம்மிடத்திலே எவ்வளவு வேட்டி சேலைகள் இருக்கின்றன என்பதற்கு ஏற்றவாறு கணக்கு எடுக்காமல், இவ்வளவு பேர்கள் ஏழைகள் இருக்கிறார்கள் இவ்வளவு பேர்கள் விவசாயத் தொழிலாளர்கள இருக்கிறார்கள், இவ்வளவு பேர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிறார்கள் என்று கணக்கு எடுத்து இந்த உத்தரவு போடப்பட்டிருக்கிறது. ஆனால் அதற்கு வேண்டிய அளவிற்கு நம்மிடத்திலே சேலை வேட்டிகள் இல்லாத காரணத்தால் மற்ற இடங்களிலே இருந்து வாங்கியாவது கொடுக்க வேண்டும் என்பதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் சொன்னபடி எங்கேயாவது தரம் குறைந்த வேட்டி சேலைகள் இருந்தால், வந்தால் அதை வாங்க வேண்டாம் என்று மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அப்படி எங்காவது தவறு நடந்தால் அந்த மாவட்ட ஆட்சித் தலைவர்தான் அதற்குப் பொறுப்பு ஏற்க வேண்டும். அது மட்டும் அல்ல, தவறு நடந்தால் அந்தத் தவறுக்கு மேலே இருக்கிற அதிகாரிகள் அதை கீழ் அதிகாரிகள் மீது சுமத்தி விடக் கூடாது என்பதற்காக மாவட்ட







ஆட்சித் தலைவரும், கோட்ட வளர்ச்சி அதிகாரியும் அதற்குப் பொறுப்பு ஏற்க வேண்டும் என்று கடுமையாக வலியுறுத்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி, விரைவிலே முடியுங்கள்

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உண்மையிலேயே நம்முடைய தமிழகத்தின் முதலமைச்சர் அவர்கள், அநேகமாக 1989 ஆவது ஆண்டிலிருந்து மூடப்பட்டிருந்த ஸ்டேன்டர்ட் மோட்டார் கம்பெனியை திறந்திருக்கிறார்கள். அதிலே 60 பேர்களுக்கு மேலே இறந்திருக்கிறார்கள். சட்டமன்றத்திலே கூட நாங்கள் எல்லாம் அதை எடுத்து பேசியிருக்கிறோம். அந்த தொழிலாளர்களுக்கு வாழ்வு அளித்து இருக்கிறீர்கள். அது ஒரு நல்ல காரியம். அதே போல பின்னி மில்லை திறப்பதற்குக்கூட, பேச்சு வார்த்தைக்கான தேதிகள் மே மாதத்திலே நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதையும்கூட திறப்பார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது அதே போல ஏழை எளிய விவசாயிகள் போன்று, நெசவாளத் தொழிலாளர்களுக்கு பல்வேறு சலுகைகளை அறிவித்திருக்கிறீர்கள். உண்மையிலேயே அதை நான் பாராட்டுவதற்கு கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து நூலகம். திருத்துறைப்பூண்டியிலே இடும்பாவனம், கத்திரிமேடு போன்ற பகுதிகளில் படித்த இளைஞர்கள் நிறைந்திருக்கிற பகுதிகளில் 3 இடங்களில் ஏற்கெனவே பிரபோசல்கள் இருக்கின்றன. அதற்கு இந்த தடவையாவது அனுமதி கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஒன்று சொல்ல விரும்புகிறேன். மகாமக விழா. அதைப்பற்றி கண்டிப்பாகச் சொல்லியாக வேண்டும். இதற்காக தமிழக அரசு 11 கோடி ரூபாய் வரையில் செலவு செய்து, அதிகாரிகளை எல்லாம் கூட்டி அழைத்துப் பேசி இந்த விழாவை சிறப்பாக செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தோடு நிறையச் செய்தார்கள். அநேகமாக பத்தாண்டுகளுக்கு கும்பகோணத்திற்கு எந்தவிதத் தேவையும் எழாது. அவ்வளவு தேவைகளையும் நிறைவேற்றியிருக்கிறீர்கள. நல்லது, மகிழ்ச்சிதான். ஆனால் இந்த விழாவிற்கு பல லட்சக் கணக்கான மக்கள வருவதற்காக வாய்ப்புகள் இருந்தன. சமீபத்திலே நடந்த, 18 ஆம் தேதி நடந்த அந்த விழாவிலே அநேகமாக பார்த்தால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், இந்து பரிஷத்தும்—இரண்டும் சேர்ந்து போட்டி போட்டு அந்த விழாவை நடத்தியது போன்ற ஒரு நிகழ்ச்சிகள் அங்கே நடைபெற்றன யார் வேண்டுமானாலும் எந்த விளம்பரம் வேண்டுமானாலும் பண்ணிக் கொள்ளட்டும். அதைப்பற்றி எங்களுக்கு அவசியம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

நண்பகல் 12-00

மாண்புமிகு திரு சு. முத்துசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விசாரணை எல்லாம் இருக்கிறது. அதிலே இவ்வளவு நுழைந்து பேசிக் கொண்டிருந்தால் அந்த விசாரணைக்கு கேடு வருமோ என்று கருதுகிறோம். எனவே அதிலே இவ்வளவு நுழையாமல் இருப்பது நல்லது என்று கருதுகிறேன். அங்கே போட்டி வந்தது என்று சொல்வதெல்லாம் சரியாக இல்லை. எனவே, அது நன்றாக இருக்காது என்று கருதுகிறேன். அந்த விஷயத்தைத்தான் பேசிக் கொண்டிருக்கிறார்கள். எனவே அதை விட்டுவிடுவது நல்லது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு திரு. ஜி. பழனிசாமி அவர்கள் கவனிக்க வேண்டும் .32 நிமிடங்கள நீங்கள் எடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) திரு. ஜி. பழனிசாமி அவர்கள் ஒரு பொதுவுடமை வாதி. இந்த நேரத்தையும் பொதுவுடமையாக்க வேண்டும். தன்னுடமையாக்கிக் கொள்வது சரியாக இருக்காது. தயவுசெய்து விவாதத்திற்குள்ளே போகாமல் முடிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். விசாரணையிலே இருக்கும் ஒரு பொருளைப் பற்றிப் பேசாமல் இருப்பது நல்லது

திரு. ஜி. பழனிசாமி: துணைத் தலைவர் அவர்களே, அந்த விசாரணை என்பது சரியல்ல. உச்ச நீதிமன்ற நீதிபதிகளை கொண்டுதான் அந்த விசாரணையை நடத்த வேண்டும். ஆர். டி ஓ. மட்டத்தில் விசாரணை நடத்துவது என்பது சரியல்ல. ஏனென்று சொன்னால், நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் இறந்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்கள் கோரிக்கையைச் சொல்லிவிட்டு நீங்கள் முடியுங்கள், நேரம் 12 மணி ஒரு நிமிடம்.

திரு. ஜி. பழனிசாமி: நான் சொல்லிவிடுகிறேன். நான் ஒத்திவைப்புத் தீர்மானம்.......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 33 நிமிடங்கள் ஆகிவிட்டன. ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் பற்றி இப்போது நீங்கள் பேசமுடியாது.



திரு. ஜி. பழனிசாமி: இரண்டு தடவை கேட்டேன். இதிலே பேசுங்கள் என்று சொல்லி விட்டார்கள். ஆகவே நான் இதிலே பேசுகிறேன். கிட்டத்தட்ட நூற்றுக்கு மேலே இறந்து இருக்கிறார்கள். 12,000 போலீஸ் போயிருக்கிறது. பாதுகாக்க முடியவில்லை. இந்த 12,000 போலீசில்—இவ்வளவு பெரிய மக்கள் நெருக்கம் ஏற்பட்டிருக்கின்றபோது, கூட்டம் நடந்திருக்கும்போது கிட்டத்தட்ட 100 பேர்களுக்கு மேல் இறந்திருக்கிறார்கள்—ஒரு போலீஸாவது இறந்திருக்கிறார்களா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, போலீஸ் இறக்கவில்லை என்பதற்காக வருத்தப்படக்கூடாது. தயவு செய்து இருக்கின்ற நிலைமையைப் புரிந்து கொள்ள வேண்டும். அங்கே எவ்வளவு இலட்சக் கணக்கான மக்கள் இதுவரை எப்போதும் வராத அளவிற்கு வந்தார்கள் என்பதை அவர்கள் புரிந்துகொள்ளவேண்டும். எனவே நாம் இவ்வளவு டீப்பாக இங்கே விவாதிப்பது என்பது விசாரணைக்கு ஏதோ ஒரு வழியை நாமாக ஏற்படுத்திக் கொடுப்பதாக அமையும் என்று கருதுகிறோம். எனவே இவ்வளவு உள்ளே போகாமல் அவர் வேறு விசாரணை வேண்டும் என்று சொன்னார். அது குறிப்பிலே இருக்கலாம். மற்றவைகள் அவ்வளவு சரியாக இருக்குமா என்பது கேள்விக் குறியாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பழனிசாமி அவர்கள் வரவு-செலவுத் திட்டத்தைப் பற்றிப் பேசியது வரை சரி. அடுத்த விவாதத்திற்குள்ளே நீங்கள் போவது சரியாக இருக்காது. உங்களுக்கு அனுமதிக்கப்பட்ட நேரம் முடிந்து விட்டது.

திரு. ஜி. பழனிசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அநேகமாக இன்றைக்கு அரசாங்கம் சொல்கின்ற கணக்கு 58 பேர். இதுவரையில்.......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதுபற்றித் தொடர்ந்து பேச அனுமதியில்லை.

திரு. ஜி. பழனிசாமி: ஒரு உடல் கூட போஸ்ட் மார்ட்டம் பண்ணவில்லை. நான் கேட்கிறேன்.......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருமதி ப. சரஸ்வதி. (குறுக்கீடு).

*திருமதி ப. சரஸ்வதி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதுயுகம் படைக்க வந்த பாரதி கண்ட புதுமைப்பெண் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் தரணி போற்றும் தமிழகத்தின் நடமாடும் பல்கலைக் கழகம் தாராளமாக உவந்தளித்த நிதிநிலை அறிக்கையின் மீது எனக்குப் பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் நல்ல மணம் உண்டு என்று சொன்ன மாமேதையாம் பேரறிஞர் அண்ணாவின் கொள்கையை இந்தத் தமிழகத்தில் குழி தோண்டி புதைத்துக்கொண்டு இருப்பவர்கள் இன்று நல்ல காரியங்களைச் செய்யக்கூடிய புரட்சித் தலைவியைப் பாராட்ட மனம் இல்லாத பொறாமையால் பிதற்றிக் கொண்டிருக்கிறார்கள். தமிழகத்தின் காவல் தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் முகம் பார்க்கும் கண்ணாடி போல மத்திய அரசைப் பாராட்டியுள்ளார்கள். அதே சமயம் சிற்சில கருத்துக்களை வலியுறுத்திக் கூறியிருக்கிறார்கள். மத்திய அரசுக்கு எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தோழமைக்கட்சி உணர்வினைத் தொய்வில்லாமல் காட்டுகின்றார் மத்திய அரசின் ஆட்சியில் சோதனை வருகின்றபோதெல்லாம் மனம் திறந்து ஆதாவினைக் காட்டுகின்றார்கள். ஆனால் இங்கே இருக்கக்கூடிய காங்கிரஸ் கட்சியாகட்டும், மத்திய அரசாகட்டும் தோழமை உணர்வினை அடிக்கடி மறந்து விடுகிறார்கள். எங்கள் தானைத் தலைவி முன் வைத்த காலை பின் வைக்க என்றுமே பின்வாங்க மாட்டார்கள். பின்னாலும் குறி வைக்க மாட்டார்கள். நேருக்கு நேர் சந்திக்கக்கூடிய நெஞ்சுரம் கொண்டவர் தான் தமிழகத்தின் முதலமைச்சர். உருக்காலை தருகிறோம் சேலத்திற்கு என்று கூறி உருட்டாலையாக்கிவிட்ட மத்திய அரசு, வடபுலத்திலே பார்த்துக் கொண்டிருக்கக்கூடிய மத்திய சர்க்கார் சற்றே தென் புலத்தை திரும்பிப் பாருங்கள். தேய்ந்து கொண்டிருக்கக்கூடிய தென் மாநிலத்தை வளர்க்க வேண்டும் என்று ஆதரவு தந்தவர்களை நினைத்துப் பார்க்க வேண்டும். காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும் ஞாலத்தின் மாணப் பெரிது என்ற வள்ளுவப் பெருந்தகையின் கூற்றைப் போல நாங்கள் உங்களுக்கு எப்படி ஆதரவு அளித்தோம் என்பதனை நினைத்துப் பார்த்து தென்புலத்தை நினைத்து பார்க்க வேண்டுமென்று மத்திய அரசினை வேண்டிக்கொள்கிறோம்.

பிற்பகல் 12.05

மத்திய அரசு மாநில அரசுகளுக்கு நிதி ஒதுக்கும் கொள்கையை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்றும், சிறு சேமிப்பு, மாநில அரசுக்கு மிக மிக வருவாய் தரக்கூடியது என்றும் அதை சிறிதும் பாதிக்கக்கூடாது என்றும் நயமாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

காவல் துறையைப் பொறுத்த வரையில், எதிர்க் கட்சியினரை அழிக்கவும், எதிர்க் கட்சித் தலைவரை வேவு பார்க்கவும் காவல் துறையை ஒற்றர்களாக முந்தைய அரசு பயன்படுத்தியது



[திருமதி ப. சரஸ்வதி]

ஆனால் எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் காவல் துறைக்கு முழு சுதந்திரத்தைக் கொடுத்து புத்துணர்ச்சி ஊட்டி, புதுத் தெம்பைக் கொடுத்து அவர்களுக்குக் குடியிருப்பு இல்லங்களைப் பராமரித்து செயல்படுத்தி வருகிறார்கள்.

அழிந்து வரும் காடுகளில் மரங்களை வளர்க்கவும், அழித்துக் கொண்டிருக்கக்கூடிய சந்தன மரக்கடத்தல்காரர்களைத் தண்டிக்கவும் தனி நீதிமன்றம் அமைத்தது பாராட்டத்தக்கது. புரட்சித் தலைவி மருத்துவ நலத் திட்டத்தின் மூலம் என்ன நோய் உடலில் இருக்கிறது என்பதைக்கூட தெரிந்து கொள்ளாமலே உணவைத் தேடி அலைந்து கொண்டிருக்கக்கூடிய, அல்லல் உற்றுக் கொண்டு இருக்கக்கூடிய மக்கள் தன் உடலில் என்ன நோய் இருக்கிறது என்று அறிய பெரும் வழி ஒன்றுக்கு வகை செய்திருக்கிறார்.

மகளிர் மேம்பாடு திட்டத்தின் மூலம் ஒரு லட்சம் மகளிருக்கு சுய வேலை வாய்ப்புத் திட்டத்தை இன்று தமிழகம் முழுவதும் வரவேற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

தஞ்சையில் பிறந்த மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி அவர்கள்தான் 'தான் தமிழன் என்று சொல்லிக் கொண்டு இருக்கிறார் இந்த தமிழகத்திலே. தன்னை விட்டால் தமிழ் இனத்தைக் காப்பாற்ற யாரும் இல்லை என்று தன் கட்சிக் காரர்களை விட்டுப் பறை சாற்றிக் கொண்டிருக்கிறார். ஆனால் இந்த தமிழுக்கு, தமிழ் மனிதனுக்கு, தமிழ் மண்ணுக்கு என்ன செய்தார் என்றால் இதுவரை தேடித் தேடிப் பார்த்ததில் எதுவும் கிடைக்கவில்லை.

அன்று டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் மதுரையிலே தமிழ்ச்சங்கம் கண்டார்; தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக் கழகம் கண்டார். இன்று டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் பாவேந்தர் பாரதிதாசன் புகழை நிலைநாட்ட ஆராய்ச்சிப் பணிக்கு ஒரு இருக்கையை உருவாக்கி இருக்கிறார். பெண்மையின் சிகரம், உண்மையை அறிந்து பெண் குழந்தைகளின் உயிர் காக்க 2 ஆயிரம் ரூபாய் வழங்கி அதன் எதிர்கால வாழ்வுக்கு வழிகாட்டியிருக்கிறார்.

எனது தொகுதி காவேரி அன்னை வலம் வரும் தொகுதி; வாழை, வெற்றிலை வளம் கொழிக்கும் பூமி. ஆனால் புயல் காலத்தால் உண்மையில் உறங்காமல் வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டு விவசாயிகள் குலை நடுங்கி படுத்துக்கொண்டிருக்கிறார்கள். எந்த நேரத்தில் வாழை அழிந்துவிடுமோ எந்த நேரத்தில் வெற்றிலை அழிந்து விடுமோ என்று தவிக்கு

[திருமதி ப. சரஸ்வதி]

கொண்டிருக்கிறார்கள். இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களே, மூடிக் கிடந்த ஆலையைத் திறந்து விட்டீர்கள்; மருத்துவக் கல்லூரியில் நீக்கப்பட்ட பேராசிரியர்களைப் பணியில் சேர்த்தீர்கள்; போராடிய விசைத்தறி தொழிலாளர்களின் பிரச்சினையைத் தீர்த்தீர்கள். நடக்காது, முடியாது என்ற சொல்லை எல்லாம் நடத்தி, முடித்துக் காட்டிய வீரத்தின் திருவுருவே, பயிர்ப் பாதுகாப்பு இன்சூரன்ஸ் திட்டத்தில் வாழை யையும், வெற்றிலையையும் சேர்த்து குமுறுகின்ற நெஞ்சத்தில் குளிர் வையுங்கள். பணப் பயிர் என்பார்கள் அதிகாரிகள். அது அழிந்தால் பணமே இழந்து பிணமாகி விடுகிறார்கள் மக்கள் என்பதால் உங்களிடத்தில் வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன். வெற்றிலையையும், வாழையையும் பயிர்ப் பாதுகாப்பு இன்சூரன்ஸ் திட்டத்தில் சேர்க்கவேண்டுமென்று மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

அதேபோல் ஒரு நபர் கார்டு இன்று பல மாவட்டங்களில் புறக்கணிக்கப்படுகிறது. தன்னுடைய கணவனை இழந்து தனி யாக வாழ்ந்து வரக்கூடிய ஒரு தாய் ரேஷன் கடைக்குச் சென்று பொருட்கள் வாங்க முடியாமல் தவித்துக்கொண் டிருக்கிறாள். ஓ.ஏ.பி. உதவித் தொகை வாங்குபவர்களுக்கு வேண்டுமானால் அது பொருந்தும். ஆனால் எந்த உதவித் தொகையும் பெறாத தனியாக வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய தனி நபருக்கு ரேஷன் கடையில் பொருட்கள் வழங்க வேண்டு கிறேன்.

என்னுடைய தொகுதியில் பன்னெடுங்காலமாக பராமரிப்பு இன்றி இருக்கக்கூடிய ராஜகுமாரபாளையம் மோகனூர் வாய்க்காலை ரீ-மாடலிங் செய்யும் செலவை விவசாயிகள் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்ற நிபந்தனையின் பேரில் முன்பு அனுமதியின்றி நீர் எடுத்துப் பாய்ச்சியவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. அப்படி அனுமதி வழங்குகிறபோது விவசாயி கள் அந்தச் செலவை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று ஏற்றுக் கொண்டார்கள். இருந்தாலும் இன்று அவர்கள் மிகவும் அல்லல் உறுகின்ற நிலை இருப்பதால் உலக வங்கியிடம் கடன் பெற்று எங்களுடைய விவசாயிகளுக்குத் தந்து அந்த வாய்க்காலை ரீ-மாடலிங் செய்து கொடுத்தால் கூடிய விரைவில் தவணை முறையில் அந்தப் பணத்தை நாங்கள் திருப்பிச் செலுத்துவோம் என்ற உத்தரவாதத்தை அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என்ற நிலையில் நான் இங்கே எடுத்துக் கூற ஆசைப்படுகிறேன். (மணியடிக்கப்பெற்றது).

அதேபோல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தில் 1988ஆம் ஆண்டும் அதற்கு முன்பு 1961-62 ஆம் ஆண் டும் அனுமதியின்றி ஆற்றிலிருந்து தண்ணீர் எடுத்து இறைத்தவர்



[திருமதி ப. சரஸ்வதி]

களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அதேபோல் தற் போது இருக்கக்கூடிய விவசாயிகளுக்கும் அனுமதி அளித்து அவர்களுக்கு இலவச மின்சாரம் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய வேலூர் பேரூராட்சி வளர்ந்த நிலையில் இருப்பதால் அதை நகராட்சியாக மாற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பரமத்தியில் நீண்ட காலமாக குற்ற வியல் நீதிமன்றம் இருக்கிறது. அங்கே சிவில் நீதிமன்றம் ஒன்றை உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கரூரிலிருந்து சேலத்திற்கு ரயில் பாதை அமைப்போம் என்று மத்திய அரசு பல காலமாக நான் பிறந்தபோதிலிருந்து சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி யுடைய ஆதரவினால் இன்று மத்தியிலே இருக்கக்கூடிய அரசானது தயவுசெய்து அதை விரைவிலே முடித்துக் கொடுக்க வேண்டுமென்று இங்கே இருக்கக் கூடிய காங்கிரஸ் உறுப்பினர் கள் மூலமாக மத்திய அரசைக் கேட்டுக்கொண்டு, விடை பெறுகிறேன். நன்றி. வணக்கம்.

பிற்பகல் 12.10

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. டி. சுதர்சனம்.

திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 6—3—1992 அன்று நடமாடும் பல்கலைக் கழகம் டாக்டர் நாவலர் அவர்களால் 1992—93-ஆம் ஆண்டுக் கான வரவு செலவுத் திட்டம் இந்த மாமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு கடந்த 8 மாதங்களுக்கு முன்னாலே சுமார் 1,200 கோடி ரூபாய் பற்றாக்குறை நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்த நாவலர் அவர்கள் நம்முடைய மதிப்பிற் குரிய முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரிய ஆலோசனையின் பேரில் அதை இந்த ஆண்டு 494 கோடியாகக் குறைத்து உள்ளார்கள. சுமார் 70 கோடி ரூபாய்க்கு புதிய வரி போடப்பட்டுள்ளது. சுமார் 4 கோடி ரூபாய்க்கு வரிச்சலுகை அளிக்கப்பட்டுள்ளது. இந்தச் சிரம மான பொருளாதாரச் சூழ்நிலை உள்ள காலகட்டத்தில் இதை விட ஒரு சிறப்பான நிதிநிலை அறிக்கையை அளிக்க முடியாது ; இதற்காகத் தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களையும் அவருக்கு உறுதுணையாக இருந்த நாவலர் அவர்களையும், நான் பாராட்டுகிறேன். மக்களால் புறக்கணிக்கப்பட்டவர்கள் வேண்டுமானால் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக இந்த நிதிநிலை அறிக்கையைக் குறை கூறலாம்.

[திரு. டி. சுதர்சனம்]

கடந்த 8 மாத காலத்திலே, துப்பாக்கிக் கலாச்சாரம், வெடிகுண்டு கலாச்சாரம் ஆகியவை தமிழகத்திலே தலைவிரித்து ஆடியதை தமிழக முதல்வர் அவர்கள் தடுத்து நிறுத்தியுள்ளார்கள். இது தமிழக மக்களின் மனதிலே பெரும் நிம்மதியை ஏற்படுத்தியுள்ளது. ஆனால் சமீப காலமாக ஜனநாயகப் போர்வையிலே விடுதலைப் புலிகள் என்ற அமைப்பு, சமூக விரோதக் கும்பல் அமரர் ராஜீவ் காந்தியின் கொலையை நியாயப்படுத்தியும் ஜனநாயக விரோதிகளை ஊக்கப்படுத்தியும் செயல்பட்டு வருகிறது. இதை, தகுந்த சட்டங்கள் மூலம் அடக்க வேண்டுமென்று இத்தருணத்தில் கோருகிறேன். காவல்துறைக்கென இந்த வரவு செலவுத் திட்டத்திலே 276.31 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. இது போதுமானதாகத் தோன்றவில்லை. காவல் துறையை நவீனப்படுத்த அரசு எண்ணியுள்ளதால், தற்போதுள்ள காவலர்கள் எண்ணிக்கை போதுமானதாக இல்லை. 10 கிலோ மீட்டர் சுற்றளவிலே கிராமங்களை எல்லையாகக் கொண்டுள்ள ஒரு காவல் நிலையத்தில் 10 காவலர்கள்தான் இருக்கிறார்கள். இன்றுள்ள பரபரப்பான சூழ்நிலையில் காவலர்கள் அதிகம் இல்லாத காரணத்தால் குற்றங்கள் அதிகமாக நடக்கின்றன. வழக்குகளும் அதிகமாகத் தேங்குகின்றன. ஆகவே காவலர்களை அதிக அளவில் தேர்வு செய்து பணியில் அமர்த்திட வேண்டுகிறேன்.

மேலும், குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால், முக்கிய பிரமுகர்கள் வருகின்றபோது அதிக பாதுகாப்பு அளிக்க வேண்டியுள்ளது. அதைப்போன்ற நேரங்களிலே காவல் நிலையங்களிலே யாரும் இருப்பதில்லை. குறிப்பாக, செங்கை கிழக்கு எம்.ஜி.ஆர். மாவட்டத்திலே நாள்தோறும் முக்கிய பிரமுகர்களின் பந்தோபஸ்த்துக்காகக் காவலர்கள் சென்று விடுகிறார்கள். இதைச் சரிசெய்யும் வகையிலே பந்தோபஸ்த்துக்கு என்று தமிழ்நாடு சிறப்பு காவல்படையைப் பயன்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக முதல்வர் அவர்கள் காவிரிப் பிரச்சினையிலே தமிழகத்து நிலையைத் தெளிவாக எடுத்து வைத்திருக்கின்றார்கள். பல மாதங்களாக திறக்கப்படாமல் இருந்த ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் தொழிற்சாலையைத் திறப்பதற்கு பெருமுயற்சி எடுத்து வெற்றி கண்டுள்ளார்கள். இதனால் பல குடும்பங்கள் முதல்வரை வாழ்த்துகின்றன. கே.சி.பி. நிறுவன கதவடைப்பை நீக்கியும், கோவை விதைத்தறி உரிமையாளர்கள் பிரச்சினையைத் தீர்த்தும் வெற்றி கண்டுள்ளார்கள். பி அண்டு சி மில்லைத் திறப்பதற்கு முதல்வர் அவர்கள் எடுத்துள்ள முயற்சி பாராட்டுதற்குரியது. விவசாயத்தைப் பொறுத்தமட்டில் நடப்பாண்டில் திட்ட ஒதுக்கீட்டை கடந்தடவிட 28.22 கோடியாக உயர்த்தியுள்ளதை நான்



[திரு. டி. சுதர்சனம்]

பெரிதும் வரவேற்கிறேன். 12,580 ஏக்கர் பரப்பளவுள்ள தரிசு மற்றும் கரம்பு நிலங்களைச் சாகுபடிக்கு கொண்டு வருவதன் மூலம் விவசாயத் தொழிலாளர்கள் பெரிதும் பயன்பெறுவார்கள். சமையல் எண்ணெய் பிரச்சினையை எதிர்காலத்தில் தீர்க்கக்கூடிய வகையில் தங்களால் 24.89 கோடி ரூபாய் எண்ணெய் பனை வளர்ப்புக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தொலைநோக்குடன் கூடிய சிறப்புமிக்க திட்டமாகும். மேலும் 100 சதவீத ஏற்றுமதி நோக்குடன் கூடிய தோட்டக்கலை எஸ்டேட்டுகளைத் தொடங்கி அவைகள் மூலமாக அந்நியச் செலாவணியை ஈட்ட முனைவது சிறப்பான திட்டமாகும். வரும் ஆண்டிலே சுமார் 48 கோடி ரூபாய் செலவிலே ஒரு லட்சத்து 70 ஆயிரம் ஏக்கரிலே பல்வேறு காடு வளர்ப்புத் திட்டங்களைச் செயல்படுத்தப் போவதாக கூறியுள்ளீர்கள். ஆனால் செலவிடப்படும் தொகை சரியான முறையிலே செலவிடப்படுவதில்லை.

உதாரணமாக, சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் செடிகள் நடாமலும், சரியாகப் பராமரிக்காமலும், அதிகாரிகள் செடிகள் நட்டு பராமரிக்கப்படுவதாகக் கணக்கு எழுதி தவறு செய்கிறார்கள், இதைச் சரியான முறையிலே கண்காணித்து தவறு செய்யும் அதிகாரிகளைத் தண்டிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். மேலும் மாவட்ட அளவிலே ஒரு குழுவை அமைத்து நிர்ணயிக்கப்பட்ட அளவிலே காடு வளர்ப்பு நடைபெறுகிறதா என்பது கண்காணிக்கப்படவேண்டும். தேவைப்படும் விறகு மரங்களை வளர்த்து தங்களது சுயதேவையைப் பூர்த்தி செய்து கொள்ளும் வகையில், ஒதுக்கப்பட்டுள்ள மாவட்ட காடு வளர்ப்புத் திட்டம் ஒரு சிறந்த திட்டமென வரவேற்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே கல்விக்காக மட்டும் மொத்தம் 1.518 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது, இதன் மூலம் தொடக்கக் கல்வியைப் பலப்படுத்தவேண்டும், தேவையான பள்ளிக்கூடங்கள் இல்லை, கூரையில்லாத கட்டிடங்களிலும். மரங்களின் கீழும், மழைக்காலங்களில் ஒழுகும் கூரைகளின் கீழும் பள்ளிகள் நடைபெற்று வருகின்றன. இவைகளை மாற்றி கட்டிட வசதியும், கல்வித் துறை சாதனங்களும் அளிக்கப்பட வேண்டுமென்று வேண்டிக் கேட்டு கொள்கிறேன்,

பிற்பகல் 12:15

மேலும் ஆசிரியர் பயிற்சி நிலையங்கள் முறைப்படுத்தப்பட வேண்டும், தனிப்பட்டவர்கள் ஏராளமாகப் பணம் வாங்கிக் கொண்டு, மாணவர்களைச் சேர்த்துக் கொண்டு, ஆசிரியர் பயிற்சி நிலையங்களை நடத்துகிறார்கள், இத்தகைய பள்ளிக்

[திரு. டி. சுதர்சனம்]

கூடங்களுக்கு அங்கீகாரத்தை மறுத்து, அரசுப் பள்ளிகளிலே ஆசிரியர் பயிற்சி அளிக்கும் திட்டத்தை அமல் படுத்த வேண்டுமென்றும் கோருகிறேன்.

தமிழக அரசால் தற்போது நடத்தப்பட்டு வரும் புரட்சித் தலைவி மருத்துவ நலத் திட்டம் அனைவருக்கும் நல்வாழ்வு என்ற அடிப்படையில், கோட்பாட்டிலே கொண்டு வரும்—செயல் படும் நல்ல திட்டம் ஆகும். இதற்குப் பொது மக்கள் மத்தியிலே நல்ல வரவேற்பு உள்ளது.

மேலும், கிராம அளவிலே உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களிலே மருந்துகள் கிடைக்க ஆவன செய்யப்பட வேண்டும்.

கடந்த ஆட்சிக் காலத்திலே பெரிய மருத்துவமனைகளிலே உள்ள எக்ஸ்ரே மெஷின்கள், அறுவைச் சிகிச்சை உபகரணங்கள் பழுது பட்டு, பல மாதங்களாகியும் அவைகள் செம்மைப் படுத்தப் பட முடியாமல் இருக்கின்றன. இந்த நிலையைப் போக்க வேண்டும். இந்த நிலையை வரும் ஆண்டில் மாற்ற வேண்டுமென்று கோருகிறேன்.

ஏழை எளியவர்கள் அறுவைச் சிகிச்சைக்காக முதல்வர் அவர்களால் அளிக்கப்படும் ரூபாய் 15,000 உதவித் தொகை வழங்கும் திட்டம் மிகவும் வரவேற்கப்பட வேண்டிய ஒன்று. அதே நேரத்திலே, இருதய அறுவைச் சிகிச்சைக்காகத் தனியார் மருத்துவமனையிலே ரூபாய் 60,000 முதல் 70,000 ரூபாய் வரை கேட்கிறார்கள், கருணை உள்ளம் கொண்ட முதல்வரவர்கள் அரசு மருத்துவமனைகளிலேயே இந்தச் சிகிச்சையைச் செய்யத் தேவையான ஏற்பாடுகளைச் செய்தால் பல ஏழைக் குடும்பங்கள் உங்களை வாழ்த்தும்.

மேலும், அவசர அறுவைச் சிகிச்சைக்கென தாலுக்கா மருத்துவமனைகளிலே சேர்க்கப்படுபவர்கள் மாவட்ட மற்றும் பெரிய மருத்துவ மனைகளுக்குக் கொண்டு செல்லப்படவும், அவர்களுக்குச் சிகிச்சை அளிக்கவும் வாகன வசதிகளை இந்த அரசு செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1992–93ஆம் ஆண்டுக்கு 503 கோடி ரூபாய் உணவு உதவித் தொகையாக ஒதுக்கப்பட்டுள்ளது, தமிழ்நாட்டில் 22,000 நியாய விலைக் கடைகள் உள்ளன, இதில் சுமார் ஒரு கோடியே இருபது இலட்சம் உணவு அட்டைகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன, நியாய விலைக் கடைகளில் நடைபெறும் ஊழல்களைக் கண்டுபிடித்து. அதிகாரிகளின் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதன் மூலமாக



[திரு. டி. சுதர்சனம்]

உணவுப் பொருள் பங்கீடு முறை சீரடையும், அதன்மூலம் பலகோடி ரூபாய்களை மிச்சப்படுத்தவும் வழி ஏற்படும். அரிசியின் அளவை உயர்த்தி, ஒரு குடும்பத்திற்கு இருபது கிலோ என்று வழங்கிட வேண்டுமென்று வேண்டுகோள் விடுக்கிறேன்.

உணவு எண்ணெய் ஒவ்வொரு மாதமும் குடும்ப அட்டைகளுக்கு வழங்க அரசு முன் வர வேண்டும். ரேஷன் கடைகளில் எல்லாப் பொருட்களும் குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதம் முழுவதும் கிடைக்கும்படி இந்த அரசு வழங்கிட வேண்டும். கிராமங்களிலே உள்ள ஏழைக் குடும்பங்களுக்கு பத்து லிட்டர் மண்ணெண்ணெய் ஒவ்வொரு மாதமும் கிடைக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சில மளிகைப் பொருட்களின்மீது விற்பனை வரி குறைக்கப்பட்டுள்ளது. இல்லத்தரசிகளுக்கு இது மிகவும் மகிழ்ச்சி என்று சொல்ல முடியாது. ஏறிவரும் விலைவாசிகளால் பெரிதும் பாதிக்கப்படுபவர்கள் இல்லத்தரசிகளே. அவர்களை உண்மையிலேயே மகிழ்விக்க நம்முடைய நிதியமைச்சர் விரும்பினால், பருப்பு, மிளகாய், எண்ணெய் மற்றும் உள்ள மளிகைச் சாமான்களுக்கு விற்பனை வரி முழுவதும் குறைக்க வேண்டும். அதே போன்று, கோதுமைப் பொருட்களுக்கு விதித்துள்ள 4 சதவீத விற்பனை வரியை நீக்கி விட வேண்டும்.

மேலும் ஓட்டல்களிலே, உணவு விடுதிகள்மீது 18.25 இலட்சத்திலிருந்து 3 இலட்சம் என்ற அளவு விகிதத்தில் விற்பனை வரி விகிதத்தின் மூலம் சாதாரண ஓட்டல்களில் சாப்பிடும் ஏழை எளிய மக்கள் பாதிக்கப்படுவார்கள். இதை அமைச்சரவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அதேபோன்று நில வரி உயர்வு விவசாயிகளைப் பெரிதும் பாதிக்கும்.

குடிநீர் வழங்குவதிலும் பெரிதும் இந்தத் தொகை நிதிநிலை அறிக்கையிலே ஒதுக்கப்பட்டுள்ளது வரவேற்கத் தக்கது. என்னுடைய தொகுதியான பூவிருந்தவல்லியைச் சேர்ந்த ஆவடி நகரியத்தில் குடிநீர் வசதி போதுமான அளவு இல்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். ஆவடி நகரியத்தில் நாள் ஒன்றுக்கு தேவை 22.20 இலட்சம் லிட்டர் ஆகும்; ஆனால் தற்போது 2.20 இலட்சம் லிட்டர் தான் தரப்பட்டு வருகிறது. நகரியம் வளர்ந்து வரும் நிலையில் போதுமான குடிதண்ணீருக்கு மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

[திரு. டி. சுதர்சனம்]

மாறிவரும் நம்முடைய நாட்டின் பொருளாதாரத் தேவைக் கேற்ப நமது மாநிலத்தில் தொழில் வாய்ப்புகள் தேவையான அளவு பெருக வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டும். ஆந்திரப் பிரதேசிலும் ,கேரளத்திலும் ஏற்றுமதி வளர்ச்சிக் கழகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதைப்போன்று, தமிழக அரசும் நம்து மாநிலத்தில் ஒன்று அமைக்க வேண்டும்.

தற்சமயம் ஆயத்த ஆடைகளுக்கு வெளிநாட்டிலே நல்ல வரவேற்பு உண்டு. குறிப்பாக, பனியன் போன்ற உள்ளாடைகள் மீது வெளி நாட்டினருக்கு ஆர்வம் அதிகம். இவற்றின் ஏற்றுமதி ஆண்டொன்றுக்கு 500 கோடி ரூபாய்க்கு நடக்கிறது. இவைகளை அதிகரிக்கச் செய்வதன் மூலம் தமிழ்நாட்டில் தொழில் வளத்தைப் பெருக்கலாம்.

நமது மின்சார வாரியத்திற்கு மிக முக்கியமாகத் தேவைப் புடுவது நிலக்கரி. வடசென்னையில் ரூ. 944 கோடியிலே மின் உற்பத்திப் பிரிவு ஏற்படுத்தப்போவதாகக் கூறப்பட்டிருக்கிறது. இந்த மின் நிலையத்திற்கு ஆண்டுக்கு 30 இலட்சம் டன் நிலக்கரி தேவைப்படுகிறது. இதை சாட்டிலைட் துறைமுகமாக அமைக்க தேவையான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ள வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் நகர்ப்புறப் பகுதிகள் விரிவாக வளர்ந்து வருகின்றன. இந்த நகர்ப்புறப் பகுதிகளில் கட்டிடங்களுக்கு அங்கீகாரம் செய் வது முறைப்படுத்தப்பட வேண்டும். தற்போது புற நகர்ப் பகுதி க்ளில் கட்டிடங்களுக்கு அங்கீகாரம் பெற்று வருவது மிகவும் சிரமமாக உள்ளது. இதனாலே நகரியங்களுக்கு வரும் வரு மானம் குறைந்திருக்கிறது. இதை முறைப்படுத்தி, லே அவுட்டு களுக்குச் சுலபமான முறையிலே அங்கீகாரம் பெறும் வசதியைச் செய்து வருவாயைப் பெருக்குமாறு கோருகிறேன்.

பிற்பகல் 12.20

இன்றைய தினம், தமிழ்நாட்டிலே நிதி நிறுவனங்கள் என் றும், வங்கிகள் என்றும், சாசுவத நிதிகள் என்றும், பெர்மனன்ட் வங்கிகள் என்றும், கிரடிட் ஃபைனான்ஸ் என்றும் பலபேர் நடத்து கிறார்கள். வங்கிகளிலே குறைந்த வட்டிக்கு வாங்கி, அதிக அளவுக்கு அவர்கள் கொடுக்கிறார்கள். அவர்கள்மீது அல்லது அதிகமான வட்டிகள் வாங்குகிறவர்கள் மீது, அந்த வட்டியிலே குறைந்தது 5 சதவிகிதத்தை தமிழக அரசு பெறுவதற்கு முயற்சி செய்வதன் மூலம், பல கோடி ரூபாய் தமிழக அரசுக்குக் கிடைக் கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப் பெற்றது) இரண்டு நிமிடத்தில் முடித்து விடு கிறேன்.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒரு நிமிடத்தில் முடித்து விடுங்கள்.

திரு. டி. சுதர்சனம்: இல்லை; இரண்டு நிமிடத்தில் முடித்து விடுகிறேன். சத்துணவுக்கென்று தமிழகத்திலே சுமார் 10 இலட்சம் ரூபாய் ஆண்டு ஒன்றுக்கு வருமானம் வரும், அதிகமான லாபம் சம்பாதிப்பவர்களிடமிருந்து ஏதாவது ஒரு முறையிலே ஒரு பத்து சதவிகிதத்தை வரியாக வசூலிக்க முடியுமா என்பதை நிதியமைச்சர் அவர்கள் ஆராய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது, தமிழ்நாட்டிலே ஆறுகள் மற்றும் கருங்கல் குவாரிகளை இலங்கை அகதிகளுக்கு, குறிப்பிட்ட சிறு தொகைகளைப் பெற்றுக் கொண்டு அவர்களிடத்தில் குத்தகைக்கு கொடுக்கிறார்கள். இதை நிறுத்தி ஆற்றின மணலையும், கருங்கல் பாறையையும் வெளிப்படையாக பொது ஏலத்தில் விட்டால், ஆண்டு ஒன்றுக்குப் பல கோடி ரூபாய் வருமானம் இந்த அரசுக்குக் கிடைக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அரசு பொறுப்பேற்றவுடன், தாய்மார்களின் கண்ணீரைத் துடைக்க வேண்டி, அரசுக்கு 350 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டாலும் பரவாயில்லை என்று கூறி, மதுவிலக்குச் சட்டம் கொண்டு வந்தார்கள். அதற்காக நாடே உங்களைப் பாராட்டுகிறது. கள்ளச் சாராயம் காய்ச்சுவதைத் தடுக்க, காவல் துறையையும், கிராம நிர்வாக அலுவலர்களையும் பணித்தீர்கள். இந்த நிலையில், கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களைப் பற்றி, கிராம நிர்வாக அலுவலர்கள், காவல் நிலையத்தில் புகார் செய்யும்போது, எழுத்து மூலம் அந்தப் புகார் கொடுத்ததை, காய்ச்சுபவர்களிடத்திலே காண்பிக்கப்பட்டு, கிராமங்களிலே குழப்பங்களும், அடிதடிகளும் உண்டாகின்றன. இத்தகைய கடிதங்களின் நகல் முதலமைச்சருக்கு அனுப்பப்பட வேண்டுமென்று உத்தரவிட்டு, அதன்மீது நடவடிக்கை எடுக்கவும், கண்காணிக்கவும் வேண்டும். இப்படியும் மீறி, கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் மீது, குறைந்த அபராதம் விதிப்பதை நிறுத்தி, கடுமையான நடவடிக்கையாக 'குண்டர்கள் சட்டத்'திலே கைது செய்ய வேண்டும். இந்நிலையில்தான், மதுவிலக்குச் சட்டம் வெற்றி பெறும். என்னுடைய தொகுதியிலிருந்துதான் சென்னைக்கு 20 சதவிகிதம் கள்ளச் சாராயம் வந்து கொண்டிருக்கிறது.. இதை நீங்கள் மனதிலே கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதி வழியாகத்தான், ஆந்திரா மாநிலத்திலிருந்து பாக்கெட் சாராயம் அதிகமாக வந்து கொண்டிருக்கிறது. அதையும் நீங்கள் மனதிலே கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது) இன்னும் ஒரே ஒரு நிமிடம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மீதி இருப்பதை, மானியக் கோரிக்கையிலே பேசிக் கொள்ளலாம். அடுத்து, திரு. அறிவழகன்.

*திரு. ஆ. அறிவழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1992—93 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது எனக்குப் பேச வாய்ப்பளித்த, பேரவைத் துணைத் தலைவருக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'உங்கள் கரங்கள் சமுதாயத்திற்கு உதவட்டும், தலை, இறைவன் திருவடியில் படியட்டும்' என்று விவேகானந்தர் கூறியுள்ளார். 'கடமையைச் செய்; பலனை எதிர்பார்க்காதே' என்று கீதை சொல்கிறது. 'உழைத்து வாழ வேண்டும்; பிறர் உழைப்பில் வாழாதே' என்று டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் சொல்லி இருக்கிறார். 'எம்மதமும் சம்மதமே' என்று நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் வலியுறுத்தியிருக்கிறார்கள். அவர்களுடைய இந்த நிதிநிலை அறிக்கையில், உள்ளபடியே பாராட்ட வேண்டிய அம்சங்கள் இருக்கின்றன. நடப்பாண்டில், இவ்வளவு இக்கட்டான சூழ்நிலையில், நிதிநிலை அறிக்கையில், நம்முடைய அரசு கல்விக்காக 10 மேல்நிலைப் பள்ளிகளையும், 20 உயர்நிலைப் பள்ளிகளையும் அறிவித்திருந்த போதிலும், பள்ளிகள்—இன்னும் மாணவர்களுக்கு அதிகமான மேல்நிலைப் பள்ளிகள், அதாவது குறைந்த பட்சம் 20 மேல்நிலைப் பள்ளிகளாவது கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய தொகுதியான கிருஷ்ணராயபுரம் தொகுதியில், 1960 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கடவூர் உயர்நிலைப் பள்ளி, கட்டிட வசதியின்றி, பலமுறை அரசுக்கு விண்ணப்பம் செய்யப்பட்டிருந்தும், அதற்குக் கட்டிட வசதி ஏற்படுத்தித் தரவில்லை என்பதை மிக வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்வதோடு, நடப்பாண்டில் அதற்கு நிதியை ஒதுக்கித் தரவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல், கிருஷ்ணராயபுரம் ஒன்றியத்தில் இருக்கிற பழைய ஜெயகொண்ட சோழபுரம் உயர்நிலைப் பள்ளியில் 1964 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட பள்ளிகளுக்கு அரசின் சார்பாக எந்தப் பள்ளிக்கும் கட்டிடம் கட்டிக் கொடுக்கப்படவில்லை. ஆகவே, கட்டிடத்துடன் அந்தப் பள்ளிக்கு விஞ்ஞானக் கூடம் பெற்றுத் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12—25

அதே சமயத்தில் நிர்வாகச் சீர்திருத்தம் செம்மையுற, பெரிய மாவட்டங்களைப் பிரித்து அங்கே இருக்கின்ற மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, நம்முடைய ஆட்சி அரியணை



ஏறியவுடன் தஞ்சை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து நாகப்பட்டிணத்தைத் தலைமையிடமாகக் கொண்டு காயிதே மில்லத் மாவட்டம் அமைத்ததோடு, தஞ்சையை ஒரு பகுதியாகக் கொண்ட தஞ்சை மாவட்டத்தையும் அமைத்தோம். நடப்பு ஆண்டிலே தென்னார்க்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து கடலூரை மையமாகக் கொண்டு ஒரு மாவட்டமும், விழுப்புரத்தை மையமாகக் கொண்டு ஒரு மாவட்டமும் கொண்டு வர விருப்பதை நான் உள்ளபடியே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், திருச்சி மாவட்டம் மிகப் பெரிய மாவட்டம். நிர்வாகச் சீர்திருத்தத்தைக் கொண்டுவர எண்ணுகிற நம்முடைய அரசு, கரூரைத் தலைமையிடமாகக் கொண்டு எங்களுடைய பகுதியில் இருக்கின்ற வட்டங்களை இணைத்து ஒரு புதிய மாவட்டத்தை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். அதே சமயத்தில், வருவாய்த் துறையில் இன்று கிராம நிர்வாகத்தில் பணி புரிகின்ற அதிகாரிகள் மிகவும் மோசமான சூழ்நிலையை ஏற்படுத்தி வருகிறார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், நான் கடந்த சட்டமன்ற உறுப்பினர் தேர்தலில் வேட்பாளராக அறிவிக்கப்பட்டவுடன் என்னுடைய ஊரைச் சேர்ந்த கிராம நிர்வாகியிடம் கம்யூனிட்டி சர்டிபிகேட் கேட்ட பொழுது அதைத் தருவதற்கு மறுத்து விட்டார். உடனடியாக நான் மாவட்ட ஆட்சித் தலைவரை அணுகி அந்த சர்டிபிகேட்டைப் பெறவேண்டிய ஒரு இக்கட்டான சூழ்நிலை இருந்தது. நான் அன்றிலிருந்து பலமுறை புகார் செய்தும் இன்றுவரை அந்த நிர்வாக அதிகாரியை மாற்றம் செய்ய முடியவில்லை என்பதை இந்த நேரத்தில் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, இதை ஏன் சொல்லுகிறேன் என்றால் ஒரு காலத்தில் தாழ்த்தப்பட்ட சமுதாயம் இந்த கிராம நிர்வாகிகளிடம் கொத்தடிமைகளாக வாழ்ந்திருக்கின்றோம். ஆயிரம் ஆண்டுகளாக அடிமைப்பட்டிருந்தோம். இன்றும் அதே நிலைமை ஏற்பட வேண்டுமா என்று இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கே இந்தக் கதி என்றால் சாதாரண மக்களுக்கு எந்தக் கதி ஏற்படும் என்பதை இந்த நேரத்தில் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே கிராம நிர்வாக அதிகாரிகள் தங்களுடைய ஊருக்கு அருகாமையில் உள்ள கிராமத்தில் பணி புரியாமல் (மணி அடிக்கப் பெற்றது) வேறு வட்டத்தில் பணி புரியும் வகையில் மாற்றம் செய்யுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், இந்த நிதிநிலை அறிக்கையில், சாலையோரக் கிராமங்களில் இருக்கின்ற இணைப்புச் சாலைகளை இணைப்பதற்குத் திட்டங்களை வகுத்திருக்கின்றீர்கள். அதை உள்ளபடியே பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம். என்னுடைய

[திரு. ஆ. அறிவழகன்]

கிருஷ்ணராயபுரம் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதியாக இருக்கின்ற காரணத்தால், பஸ் போக்குவரத்து ஏற்பட்டிருந்தும் அங்கே சாலை வசதிகள் மிகவும் பழுதடைந்த நிலையிலும், சில இடங்களில் சாலைகள் போடாமல் இருக்கின்ற நிலைமையும் இருக்கின்றன. குறிப்பாக கடவூர் ஒன்றியத்தில் கடவூரில் உள்மாகாணத்திற்குச் செல்ல வேண்டுமென்றால் அங்கு ஒரு காட்டாற்றைக் கடக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. அந்தக் காட்டாற்றின் குறுக்கே ஒரு மேல் பாலத்தை அமைத்துக் கொடுத்தால் தான் மழைக் காலங்களில் போக்குவரத்து நடைபெறும் என்ற அளவிற்கு ஒரு இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே சமயத்தில் எங்கள் பகுதியில் உள்ள குடிநீர்ப் பிரச்சினை கிருஷ்ணராயபுரம் தொகுதியில் காவிரி அருகாமையில் இருக்கின்ற காரணத்தால் கூட்டுக் குடிநீர்த்திட்டத்தின் கீழ் மாயனூரிலிருந்து ஒரு ஸ்கீமை அமைத்து அதன் நெடுகில் இருக்கின்ற 100 கிராமங்களுக்குக் குடிதண்ணீர் வழங்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக் கொள்வதோடு, என்னுடைய தொகுதியில் இருக்கின்ற தொழிற்சாலை ஒன்றே ஒன்று தான். அதுவும் குறிப்பாக, மாயனூர் ஆஸ்பெஸ்டாஸ். மாண்புமிகு புரட்சித் தலைவர் காலத்தில் அமைக்கப்பெற்றது. அந்த ஆஸ்பெஸ்டாஸ் தொழிற்சாலை இன்று மிகவும் நலிவு அடைந்த நிலையில் இருக்கின்றது. தயவு கூர்ந்து அதனை நல்லமுறையில் நிர்வாகம் செய்வதற்கு வேண்டிய உதவிகளையும், அந்தத் தொழிற்சாலை சீரும் சிறப்புமாக நடைபெறுவதற்கு அருகாமையில் உள்ள நம்முடைய காகிதத் தொழிற்சாலையுடன் இணைத்து அதை நிருவகிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-30

அதே சமயத்தில் என்னுடைய தொகுதியில் இருக்கின்ற தாந்தேனி ஒன்றியமும், வெள்ளியணை, உப்ப மங்கலம் போன்ற பகுதிகளும் பாதிக்கும் வகையில் 1977ஆம் ஆண்டு வெள்ளாற்றில் சீற்றம் ஏற்பட்டு குடகனாறு அணை உடைந்தது. இப்பகுதியில் உள்ள திட்டத்தைப் பொறுத்தவரையில் மிகவும் மந்த நிலை ஏற்பட்டு, நடப்பாண்டில் அந்தத் திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டும் இன்று வரையில் என்னுடைய பகுதியில் உள்ள அதாவது குடகனாறு பகுதியில் உள்ள குளங்களுக்குத் தண்ணீர் வருவதற்கும், பாசனத்தைத் அளிப்பதற்கும் வழியில்லாமல் மிகவும் மந்தமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எனவே, உடனடியாக அதன்மீது அரசு நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் மூலமாக நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



[(திரு. ஆ. அறிவழகன்]

அடுத்து எங்கள் பகுதி குளித்தலையை மையமாகக் கொண்டு இருக்கின்ற தாலுகாவாகும், குளித்தலை தாலுகா மிகப் பெரிய தாலுகாவாக இருக்கின்ற காரணத்தால் எங்கள் பகுதி மக்களின் வசதியை முன்னிட்டு கடவூரை மையமாகக் கொண்டு ஒரு தாலுகா அமைத்துக் கொடுக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, குளித்தலையில் இருக்கின்ற நீதிமன்றத்திற்கு சப்—கோர்ட் ஒன்றை வழங்குமாறு உங்களைக் கேட்டுக் கொண்டு எனக்குப் பேச வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவருக்கு நன்றி கூறி, விடை பெறுகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> திரு. எம்.கே. பாலன்.

<u>திரு. எம். கே. பாலன் :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை வணங்கி, நிதிநிலை பற்றாக்குறை இருக்கின்ற காலகட்டத்தில் ஏழை எளிய மக்கள் மீது வரி சுமத்தாமல் இருப்பது பாராட்டத்தக்கது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்காக என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு என்னுடைய தொகுதியில் அருகில் உள்ள பள்ளிக்கரணை, பெருங்குடி, வேளச்சேரி ஆகிய இடங்களில் உள்ள அரசுக்குச் சொந்தமான இடங்களை அதாவது கிட்டத்தட்ட 200 ஏக்கருக்கு உட்பட்ட இடங்களை புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக்குக் களங்கம் ஏற்படுத்துகிற வகையில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களும், சமூக விரோதிகளும் ரூ. 10,000, 15,000 என்று வாங்கிக்கொண்டு விற்று, இப்போது அங்கே 20,000க்கும் மேற்பட்ட வீடுகளைக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், சைதாப்பேட்டை தாசில்தார் ஆபீசில் இருந்து, புறம்போக்கு இடங்களில் வீடு கட்டிக்கொண்டிருப்பவர்களுக்கு '' பீ நோட்டீஸ் '' வழங்கியிருக்கிறார்கள். ஆக, ஒருவருக்கு ஒருவர் போட்டி போட்டுக் கொண்டு வீடுகளைக் கட்டிக் கொண்டு வருவதால் அவர்கள் ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டும், வெட்டிக் கொண்டும், வீடுகளைக் கொளுத்திக் கொண்டும் இருக்கிற நிலை ஏற்படுகிறது. இது பற்றி அரசுக்குச் சுட்டிக்காட்டியும், அதிகாரிகள் கவனம் செலுத்தவில்லை. எனவே, இப்படித் தொடர்ந்து அரசுக்குச் சொந்தமான இடங்களில் தினந்தோறும் வீடுகளைக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். இப்படி அரசுக்குச் சொந்தமான இடங்களை 10,000, 15,000, 5,000 என்று விற்பனை செய்வதால் இன்றைக்குச் சில சமூக விரோதிகள் இலட்சாதிபதிகளாக மாறி வருகிறார்கள் என்பதை அரசாங்கத்தின் கவனத்

[திரு. எம். கே. பாலன்]

திற்குக் கொண்டு வருகிறேன். எனவே, இப்படிப்பட்டவர்கள் மீது, பாதுகாப்புச் சட்டத்தைப் பயன்படுத்தி வழக்கு தொடர்ந்து அவர்களை வழக்கு மன்றத்தில் நிறுத்தி இதுபோன்ற தவறுகளை அவர்கள் செய்யாமல் அரசு பார்த்துக்கொள்ள வேண்டுமென்று பணிவன்போடு நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியான சைதாப்பேட்டை தொகுதியில் மாந்தோப்புப் பள்ளி என்ற மாநகராட்சிப் பள்ளி யில் குறைந்தது 6,000 மாணவர்கள் படிக்கிறார்கள். 6,000 மாணவர்கள் படிக்கின்றஅந்தப் பள்ளிக்கு1971ஆம்ஆண்டு உச்சவரம்பின்கீழ் 32 கிரவுண்ட் இடம் பெற்றுக் கொடுப்பதற் காக மாம்பலம், கிண்டி தாலுகாவினுடைய புல எண். 62, ப்ளாக் எண் 93-இல் நிலம் எடுக்கப்பட்டு கெஸட்டில் வெளி யிடப்பட்டது. அப்படி கெஸட்டில் வெளியிடப்பட்ட இடத்திற்கு சென்னை மாநகராட்சி விளையாட்டுத் திடலுக்காக 1975 ல் பணத்தைச் செலுத்தி இருக்கிறது. அப்படி பணத்தைச் செல வழித்த சென்னை மாநகராட்சி அந்த இடத்தை விளையாட்டுத் திடலாக மாணவர்களுக்காக அறிவிக்காமல் காலம் கடத்தியதன் காரணத்தால் தனியார்கள் அந்த இடம் குறித்து வழக்குத் தொடர்ந்திருக்கிறார்கள். அதாவது அந்த இடத்தில் வாழைத் தோப்பு இருப்பதாக வழக்குத் தொடர்ந்திருக்கிறார்கள். இன்றைக்குக்கூட அதிகாரிகள் போய் அந்த இடத்தைப் பார்வை யிட்டால் வாழைத் தோப்பு அங்கே இல்லை என்பதைப் புரிந்து கொள்வார்கள். ஆனால், இதில் அரசு அதிகாரிகள் கவனக் குறைவு காரணமாகவும், வழக்கு மன்றத்தில் தனியார் மீது வழக்கை சந்திக்க முடியாது என்ற காரணத்தினாலேயும்அவர்கள் கூட சேர்ந்துகொண்டு இருந்த காரணத்தினால் அந்த இடம் இன்றைக்குப் பறிபோகின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. இதை அறிந்த உடனே நான் அந்த மாணவர்களுக்கு அந்த 32கிரவுண்ட் இடத்தையும் விளையாட்டுத்திடலாக அறிவிக்க வேண்டும்என்று அதிகாரிகளிடத்திலே அமைச்சர் அவர்களிடத்திலே முறையிட்டு இருக்கிறேன். இன்றைக்குச் சென்னை மாவட்டத்தினுடைய கலெக்டர் அவர்கள் அதற்கு வழிவகை செய்து வழக்கைச் சந்திக்க இருக்கிறார்கள். ஆக வழக்கு என்று அவர் கள் காலதாமதம் செய்வதால், தனியார்கள் மீண்டும் அதிகாரி களைப் பயன்படுத்தி அந்த இடத்தை ''பிளாட்ஸ்'' என் கின்ற வியாபாரத்தைச் செய்து கோடிக்கணக்கான பணங்களை சம்பாதிப்பதற்கு வாய்ப்புகள் இருக்கின்றனபதை என் இ நேரத்திலே சொல்லிக்கொண்டு அரசு துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

**பிற்பகல் 12-35**

அதேபோன்று சைதாப்பேட்டையிலே வெள்ளம் வருகின்ற போது, புரட்சித் தலைவி அவர்கள் எல்லா இடங்களிலேயும் தண் ணீரில் நின்று சுற்றிப்பார்த்தார்கள். ஆனால், என்னுடைய



[திரு. எம். கே. பாலன்]

தொகுதியான சைதாப்பேட்டைக்கு வருகின்றபோது, மறைமலை அடிகள் பாலத்தின் அருகிலே நின்று, திடீரென்று கோதா மேடைப் பகுதியிலே நின்று பார்வை இட்டு அங்கே வாழ்ந்து கொண்டிருக்கின்ற குடிசை வாழ் மக்களுக்கு வீடு கட்டிக் கொடுப் பதற்கு உத்தரவு இட்டார்கள். ஆனால், போன சட்டசபை கூட்டத்திலே நான் வலியுறுத்திய பின்பு அதிகாரிகள் வீடு கட்டு வதற்கு முனைப்பு எடுத்து, அன்றைக்கு உடனே சட்டத்தைப் போட்டு 736 வீடுகள் கட்டுவதற்கு 2,71,14, 100 ரூபாய் ஹட்கோ உதவியை 1991–92க்கு பண ஒதுக்கீடு செய்யப்பட்டு டெண்டர்ஸ்–ஐ வைத்தார்கள். டெண்டர் வைத்த தேதி 9–10–1991 அன்று. ஆனால், என்ன காரணமோ தெரியவில்லை, அதிகாரிகளும் சிலரும் சேர்ந்து கொண்டு அந்த வீடு கட்டும் திட்டம் கைவிடப்பட்டிருக்கிறது. இதை அறிந்து நான் முதலமைச்சருக்கும் மற்ற அதிகாரிகளுக்கும் தகவல் கொடுத்தேன். அப்படி கொடுத்ததன்பேரில் இப்போது நாங்கள் வீடு கட்டுகிறோம் என்று சொல்கிறார்கள். அங்கே குறைந்தது ஆயிரம் குடிசைகள் இருந்து கொண்டு இருக் கின்றன. இன்றைக்கு மழைக் காலங்களிலே வெள்ளத்தால் ஆபத்து ஏற்படுகின்றது. அதேபோல், வெய்யில் காலங்களில் தீப்பிடித்து எரிகின்ற ஆபத்தும் இருக்கிறது. தினந்தோறும் ஆபத்திலே வாழ்ந்துகொண்டு இருக்கின்ற அந்த குடிசைவாழ் மக்களுக்கு குடிசை மாற்று வாரியம் வீடுகள் கட்டிக் கொடுக்க துரித நடவடிக்கை எடுக்கும்படி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆக, 1991–92–லே ஒதுக்கப்பட்ட ரூ. 2,71,14,100 பயன் படுத்தி இந்த மார்ச் மாதத்திற்குள்ளேஅந்தத் திட்டத்தின் மூலம் அங்கே வாழ்கின்ற ஏழை எளிய மக்களுக்கு வீடு கட்டிக்கொடுக் கத் துரித நடவடிக்கை எடுக்கும்படி வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

அதே போன்று, சைதை தொகுதியிலே வெள்ளம் வருகின்ற போது, பல பகுதிகளில் வெள்ளத்தால் பாதிப்பு ஏற்பட்டிருக் கிறது. ஆனால், பாதிக்கப்பட்ட அந்த நேரத்தில் வெள்ள நிவாரண நிதி என்று அளித்தார்கள். ஆனால், இன்றைக்கு மழைக் காலம் போய், குளிர்காலம் போய், வெய்யில் காலம் வர இருக்கிறது. ஆனால், வெள்ள நிவாரண நிதி பாதி இடங்களிலேதான் கொடுத்திருக்கிறார்கள். இன்னமும் பாதி இடங்களிலே கொடுக்க முடியாமல் இருக்கிறது இந்த அரசு, நிலைமை எனக்குப் புரிகிறது: ஆனால், குடிசையிலே வாழ்கின்ற மக்களுக்கு நிலைமை புரியவில்லை. அதனால் இந்த எம்.எல்.ஏ. சரியாக வேலை செய்யவில்லை என்று எங்கள்மீது கோபப்படுகிறார்கள். ஆகவே, தயவு செய்து வருவாய்த் துறை

[திரு. எம். கே. பாலன்]

அமைச்சர் அவர்கள் உடனே இதில் தலையிட்டு அந்த நிதியை ஒதுக்கீடு செய்து எல்லோருக்கும் நிவாரண நிதி கிடைக்க ஏற்பாடு செய்யுமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அதே போன்று போன சட்டமன்றக் கூட்டத்தில், நான் சென்னையிலே இருக்கின்ற காரணத்தினாலே, அதுவும் சைதைத் தொகுதியிலே இருக்கின்ற காரணத்தினால்— என்னுடைய தொகுதி கடைசி தொகுதியாகும்.— அது மேடான தொகுதியாக இருக்கின்ற காரணத்தினால், குடிநீர் அழுத்தம் குறைவாக இருக்கின்ற காரணத்தினால், அங்கே தண்ணீர் தொட்டி வைத்து தினந்தோறும் தண்ணீர் விநியோகம் செய்ய வேண்டும். ஆனால் தண்ணீர் விநியோகம் செய்த லாரிகள் எண்ணிக்கையை இன்றைக்கு அரசு குறைத்திருக்கிறது. ஆக இன்றைக்குத் தண்ணீர் பஞ்சம் என்னுடைய தொகுதியிலே கடுமையாக இருக்கிறது. 1983லே தண்ணீர் தொட்டி வைத்து இருக்கிறார்கள். தொட்டி எல்லாம் இன்றைக்கு இற்றுப்போய் பாழடைந்து இருக்கின்றன. தண்ணீர் ஊற்ற முடியாத அளவிலே அந்தத் தொட்டிகள் இருக்கின்றன. சென்ற சட்டமன்றத் தொடரிலே கூட நான் இதை வலியுறுத்தி இருக்கிறேன். அரசு அதிகாரிகள் அதைக் கவனத்தில் கொள்ள மாட்டேன் என்கிறார்கள். ஆகவே, உடனே அது சம்பந்தமாக அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுத்து, புதிய தொட்டிகளை வைத்து என்னுடைய தொகுதிக்கு அதிகமாக தண்ணீர் விநியோகம் செய்ய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

பிற்பகல் 12-40

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. இரா. பழனிசாமி.

திரு. இரா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் அளிக்கப்பட்டுள்ள 1992—93ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது பேச வாய்ப்பளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது சேலம் மாவட்டம் மிகவும் வறட்சியான மாவட்டம். கடந்த முறை வங்கக் கடலில் ஏற்பட்ட புயலின்போது கூட சேலம் மாவட்டத்தின் கிழக்குப் பகுதியில்தான் கொஞ்சம் மழை பெய்தது. ஆனால் மேற்கு பகுதியில் மழை பெய்யாத காரணத்தால், குடிநீர்ப் பஞ்சம் மிகக் கடுமையாக உள்ளது. குடிநீர்ப் பஞ்சத்தை உடனடியாகப் போக்க தற்காலிக நடவடிக்கையும்,



[திரு. இரா. பழனிசாமி]

நிரந்தரமாகப் போக்க மேட்டூர் அணையிலிருந்து மாவட்டத்தின் மேற்குப் பகுதியான, இடைப்பாடி, மேட்டூர், தாரமங்கலம், ஓமலூர் போன்ற சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள அனைத்துப் பகுதிகளுக்கும் குடிநீர் விநியோகிக்க வேண்டும். அதற்கான திட்டம் ஒன்றை ஆய்வு செய்துகொண்டுள்ளார்கள். மேற்சொன்ன திட்டத்தின் ஆய்வை உடனடியாக முடித்து அரசு அனுமதி வழங்கி அடுத்த நிதியாண்டிலாவது வேலையைத் துவங்க ஏற்பாடு செய்து எங்கள் பகுதி மக்களின் குடிநீர்ப் பஞ்சத்தை நிரந்தரமாகத் தீர்க்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்திலே பெரிய மாவட்டங்களில் ஒன்று சேலம் மாவட்டம். நிர்வாக நலன் கருதி சேலம் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து ஒரு பகுதிக்கு நமது தமிழக மண்ணிலே தனது இன்னுயிரை விட்ட முன்னாள் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தியின் நினைவாக "ராஜீவ்காந்தி மாவட்டம்" என அறிவிக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எங்கள் பகுதியில் மேட்டூர் அணையில் மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் மில் பல ஆண்டுகளாக மூடிக்கிடக்கிறது. கடந்த சட்டமன்ற கூட்டத் தொடரின்போது கூட மில்லைத் திறப்பது பற்றி கேள்வி எழுந்தபொழுது மாண்புமிகு முதல்வர் அவர்கள் விரைவில் மில்லைத் திறப்பதற்கு உண்டான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனத் தெரிவித்தார்கள். நமது முதல்வர் அவர்கள் எடுத்தக் காரியத்தை செய்து முடிப்பதில் வல்லமை படைத்தவர் என்பதைச் நாடே அறியும். செயல் திறன் மிக்க நமது முதல்வர் அவர்கள், மேற்சொன்ன மில்லைத் திறப்பதில் காலதாமதம் இல்லாமல் துரிதமாகத் திறப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல மேட்டூர் அணையில் மேட்டூர் அலுமினிய கம்பெனி இயங்கி வருகிறது. அந்தக் கம்பெனியும் நிர்வாகத் திறமை இல்லாத போக்கினால் நலிவடைந்து, இன்றோ, நாளையோ மூடப்படும் நிலை உள்ளது. அவ்வாறு மூடினால் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் நடுத்தெருவில் நிற்க வேண்டிய அவல நிலை ஏற்படும். எனவே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தலையிட்டு தக்க நடவடிக்கை எடுத்து மேட்டூர் அலுமினிய கம்பெனியை மூடாமல், தொடர்ந்து செயல்பட அனைத்து ஏற்பாடுகளையும் செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்தில் எனது தொகுதியை உள்ளடக்கிய ஓமலூர் தாலுகாவை பின்தங்கிய தாலுகாவாக அரசு அறிவிக்க வேண்டும். ஓமலூர் தாலுகாவில் சேலம் நகரத்தை ஒட்டி

[திரு. இரா. பழனிசாமி]

தமிழ்நாடு மாக்னசைட், பர்ன் அன்ட் கம்பெனி. டால்மியா மேக்னசைட் போன்ற தொழிற்சாலைகள் உள்ளதால் பின் தங்கிய தாலுகாவாக மாற்ற அரசு தயக்கம் காட்டுகிறது, சேலத்தை ஒட்டித்தான் மேற்சொன்ன தொழிற்சாலைகள் உள்ளன. இத்தொழிற்சாலைகளுக்கும் மேட்டூர் அணைக்கும் இடைப்பட்ட தூரம் 40 கிலோமீட்டர். இப்பகுதி மிகவும் பின் தங்கிய பகுதி. எனது தொகுதியின் பெருவாரியான பகுதி இதில் அடங்கும். அரசு இதில் தனிக் கவனம் செலுத்தி, விதிவிலக்கு அளித்து ஓமலூர் தாலுகாவை பின்தங்கிய தாலுகாவாக அறிவித்து எங்கள் பகுதியில் பல தொழிற்சாலைகள் தொடங்குவதற்கு உதவிகரமாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஓமலூரிலே சேலம் விமான நிலைய வேலை முடியும் தறுவாயில் உள்ளது. எங்களது மாவட்டத்தைச் சார்ந்த மத்திய அமைச்சர் மாண்புமிகு ரங்கராஜன் குமாரமங்கலம் அவர்களுடைய விடா முயற்சியால் வாயுதூத் இறங்கும் அளவுக்கு அறிவிக்கப்பட்ட விமான நிலையத்தைப்பெரியஅளவிற்கு விரிவுபடுத்த உள்ளார்கள், எனவே, ஓமலூர், மேச்சேரி இடையே அரசு தொழில் பேட்டை ஒன்றை அமைத்துக்கொடுத்தால் விமான நிலையம் அருகாமையில் இருப்பதால், தொழிற்பேட்டை நல்லமுறையில் நடைபெறும். அதற்கு அரசு நடவடிக்கை எடுத்து, தொழிற்பேட்டை அமைத்துக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள அனைத்து மக்களுக்கும் ரேசன் கடைகளில் குடும்பத்திற்கு குறைந்த பட்சம் 20 கிலோ அரிசி, கிலோ ரூ. 2 என்ற அடிப்படையில் கட்டாயமாக வழங்க அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ரேசனில் பொருட்களை சரியாக வழங்குவதில்லை, நிறைய தவறுகள் நடக்கின்றன. உதாரணத்திற்கு கடந்த ஜனவரி மாதம் பொங்கல் பண்டிகைக்கு முன்பாக எனது தொகுதியில் ரேசன் பொருட்களை முறையாக, அளவு சரியாக வழங்குகிறார்களா என பல ரேசன் கடைகளிலே நேரில் சென்று பார்வையிட்டேன். 12 கிலோ அரிசி வழங்க வேண்டியதற்கு 1 கிலோவரை குறைவாக வழங்குகிறார்கள். 3 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்குவதற்கு 2 ½ லிட்டரும் 5 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்குவதற்கு 4 லிட்டரும்தான் வழங்கினார்கள், நேரடியாகக் கையும் களவுமாகப் பிடித்து பார்வையாளர் புத்தகத்தில் குறிப்பு எழுதியுள்ளேன். நான் சோதனை நடத்திய அனைத்துக் கடைகளிலும் இத்துறை சம்பந்தப்பட்ட பல அதிகாரிகள் சோதனை நடத்தி உள்ளார்கள். ஆனால் நியாயமாக வழங்குவதாகக் குறிப்பு எழுதி உள்ளார்கள், ஒரு அலுவலர்கூட சரியில்லை என்று எழுதவில்லை. ரேஷன் கடை விற்பனையாளரும் அதிகாரிகளும் சேர்ந்து கூட்டாகக் கொள்ளை அடிக்கிறார்கள் என்பதைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டுள்ளேன்.



[திரு. இரா. பழனிசாமி]

இதை ஒழுங்குபடுத்துவதற்கு என்ன நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ள இருக்கிறதென்பதை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரவர்கள் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்,

பிற்பகல் 12-45

அடுத்து, கல்வித் துறையைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன், நிதிநிலை அறிக்கையிலே உடனடியாக 459 ஓராசிரியர் பள்ளிக்கூடங்களுக்கும் கூடுதலாக ஒரு ஆசிரியர் நியமிப்பதையும், 200 புதிய தொடக்கப் பள்ளிகள் ஆரம்பிக்க உள்ளதையும் குறிப்பிட்டுள்ளீர்கள், அதைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம், அதேநேரத்தில் வருமாண்டில் 10 மேல்நிலைப் பள்ளிகளையும். 20 உயர்நிலைப் பள்ளிகளையும் தொடங்குவதாகக் கூறியுள்ளீர்கள், இது மிகவும் குறைவு. இதை மறுபரிசீலனை செய்து. அதிகப்படுத்த வேண்டுமென்று, கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்,

இந்த அரசு கல்வித் துறைக்கு நிதி நிலை அறிக்கையில் 1518 கோடிரூபாய் ஒதுக்கி உள்ளதாகத் தெரிவித்துள்ளது, இத்துறை சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் எவ்வாறு செயல்படுகிறார்கள் என்பதை அரசுக்குச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டுள்ளேன், ஆசிரியர்கள் சம்பளம் மட்டும் சுமார் 1250 கோடி ரூபாய். ஆனால் அரசு நடத்தும் பள்ளிகளிலே கல்வித் தரம் மிகமிக மோசமாக உள்ளது. பல ஆசிரியர்கள் அரசியல் நடத்திக் கொண்டுள்ளார்கள். அரசிடமிருந்து சம்பளம் வாங்கும் நினைவே அவர்களுக்கு வருவதில்லை. பள்ளிக்குச் சென்று பாடம் சொல்லிக் கொடுப்பது என்பது ஒரு பொழுது போக்கான சம்பவமாக நினைக்கிறார்கள். இதை மேலதிகாரிகள் யாரும் கண்டு கொள்வதில்லை. காரணம் தவறு செய்யும் ஆசிரியருக்கு அரசியல்வாதிகளின் பின்னணி இருப்பதுதான். உயர்நிலைப் பள்ளிகளில் மாணவர்களைச் சேர்த்தபின்தான் 'ஏ' பி. சி. டி'யே கற்றுக்கொள்ளும் நிலை உள்ளது, இப்படியே போனால் தமிழ்நாட்டில் கல்வியின் தரம் உயர்ந்து. ஐ.ஏ.எஸ்,. ஐ.பி.எஸ், அதிகாரிகளை எப்படி உருவாக்க முடியும்? எனவே அரசுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன், மாவட்ட அளவிலே மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் ஒரு கண்காணிப்புக் குழுவை நியமிக்க வேண்டும், அதில் கல்வி இலாக்காவில் சம்பந்தப்படாத அதிகாரிகளை நியமிக்க வேண்டும், இந்தக் குழு திடீரென்று சோதனைகள் நடத்தி தவறு செய்பவர்களைக் கண்டுபிடித்து தக்க நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்,

பிற்பகல் 12—50

மாண்புமிகு தமிழக முதல்வரவர்கள் கடுமையான நிதி நெருக்கடியிலும் தமிழகத் தாய்மார்களின் கண்ணீரைத் துடைக்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்திலே, 400 கோடி ரூபாய் வருமானத்தையும் உதறித் தள்ளிவிட்டு. மலிவு விலை மதுக்கடைகளை மூடி. கடுமையான நடவடிக்கை எடுத்து கள்ளச் சாராயம் தலை தூக்க விடாமல் தடுத்தார்கள், ஆனால் அண்மைக் காலமாக காவல் துறையினருடைய துணையோடு கள்ளச் சாராயம் விற்பது. கள் இறக்குவது பகிரங்கமாக நடக்கிறது. இதனால் மக்கள் மத்தியிலே அதிருப்தி நிலவுகிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இதில் தனிக் கவனம் செலுத்தி. கள்ளச் சாராயத்தையும், கள் இறக்குவதையும் தடுப்பதற்கு முனைப்பாக இருக்க வேண்டும், கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களையும் கள் இறக்குபவர்களையும் தண்டிப்பதற்கு சட்டத்தைக் கடுமையாக்க வேண்டும், மாண்புமிகு தமிழக முதல்வரவர்கள் ஏற்கெனவே அறிவித்தபடி ஒரு பகுதியில் கள்ளச் சாராயம் விற்பவர், காய்ச்சுபவர் பிடிபட்டால் அந்தப் பகுதியினுடைய கிராம நிர்வாக அலுவலர், காவல் துறை அதிகாரி சஸ்பென்டு செய்யப்படுவார் எனக் கூறியதை நடைமுறைப்படுத்தினால், கள்ளச் சாராயம் விற்பது. காய்ச்சுவது; கள் இறக்குவது போன்ற குற்றங்கள் கண்டிப்பாக நடைபெறாது எனச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன், (மணி அடிக்கப்பெற்றது) இறுதியாக ஒன்றே ஒன்று.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மீதி இருப்பதை மானியக் கோரிக்கையில் படிக்கலாம், சீக்கிரம் முடியுங்கள்.

திரு. இரா. பழனிசாமி : அடுத்தபடியாக ஒன்றே ஒன்று சொல்லி முடித்துக்கொள்ளலாமென்று நினைக்கிறேன், ஓட்டல்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு 18.25 லட்சத்தில் இருந்து வரி விலக்கு ஆண்டு ஒன்றுக்கு 3 லட்சமாகக் குறைக்கப்பட்டது நடுத்தர ஏழை மக்களைக் கடுமையாகப் பாதிக்கும். உதாரணத்திற்கு, சென்னையிலே உள்ள உட்லண்ட்ஸ், பிரசிடென்டு தாஜ் கோரமண்டல் போன்ற ஓட்டல்களில் பணக்காரர்கள்தான் சாப்பிடுகிறார்கள், அதற்கு எவ்வளவு வரி விலக்கு அளித்தாலும் நடுத்தர ஏழை மக்களைப் பாதிக்காது, சாதாரண நாயர் மெஸ்சிலும். உடுப்பி ஓட்டலிலும் நடுத்தர, ஏழை மக்கள்தான் சாப்பிடுகிறார்கள். காலையில் டிபன் சாப்பிடுவதற்கே இப்பொழுது ரூ, 10 முதல் 15 வரை ஆகிறது. இந்த வரி விலக்கினால் 1 வேளை டிபன் சாப்பிட 5 ரூபாய் உயர்ந்துவிடும். இதை நடுத்தர ஏழை மக்கள் தாங்க மாட்டார்கள். இதை மறுபரிசீலனை செய்து, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பதி



லுரையிலே இதற்கு விலக்கு அளிப்பார் என மனமார நம்பி, எனக்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன், நன்றி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. என். ஆர். ராஜேந்திரன்,

பிற்பகல் 12—50

*திரு. என். ஆர். ராஜேந்திரன்: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1992—93 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தின்மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்ததற்கு நன்றியைத் தெரிவித்து, இப்படிப்பட்ட சிறந்த திட்டத்தை நாட்டுக்கு வழங்கிய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து, இந்த நாடு வளம் பெறவும், அமைதிப்பூங்காவாகத் திகழவும், தொழில் வளர்ச்சியில் முன்னேற்றம் காணவும், பொருளாதார மேம்பாடு அடையவும் எடுத்துக் கூறப்பட்டுள்ள சிறந்த நிதி நிலை அறிக்கையிலே இந்த நாடு நலம் பெறும் என்று நம்பி, எனது தொகுதியின் வளர்ச்சியிலே இந்த நாட்டின் வளர்ச்சியைக் காண பேராவல் கொண்டு, வேண்டுகோளாக சிலவற்றை இங்கே முன் வைக்க நான் ஆசைப்படுகிறேன்.

எனது தொகுதியான காட்டுமன்னார்கோயில் தொகுதியிலே இதுவரை எந்த தொழிற்சாலைகளும் நிறுவப்படாமல் உள்ளது. இதற்காக 'சிட்கோ' நிறுவனம் சிறந்த முயற்சியை மேற்கொண்டும் இதுவரை அந்த செயல் மிகுந்த தாமதமாகிக்கொண்டு வருகிறது. எனவே, இதை அரசின் கவனத்திற்கு வைக்க ஆசைப்படுகிறேன்.

மேலும் எங்கள் தொகுதியில் துணை மின் நிலையம் இல்லாத காரணத்தால், எரிகின்ற மின்விளக்குகள் எல்லாம் ஊதுபத்தியின் ஒளியைப்போல காட்சி தருகிறது. இதனால் ஃபிரிட்ஜ், கிரைண்டர், டி. வி. போன்றவைகள் கெடுகின்ற நிலையிலும், இயங்காத நிலையிலும் இருக்கின்றன. இதனால் எங்கள் தொகுதி மக்களின் நலன் கருதி, துணை மின் நிலையம் அமைக்கவும், ஏற்பட்டுள்ள தடைகளையும் காலதாமதத்தையும் களையவும் வேண்டுமென்று அரசிடம் கோரிக்கையை முன்வைக்க நான் ஆசைப்படுகிறேன்.

மேலும் எங்கள் தொகுதியில் சிற்றூர்களுக்குப் போக்குவரத்து வசதிகள் நல்லமுறையில் இயங்குவதற்காக, தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக டெப்போ ஒன்று அமைப்பதற்காக நடவடிக்கை மேற்கொண்டு, அது 4—5 மாதங்களாக செயல்படாமல் தாமதத்தில் உள்ளது. அவற்றையும் மிக விரைவில் அமைப்பதற்கு அரசு ஆவன செய்யவேண்டுமென்று எனது மேலான வேண்டுகோளையும் வைக்க விரும்புகிறேன். மற்றும் எனது தொகுதியில், தமிழ் நாட்டிலேயே மிகப் பெரிய ஏரியான வீராணம் ஏரி அமைந்து உள்ளது. அதிலே நெய்வேலி காட்டா

162338
சென்னை-600 002

மணி என்று சொல்லப்படுகிற ஒரு தாவரம் மண்டிக் கிடக்கிறது. இந்தத், தாவரம் அகற்றப்படுவதற்காக, கடந்த ஆண்டு மானியக் கோரிக்கைகளின்போதே நிதி ஒதுக்கியிருப்பதாக அறிவித்தார்கள். இந்தத் தாவரம் வீராணம் ஏரியில் மட்டுமல்ல; அங்கேயிருக்கிற மற்ற ஏரிகள், குளம் குட்டைகள் அனைத்திலும் மண்டிக்கிடக்கிறது. அதனால் எந்தவித செயலும் செய்யமுடியாத அளவுக்கு அந்த நீர்த்தேக்கங்களில் இருப்பதால், நெய்வேலி காட்டாமணியை அகற்றுவதற்காக, மாற்றுத்திட்டமாக அதை விறகாக விற்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசே முன்வந்து, ஒரு குவிண்டால் இன்ன விலை என்று கொடுத்து வாங்கினால் 6 மாத காலம் எந்தவித வேலைவாய்ப்பும் இல்லாத அந்தப் பகுதி மக்கள் அந்த விறகுகளை வெட்டி விற்பதன்மூலம் நெய்வேலி காட்டாமணியும் அழியும். அதே நேரத்தில் ஏழைகளுக்கும் ஏதாவது பிழைப்புக்கு வழியும் ஏற்படும். மேலும் வீராணம் ஏரியில், கிட்டத்தட்ட 10 அடி அளவுக்கு நீர் தேக்கக் கூடிய அளவுக்கு வசதி இருந்தும், மழை பெய்து நீர் அதிகமாக வருகிற காலங்களில் அந்தத் தண்ணீரை வெளியே திறந்துவிட்டு விடுகிறார்கள். இதனால் தற்போது மார்ச் மாதத்திற்குள் வீராணம் ஏரி காயும் நிலை ஏற்பட்டுவிடுவதால், 6, 7 மாதத்திற்கு வறண்ட நிலையில் காய்ந்து போய்விடுகிறது. அதனால் தற்போது அணைக்கரையில் இருக்கிற நீரைத் திறந்துவிட்டால் 4 அடி உயரமாவது தண்ணீர் நிரப்பிவைத்தால், 3, 4 மாதங்களுக்கு சுற்றியுள்ள பல கிராமங்களுக்கு நீர் கிடைக்க ஏதுவாக இருக்கும். இதையும் அரசின் கவனத்தில் வைக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறேன்.

பிற்பகல் 12-55

மேலும், காட்டுமன்னார்கோயிலிலிருந்து மயிலாடுதுறைக்கு போக்குவரத்து வசதி ஏற்படுத்துவதற்காக சிதம்பரம் சென்று பின் சீர்காழி வழியாகச் செல்ல வேண்டி இருக்கின்ற காரணத்தால் அதிக தூரம் போக வேண்டியிருக்கிறது. அதனால், மணல்மேட்டையும் முட்டத்தையும் இணைக்கின்ற தரைப்பாலம் ஒன்றைக் கொள்ளிடத்திலே ஏற்படுத்தினால் ஏறத்தாழ 40 கிலோ மீட்டர் தூரம் அவசியமில்லாமல் சுற்றுவதைத் தவிர்க்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

மேலும், எங்கள் தொகுதியில் மணவாய்க்கால் என்றும் வடிவாய்க்கால் என்றும் ஒரு வாய்க்கால் ஓடுகிறது. அதை அகலப்படுத்தாத காரணத்தால் மழை நீர்த்தேங்கி பயிர்கள் அழிகின்ற சூழ்நிலை ஏற்படுவதால் இதை முக்கியக் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று எனது கோரிக்கையை முன்வைக்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முடியுங்கள் ரொம்ப ''ஸ்லோ மோஷனில்'' போகிறீர்கள்,



திரு. என். ஆர். இராஜேந்திரன் : எங்கள் தொகுதியில் ஈச்சம்பூண்டி பல்வாய்க்கண்டன் அருகில் அல்லது துறப்பு அருகில் வடவாற்றில் பாலம் ஒன்றை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதனால். 25 கிலோ மீட்டர் தூரம் நாங்கள் அவசியம் இல்லாமல் சுற்றுவதைக் கட்டுப்படுத்தலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்,

எங்கள் தொகுதியில் குமராட்சிக்கு அருகில் இரண்டு பெரிய பாலங்கள் இருக்கின்றன, ஒன்று உதிர்ந்துவிட்டது. மற்றொன்று உதிரும் நிலையில் இருக்கிறது, இதனால் போக்குவரத்திற்கு மிகுந்த பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அதை உடனடியாகச் சீர்செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்,

அடுத்து, வல்லம்படுகை என்ற ஊருக்கு அருகே பெராம்பட்டு என்ற கிராமம் இருக்கிறது. இந்தக் கிராமத்திலே ஒரு ''ரெகுலேட்டர்'' அமைத்தால் கடல்நீர் உள்ளே புகுந்து பாசன நீராக மாறுவதைத் தடுக்கலாம். அதனால் பயிர்கள் நாசமடைவதையும் கட்டுப்படுத்தலாம்,

மேலும், சுயவேலைவாய்ப்புத் திட்டம், தொழில் முன்னேற்றம் போன்றவற்றிற்காக நாம் மானியம் ஒதுக்கி. பாங்குகள் மூலம் கடன் கொடுக்கிறோம், இதை பாங்குகள் சரியான முறையில் செயல்படுத்தவில்லை. அவர்களுடைய விருப்பத்திற்குக் கொடுக்கிறார்கள். நாம் சொல்லுகின்ற யாருக்குமே கொடுப்பதில்லை. அதிலே எந்தவிதமான நியாயம் இருப்பதாகவும் தெரியவில்லை. அதனால் இதை மறு பரிசீலனை செய்து இந்தத் திட்டம் லேவைதானா என்பதை அரசு பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முடித்துக் கொள்கிறேன் என்று சொல்லுங்கள்.

திரு. என். ஆர். ராஜேந்திரன் : பேரவைத் துணைத் தலைவரின் வேண்டுகோளுக்கிணங்க முடித்துக்கொள்கிறேன். வணக்கம்,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : டாக்டர் பெ. வீரபாண்டியன்.

*டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமூக முன்னேற்றமும் பொருளாதார வளர்ச்சியும் ஒரு நாட்டின் இன்றியமையாத தேவை என்றாலும் அதன் பயன்கள் ஏழை எளிய மக்களுக்குக் கிடைப்பது அவசியம் என்ற டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.

[டாக்டர் பெ. வீரபாண்டியன்]

அவர்களின் எண்ணத்தைப் பிரதிபலிப்பதாக 1992-93ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை வாழ வழியின்றி தவிக்கின்ற தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் நடுத்தர எல்லா தரப்பட்ட மக்களுக்கும் பொருளாதார முன்னேற்றம் அடைய வரப்பிரசாதமாக அமைந்துள்ளது,

உழைப்புக்கு முன்னுதாரணமாக நம்முடைய அன்புள்ளம் கொண்ட தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தன்னுடைய அயராத உழைப்பாலும் முயற்சியாலும் 1992—93ஆம் ஆண்டுக்கு ரூ, 1,751 கோடி அளவுக்கு ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டைப் பெறுவதற்கு இதய தெய்வம் எடுத்த அத்தனை முயற்சிகளையும் செங்கம் தொகுதி மக்கள் சார்பாக வரவேற்கிறேன்.

மேலும் பேரவைத் துணைத் தலைவர் அவர்களுடைய அனுமதியுடன் '' இந்தியன் எக்ஸ்பிரஸ் '' பத்திரிகையில் வந்திருக்கிற ஒரு செய்தியை வாசிக்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எந்தச் செய்தியாக இருந்தாலும் பேரவைத் தலைவரின் அனுமதியை முன் கூட்டியே பெற்று, அதன் பிறகு சொல்ல வேண்டும்,

டாக்டர் பெ. வீரபாண்டியன் : அந்தச் செய்தி என்னவென்றால்,

"The great injustice dore to Tamilnadu in Plan Revenue Grant—'In our federal pclicy there is a basic imbalance between the resource base available and the duties and responsibilities of the State. Unfortunately the Ninth Finance Commission's recommendations have not helped in nerrowing this imbalance. In the changed economic context the role of states has become even more important''
''Unfortunately, no part of the Corporation Tax is shared with the States. Weurge the Cantre to share with the states a reasonable proportion of this tax.''

பிற்பகல் 1-00

பதவி ஏற்ற 8 மாதங்களில் வியக்கத்தக்கத் திட்டங்களான மலிவுவிலை மதுவை ஒழித்தது ; அதன் இழப்பைத் தாங்கிக் கொண்டது ; 1.20 இலட்சம் ஏழைகளுக்கு வேஷ்டி, சேலை; அளித்தது ; தமிழகத்தைத் தொழில் மயமாக்க முனைவது ' பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க நடவடிக்கை எடுத்திருப்பது, எழுத்தறிவு இயக்கத்திற்காக 11.95 கோடி ரூபாய் செலவில் கொண்டு வரவிருப்பது, புரட்சித் தலைவி இலவச சிகிச்சை முகாம் நடத்துவது, மருத்துவத்திற்கு 463.66 கோடி ரூபாய் என்று உயர்த்தியிருப்பது, ஒருங்கிணைந்த மகளிர் மேம்பாட்டுத்



திட்டத்தில் ஒரு இலட்சம் மகளிருக்கு சுய வேலைவாய்ப்பு அளிக்க இருப்பது, மற்ற மாநிலம் போலன்றி, சாதாரண ரகம் அரிசிக்கு இரண்டு ரூபாய். சன்ன ரக அரிசிக்கு ரூ, 2.50 என்ற விலையில் வழங்குவது, ஆயிரம் மக்கள் தொகைக்கு ஒரு பஸ் விடுவது, புரட்சித் தலைவியின் நல்லாட்சியில் கல்விக்காக ரூ, 1.518 கோடி ஒதுக்கியிருப்பது ; வேளாண்மைக்கு ரூ. 215,75 கோடி உயர்த்தியிருப்பது ; பல் வேறு காடுவளர்ப்புத் திட்டங்களுக்காக ரூ. 47.65 கோடி செலவிடுவது, சத்துணவு ஊழியர்களுக்காக ரூ. 4 கோடி ஊதியமாக உயர்த்தியிருப்பது ஆகியவைகள் எல்லாம் மனதை நெகிழச் செய்கிறது ; சத்துணவு மையங்களை அமைத்த சத்துணவு அமைச்சர் அவர்களுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன், ஏனென்றால், செங்கம் தொகுதிக்கு மட்டும் 9 சத்துணவு மையங்களைக் கொடுத்திருக்கிறார்கள். மிக்க நன்றி,

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

நடப்பாண்டில் மக்களின் அத்தியாவசிய தேவையான குடிநீர் வழங்கல், சாலைகள் மேம்பாடு செய்தல், தெருவிளக்குகள் அமைத்தல். தொடக்கப் பள்ளிகள் கட்டுதல். சத்துணவு அமைத்தல், சிறுபாசன ஏற்பாடுகளைப் புதுப்பித்தல், தொலைக்காட்சி பெட்டிகள் வழங்குதல், சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் அனைத்து கிராமங்களுக்கும் அடிப்படை தேவைகளைச் செய்து தந்திருப்பது ஆகியவை வரவேற்கத்தக்கது. எங்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கிறது.

ஆதிதிராவிடர்களுக்கு 10அம்ச திட்டம் கொண்டுவந்தது, புரட்சித் தலைவி ஆதி திராவிட மக்களின் மீது கொண்டுள்ள அளவிட முடியாத பற்றுதலைத் தெளிவுபடுத்தியுள்ளது,

அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு இதய தெய்வம் புரட்சித் தலைவியின் தலைமையின் கீழ் பதவி ஏற்ற நாளிலிருந்து சுமந்து கொண்டுள்ள பிரச்சினைகள்—சட்டம் ஒழுங்கு சீர்குலைவு, தீவிரவாதிகளின் ஊடுருவல் காவிரி நீர்ப் பங்கீடு பிரச்சினை, அதனால் ஏற்பட்ட தமிழர்கள் பிரச்சினை பொருளாதார இக்கட்டு, விலைவாசி ஏற்றம் ஆகியவையாகும், விலைவாசி ஏறிவிட்டது அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் என்று கருணாநிதி அவர்கள் பேசுவது உண்மைக்குப் புறம்பானது, எந்த ஆட்சியும் செய்யாததை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் நல்லாட்சி செய்துள்ளது. அதிக அளவில் சப்சிடி அளித்துள்ளது, அது மட்டுமல்லாமல் நலிந்தோருக்கு உதவித் தொகையை அளித்துள்ளது.

[டாக்டர் பெ. வீரபாண்டியன்]

ஒரு போரில் வெற்றி பெற்று வீரன் ஒருவன் போர்க் களத் திலேயிருந்து திரும்பி வருகிறான், அவ்வீரனுக்கு ஏதாவது பரிசு அளிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் அரசன் "நீ போரிலே என்ன செய்தாய்? என்ன வீரத்தைக் காட்டினாய்?" என்று கேட்கிறான். உடனே அந்த வீரன் நான் எதிரிகளின் காலை வெட்டிவிட்டு வந்துவிட்டேன் என்று சொல்கிறான். உடனே அரசன் அவனை ஏன் கொன்று விட்டு வரவில்லை, ஏன் காலை மட்டும் வெட்டிவிட்டு வந்துவிட்டாய் என்று கேட்டான், "ஏற்கெனவே ஒருவன் அவன் தலையை வெட்டிவிட்டான், எனவே, நான் எனது பங்குக்கு அவனுடைய காலை வெட்டிவிட்டு வந்துவிட்டேன்" என்று சொன்னானாம். அவ்வாறு ஏற் கெனவே புரட்சித் தலைவி அவர்கள் "விலைவாசி" என்ற அரக்கனின் தலையை வெட்டி விட்டார். இனி செத்த பாம்பை அடிக்க வரும் வீரன் நான் என்று கருணாநிதி விலைவாசிப் போராட்டத்தைத் தொடங்குவது மிகவும் சிரிப்பாக இருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அது மட்டுமல்ல, விலைவாசி ஏற்றத்திற்கு காரணம் என்ன வென்று இதே மாமன்றத்தில் நம்முடைய அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, நம்முடைய ஜனாதிபதி யாக இருந்தபோது பேசிய பேச்சின் ஒரு பகுதியைத் தலைவரின் பின் பிரசிடெண்ட் திரு. ஆர். வி. அவர்கள் இங்கே எதிர்க்கட்சி முன் அனுமதியோடு வாசிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முன் அனுமதி என்றாலே முன்பே அனுமதி பெறுவது என்று பொருள். நீங்கள் வந்தவுடனே முன் அனுமதி என்று கூறுவது சரியல்ல. முன்பே நீங்கள் நான் கூறியதை மீறி ப்படித்திருக்கிறீர்கள். தொடர்ந்து இதைச் செய்வது முறையாக இருக்காது. செய்தியாக வேண்டு மானால் நீங்கள் நேரிடையாகச் சொல்லலாம்.

டாக்டர் பெ. வீரபாண்டியன் : விலைவாசி ஏற்றத்திற்குக் காரணம் என்ன? பணப்புழக்கம்தான் காரணம். பணப்புழக் கம் எதனால் ஏற்பட்டது?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவர்.

*திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, நீங்கள் ஒரு முறைக்கு இரண்டு முறை சுட்டிக்காட்டியதற்குப் பிறகும் ஏதாவது படிக்க வேண்டுமென்று சொன்னால் உங்களுடைய அனுமதியைப் பெற்றுத்தான் படிக்க



[டாக்டர் பெ. வீரபாண்டியன்]

வேண்டும் அல்லது நீங்கள் குறிப்பிட்டதைப் போல அவர் அதன் சாரத்தைச் சொல்லலாம். அப்படிப் பேசியிருக்கிறார் என்று சொல்லலாமே தவிர, படிக்கக் கூடாது. மீண்டும் படித்துக் கொண்டிருக்கிறார். எனவே, அது தவறு என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் வீரபாண்டியன் அதைப்படிக்காமல், செய்தியின் சாரமாக வேண்டுமானால் தன்னுடைய உரையிலே கொண்டு வரலாம்.

டாக்டர் பெ. வீரபாண்டியன் : செய்தியின் சாரமாகத் தான் சொல்லுகிறேன். எனவே விலைவாசியின் ஏற்றத்திற்குக் காரணம் பணப்புழக்கம்தான் என்ற பொருள்பட, கூறியிருக்கி றார். ஏதோ என்னிடத்திலே உள்ள பச்சிலையை நான் கொண்டு தருகிறேன்—கனம் வெங்கட்ராமன் அவர்கள் சொன்ன படி அது முடியவில்லை என்றால் கட்டு மந்திர வைத்தியம் செய்தாவது நீங்கள் ஒரு கை பார்க்க வேண்டும் என்று பொருள் படச் சொல்லி, விலைவாசி ஏற்றத்தை நாங்கள் எவ்வளவு குறைக்க முடியுமோ அவ்வளவு முயற்சி செய்கிறோம் என்ற தோரணையில் நம்முடைய அறிஞர் அண்ணா அவர்கள் இங்கே ஆற்றிய உரையின் சுருக்கத்தை இங்கே தெரிவித்துக்கொள் கிறேன்.

அதுமட்டுமல்ல. மீண்டும் நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய நல்லாட்சியில்,

"தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு."

என்ற குறளுக்கு நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் பொழிப் புரையில் "வேளாண்மை" என்ற ஒரு வார்த்தைக்கு "உதவி", என்ற பொருள்பட எழுதி இருக்கின்றார்கள். எனவே, "தக்கார்க்கு உதவி" என்பது தகுந்தவர்களுக்கு உதவி கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தில்தான் அந்த வார்த்தை யைச் சொல்லி இருக்கிறார். நான் இந்த மாமன்றத்திலே, செங்கம் தொகுதி ஒரு "நெல்லைக் குழந்தை தொகுதி" என்றும், "நோஞ்சான் குழந்தை தொகுதி" என்றும் பல வாறு பேசி இருக்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது). காரணம் என்னவென்றால், அங்கு இருக்கும் நிலையே, எங்கள் தொகுதி யின் நிலையே அவ்வளவுதான். எனவே, செங்கம் தொகுதி சார்பில் எனக்குப் பேசுவதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படுத்திக்கொடுத்த இதய தெய்வத்திற்கு எங்கள் வாழ்நாள் முழுக்க கோயில்கட்டித் தான் கும்பிட வேண்டும்.

[1992 மார்ச் 11

[டாக்டர் பெ. வீரபாண்டியன்]

பிற்பகல் 1-05

செங்கம் தொகுதியில் குப்பநத்தம் அணைக்கு நிர்வாக ரீதி யாக சேங்ஷன் ஆகிவிட்டது. இப்போது அரசுக்கு வந்து இருக் கிறது. அன்புள்ளம் கொண்ட பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து அருள்கூர்ந்து குப்பநத்தம் அணைக்கட்டு அவசியம் எங்களுக்குக் கிடைக்க உத்திரவு கொடுத்தே தீர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த அன்புள்ளம் அதைக் கவனித்தே தீரும் என்ற எண்ணத்தில் நீங்கள் அதைத் தருவீர்கள் என்று நம்புகிறேன்.

அதோடு, பேப்பர் தொழிற்சாலை வேண்டி ஏற்கெனவே அதிகாரிகள் எனது தொகுதியில் பார்த்துவிட்டுச் சென்று இருக்கிறார்கள். அதையும் தயவுசெய்து செங்கத்திற்குக் கொடுத்துவிடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்மியந்தல் என்ற கிராமத்தில் ஒரு ரப்பர் தொழிற்சாலை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கு. சீனி வாசன்.

திரு. கு. சீனிவாசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,...

டாக்டர் பெ. வீரபாண்டியன் : முடித்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மற்றொரு உறுப்பினர் பேசினாலே நீங்கள் முடித்துவிட்டதாகப் பொருள்.

திரு. கு. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னைப் போன்ற சாதாரண தொண்ட னையும் சட்டமன்ற உறுப்பினராக்கி, பேச வாய்ப்பு அளித்த தமிழகத்தின் காவல் தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை வணங்குகின்றேன். 1992—93 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை, தமிழகத்தின் ஏழை எளிய மக்களின் நிலையினை உணர்ந்து, அவர்கள் வாழ்வு வளம் பெரும் அளவில் நல்ல பல திட்டங்களைக் கொண்டுள்ளது என்பதை யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது. நிதிநிலை தாராளமாக உள்ள சூழ்நிலையில் ஒரு திருப்திகரமான பட்ஜெட்டைச் சமர்ப்பிப்பது என்பது பெரிதல்ல. ஆனால், தமிழக அரசு எதிர்நோக்கி யுள்ள மோசமான நிதி நெருக்கடி உள்ள சூழ்நிலையில், இப்படி சமுதாயத்தில் உள்ள ஒட்டுமொத்த மக்களின் நல்வாழ்வைப் பாதுகாக்கின்ற வகையில் ஒரு நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்



1992 மார்ச் 11]

[திரு. கு. சீனிவாசன்]

பிப்பது என்பது, ''பாலைவனத்தில் ஒரு பசுஞ்சோலையை உருவாக்கித் தருவதற்கு ஒப்பாகும்'' என்றால் மிகையாகாது. மேலும், இந்த நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் தனது திரண்ட அனு பவத்தாலும், முதிர்ந்த அறிவாற்றலாலும், காவல் தெய்வம், தமிழக முதல்வர் அவர்கள் மக்கள்பால் கொண்டுள்ள அன்பிற்கு அடைக்கலம் தருகின்ற வகையிலேயும், தமிழக முதல்வர் அவர் களின் எண்ணங்களை எழுத்தோவியமாக ஆக்கி, முதல்வர் அவர்களின் உணர்வுகளுக்கு உயிரோட்டம் கொடுத்து, சிந்தனை யைச் செயல்வடிவமாக்கி, உள்ளக்கிடக்கையை உலகிற்கு உணர்த்துகின்ற வகையிலேயும் பரணிபாடி இருக்கும் நிதி அமைச் சர் அவர்களை மனமாரப் பாராட்டுகிறேன்.

தமிழுக்கும், தமிழனுக்கும் பெருமை சேர்க்கின்ற வகையில் ஆட்சி புரிந்துவரும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் கட்டுப்பாடே இல்லாமல் விவசாயத்திற்குத் தண்ணீர் கிடைத்துள்ளது என்பதை மிகுந்த நன்றியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

புதியதாக ஏற்படுத்தப்பட்டுள்ள தமிழ்நாடு தொழில் அடிப் படை வசதிகள் மேம்பாட்டுக் கழகம் எங்கள் நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தில் புதிய தொழில்களை நிறுவுவதற்குத் திட்ட மிட்டு இருப்பதை நன்றியுடன் வரவேற்று எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

வேளாண்மையில் இந்த அரசு தனிக் கவனம் செலுத்தி இருப்பது எங்கள் சோழநாட்டு மக்களுக்கு மிகுந்த மகிழ்ச்சி யைத் தரும் விஷயம் ஆகும் என்பதை நன்றியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். வேளாண்மைத் தொழிலில் மகளிருக்கும் பயிற்சி அளிக்கும் திட்டம் 6 இடங்களில் தொடங்க தமிழக அரசு திட்டமிட்டுள்ளது. அந்தத் திட்டத்தைத் தொடங்க எங்கள் மாவட்டத்திலும் ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து, குறிப்பாக மன்னார்குடியில் விவசாய மகளிருக்குப் பயிற்சி அளிக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாகை-காயிதே மில்லத் மாவட்டத்திலுள்ள ஏரிகள், குளங் களை ஆழப்படுத்துவதற்கு ஐரோப்பிய சமுதாய பொருளாதாரத் திட்டத்தைப் பயன்படுத்தி, அங்குள்ள நீர்த்தேக்கங்களை நல்ல முறையில் பராமரிக்க வேண்டும்; விவசாயத்திற்குப் பயன் படும் வகையில் ஏரி குளங்களைச் சீரமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–10

நீதித்துறையைப் பொறுத்தவரையில் இன்றைய தினம் குற்றவியல் நீதிமன்றங்களில் பணிபுரிகின்ற நீதிபதிகள் சென்னைக்கு அலுவல் காரணமாக வருகிறபோது பொதுவாக எல்லோருடனும் சேர்ந்து அவர்கள் ஓட்டல்களில் தங்குகிற நிலை இருக்கிறது. இதனை மாற்றிட அவர்களுக்கு கெஸ்ட் ஹவுஸ் விடுதிகளைக் கட்டி வசதிசெய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல நீதித் துறையைப் பொறுத்தவரையில் இன்றைய தினம் ஒவ்வொரு நீதிமன்றம் இருக்கும் இடங்களில் அங்கேயிருக்கிற நீதிபதிகள் தங்குவதற்கு வசதியாக குவார்ட்டர்ஸ் இல்லாத காரணத்தால் நீதிபதிகள் அங்கே பணிபுரிய வர மறுக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையை மாற்றுவதற்கு நீதிமன்றங்கள் இருக்கிற அனைத்து இடங்களிலும் அவர்களுக்கு வீடுகளைக் கட்டித் தந்து வீட்டுவசதியை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் மன்னார்குடியில் ஒரு சப்-கோர்ட் ஏற்படுத்தித் தந்து அங்கேயிருக்கிற மக்களுக்கு அந்த நீதிமன்றம் மூலம் நீதி கிடைக்க வாய்ப்பு ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதை ஏன் சொல்கிறேன் என்றால் நாகை-காயிதே மில்லத் மாவட்டம் தஞ்சை மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டவுடன் இன்றைய தினம் மன்னார்குடி பகுதி என்பது நாகையிலிருந்து மேற்கு கோடியில் அமைந்திருக்கிறது. தஞ்சை மாவட்டத்திலிருந்து 3 சப்-கோர்ட்டுகள் இருக்கின்றன. நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மயிலாடுதுறையில் ஒரு சப்-கோர்ட்டும், நாகப்பட்டினத்தில் ஒரு சப்-கோர்ட்டும் இருக்கின்றன. அடுத்தபடியாக மூன்றாவதாக அமையவிருக்கிற சப்-கோர்ட் மன்னார்குடியில் அமையவேண்டுமென்ற என்னுடைய கோரிக்கையை வைக்க விரும்புகிறேன்.

சாலைகள் சீரமைக்கும் பணிகளைப் பொறுத்தவரையில் நாகை—காயிதே மில்லத் மாவட்டத்தில் சென்ற ஆண்டில் ஏற்பட்ட பெருமழை, வெள்ளத்தால் மன்னார்குடி பகுதி மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. சாலைகளை நெடுஞ்சாலைத் துறை செப்பனிடுகிற பணிகளுக்கு இந்த ஆண்டு ஒதுக்கியிருக்கிற தொகையோடு கூடுதலாக அந்தப் பகுதிக்கு ஒரு கோடி ரூபாய் ஒதுக்கித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உள்ளிக்கோட்டை, பாலையூர் போன்ற அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக மாற்ற அரசு நிர்ணயித்த ஒரு இலட்சம் ரூபாய் கட்டி கிட்டத்தட்ட மூன்றாண்டுகளுக்கு மேலாகியும் இதுவரை மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றப்படவில்லை. அந்த இரண்டு பள்ளிகளையும் மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



5,000 நபர்கள் வாழ்கிற ஒரு ஊருக்கு ஒரு நூல் நிலையம் என்ற அடிப்படையில் உள்ளிக்கோட்டை கிராமத்திற்கு ஒரு நூல் நிலையம் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அருள்மிகு இராஜகோபாலசாமி கலைக் கல்லூரியில் முதுகலைப் பட்டப் படிப்பு வசதியும், கட்டட வசதியும் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கீழப்பாலம், தென்கரைப் பாலம், குமாரநல்லூர் பாலம் போன்ற பாலங்களை வருகிற ஆண்டில் சேர்த்து கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மன்னார்குடியில் அரசினர் மகளிர் உயர்நிலைப் பள்ளி மரத்தடியில் நடந்து வருகிறது. கிட்டத்தட்ட ஐந்தாண்டுக் காலமாக கட்டட வசதி இல்லாமல் அப்பள்ளி இருக்கிறது. மகளிர் உயர்நிலைப் பள்ளிக்கு கட்டட வசதி இல்லையென்ற நிலையைப் போக்கி கட்டட வசதி செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சமீபத்தில் பத்திரிகைகளில் படித்து இருப்பீர்கள். மன்னார்குடி இராஜகோபாலசாமி கோவிலில் கிட்டத்தட்ட ஐந்து இலட்ச ரூபாய் மதிப்புள்ள நகைகள் பட்டப்பகலில் திருட்டுப்போய்விட்டன. அந்த நகைகளை இன்னும் கண்டுபிடிக்க முடியவில்லை. அதற்குத் தனியாக போலீஸ் படையை அமைத்து அந்த நகைகளைக் கண்டுபிடிக்க வேண்டும். மன்னார்குடி நகரத்திற்கு குற்றப்பிரிவு ஆய்வாளர் ஒருவரை நியமித்து, அங்கே குற்றங்களைக் களைந்தெறிய வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. எம். சுந்தரசாமி.

திரு. எம். சுந்தரசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1992-93 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் நல்ல பல திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இது ஏழையெளிய மக்களுக்கும், தாய்மார்களுக்கும் உதவுகிற நிதிநிலை அறிக்கையாகும். நிதிநிலை பற்றாக்குறை இருந்தாலும் சிலபல திட்டங்களுக்கு கூடுதல் நிதியொதுக்கீடு செய்துள்ளது பாராட்டுக்குரியது. காவல் படைக்கு ரூ. 267.31 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ரூ. 80.45 கோடியில் காவல் படையை நவீனப்படுத்தும் விரிவான திட்டம் தீட்டப்பட்டுள்ளது. ஆயிரம் குடியிருப்புகள் கட்டுவதை வரவேற்கிறேன். என்னுடைய

[திரு. எம். சுந்தரசாமி]

தொகுதியில் மங்கலம், கலசப்பாக்கம், ஜமுனாமருதூர் ஆகிய இடங்களில் காவல் நிலையங்கள் வாடகைக் கட்டிடத்தில் இருக்கின்றன.

அவைகளுக்குக்கட்டிடங்கள் கட்டித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன். காவலர்களுக்கும் குடியிருப்புகள் கட்டித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன். ஜமுனாமருதூர் காவல் நிலையத்திற்கு ஒரு ஜீப் வழங்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 1–15

வேளாண்மை, அதைச் சார்ந்த பணிகளுக்கான ஒதுக்கீடு 215.75 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. 300.29 கோடி ரூபாய் செலவில் தரமான விதைகள் உற்பத்தி செய்யவும், விரிவாக்கப் பணிகளை முறையாக மேற்கொள்ளும் பணி பாராட்டத்தக்கது.

டானிடா நிதி உதவியுடன் கூடிய வேளாண்மைத் தொழிலில் மகளிருக்குப் பயிற்சி அளிக்கும் திட்டத்தை, திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்திலும் தொடங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

புதிய ரக காகிதக் கூழ் மரங்களை வளர்க்கும் திட்டத்தில், ஜமுனாமருதூர் பகுதியைச் சேர்க்கும்படியும் கேட்டுக் கொள்கிறேன்.

சத்துணவுத் திட்டத்தில் ஈடுபட்டுள்ள பகுதி நேரப் பணியாளர்களுக்குச் சம்பள உயர்வு அளிக்கப்பட்டுள்ளது. நிதிநிலை சரியாகும்போது, இன்னும் சற்றுக் கூடுதலாக உயர்வு அளிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

என் தொகுதியில், சானாரப்பாளையம், நார்த்தாம்பூண்டி, மங்கலம், மேல ஆரணி ஆகிய இடங்களில் உள்ள மேல்நிலைப் பள்ளிகளில் குழந்தைகள் மரத்தடியில் அமர்ந்து படிக்கின்றார்கள். அங்கெல்லாம் புதிய கட்டிடங்களைக் கட்டித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

காப்பலூர் ஊராட்சியைச் சேர்ந்த கொல்லைகொட்டா, மேல ஆரணி ஊராட்சியைச் சேர்ந்த தாங்கல், காடம்பாளையம் ஊராட்சியைச் சேர்ந்த நேரு நகர் ஆகிய இடங்களில் ஓராசிரியர் பள்ளிகளை ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் சித்தர்கள் வாழ்ந்த பர்வத மலை என்ற சஞ்சீவி பர்வதம் உள்ளது. அதன் உச்சியில் சிவன் ஆலயம் உள்ளது. அதன் அருள்பெற, தமிழகத்தில் உள்ள எல்லாப் பகுதிகளிலிருந்தும் மக்கள் வருகிறார்கள். அதற்கு பாதை அமைத்துத் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.



[திரு. எம். சுந்தரசாமி]

அதேபோல், எலத்தூர், மோட்டூர் நட்சத்திரக் கோயில் தேர் பழுது அடைந்து சுமார் 10 ஆண்டுக் காலமாக ஓடாமல் உள்ளது. அதற்கு நிதி ஒதுக்கி, தேரை ஓடச் செய்யும்படி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை மிகவும் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் உள்ள கலசப்பாக்கம், ஆதமங்கலம், மேல ஆரணி, பாடகம் ஆகிய ஊர்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கட்டிடங்கள் கட்டித் தருமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

ஜமுனா மருதூரில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்க் பெண் டாக்டர் ஒருவரை நியமனம் செய்யும்படி கேட்டுகு கொள்கிறேன்.

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தற்போது வட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறுகின்றது. அதற்குத் தனியாகக் கட்டிடம் கட்டித் தருமாறு மிகவும் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

போளூர் தொகுதி, கலசப்பாக்கம் தொகுதி மக்கள் ஏறத்தாழ பல ஆண்டுக்காலமாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற சர்க்கரை ஆலை ஒன்றை, போளூரில் அமைத்துக் கொடுத்து, அங்குள்ள மக்களுக்கு வேலை வாய்ப்புத் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

பலாசூர், பாடகம், கலசப்பாக்கம், கரையாம்பாடி ஆகிய ஊர்களில் ஓடுகின்ற செய்யாற்றின் குறுக்கே பாலம் கட்டுகின்ற திட்டம் ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது. அதையும் கட்டித் தரும்படி கேட்டுக் கொண்டு, பேரவைத் துணைத் தலைவருக்கு நன்றி கூறி அமர்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: டாக்டர் வெ. புருஷோத்தமன்.

டாக்டர் வெ. புருஷோத்தமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'எப்போதும் விழிப்புடன் இருக்க வேண்டும், தெளிந்த அறிவைப் பெற்றிருக்க வேண்டும், துணிந்து செயல்பட வேண்டும்' என்ற வள்ளுவர் வாக்கின்படி, நம்முடைய இதய தெய்வம், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் தயாரிக்கப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கையை அனைவரும் மனந் திறந்து பாராட்டுகிறார்கள். இங்கே அமர்ந்திருக்கிற மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் கூட பாராட்டுறார்கள்.

[டாக்டர் வெ. புருஷோத்தமன்]

1,220 கோடி ரூபாய் நிதிப் பற்றாக்குறை இருந்தும், இந்த கடினமான கால கட்டத்தில், கடந்த ஆண்டைவிட, இந்த ஆண்டு 500 கோடி ரூபாய் துண்டு விழுகின்ற ஒரு சிக்கன பட்ஜெட்டை அறிவித்திருப்பது பாராட்டுக்குரியதாகும்.

உலகத்தில் உள்ள அனைத்து நிதி ஆதாரங்களைப் பெறு வதில் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அரும்பாடுபட்டு, கடன் வாங்கியாவது, தமிழக மக்களைக் காப்பாற்றுவேன் என்று உலக வங்கியை அணுகி இருக்கிறார்கள். ஆசிய வளர்ச்சி வங்கியை அணுகியிருக்கிறார்கள். இந்தியாவிலுள்ள அனைத்து வங்கிகளிலிருந்தும் கடன் வாங்கி தமிழக மக்களுக்குப் பல்வேறு நலத் திட்டங்களைக் கொண்டு வந்துள்ளது பாராட்டுக்குரியது. மற்றும் சிறு சேமிப்புத் திட்டத்தை ஊக்குவித்து அதன்மூலம் மத்திய அமைச்சகத்திலிருந்து நிதியைப் பெற வேண்டிய ஒரு மாற்றுத் திட்டத்தை சிறப்புறப் பெற்றிருக்கிறார்கள். இப்படிப் பட்ட பட்ஜெட்டை தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் வரவேற்று பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1–20

காவல்துறையை நவீனப்படுத்த மத்திய அரசு உடனடியாக எஞ்சியுள்ள ரூ. 30 கோடியை வழங்கினால், காவல் துறையில் பல்வேறு நலத் திட்டங்களைக் கொண்டு வர முடியும். பெண் ணாகரம் தொகுதியில், ஏரியூரில் உள்ள காவல் நிலையத்திற்கு நிரந்தரக் கட்டிடமும், காவலர் குடியிருப்பும் உடனடியாகக் கட்டித்தர மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள் கிறேன். ஏனென்றால், கடந்த ஆறு மாதங்களாக எந்த் ஒரு சப்-இன்ஸ்பெக்டரும் இங்கு வந்து பணியாற்ற முடியாத சூழ் நிலை உள்ளது. ஆகவே தற்போது இந்த ஏரியூர் காவல் நிலை யத்திற்குக் கட்டிடம் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இண்டூரில் ஒரு புறக்காவல் நிலையம் வேண்டு மென்ற கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் எங்களுக்கு அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட் டுக்கொள்கிறேன்.

அடுத்து, மாவட்டங்களுக்கிடையே ஆன லெவி முறையை நீக்கி யதால் நல்ல விளைச்சல் ஏற்பட்டிருக்கின்ற காரணத்தால் விலைவாசிகள் குறைய வாய்ப்பு உள்ளது. 2.2 இலட்சம் ஏக் கரில் மானாவாரி நிலங்கள் நீர் வரத்து சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டு, உற்பத்தியைப் பெருக்குவதற்கு வழிவகை செய்யப் பட்டுள்ளது.



[டாக்டர் வெ. புருஷோத்தமன்]

ஒரு இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பிற்கு உறுதி செய்யப் பட்டுள்ளது. காடு வளர்ப்பு, விறகு மரங்கள் வளர்ப்பு, சந்தன மரக் கடத்தலை கட்டுப்படுத்துதல் போன்ற விரிவான திட்டங் களுக்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ரூபாய் 1,200 கோடி செலவிலே உலக வங்கி உதவியோடு விரிவான பள்ளிக் கல்வி திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. ஓராசிரியர் பள்ளிகள் அனைத்திலுமே இரண்டு ஆசிரியர்கள் நியமிக்கப்படு வார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மாநில கல்வி சாரா கல்வித் திட்டம் புதியதாக ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. 5,000 மக்களுக்கு மேல் உள்ள கிராமங்களுக்கு நூலகம் ஏற்படுத்து கின்ற ஒரு திட்டம் தீட்டப்பட்டிருப்பது வரவேற்கப்படுகிறது.

அடுத்தபடியாக, மாண்புமிகு புரட்சித் தலைவி மருத்துவ நலத் திட்டம் நல்லபடியாக செயல்பட்டு 3,000 முகாம்கள் இதுவரை நடத்தப்பட்டிருக்கிறது. உலக வங்கி ஆதரவு பெற்று பல்வேறு நலத்திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. அரசு அனுமதி வழங்கப் பட்டு பல மாதங்கள் ஆகியும் காலதாமதத்துடன் பெண்ணாகரம் தாலுக்கா தலைமை மருத்துவமனையை உடனடியாக ஆரம்பிக்க வும், புதிய கட்டிடங்களைக் கட்டவும், அரசு ஆவன செய்ய வேண்டும். தற்போது பெண்ணாகரத்திலே இயங்கி வரும் தேர்வு நிலை ஆரம்ப சுகாதார நிலையத்தை எனது பகுதியான ஏரியூருக்கு கொண்டுவர அரசு முன்வரவேண்டும். அதற்கான ஆய்வு மேற் கொள்ள ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, குடிநீர் வழங்கும் திட்டம். ஆண்டு பூராவும் தர்மபுரி மாவட்டம் வறட்சியும், குடிநீர்ப் பஞ்சமும் காலம் காலமாக இருந்துவரும் நிலையை மாற்ற, தற்போது ஒகனேக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம் ரூபாய் 250 கோடி செலவிலே ஆய்வு செய்வதாக அறிவிக்கப்பட்டுள்ளதை மனதார நாங்கள் வர வேற்கிறோம். அதற்காகப் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். அதே நேரத்திலே இந்தத் திட்டத்திற்கு செயல்வடிவம் கொடுக்குமுன் பெண்ணாகரத்தி லிருந்து நாகமலை மற்றும் வத்தல்பட்டி வரை குடிநீர் குழாய் திட்டத்தையும், பெண்ணாகரத்திலிருந்து பெரும்பாலை வரை குடிநீர் குழாய் திட்டத்தையும் வரைபடத்தில் சேர்த்து, திட்ட மதிப்பீட்டில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கால்வாய் திட்டத்திலே பஞ்சப்பள்ளி கால்வாய்த் திட்டத்தை உடன் ஆய்வு செய்து நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதன் மூலம் 20 பெரிய ஏரிகள் நீராதாரம் பெற்று, அதன் மூலமாக 200 கிராமங்கள் பயனடைகின்ற நிலை உள்ளது. ஆகவே, அரசு இதை உடனடியாக பரிசீலிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சாலைப் போக்குவரத்திலே முன்னுரிமை அடிப்படையிலே, 100 கிலோமீட்டர் தூரத்திற்காவது குறைந்தபட்ச தேவை அடிப்படையிலே அங்கு தார்ச் சாலைகளை அமைத்து, இந்தத் தொகுதிக்குக் கொடுக்க வேண்டும். ஏனென்றால் சாலைகளே அதிகம் இல்லாத தொகுதி இது.

தொழில் வளர்ச்சியிலே தொழிற்சாலைகள் என்பது மருந்துக்குக்கூட, ஒன்று கூட இல்லாத தொகுதி இது. குறைந்தபட்சம் ஒரு சிறிய தொழில் மையத்தையாவது அல்லது காதி கிராம கதர் தொழில் மையத்தையாவது அரசு ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தனியார் துறையிலே யாராவது பெரும் தொழிலதிபர்கள் உடன் பெண்ணாகரத்தில் தொழில் தொடங்க ஊக்கப்படுத்தவேண்டும். ஏனென்றால் பெண்ணாகரம் தமிழ்நாட்டிலேயே மிகவும் பின்தங்கிய தொகுதி என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அரசு இதில் கவனம் செலுத்த வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களை பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆண்டு பூராவும் குறைவு அழுத்த மின்சாரம் கிடைக்கக் கூடிய நிலைமை என் தொகுதியில் உள்ளது. அதனால் பம்புசெட்டுகள், காயில் ஒயரிங் எரிந்து ரிப்பேர் ஆகிவிடுகிறது. பல்புகள் ஃப்யூஸ் ஆகிவிடுகிறது. பல்புகள் வாங்கக் கூட முடியாத நிலை மக்களிடம் காணப்படுகிறது. ஆகவே ஏற்கெனவே ஆய்வு செய்யப்பட்ட செல்லமுடி 11 கே. வி. துணை மின் நிலையத்தை ஏற்படுத்தினால் மிகவும் பயனுள்ளதாக இருக்கு மென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனக்குப் பேச வாய்ப்பு கொடுத்த பேரவைத் துணைத் தலைவருக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.



பிற்பகல் 1-25

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. சி. சுவாமிநாதன்.

*திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1992-93 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின் விவாதத்திலே கலந்து கொள்வதற்கு நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். 1992-93 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையைப் பொறுத்த வரையில் ஆளுகின்ற மாண்புமிகு புரட்சித் தலைவியார் அவர்களுடைய அரசு மிகுந்த எச்சரிக்கையோடும் நிதானத்தோடும், இருக்கிற பொருளாதாரத்தை வைத்து எப்படிச் சிறப்பாக அமைக்க முடியும் என்ற உள்ளத்தோடு மிகத் தெளிவாக இந்த ஆண்டு அறிக்கையைத் தயாரித்திருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். குறிப்பாக சுகாதாரத்தைப் பொறுத்தவரையில் தொடக்க சுகாதார நிலையத்திற்கு 40 ஆயிரம் ரூபாய் என்று அளித்து வந்ததை 50 ஆயிரம் ரூபாய் என உயர்த்தி இருப்பது, கிராமப்புறங்களிலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற சாதாரண ஏழை எளிய மக்களுக்கு மருத்துவ வசதி அளிப்பதற்கு, மருந்துகள் கிடைப்பதற்கு மிகப் பொருத்தமான ஒரு சூழ்நிலையாக அது அமையும் என்பதனைக் குறித்து நான் வரவேற்கிறேன்.

அதே சமயம், இன்றைக்கு மாவட்ட மருத்துவமனைகளில் மிக முக்கியமான ஆப்பரேஷன்கள் நடைபெறுகின்றபொழுதும், மிகப் பெரிய மருத்துவச் சிகிச்சைகள் நடைபெறுகின்றபொழுதும் அங்கே மின்சாரக் கோளாறு காரணமாக தடை ஏற்படுகின்றபோது அந்த அறுவை சிகிச்சை செய்யும் டாக்டர்கள் அல்லல் படுகின்ற ஒரு சூழ்நிலை ஒவ்வொரு மாவட்ட மருத்துவமனையிலும் இருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, இந்த மாநிலத்தின் தலைநகரமாக இருக்கக்கூடிய சென்னை மாநகரத்தில் உள்ள உயர்நீதிமன்றத்திற்கு ஒரு சாட்சி சொல்வதற்காக நான் சென்றிருந்தேன். அங்கேயும் முக்கால் மணி நேரம் திடீரென்று மின் தடை ஏற்பட்டபோது அங்கே இருந்த வழக்கறிஞர்கள் மிகவும் அல்லல்பட்டு, அங்கேயிருந்த நீதிபதியிடம் கேட்கிறார்கள். இப்படி இந்த மாநிலத்தினுடைய தலைநகரமாக இருக்கக் கூடிய, நீதி சொல்லக் கூடிய அந்த இடத்திலேயே இப்படி மின் தடை ஏற்படுகின்றபோது, இதை சமாளிக்கும் விதத்தில் தானியங்கி ஜெனரேட்டர்கள் அமைப்பதற்கு ஏன் நீதிபதி அவர்கள் உதவக் கூடாது என்று பல்வேறு கோணங்களிலே அவர்கள் கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

[திரு. சி. சுவாமிநாதன்]

அப்போது அந்த நீதிபதி அவர்களும் சொன்னார்கள், இந்த
நாடு மிகப் பெரிய நாடு, இங்கே மிகப் பெரிய பொருளாதாரச்
சிக்கல்கள் இருக்கின்றன, இருந்தாலும் இப்படிப்பட்ட அத்தியா
வசியமான இடங்களில் அவசியம் அதை ஏற்படுத்துவதற்கு நான்
உரிய நடவடிக்கையை எடுக்கிறேன், என்று.
ஆகவே அது போன்ற உயர்நீதி மன்றங்களுக்கும், மாவட்டத்தலை
நகரங்களில் இருக்கக் கூடிய தலைமை மருத்துவமனைகளுக்கும்,
தானியங்கி ஜெனரேட்டர்களை, மின்சாரம் அணைந்த உடன்
தானாகவே இயங்கக் கூடிய ஜெனரேட்டர்களை அமைத்தால்
அது இந்த அரசுக்கு ஒரு மிகப் பெரிய சிறப்பினை ஏற்படுத்தும்
என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல்,மின்சாரத்தைப் பொறுத்த வரையில் இந்த அரசு
மிக எச்சரிக்கையோடும், நிதானத்தோடும், நீண்டதொரு பார்வை
யோடும் இந்த நாட்டின் தொழில்வளத்தை பெருக்குவதற்காகவும்,
இந்த நாட்டின் விவசாயப்பெருங்குடி மக்களின் வாழ்வு வளம்
பெறுவதற்காகவும், பல மின் திட்டங்களை, மின்சாரத்திட்டங்
களைக் கொண்டுவந்து இங்கே நிறைவேற்றுவதாக அறிவித்திருக்கி
றார்கள். ஜெயங்கொண்ட சோழபுரத்தைப் பொறுத்தவரையில்
அங்கே இருக்கின்ற பழுப்பு நிலக்கரியை பயன்படுத்த ஏறக்
குறைய 1,500 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கும்
அதேபோல, கூடங்குளம் மின்சார திட்டம் என்பது ரஷ்யப்
பேரரசின் உதவியோடு செயல்பட இருந்தாலும், அதை தற்
போது நிறுத்தி வைத்திருப்பதாக அறிவித்திருக்கிறார்கள். அந்த
முயற்சியை கைவிடாத அளவுக்கு தொடர்ந்து மைய அரசோடு
நீங்கள் போராடி, எஞ்சினியர்களின் உதவிகளையோ அல்லது
தொழில் நுட்ப வல்லுநர்களின் உதவிகளையோ வேறு நாடுகளி
லிருந்து பெற்றாவது கூடங்குளம் அணுமின் நிலையத்தை
தொடர்ந்து நிறைவேற்றுவதற்குப் பாடுபடுவீர்களேயானால்,
நிச்சயமாக தமிழகம் மின்சாரத்தைப் பொறுத்த வரையில்
தன்னிறைவு பெற்று இந்த நாடு பலமுள்ள நாடாக, சிறப்புடைய
நாடாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதேபோல தொழில் துறையைப் பொறுத்த வரையில் இன்
றைக்கு நம்முடைய அரசு பல்வேறு நல்ல திட்டங்களை அறிவித்
திருந்தாலும், வட்டி சலுகைகளைக் கொடுத்திருந்தாலும்.
(மணியடிக்கப்பெற்றது).

பிற்பகல் 1-30.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதி
யோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.



திரு. சி. சுவாமிநாதன் : ....சேல்ஸ் டாக்ஸ் போன்ற பல
சலுகைகளைக் கொடுத்தாலும், இப்போது மத்திய அரசு ஏற்
படுத்தியிருந்த கிரடிட் ஸ்கூயீஸ் சிஸ்டத்தின் மூலமாக கடந்த
$1\frac{1}{2}$ ஆண்டுக் காலமாக தொழில் தொடங்கியவர்கள் ஆலையை
பூர்த்தி செய்துவிட்டு ரன்னிங் கேப்பிடலுக்காக $1\frac{1}{2}$ ஆண்டுக்
காலம் காத்திருந்தார்கள். இன்னும் அந்த ஆலையை இயக்கு
வதற்கு ஆலைச் சொந்தக்காரர்களுக்கு கடன் கொடுக்க
வில்லை. ரன்னிங் கேப்பிடல் கிடைக்கவில்லை. இந்த இடைப்
பட்ட $1\frac{1}{2}$ ஆண்டுக் காலத்தில் அவர்கள் வீணான வட்டியைச்
சுமக்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டு இன்றைக்கு டி.ஐ.சி.,
டிட்கோ போன்ற நிறுவனங்களின் மூலம் பல ஆலைகளை ஏலத்
திற்கு விடுகின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே புரட்சித்
தலைவியாரின் ஆட்சியில் அந்த $1\frac{1}{2}$ ஆண்டுக் காலத்திற்கான
வட்டியைத் தள்ளுபடி செய்து இதற்குமேல் எப்போது ஆலை
ஓடுகின்றதோ அதிலிருந்து அந்த வட்டியை வசூல் செய்வதற்குரிய
நல்ல நடவடிக்கையை எடுத்தால் தொழில் தமிழகத்தில் மேலும்
மேலும் வளரும் என்பதனை இந்தத் தருணத்தில் நான் சொல்லக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

சாலைப் போக்குவரத்தை பொறுத்தவரையில், நம்முடைய
மரியாதைக்குரிய முதல்வர் அவர்கள் தேர்தல் காலத்திலே ஏறத்
தாழ 12,000 கிலோமீட்டர் தமிழகத்திலே சுற்றுப்பயணம்
செய்ததினுடைய விளைவாகத் தனிக் கவனம் செலுத்தி, சென்ற
ஆண்டிலும் 12 கோடி ரூபாயை சிறப்பு நிதியாக ஒதுக்கி அதைச்
செப்பனிட்டுப் பார்த்தார்கள். இந்த ஆண்டும் அதற்காக பல
நூற்றுக்கணக்கான கோடி ரூபாயைச் சிறப்பு நிதியாக ஒதுக்கி
சாலை பராமரிப்புக்கும், புதிய சாலைகள் அமைப்பதற்கும்,
கிராமப்புற சாலைகளை மேம்பாடு செய்வதற்கும் நல்ல வழி
வகுத்துக் கொடுத்திருக்கிறார்கள். அதையும் நான் மனமாரப்
பாராட்டுகிறேன்.

பெண் குழந்தைகளைப் பொறுத்தவரையில், பெண் குழந்தை
கள் தானே என்று சில பெற்றோர்கள் பாராமுகமாக இருந்து
விடுவார்களோ என்கிற எண்ணத்தைப் போக்குகின்ற வகையில்
இன்றைக்கு ஒரு பெண் குழந்தைக்கு 20,000 ரூபாயை அவர்கள்
20-ஆவது வயதடைகின்றபோது ஒதுக்கி ஏறத்தாழ 20,000
குடும்பங்களுக்கு அந்த நல்வாழ்வுத் திட்டத்தை அறிவித்திருப்
பதைப் பெண்கள் இன்றைக்கு நல்ல முறையில் வரவேற்றுக்கொண்
டிருக்கிறார்கள்.

அதேபோல, மீனளத்தைப் பொறுத்தவரையில்,2,500 ஏக்கரில்
உவர் நீரில் இரால் மீன் வளர்க்கும் திட்டத்தை அறிமுகப்
படுத்தி இந்த நாட்டின் ஏற்றுமதிக்கு ஒரு வழிவகை செய்து
இருக்கிறீர்கள். மாவட்ட அளவைப் பொறுத்தவரையில் திட்டங்
கள் தீட்டுகின்றபோது நாம் இன்றைக்கு அதில் சற்று எச்சரிக்கை
யாக இருக்க வேண்டும் என்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்

[திரு. சி. சுவாமிநாதன்]

கிறேன். காரணம் கிராம அளவில், வட்டார அளவில், மாவட்ட அளவில், அதே போல மாநில அளவில், தேசிய அளவில் திட்டங்கள் வகுக்கப்பட்டால்தான், இந்தத் திட்டங்கள், அரசு எண்ணுகின்ற காரியங்கள், எண்ணுகின்ற எண்ண உணர்வுகள் குறிப்பிட்ட இடங்களுக்குச் சென்றடையும். மாநிலத்தில் இருந்து கொண்டு ஒரு கிராமத்திற்கு நாம் திட்டம் தீட்டுவோமேயானால், அந்தத் திட்டம் நிச்சயமாக அவர்களுக்குப் போய்ச் சேர்வதில்லை.

உதாரணமாக, நான் ஒன்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்போது ஆதிதிராவிட மக்களுக்காக கிணறு வெட்டுகின்ற திட்டத்தை அறிமுகம் செய்திருக்கிறார்கள். எங்கள் புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அங்கே ஓப்பன் வெல் என்று சொல்லக் கூடிய திறந்தவெளிக் கிணற்றுக்கு எந்தவிதமான வாய்ப்புமே இல்லை. அங்கே பல நூற்றுக்கணக்கான கிணறுகளை இன்னும் வெட்டிக் கொண்டிருக்கிறார்கள். பல கோடிக்கணக்கான ரூபாய் அதன்மூலம் விரயமாக்கப்படுகிறது. எங்களுடைய புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அங்கே நூறு அடிக்கு கீழே நிலத்தடி நீர் சென்றுவிட்ட காரணத்தினால் அங்கே விவசாயிகள் பயன்படக்கூடிய அளவிற்கு ஆழ்குழாய்க் கிணறுகள் தான் அமைக்க முடியுமே தவிர, திறந்த வெளிக் கிணறுகள் என்பது நிச்சயமாக எந்தச் சூழ்நிலையிலும் ஒத்துவராது என்ற ஒரு நிலை இருக்கின்றபோது, மாவட்ட அளவில் திட்டம் தீட்டுவார்களேயானால், அதனை யிருக்கின்ற உண்மை நிலைகளைப் புரிந்துகொண்டு, அங்கே உண்மை நிலைமைக்கு ஏற்ப அங்கேயிருக்கின்ற நீர் வளம், நிலவளம், கனிவளத்தைப் பயன்படுத்துகின்ற நல்ல சூழ்நிலை உருவாகும். மாநில அளவில் திட்டம் தீட்டுகின்றபோது ஒரு கிராமத்திலே இருக்கின்ற ஒரு நிலத்தினுடையதன்மை இன்னொரு கிராமத்திலே இல்லை. ஒரு வட்டத்திலே இருக்கின்ற தன்மை இன்னொரு வட்டத்திலே கிடையாது. அந்த அளவிற்கு நிலத்தினுடைய தன்மை, நீர் வளத்தினுடைய தன்மை இடத்திற்கு இடம் மாறுபடுகின்ற ஒரு சூழ்நிலை இருக்கின்றபோது, திட்டமிடுகின்றபோது மாவட்ட அளவிலே இந்தத் திட்டங்களைத் தீட்டுவார்களேயானால் அவை சிறப்புடையதாக அமையும். நாம் நம்முடைய மக்களுக்குச் செய்கின்ற காரியங்கள் முழுமையாக உரியவர்களுக்குப் போய்ச் சேர்வதற்கு நல்ல சூழ்நிலை அமையும். எனவே திட்டமிடுகின்றபோது மரியாதைக்குரிய மறைந்த தலைவர் ராஜீவ் காந்தி அவர்கள் நல்லதொரு திட்டத்தை இந்த நாட்டிற்கு அறிமுகப்படுத்தியிருந்தார்கள். பஞ்சாயத்து ராஜ் திட்டம். அந்தத் திட்டத்தைப் போல இங்கே கிராம அளவில் ஒரு திட்டமிடவேண்டும். வட்டார அளவில் ஒரு திட்டத்யையிடவேண்டும். ஒன்றிய அளவில் திட்டமிடுகிற வேலைகளுக்கு ஒன்றிய அளவில் திட்டமிட வேண்டும்; மாவட்ட அளவில் திட்டமிடுகிற வேலைகளுக்கு மாவட்ட அளவில் திட்டமிட வேண்டும். ஆகவே, இந்தத் திட்டமிடுகிற முறையில் இந்த அரசு இங்கே கோடிட்டுக் காண்பித்து



[திரு. சி. சுவாமிநாதன்]

இருக்கிறார்கள். நாங்கள் மாவட்ட அளவில் திட்டமிடுவதற்கு உரிய வழிவகைகளைச் செய்யப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தத் திட்டம் வருமானால் நிச்சயமாக தமிழகத்தில் இருக்கிற அனைத்துக் குறைகளையும் போக்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க முடியும் என்பதைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-35

அதேபோல், விவசாயிகளைப் பொறுத்தவரையில் இன்றைக்கு நாம் உணவு உற்பத்தியைப் பெருக்குகின்ற திட்டத்திற்காக அனேகமாக பல திட்டங்களை அறிமுகம் செய்து இருந்தாலும் கூட அணைக்கட்டுத் திட்டங்கள், ஆழ் குழாய்க் கிணறு அமைக்கும் திட்டங்கள் போன்ற திட்டங்களுக்குச் சிறப்பு முன்னுரிமை கொடுக்கவில்லை என்பதுதான் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். காரணம் அன்றைக்கு 1967 ஆம் ஆண்டுக்கு முன்பு இந்த நாட்டில் ஏற்படுத்தப்பட்டிருக்கிற பல்வேறு அணைக்கட்டுத் திட்டங்கள்தான் இன்றைக்கும் தமிழ் நாட்டை வாழ வைத்துக் கொண்டிருக்கின்றன. அதற்குப் பின்னர் நாம் பல திட்டங்களை நிறைவேற்றியிருந்தாலும் கூட அது நாம் எண்ணுகிற அளவுக்கு, தமிழக விவசாயிகள் எண்ணுகிற அளவுக்கு உயர்ந்த அளவில் அந்தத் திட்டங்களின் பலனைப் பெறவில்லை என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

உதாரணமாக, புதுக்கோட்டையை எடுத்துக்கொண்டால் அங்கே மேற்பரப்பு-நீர்ப் பரப்பு என்று சொல்லக்கூடிய வெள்ளாறு, அக்னி ஆறு, பாம்பாறு மற்றும் கோரையாறு போன்ற பல ஆறுகள் ஓடுகின்றன. அந்த ஆறுகளில் வருடம் ஒன்றுக்கு குறைந்தபட்சம் 20 நாட்களுக்கு உபரி நீர் ஓடி கடலில் வீணாகக் கலக்கிறது. அந்த ஆறுகளின் குறுக்கே அணைக்கட்டுகள் கட்டி. அங்கே இருக்கிற குளங்களுக்கு, புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 5 ஆயிரம் குளங்கள், கண்மாய்கள் இருக்கின்றன. ஒவ்வொரு இடத்திற்கும், ஒவ்வொரு ஆயக்கட்டிற்கும் ஒவ்வொரு கண்மாயை வைத்திருக்கிறார்கள். அந்த அணைக்கட்டுத் திட்டங்களை நாம் முறையாகப் பயன்படுத்தியிருப்போமானால் நிச்சயமாக புதுக்கோட்டை மாவட்டம் ஒரு வளமான மாவட்டமாகி, மாறி இருக்கும். அதிலும் அம்மா வட்டம் மண் வளம் நிறைந்த ஒரு மாவட்டம் ஆகும். அந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நான் ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் எங்களுக்கெல்லாம் உறவினர்கள் இருக்கிறார்கள். எங்களுடைய உறவினர்கள் கூட அங்கேயிருந்து எங்கள் மாவட்டத்துக்காரர்களுக்கு பெண் கொடுக்க மறுக்கிறார்கள். அந்த அளவுக்கு சமூக ரீதியாக நாங்கள் பின் தள்ளப்பட்டு, அங்கே நாங்கள் பொருளாதார ரீதியாக சிக்கலில் இருக்கிற காரணத்தால் எங்கள் மாவட்டத்துக்காரர்

[திரு. சி. சுவாமிநாதன்]

களுக்குப் பெண் கொடுக்கக்கூட தஞ்சை மாவட்டத்துக்காரர்கள் தயாராக இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அங்கேயிருந்து இங்குள்ள பெண்களை எடுத்துக்கொள்கிறார்களா ? (சிரிப்பு)

திரு. சி. சுவாமிநாதன் : தஞ்சை மாவட்டத்துப் பெண்ணைக் கொடுக்க மறுக்கிறார்கள். எங்களுடைய பெண்களை எடுத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண் கொடுக்க மறுத்தால் வேறு வழிகளும் இருக்கின்றன. (சிரிப்பு)

திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் எதற்காக குறிப்பிடுகிறேன் என்று சொன்னால் சமூக நீதி, சமூக அந்தஸ்து கூட பொருளாதார ரீதியில் நாங்கள் குறைவாக இருப்பதால் எங்கள் உறவினர்கள் பெண் கொடுக்க மறுக்கிறார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

பகல் 1—40.

அதேபோல், இன்றைக்கு விவசாயிகளைப் பொறுத்தவரையில் சில மாண்புமிகு உறுப்பினர்கள் தெளிவாகக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். 1958ஆம் ஆண்டில் உள்ளாட்சி நில வரி என்பது 45 காசு என்று இருந்ததை இப்போது ஒரு ரூபாயாக உயர்த்தி இருக்கிறோம். 1975—ல் உள்ளாட்சி மேல் வரி ரூ. 2—50 என்று இருந்ததை இப்போது குறைந்தபட்சம் 5 ரூபாய் முதல் அதிகபட்சம் 10 ரூபாய் வரை என்று உயர்த்தி அறிமுகம் செய்து இருக்கிறோம். வரி போடாமல் எந்த அரசும் இயங்க முடியாது என்பது நம்மைப் போன்றவர்களுக்குத் தெளிவாகத் தெரியும். இருந்தாலும் வரி போடுகிறபோது யாரை நாம் தொட்டுப் பார்க்கிறோம் என்பதை நாம் எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். தமிழகத்தைப் பொறுத்தவரையில் 80 சதவீத விவசாய பெருங்குடி மக்கள், ஏறத்தாழ 4 கோடி பேர் விவசாயத் தொழிலை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கக்கூடியவர்களை நாம் தொட்டுப் பார்க்கிறபோது சற்று நிதானத்தோடு தொட்டுப் பார்த்தால் அது நலமாக இருக்கும் என்று கருதுகிறேன். காரணம் ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு இன்றைக்கு நில வரியாக 32 ரூபாய் வரி செலுத்திக்கொண்டிருக்கிறோம். ஆனால் இந்த வரி விகித ஏற்றத்தை 2 ரூபாய் 50 பைசாவிலிருந்து 10 ரூபாய் வரையில் நாம் வரி ஏற்றிக்கொள்ளலாம் என்கிற ஒரு நிலை வருகிற



[திரு. சி. சுவாமிநாதன்]

பொழுது ஒரு ஊராட்சி ஒன்றியத்தில் 10 ரூபாய் வரி விதிக்
கிறோம் என்று அறிவிப்பார்களேயானால் 96 ரூபாய், ஒரு
ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு வரி செலுத்த வேண்டிய கட்டாயம்,
நிர்ப்பந்தம் விவசாயிகளுக்கு ஏற்படும். அதை மரியாதைக்குரிய
மாண்புமிகு புரட்சித் தலைவியார் அவர்கள் கருணை உள்ளத்
தோடு எண்ணிப் பார்க்க வேண்டும். 2 ரூபாய் 50 பைசா
என்பதை 5 ரூபாய் என்பதோடு நிறுத்திக் கொண்டால் அதற்
குள்ள தொகையை அவர்கள் வரியாக ஏற்றுக் கொள்ளலாம்
என்று சொல்லியிருந்தாலும்கூட சற்று முறையாக இருக்கும்.
ஆனால், அதை 10 ரூபாய் வரையில் உயர்த்திக்கொள்ளலாம்
என்று நீங்கள் சொல்கிறபொழுது அது 300 சதவீத வரி உயர்
வாகும். இந்த வரி உயர்வு என்பது பொதுமக்கள் மத்தியில்
ஏற்படுகிறபொழுது, விவசாயப் பெருங்குடி மக்கள் மத்தியில்
அதனால் விளைவுகள் வருகின்றபொழுது மாற்றுக் கட்சி
நண்பர்கள் சும்மா இருக்க மாட்டார்கள்.
மையும் நெய்யும் யாருக்கு சொந்தம் என்று
அன்றைக்குக்கூட மேடையிலே பேசிக்கொண்டு இருந்தார்கள்.
அந்த அளவிற்கு இந்த அரசிற்குக் கெட்ட பெயர் வரக்கூடாது.
விவசாயப் பெருங்குடி மக்கள் வாழ்த்தவேண்டும் என்கிற
எண்ண உணர்வோடு சொல்கிறேன். இதை 5 ரூபாய் அள
விற்கு நீங்கள் குறைத்து அறிவிப்பீர்களேயானால் அது மிகப்
பொருத்தமாக இருக்கும். அதை விவசாயிகளும் பாராட்டு
வார்கள் என்பதனை இந்தத் தருணத்தில் நான் சொல்ல
கடமைப்பட்டிருக்கிறேன்.

கல்வியைப் பொறுத்தவரையில், நமக்கு இருக்கிற நிதி
ஆதாரத்தில் ஏறத்தாழ கால் பகுதியை நாம் செலவழிக்
கிறோம். ஆனாலும் இன்னும் ஆரம்பப் பள்ளிகளில், ஆசிரி
யர்கள் எண்ணிக்கை போதுமானதாக இல்லை. எல்லா இடங்
களிலும் ஆசிரியர்கள் இடம் காலியாக இருக்கின்றன. நம்
முடைய அரசு அறிவிக்கிறபொழுது பணப் பற்றாக்குறையின்
காரணமாக சற்று காலதாமதமாக அதை அறிவிக்கிறோம்
என்று சொல்லியிருக்கிறீர்கள். உதாரணத்திற்கு நான் ஒன்
றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கரம்பக்குடி
ஊராட்சி ஒன்றியத்தில், சொக்கன்பேட்டை என்கிற ஊரில்
ஒரு பள்ளிக்கூடம் இருக்கிறது. அங்கே 3 ஆண்டுகளாக
ஒரு ஆசிரியரைக் காணவில்லை. அந்த ஆசிரியர் திருச்சி மாவட்
டத்தில், வேறு ஒரு டிபார்ட்மெண்டில் தற்சமயம் வேலை
பார்த்துக் கொண்டு இருப்பதாக எனக்கு புகார் மனு வந்திருக்
கிறது. நான் இதை எதற்காகக் குறிப்பிடுகிறேன் என்று சொன்
னால், இரண்டு ஆசிரியர்கள் வேலை பார்க்கிற ஒரு பள்ளிக்
கூடத்தில் 3 ஆண்டுக்காலம் ஒரு ஆசிரியர் நிரந்தரமாகப்
பணிக்கு வரவில்லை. அந்த ஆசிரியரைப் பற்றிய குறிப்புகள்
அரசிடம் இல்லை என்று சொன்னால் அந்த நிர்வாகம் எந்த
அளவிற்குத் தாழ்ந்து போய் இருக்கிறது என்பதனை எண்ணிப்
பார்க்கிறபொழுது, நண்பர்கள் அந்தக் குறைகளைக் குறிப்
பிட்டு சொல்லி மனு மூலம் எழுதிக்கொடுக்கிறபொழுது உள்ள

[திரு. சி. சுவாமிநாதன்]

படியே என்னைப்போன்றவர்களுக்கு மிக வருத்தமாக இருக்கிறது. அடிப்படைக் கல்வி தருகின்ற ஆரம்பப் பள்ளிகளில் நாம் இப்படிப்பட்ட குறைகளை நீக்கவில்லை என்று சொன்னால் அது நம்மை நாமே அழித்துக் கொள்வதற்குச் சமமாகும் என்று எண்ணுகிற ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே அந்த சூழ்நிலைகளையெல்லாம் நாம் போக்க வேண்டும்.

இன்னொன்று, கல்வியைப் பொறுத்த வரையில், உயர் கல்வி படிக்கின்ற மாணவர்களுக்குக் கல்விக் கட்டணம் போடலாமா என்ற எண்ணத்தை மாற்றிக் கொள்வோமேயானால் அது சிறப்புடையதாக இருக்கும்.

புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்த வரையில், அது ஒரு வறண்ட மாவட்டம் என்பதை இந்த நாடே அறியும். அந்த வறண்ட சூழ்நிலையை ஓரளவிற்குப் போக்குவதற்காக எங்களுடைய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அந்த மாவட்டத்தில் இருக்கிற விவசாயிகளுக்கு ஆயிரம் ஆழ்குழாய்க் கிணறுகளை அமைத்துக் கொடுப்பதற்கு ஒரு நல்ல திட்டத்தை இப்போது அரசுக்குப் பரிந்துரை செய்து அனுப்பி இருக்கிறார்கள். அந்த மாவட்டத்தைப் பொறுத்த வரையில் நில நீர் ஊற்று நிபுணர்கள் இன்னும் 100 ஆண்டுகளுக்கு நிலத்தடி நீரை விவசாயிகள் பயன் படுத்த முடியும் என்கிற ஒரு நிலையினை அறிவித்ததனுடைய எதிரொலியாகத்தான் அங்கே ஆயிரம் ஆழ்குழாய்க் கிணறுகளை விவசாயிகளுக்கு ஏற்படுத்தி, அது கடனாக இருந்தாலும் சரி அல்லது இனாமாகப்போட்டுக் கொடுத்தாலும் சரி, அங்கே ஆயிரம் ஆழ் குழாய்க் கிணறுகளைப் போட்டுக் கொடுத்து, உடனடி மின்சாரமும் வழங்கினால் அந்த மாவட்டம் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்ற மாவட்டமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை. இந்தச் சூழ்நிலைகளையெல்லாம் கருத்தில் கொண்டு அந்த ஆயிரம் ஆழ் குழாய்க் கிணறு திட்டத்திற்கு மாண்புமிகு புரட்சித் தலைவியார் அவர்கள் அனுமதி கொடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஒரே ஒரு சர்க்கரை ஆலை, அந்த சர்க்கரை ஆலை அமைக்க அனுமதிக்கப்பட்டு 3, 4 வருடங்களாகியும் அது அறந்தாங்கி தொகுதியிலே அமைக்கப்பட அனுமதிக்கப்பட்டு இருப்பதாக அறிவித்தார்கள். சர்க்கரை ஆலை என்பது தனிப்பட்ட ஒரு ஆலையைப் போல, தனியார் ஆலை சொந்தக்காரரைப் போல அல்ல. இது புதுக்கோட்டை மாவட்டத்திலே இருக்கிற அத்தனை விவசாயப் பெருங்குடி மக்களும் பலன் பெறுகின்ற ஒரு நல்ல ஆலை. அந்த ஆலையைப் புதுக்கோட்டையின் மையப் பகுதியில் அனைத்து விவசாயிகளும் பயன் பெறுகின்ற வகையில் நீங்கள் உடனடியாகத் துவக்க வேண்டும். அந்த ஆலை முற்றுப் பெறுகின்ற வகையில் அந்த ஆலைக்குரிய பண ஒதுக்கீட்டையெல்லாம் செய்து. அந்த ஆலை முழுமை



[திரு. சி. சுவாமிநாதன்]

பெற்று விவசாயிகள் பயனடைகின்ற வகையில் நாம் செயல் படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இராணியர் உயர்நிலைப் பள்ளி என்கிற ஒரு பள்ளி 70, 80 ஆண்டுக் காலத்திற்கு முன்பு துவங்கப்பட்ட ஒரு பள்ளி. அப் பொழுது ஆரம்பிக்கின்றபொழுது 500 பிள்ளைகள், மாணவி களுக்காக அவர்கள் அங்கே ஆரம்பித்தார்கள். இன்றைக்கு 3,000 மாணவியர்கள் படிக்கிறார்கள். இடவசதி நெருக்கடி, மூன்று ஷிப்டு வைத்து கூட அதை நடத்த முடியாத ஒரு சூழ்நிலையில் அல்லல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் மாண வியர்கள். ஆகவே, அதற்கு புதிய ஒரு பள்ளிக் கூடம் அல்லது அடிஷனல் பில்டிங் உடனடியாகச் சேங்க்ஷன் செய்யுமாறு உங்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 1-45.

காமாராஜர்புரத்தில் ஒரு உயர்நிலைப் பள்ளியை பத்தாண்டு களாகக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் காமராஜர் புரத்தில் ஏறத்தாழ 30,000 வாக்காளர்கள் இருக்கிறார்கள். அங்கே ஒரு உயர்நிலைப் பள்ளியை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு இங்கே மரியாதைக்குரிய கல்வியமைச்ச ரவர்கள் ஆவன செய்யுமாறு அன்போடு கேட்டுக்கொள் கிறேன்.

மன்னார் கல்லூரி என்பது ஒரு நூற்றாண்டு விழா கொண் டாடிய ஒரு மன்னர் கல்லூரி. அங்கே இன்னும் முற்றுப் பெறுகின்ற வகையில் எம்.எஸ்ஸி., கெமிஸ்ட்ரி மற்றும் பிசிக்ஸ் போன்ற கோர்ஸ்களை நடத்த அந்தக் கல்லூரிக்கு நீங்கள் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

புத்தாமூர், செம்பாட்டூர், வடவாளம், கந்தர்வக்கோட்டை போன்ற உயர்நிலைப் பள்ளிகளில்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மிச்சம் இருக்கிற ஊர்களையெல்லாம் கல்வி மானியத்திலே பேசி விடலாம். மணி 1.46 ஆகி விட்டது.

திரு. சி. சுவாமிநாதன் : உயர்நிலைப் பள்ளிகளுக்குப் புதிய கட்டிடம் கட்டிக் கொடுக்க வேண்டும். அவர்களெல்லாம் சில இடங்களில் கீற்றுக் கொட்டகைகளிலே பள்ளிக் கூடம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

திருமணஞ்சேரி பாலம் என்பது ஆலங்குடி தொகுதியிலே இருக்கிறது. 1967-லேயிருந்து நா■கள் முயற்சி பண்ணியிருக்கிறோம். போன சட்டசபைக் கூட்டத் திலே கூட மாண்புமிகு எங்களுடைய மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய

[திரு. சி. சுவாமிநாதன்]

சட்ட மன்ற உறுப்பினர்கள், நான் முதற்கொண்டு அத்தனை பேரும் சொன்னோம் அந்தத் திட்டம் செல்ப் ஆல் ஸ்கீமிலே இருப்பதாக எனக்குக் கடிதம் வந்திருக்கிறது. அதை இந்த ஆண்டிலேயாவது நிறைவேற்றிக் கொடுத்தால் தஞ்சை—அறந்தாங்கி போக்குவரத்துக்கு ஒரு நல்ல வாய்ப்பாக அமையும் என்பதைச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்த வரையில், சென்ற கூட்டத்திலேயும் நான் கேட்டேன். எல்லா மாவட்டங்களையும் இரண்டாகப் பிரிக்கிறீர்கள். எங்களுடைய மாவட்டம் பிரித்த மாவட்டம்தான் இருந்தாலும் தியாகச் செம்மல் தீரர் சத்தியமூர்த்தி அவர்களுடைய பெயரை எங்களுடைய மாவட்டத்திற்கு வைக்க வேண்டுமென்று சென்ற கூட்டத் தொடரிலும் நான் கேட்டேன். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இந்தக் கூட்டத்திலாவது எங்களுடைய மாவட்டத்திற்குத் ''தீரர் சத்தியமூர்த்தி மாவட்டம்'' என்று பெயர் சூட்டினால் அது ஒரு தியாகச் செம்மலுடைய மாவட்டம் என்கிற எண்ண உணர்வோடு அதிலாவது நாங்கள் நிம்மதியாக இருப்போம் என்பதைச் சொல்லி, அந்த மாவட்டத்திற்குத் ''தீரர் சத்தியமூர்த்தி மாவட்டம்'' என்று பெயர் சூட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பேருந்து வசதிகள், கந்தர்வக் கோட்டை ஒன்றியத்தில் எம்.பி.டி.சி. பேருந்து டெப்போ சென்ற ஆண்டு—திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஒன்று சேங்க்ஷன் செய்ததாக அன்றைக்கு அறிவித்தார்கள். அதை இப்பொழுது எடுத்து விட்டதாகச் சொல்லியவுடன், நான் அங்கே சென்றபோது என்னுடைய மக்கள், அங்கே தொகுதியிலே இருக்கிறவர்கள், ''இருந்ததையும் போக்கிவிட்டு வந்து விட்டாயே சட்டமன்ற உறுப்பினராக ஆகி'' என்று சொல்லி என்னை மிகவும் வேறு விதமாக எண்ணிப் பார்க்கிறார்கள். அந்த டெப்போவை உடனடியாகத் துவங்குவதற்கு உங்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அந்த ஒன்றியத்திற்கு ஒரு தனி நிலவள வங்கி ஏற்கனவே இயங்கி வந்தது. அதை மீண்டும் இயங்குவதற்கு ஆவன செய்யுமாறு உங்களை அன்போடு கேட்டு, மொத்தத்தில் இந்த பட்ஜெட்டை நான் வரவேற்று அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (12-3-1992) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.



பின்னர் பேரவை பிற்பகல் 1-49 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

7. எந்த ஒரு உள்ளாட்சிப் பகுதிக்குள்ளும், உபயோகம் மற்றும் விற்பனையின் பொருட்டு எந்த ஒரு மோட்டார் வண்டியின் நுழைவிற்கு வரி நிர்ணயம் செய்வது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 2-12-1991 ஆம் நாளிட்ட 482-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் உள்ளாட்சிப் பகுதிக்குள் நுழைவின் மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1990) 18 (4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

8. வடாற்காடு-அம்பேத்கார் மாவட்டம், கரிகிரியிலுள்ள திருவாளர்கள் ஷெஃப்ளின் தொழுநோய் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையத்தினர் அவர்களால் சிறிய பேருந்து ஒன்று வாங்கியதற்காக செலுத்தப்பட வேண்டிய வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 14-5-1991 ஆம் நாளிட்ட 257-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் உள்ளாட்சிப் பகுதிக்குள் நுழைவின் மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1990) 18 (4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

9. வேளாங்கண்ணி, திருவாளர்கள் மிஷனரிஸ் ஆஃப் சேரிட்டி அவர்களால் ஆம்புலன்ஸ் வண்டி ஒன்று வாங்கியதற்காக செலுத்தப்பட வேண்டிய வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 14-5-1991 ஆம் நாளிட்ட 256-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் உள்ளாட்சிப் பகுதிக்குள் நுழைவின்மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1990) 18 (4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

10. 1989-90-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் வாணிபக் கழகத்தின் ஐந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ. பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

11. 1990-91—ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் பதினேழாவது ஆண்டு அறிக்கை.[1956—ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956—619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது,] (தமிழ், ஆங்கிலம்).

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

ஏதுமில்லை.

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras 1.
12 New Century Book House (Private) Limited, Madras 2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District)
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore 1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem
16 Meenakshi Pathippagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-12.

© Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.